

# 1

வானவீதியிலே பூர்ணச் சந்திரன் தன் ஒளியை உலக முழுவதும் பரப்பியவனாய் பவனி வந்து கொண்டிருந்தான். மதிமுகத்தைக் கண்டு குதூகலம் தாங்காது கடல் கொந்தளித்துக் கொண்டு "ஓ'வென்று இரைச்சலிட்டுக் கொண்டிருந்ததைத் தவிர, இரவு பதினொன்றாகிவிட்டது என்பதை அறிவிப்பது போன்று எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது.

'புனித இதயம்' என்ற கிறிஸ்தவப் பெண்கள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிகள் தங்கியிருந்த சிவப்புக் கட்டடத்தின் மூன்றாவது மாடியறையில், கண்ணுக்கெட்டிய தூரத்தில் பரவிக்கிடந்த கடலை ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள் சந்திரா, பி.ஏ., எல்.டி.,

மின்சார விளக்கினின்று எழுந்த வெளிச்சம் அறையில் மங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மூலையில் இருந்த மேஜையின் மீது அடுக்கு அடுக்காக நோட்டுப் புத்தகங்கள் இருநூறு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இரண்டு நாட்களில் திருத்தித் தரவேண்டியவைகள் அவை. சிந்தனையின் நடுவே அவைகளை ஒருமுறை திரும்பிப் பார்த்த சந்திரா பெருமூச்சு விட்டாள்.

மாதம் அறுபது ரூபாய் சம்பளம் அவளுக்கு எண்ணிக்கொடுத்து விடுகிறார்கள் பள்ளிக்கூட ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள். அதற்குத்தான் எத்தனை வேலை! தப்பும் தவறுமாக மாணவிகள் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் வியாசங்களைப் படிப்பதனால் ஏற்படும் தலைவலி. தொண்டைத் தண்ணீர் வற்றத் தினம் நான்கு மணிநேரம் அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவதின் ஆயாசம் 'சீ! என்ன ஜன்மம், படித்துவிட்டு ஸ்திரீகள் உத்தியோகம் செய்யக் கிளம்புகிறோம் என்று வீராப்பாய்ப் பேசுகிறார்களே! அசட்டுத்தனம்தான் அது!'

சிந்தித்துக் கொண்டிருந்த சந்திராவுக்கு வாழ்க்கை மிக்க

கசப்பாகத் தோன்றியது. அவள் தற்போதுள்ள தன் கஷ்ட ஜீவனத்தைக் குறித்து வருந்தவில்லை. பிறந்ததிலிருந்து அன்று வரை துன்பம், துன்பம், துன்பமயமே என்றால் யாருக்குத்தான் வாழ்க்கை மீது வெறுப்புத் தோன்றாது.

சந்திரா எந்தக் கஷ்டத்தை நினைத்துக்கொண்டு வருந்துவாள்? எட்டு வயதிலேயே அவளையும் தம்பி வேணுவையும் தவிக்க விட்டுச் சென்றாளே அவள் தாய் அந்தப் பரிதாபத்துக்காகவா? தாய் இறந்த இரண்டு வருஷங்களில் வீட்டிற்குள் நுழைந்து அதிகாரத்தைக் கையிலேற்றுக் கொண்ட சித்தி பார்வதி தன்னை நடத்திய கொடுமைக்காகவா? அல்லது ஏழைப் பள்ளிக்கூட உபாத்தியாயர் பெண்ணான தான் படிப்பிற்காகப் பட்ட துன்பங்களுக்காகவா? எதற்காக வருந்துவாள்? துன்பம் ஒன்றிரண்டு என்றால் வாய் விட்டழுதால் மனதில் நிம்மதி ஏற்படும். பசுமரத்தாணிபோல் சம்பவங்கள் மனதிலே பதியும் இளம் வயதிலிருந்தே சந்திரா துக்கம் என்பதைத்தான் கண்டிருக்கிறாள் என்றால், அலுத்துப்போன அவள் மனது இரும்புப் பாறையாகிவிட்டது என்றேதான் சொல்லவேண்டும்.

கையில் வைத்துக்கொண்டிருந்த அந்தக் கடிதத்தை மறுபடியும் திருப்பிப் படித்துப் பார்த்தாள். கற்சிலையைப் போல் அவளைப் பல மணிநேரம் கடலை நோக்கி உட்கார வைத்திருந்ததற்கு அந்தக் கடிதமே காரணம்.

''அன்புள்ள சந்திராவுக்குச் சித்தி எழுதிக்கொண்டது. நீ ஏன் அடிக்கடி பதிலே போடுவது கிடையாது! வேலை ரொம்ப ஜாஸ்தி போலிருக்கிறது! இருந்தபோதிலும் நூறாவது தடவையாக நான் சொல்லுகிறேன். நீ இந்த வாத்தியாரம்மா தொழில் செய்வது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும், பெண்கள் கல்யாணம் செய்துகொண்டு புக்ககத்தில் சௌக்கியமாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பெருமை, பெண் உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்கிறாள் என்று சொல்லிக் கொள்வதில் இல்லையென்பது என் அபிப்பிராயம். நான் அடிக்கடி எடுத்துச் சொல்லும் பழைய சங்கதிதான் இது. உனக்கு வயது இந்த வருஷம் இருபத்திரண்டு முடிந்து விடுகிறது. உன் தங்கை கமலிக்கு வயது பதினெட்டாகப் போகிறது. எப்போது கல்யாணம் என்று ஊரார் என்னைக்



கழுகாட்டமா பிடுங்கி எடுக்கிறார்கள். ஒரு கோவில் குளத்திற்கு நிம்மதியாகப் போய் வரலாமென்றாலும் முடிகிறதில்லை. நம் குலம், நம் ஜாதி, நம் நிலைமை தெரியாமல் நீ கண்மூடித்தனமாய் படிக்கிறேன், படிக்கிறேன் என்று கிளம்பிவிட்டாய். உங்கப்பாவுக்குப் புத்தியே கிடையாது. காலா காலத்தில் கல்யாணம் பண்ணாமல் உன்னை இஷ்டப்படி செய்ய விட்டுவிட்டார். என் பேச்சைக் கேட்காமல், ஒரேயடியாகப் பி.ஏ. படித்தாய். அதோடு நின்னயா? எல்.டிக்கும் போனாய். இப்ப என்னவென்றால் உத்தியோகத்திற்குக் கிளம்பிவிட்டாய். நீ சம்பாதிச்சுப் போட்டுத்தானா இந்தக் குடும்பம் தழைச்சு மேலே எழும்பி வரப்போகிறது? இந்தப் புத்தி உனக்கு இத்தனை வயசாகியும், படிச்சும் தெரியவேயில்லை. இதுவரை வந்த வரன்கள் எத்தனை? அவ்வளவையும் அவன் நொண்டி, இவன் முடம் என்று சொல்லித் தள்ளிவிட்டாய். நம் ஜாதியில் பெண்ணாகப் பிறந்துவிட்டால் எவ்வளவு கஷ்டம் என்பது உனக்குத் தெரியாத விஷயமா? தெரிந்திருந்தும் போன வருஷம் அந்த வேலங்குடி வரனை வேண்டாம் என்றாய். போதும் உன்னுடன் நான் பட்ட கஷ்டங்கள்! உலகத்தவர்கள் கேட்டால் மாற்றாந்தாய் கொடுமி என்பார்கள். உலகத்துக்கு உண்மை எப்படித் தெரியும்? பனைமரத்தடியில் பால் உண்பவனை, கள் அருந்துகிறான் என்றுதான் கரிக்கும் மூட உலகம். மகராஜி! உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இனிமேலாவது வம்பு பண்ணாமல் கிடைத்த வரனைக் கல்யாணம் பண்ணிக்கொள். இதனால் உனக்குக் கோடி புண்ணியம் உண்டு.

உன் அப்பாவுக்கு மல்லித்தோட்டம் என்ற ஊருக்கு மாற்றலாகி இருக்கிறது. இன்னும் பத்து நாளில் கிளம்பி விடவேண்டும். இப்போதுகூட ஒரு வரன் வந்திருக்கிறது. நீ டிசம்பர் லீவுக்கு ஊருக்கு வருவாய், உன்னை வந்து பார்க்கலாம் என்று அந்த வரனிடம் சொல்லிவிட்டார். அதனால் சீக்கிரம் ஊருக்குப் புறப்படு. மற்றபடி யாவரும் க்ஷேமம்.

இப்படிக்கு உன் சித்தி,
பார்வதி.''

கடிதத்தைப் படித்த சந்திரா தன்னையும் அறியாது ஒரு பெருமூச்சுவிட்டாள். சித்தியின் கொடுமை நிறைந்த கடிதத்திற்கு

அவள் வருந்தவில்லை. அதில் குறிப்பாகச் சொல்லப்பட்டிருந்த வரனைப்பற்றி நினைத்தபோதுதான் அவளுக்குக் கவலையுண்டாகியது.

சித்தி கொண்டுவரும் வரன்களைச் சந்திராவால் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்க முடியும். மூன்று நான்கு குழந்தைகளும் நாற்பது ரூபாய் சம்பளமும் உள்ள ''இளையாள்''காரர்கள்தான் சந்திராவை வரிக்க வரும் கணவர் கோஷ்டியார்.

சந்திரா சிந்தனை செய்தாள்; லீவுக்கு ஊருக்குப் போவதா, போகாமலே இருந்துவிடுவதா? போகாமலும் இருக்க முடியாது. தம்பி வேணு 'டைபாய்டு' ஜுரத்தில் சாகப் பிழைக்கக் கிடந்தெழுந்திருந்தான். அவனைப் போய்ப் பார்க்க வேண்டும். சந்திராவைத் தவிர ஆதரவுடன் அவனை நேசிப்பவர் யார்? ஊருக்குப் போனால் சித்தி வரன் விஷயமாய்க் கட்டாயம் தொந்தரவு கொடுப்பாள். இந்தப் பிரச்சனைக்கு என்ன வழி?

''நீ இன்னும் தூங்கலியா? எனக்கும்தான் தூக்கமே வரவில்லை. உன்னிடம் ஏதாவது பேசலாமென்று வந்தேன்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்த அம்புஜத்தின் குரல் சந்திராவின் சிந்தனையைச் சிதற வைத்தது.

''இல்லை, அம்புஜம்! பார், எத்தனை நோட்டுகள் திருத்துவதற்கு இருக்கின்றன. கை ஒடிகிறது, திருத்தித் திருத்தி. எனக்கு இந்த வேலை பிடிக்கவேயில்லை'' என்று வெறுப்பாகப் பதில் அளித்த சந்திரா நாற்காலியை விட்டு எழுந்திருந்தாள்.

''ஆமா! எனக்குந்தான் பிடிக்கவேயில்லை! இப்படிக் கஷ்டப்பட்டு வேலை செய்யாவிட்டால் என்ன என்று எங்கப்பா திட்டுகிறார். அதனால் நான் வேலையைக் கொஞ்ச நாளில் ராஜினாமா செய்துவிடப் போகிறேன். அது கிடக்கட்டும், சந்திரா வானத்தைப் பார்! இன்றுபோல் என்றுமே சந்திரன் குளிர்ச்சியாகப் பிரகாசித்ததில்லை என்று நான் நினைக்கிறேன்!'' என்று மேலே பேசிக்கொண்டு போனாள் அம்புஜம்.

சந்திரா தன் கவலைகளையெல்லாம் ஒரு நிமிஷம் மறந்து விட்டுத் தன் பிராண சிநேகிதியைப் பார்த்துக் 'களுக்'கென்று சிரித்தாள். ''நீ சொல்வதெல்லாம் சரிதான் அம்புஜம். இதிலிருந்து



என்னால் சில விஷயங்களை ஊகிக்க முடிகிறது'' என்று அவள் சொல்லிவிட்டு லேசாக அம்புஜத்தின் கன்னத்தைத் தட்டினாள்.

''என்ன விஷயங்கள் புரிந்துவிட்டன. அதைத்தான் சொல்லேன், பார்க்கலாம்!'' என்று அம்புஜம் சந்திராவின் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு செல்லமாகக் கேட்டாள்.

''கள்ளி! உன் கல்யாணத்திற்குத் தேதி வைத்து விட்டார்கள். உன் அப்பா புறப்பட்டு வரும்படி கடிதம் போட்டிருக்கிறார். வரனும் அதே பழைய வரன்தான். உன் மனம் சந்தோஷத்துக்குள்ளாவதால் நிலவொளியே புது ஜோதியாகத் தெரிகிறது, இவ்வளவுதானே! எப்படி என் ஜோஸ்யம்?'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் சந்திரா.

அம்புஜம் சிறிது நேரம் பேசவேயில்லை. மறுபுறம் தலையைத் திருப்பிக்கொண்டு அசையாத பொம்மை போல உட்கார்ந்திருந்தாள்.

''என்ன நான் சொல்வது சரிதானே அம்புஜம்? நிஜத்தை ஒப்புக்கொண்டு விடேன்!'' என்று பரிகாசமாகச் சிநேகிதியின் தோளை உலுக்கினாள் சந்திரா.

''ஆமாம், ஜனவரி மாதம் பதினெட்டாம் தேதிக்கு முகூர்த்தம் வைத்துவிட்டார்களாம்! புடவை, நகை முதலியவைகள் வாங்க அம்மா நேரே இங்கே வருவதாகக் கடிதம் போட்டிருக்கு. அதிருக்கட்டும், சந்திரா! நீ எப்படிக் கண்டுபிடித்தாய் இதையெல்லாம்?''

''பூ! இது பிரமாதமா? உனக்கு இந்த வருஷம் அனேகமாகக் கல்யாணம் நடக்குமென்று நீ சொல்லும் பல சமாசாரங்களிலிருந்து நான் புரிந்துகொண்டேன். மத்தியானம் வந்த கடிதத்தைப் படித்ததிலிருந்து நீ குதூகலமாயிருப்பது உன் முகத்தில் தெரிகிறது. இரண்டும் இரண்டும் நாலு என்பதற்குப் பெரிய கணக்குப் போட வேண்டுமா?'' என்றாள் சந்திரா.

''சந்திரா! நீ ரொம்ப சாமர்த்தியசாலி! உன்னைப் போலக் கெட்டிக்காரப் பெண்கள் உலகத்தில் மிகச் சிலர்தான் என்பது என் அபிப்பிராயம். வாஸ்தவமாகச் சொல்கிறேன்; சில சமயங்களில் நானே நினைத்துக் கொள்வேன். சந்திராவைப் போல் அழகும் சாமர்த்தியமுமுள்ள பெண் எங்கள் வீட்டில் இருந்தால்... அப்பப்பா எப்படிக் கொண்டாடுவார்கள், தெரியுமா?'' என்று மேலே

பேசிக்கொண்டு போன அம்புஜத்தைச் சந்திரா இடைமறித்து; ''போதும் முகஸ்துதி! கல்யாணம் எங்கே நடக்கும் என்பதை மட்டும் சொல். ஏதோ கிட்ட இருக்கும் ஊராக இருந்தால் நான் வர முயற்சிப்பேன். தூர இருந்தால் சாத்தியப்படாது வருவதற்கு'' என்றாள்.

''எந்த ஊராயிருந்தால் என்ன! நீ கட்டாயம் வந்துதான் ஆகவேண்டும். நீ இல்லாமல் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு மனம் வருமா?'' என்றாள் கொஞ்சலாக அம்புஜம்.

''நான் வராவிட்டால் தாலி கட்டிக் கொள்ள மறுத்து விடுவாயாக்கும்? எங்கே பார்த்துவிடுகிறேன். அப்படிச் செய்வதை!'' என்று பரிகாசமாக மொழிந்தாள் சந்திரா.

''போ சந்திரா! என்ன விளையாடுகிறாய்! உண்மையாகவே சொல்கிறேன். நீ கட்டாயம் என் கல்யாணத்திற்கு வரவேண்டும். ஒருநாள் இருநாள் பழகிய சிநேகிதிகளா நாம்? எட்டு வருஷம் சேர்ந்தாற்போல் நாம் பழகினதில்லையா? நீ வராவிட்டால் என் மனம் ரொம்ப துக்கப்படும். கல்யாணம் நடக்கப்போவது எங்கள் குல ஆசாரப்படி மாப்பிள்ளை வீட்டில்தான். மாப்பிள்ளை வீடு மல்லித்தோட்டம் என்ற ஊரில்தான்'' என்று அம்புஜம் கூறி முடிப்பதற்குள் சந்திரா, ''என்ன? மல்லித் தோட்டமா?'' என்று வியப்புடன் கேட்டுக் கொண்டு எழுந்து நன்றாக உட்கார்ந்தாள்.

''ஆமாம்! ஏன் கேட்கிறாய்? மல்லித்தோட்டம் என்பது அவர் ஊர்'' என்று பதிலளித்தாள் அம்புஜம்.

''அவர் ஊர் மல்லித்தோட்டமா? அடடா! பட்டணத்திலே பிறந்து, வளர்ந்த நாகரீக நாரீமணியான நீ கடைசியில் படிக்காட்டு நாட்டுப் பெண்ணாகப் போகிறாயா? இதென்ன கூத்து?'' என்றாள் ஆச்சரியமிக்க குரலில் சந்திரா.

அம்புஜத்திற்குத் தன் சிநேகிதியின் கேலி சொற்கள் சற்றுக் கோபத்தை உண்டு பண்ணின. ''என்ன சந்திரா! மல்லித்தோட்டத்தைப் போய்க் குப்பைக்காடு என்கிறாயா?'' என்று பதட்டமாகக் கேட்டாள்.

''மல்லித் தோட்டத்திற்கு என் அப்பாவை மாற்றி யிருக்கிறார்களாம். பள்ளிக்கூட வாத்தியாரான என் அப்பா



மாற்றப்படும் ஊர்கள் எல்லாம் இதுவரை பட்டிக்காடுகள்தான். ஆகையினால் மல்லித்தோட்டம் என்பது ஒரு சுத்த அநாகரிகம் பிடித்த குக்கிராமம் என்பதில் சந்தேகமில்லை. 'லேடீஸ் கிளப்பு'கள் என்ன? சினிமாக்கள் என்ன, சங்கித சபைகள் என்ன என்று இப்படி உல்லாச வாழ்க்கை நடத்திய நீ குப்பைக் காட்டில் போய்க் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கப் போகிறாய்! பரவாயில்லை, நானும் இரண்டு நாளில் ஊருக்குப் போகிறேன். இருவரும் தற்போது ஒரே ஊர்க்காரராகி விட்டதனால் நல்லதாய்ப் போச்சு!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

அம்புஜத்திற்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. ''சந்திரா! மல்லித்தோட்டத்தைப் பார்த்துவிட்டு பிறகு பேசு, கேட்கிறேன். கொள்ளிடக் கரையோரம் அந்த ஊர் நீ நினைப்பது போல் பட்டிக்காடு ஒன்றுமில்லை. கிராமத்தின் அழகெல்லாம் கொண்டதும் நகரத்தின் சௌகரியங்களையெல்லாம் தாங்கியதுமான மல்லித்தோட்டத்தைப் பூலோக ஸ்வர்க்கம் என்கிறேன் நான், தெரியுமா? நதிக்கரையோரம் அமைந்திருக்கும் அந்த 'சரபோஜி கெமிகல் ஒர்க்'ஸின் பெருமைதான் என்ன! ஜில்லா போர்டு பையன்கள் பள்ளிக்கூடத்தின் மதிப்பையும் 'கோமதி வித்தியாலயம்' பெண்கள் பள்ளிக்கூடத்தின் பொலிவையும் மற்ற பலவித அழகுகளையும் பார்த்துவிட்டுச் சொல்வாய் நீ!''

''ஊருக்கு வடபுறத்தில் கொள்ளிடமும், தென்புறத்தில் ஆண்டிக்குன்று என்ற ஒரு சிறு மலைக்கோயிலும் இருக்கின்றனவாம். க்ஷேத்திரத்திற்கு க்ஷேத்திரம், கிராமத்திற்குக் கிராமம் - இப்படிப் பல சௌகரியங்களைக் கொண்ட ஊர் தென் இந்தியாவிலேயே எங்கேயாவது இருக்கிறதா சொல்!'' என்று அம்புஜம் மல்லித்தோட்டத்தை வர்ணித்து விட்டு ஓய்ந்தாள்.

''பரவாயில்லை! கல்யாணமாவதற்கு முன்பே இப்படி அகத்துக்காரருடைய ஊரைப் புகழ்கிறாய்! நீ கல்யாணம் ஆனதும் அகத்துக்காரரைப் புகழ்வது கேட்டு யாரால் சகிக்க முடியும்? சரி, அந்த பூலோக ஸ்வர்க்கத்தில் உனக்கு வரப்போகும் மாமனார் பெரிய பிரமுகரா?''

''அங்கே ஏகாம்பர முதலியார் என்று பெரிய காண்ட்ராக்டர், அவர்தான் என் மாமனாராக வருகிறார்.''

''தெரியும் இப்பொழுது எனக்கு! எஸ்.ஐ.ஆர். இன்ஜினீயர் ராமநாதன் அவருடைய மூத்தபிள்ளைதானே உனக்கு வரப்போகும் கணவர். சரிதான்! நீ முன்பே சொல்லிக் கொண்டிருந்த வரன்தான்!''

''சந்திரா! என் கல்யாணத்திற்கு என்ன கலரில் புடவை வாங்குவது! உன் யோசனையைக் கேட்டுத்தான் வாங்குவது என்று முடிவு செய்துவிட்டேன். அம்மாவும் அப்பாவும் நாளைக்குக் கார் எடுத்துக் கொண்டு வராங்க ஊரிலிருந்து. புடவைக் கடைக்கு நீயும் கூட வந்து நல்லதாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துத் தரவேண்டும். மாட்டேன் என்றால் கோபம்வரும் எனக்கு!''

''ஆகட்டும்! இவ்வளவுதானே?'' என்று சந்திரா பதிலளித்ததைக் கேட்ட அம்புஜம் மனமகிழ்ந்தவளாய் எழுந்து சென்றாள்.

கதவைத் தாளிட்டுவிட்டுப் படுக்கை மீது புரண்ட சந்திராவுக்குத் தூக்கமே வரவில்லை.

அம்புஜம் அவளுடன் சிறிய வகுப்பிலிருந்தே ஒன்றாய்ப் படித்த பள்ளிக்கூடத் தோழிதான். சிநேகிதி என்றால் சாதாரணமாக வெளிப்பகட்டிற்காகத் தொடர்பு கொண்ட சிநேகிதியல்ல. உடன் பிறந்த சகோதரியைப் போன்ற பாசமுள்ள பிராண சிநேகிதை.

தன்னுடன் படித்த பல பெண்களை விட அம்புஜத்தின் மீது அபாரமான பிரியம் சந்திராவுக்கு ஏற்பட்டதன் காரணம் அவளுடைய கள்ளங்கபடமற்ற வெள்ளை மனமேயாகும்.

சுருண்ட கூந்தலும் நீலவிழிகளும் கொண்ட சந்திரா தந்தப்பொம்மை போன்ற அழகி என்பதில் ஆட்சேபணை இல்லை. அம்புஜம் மாநிறமும், சற்று இரட்டை நாடி சரீரமும் கொண்டவள். குரூபி என்று இல்லாவிடினும் முகத்திலே தேங்கியிருந்த களையினால் சற்று கவர்ச்சிகரமான பெண் எனக் கூறலாம். அவ்வளவுதான்!

அழகில் சிறு குறையை வைத்த கடவுள் அம்புஜத்திற்கு அதிர்ஷ்டத்திலே அதை நிவர்த்தி செய்துவிட்டார். தஞ்சையில் பிரசித்திபெற்ற 'சுதர்சன் டிம்பர் வொர்க்ஸ்' என்ற கம்பெனி முதலாளியின் ஏகபுத்திரி அவள். பெருமைக்காகப் படித்துவிட்டு ஆசைக்காக உத்தியோகம் பார்க்கும் பாக்கியசாலி. ஆனால், சந்திரா! பட்டிக்காட்டு பையன்களைப் பட்டணத்து



பிரமுகர்களாக்குவதற்காகப் பாடுபடும் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஏழைக் கல்யாணராமய்யரின் மூத்த பெண்.

என்ன ஆச்சரியம்! கிட்டத்தட்ட ஒரே தினுசாக வாழ்க்கையை ஆரம்பித்திருக்கும் இரு சிநேகிதிகளின் அதிர்ஷ்டப் போக்கில்தான் எத்தனை வேற்றுமை! அம்புஜம் வரப்போகும் மணத்தைக் குதூகலமாக எதிர்பார்க்கிறாள்! சந்திரா வரப்போகும் நாட்களை எப்படிச் சித்தியிடம் கழிப்பதென்று சிந்திக்கிறாள்!

## 2

டக், டக், டக, டக, டக்... என்று 'டைப் மெஷின்'களின் ஓசை சேர்ந்தாற்போல் பல மூலைகளிலிருந்தும் எழுந்தன. அதுவரை பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருந்த அவ்வளவு குமாஸ்தாக்களும், தங்கள் வேலையில் திடீரென்று ஈடுபட்டதற்குக் காரணம், 'சரபோஜி கெமிகல் வொர்க்'ஸின் முதலாளி நாகராஜய்யர் வரவை அறிவித்த கார் ஹாரனின் ஒலியே!

குமாஸ்தாக்களின் அறையில் வேலை துரிதமாக நடந்து கொண்டிருந்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த நாகராஜய்யரைக் கண்டதும் யாவரும் இடத்தைவிட்டு மரியாதைக்காக எழுந்து நின்றனர்.

''மணி! இதென்ன, முந்தாநாள் போய் சேர வேண்டிய பார்ஸல் 'டாடர் அன்கோ'வுக்குப் போய்ச் சேரவில்லையாமே! அதைப் பற்றி புகார் வந்திருக்கிறது. இதுமாதிரி தாமதம் இதுவரை நமது கம்பெனியில் நேர்ந்ததில்லையே! என்ன காரணம்?'' என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார் முதலாளி.

தலைமைக் குமாஸ்தா சுப்பிரமணியன் தனக்குக் கீழ் உள்ள உதவி குமாஸ்தாவின் பக்கம் திரும்பி, ''எத்திராஜ"! 'டாடர் அன்கோ'வுக்கு என்றைக்குப் பார்சல் அனுப்பினோம்?'' என்று கேட்டார்.

மேஜை மீது கிடந்த பெரிய புஸ்தகத்தை விடுவிடுவென்று புரட்டிப் பார்த்துவிட்டு ''கால்ஷியம் குளுகோனேட்'' இரண்டாயிரம் 'டியூப்'புகள் டாடர் அன்கோவுக்கு நாலாந்தேதி காலை அனுப்பப்பட்டன'' என்றான் எத்திராஜு நிதானமாக.

நாகராஜய்யர் தமது வழவழப்பான முகவாய்க் கட்டையை ஆலோசனையுடன் தடவிக் கொண்டே, ''எப்படி இன்னும் போகாமல் இருக்கும்? ஆச்சரியந்தான். எதற்கும் இன்றைய தபாலில், நாலாந்தேதியே அனுப்பி விட்டோம். தாமதத்திற்கு காரணம் தெரியவில்லை. சரியான சமயத்தில் வந்து சேரவில்லை என அறிந்து வருந்துகிறோம், என்று ஒரு கடிதம் அவர்களுக்கு அனுப்ப வேண்டும்!'' என்று கூறிவிட்டு, கம்பீரமாகத் தமது அறைப்பக்கம் நடந்தார்.

அவர் சென்றதும் குமாஸ்தா தங்கவேலு தலைமைக் குமாஸ்தாவிடம் வந்து, ''இப்போவெல்லாம் கொஞ்சம் நம்ப கம்பெனி மேலே 'கம்ப்ளெயிண்டு'கள் அதிகம் வந்து கொண்டேதான் இருக்கின்றன, ஸார்! பாருங்கள்! போன வாரம் டாக்டர் ஜீவன்தாஸ் நர்ஸிங்ஹோமுக்கு அனுப்பிய 'லிவர் எக்ஸ்டிராக்டு'கள் அவ்வளவு நன்றாகயில்லை என்றும், மருந்தை நோயாளிக்கு கொடுத்த பிறகு ஜுரம் வந்துவிடுகிறது. தயாரிப்பின் பரிசுத்தம் போதாது என்றும் கடிதம் வந்திருக்கிறது. இப்படி நாலா பக்கத்திலிருந்தும் புகார்கள் கிளம்பினால் அப்புறம் கம்பெனியை மூடிவிட வேண்டியதுதான்!'' என்று சொன்னான்.

''மருந்துகள் தயாரிப்பு, அதன் பரிசுத்தம் முதலியவைகளின் பொறுப்பு ஜகந்நாதன் எம்.எஸ்சி. அவர்களைச் சேர்ந்தது; நமக்கென்ன?'' என்று பதிலளித்தார் தலைமைக் குமாஸ்தா சுப்பிரமணியன்.

''யாருடையதாயிருந்தாலும் கம்பெனியின் பெயருக்கு இதனால் இழிவுதானே? அவர் அவருடைய வேலையை சரிவரச் செய்து கொண்டிருந்தால்தானே எல்லேருக்கும் நன்மை?'' என்று விடாமல் பேசினான் தங்கவேலு.

''அவர் தம் வேலையை சரிவரச் செய்யாவிட்டால் கேட்கிறவர் யார்? முதலாளியின் மகன்; செல்லப்பிள்ளை; கம்பெனியின் மானேஜிங் டைரக்டர். நமக்குப் பேச வாய் ஏது?'' என்றார் சுப்பிரமணியன் மெதுவான குரலில்.



''கம்பெனிக்கு இதனால் பெரும் நஷ்டம் வரவிருந்தால் அதன் மற்றொரு முதலாளியான சரபோஜி சும்மா இருந்து விடுவாரா!'' என்று சந்தேகத்துடன் வினவினான் அதுவரை தூங்கி வழிந்து கொண்டிருந்த அப்பாஜிராவ்.

''சென்னைப் பட்டணத்தில் கிடக்கிறார் அந்த முதலாளி. ஆடிக்கொரு தடவை ஐப்பசிக்கொரு தடவைதான் இந்தப் பக்கம் வரமுடியும். இதுபோல் எத்தனை கம்பெனிகளோ அவருக்குச் சொந்தம்! நம் கம்பெனியின் முக்கிய நிர்வாகம் முழுவதும் நாகராஜய்யர் கையில்தானே? தன் பிள்ளை செய்யும் தப்புகளை வெளியில் காட்டித் தருவாரா இவர்?'' என்று காரசாரமாகப் பதிலளித்தான் தங்கவேலு.

''இருந்தாலும், ஜகந்நாதன் பண்ணுகிற விஷயம் ஒன்றும் சரியில்லை, ஸார். அவர் சொந்த விஷயங்களில் கெட்டவராக இருந்தாலும், வேலை விஷயத்தில் ஒழுங்காக இருந்தார். சமீபகாலத்தில் அதுவும் கெட்டுவிட்டது. 'பயோ கெமிக்கல் டிபார்ட்மெண்'டை எட்டிப் பார்ப்பதே கிடையாதாம்! அப்படி இருந்தால் வேலை எப்படி ஒழுங்காக நடக்கும்?'' என்று சலிப்பாகக் கூறினான் அப்பாஜிராவ்.

''எல்லாம் அவர் சிநேகிதர் வாய்த்திருக்கிறாரே நாகலிங்கம், எம்.ஏ., அவரால்தான் ஜகந்நாதன் கெட்டது பூராவும்!'' என்று பல்லைக் கடித்தார் சுப்பிரமணியம்.

''இல்லாவிட்டால் ஜகந்நாதன் மிகவும் ஒழுங்கான நடத்தையுடையவராக்கும்! தலையெடுத்த நாளிலிருந்து அவர் ஒரு தினுசான பேர்வழிதான்!'' என்றான் வெறுப்புடன் தங்கவேலு.

''அவரை இன்னும் முழுக் காவாலியாக்கும் கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார் நம்ப கம்பெனி அக்கௌண்டண்ட் நாகலிங்கம். இவர் எங்கிருந்து எமனாக வந்தாரோ இந்த கம்பெனிக்கு! முதலாளிக்கு வேண்டியவர் போலிருக்கு?'' என்றான் அப்பாஜிராவ்.

''சரபோஜியின் சிநேகிதர் பிள்ளையாம் நாகலிங்கம். 'உன்

பிள்ளைகளைப் பெரிய வேலையில் போட்டாய்; எனக்கு வேண்டப்பட்ட இந்தப் பையனுக்கும் நல்ல வேலை போட்டுக் கொடு' என்றாராம் சரபோஜி. நாகராஜய்யர் வேறு வழி இல்லாமல் இரண்டு வருஷங்களுக்கு முன் பழைய அக்கௌண்டண்ட் இறந்து போனதும் இவர் கையில் வேலையைக் கொடுத்துவிட்டார். அவ்வளவுதான்!'' என்றார் சுப்பிரமணியம்.

''ஸார்! இந்த வேடிக்கையைப் பாருங்கள். ஒரு மரத்தில் பழுத்த இரண்டு பழங்களின் ருசி வெவ்வேறாகவா இருக்கும்? ஜகந்நாதனையும் அவர் அண்ணா பாலகிருஷ்ணனையும் ஒத்திட்டுப் பாருங்கள். ஜகந்நாதன் பலே போக்கிரி; பாலகிருஷ்ணனோ பரமசாது. என்ன ஆச்சரியம்!'' என்று வியப்புடன் கூறினான் தங்கவேலு.

''பாலகிருஷ்ணன், பாவம் சாதுவானதால்தான் ஏமாந்து போய் நிற்கிறார். தம்பிக்குக் கம்பெனியில் பெரிய வேலை. அண்ணாவுக்குத் தம்பியின் கீழ் உத்தியோகம் என்றால் நியாயமா இது! நாகராஜய்யருக்கு இரண்டு பிள்ளைகளுக்குள் எவ்வளவு சலுகை? சின்னவனை அமெரிக்காவுக்கு அனுப்பி படிக்க வைத்தார். வந்ததும் பெரிய 'ரஸாயன நிபுணர்' என்று நமது 'பயோ கெமிக்கல் டிபார்ட்மெண்டு'க்குத் தலைவராகப் போட்டார். இரண்டு மாதங்களிலேயே கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் என்று உயர்த்தி உட்கார்த்திவிட்டார். அண்ணா பாலகிருஷ்ணன் தம்பியின் தலைமையின் கீழ் உதவி மானேஜர் வேலையிலிருப்பதாம். அநியாயம் ஸார்! இது நல்லவர்களுக்கு காலமில்லை!'' என்று துடிதுடித்தான் அப்பாஜி.

''போய்யா நீ ஒருத்தன்! வெளி வேஷங்களைக் கண்டு மயங்கும் ஆசாமி. சிரிச்சுச் சிரிச்சிப் பேசுகிறாரே என்று பாலகிருஷ்ணன் மீது உனக்குப் பிரேமை போலிருக்கு. அவருக்கு வயிற்றிலே பல்லுன்னா!'' என்றார் சுப்பிரமணியம்.

''ஊரே ஜகந்நாதன் என்றால் சிரிக்கிறது அய்யா! ரயிலடி, 'நார்ட்டன் அன்கோ'விலிருந்து புட்டி புட்டியாக திராக்ஷைரஸம் தருவிக்கிறாராம். ஆபீஸ் அறையிலேயே சிநேகிதர்கள் இருவரும் 'தாகசாந்தி' செய்துகொள்ள ஆரம்பித்து விட்டார்களாம்?'' என்றான்



அப்பாஜிராவ் வருத்தத்துடன்.

''அதோடு மட்டுந்தானா? ஆண்டிக்குன்று பக்கம் ஒரு பாடகி வந்து தங்கியிருக்கிறாளாம். நம்ப கம்பெனி கார் அந்தப் பக்கம் அடிக்கடி தென்படுவதாகப் பியூன் முனுசாமி சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தான். மொத்தத்தில் ஜகந்நாதன் ரொம்பக் கெட்ட பேர் எடுக்கிறார். நாகராஜய்யருக்கு அவர் பிள்ளையினால் மகத்தான தலைக்குனிவு'' என்று தங்கவேலு முடிப்பதற்குள், முதலாளி அறையிலிருந்து தலைமைக் குமாஸ்தாவைக் கூப்பிடும் மணி ஒலிக்கவே, சுப்பிரமணியம் சட்டென்று ஆசனத்தை விட்டு எழுந்து முதலாளியின் அறைப்பக்கம் வேகமாகச் சென்றார். சிறிது நேரம் ஓய்ந்திருந்த 'டைப் இயந்திரங்கள் 'டக், டக் டக, டக' என்று மறுபடியும் ஆரம்பித்தன.

அதே சமயம் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் நதியை நோக்கி அமைக்கப்பட்டிருந்த விஸ்தாரமான அறையில் பெரிய சோபா ஒன்றின் மீது உல்லாசமாகச் சாய்ந்து கொண்டிருந்தான் மானேஜிங் டைரக்டர் ஜகந்நாதன்.

கையில் பிடித்திருந்த ஸிகரெட்டை உதட்டில் வைத்து உறிஞ்சிக் கொண்டே அதிலிருந்து வெளிப்படும் புகை மண்டலத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவன் போல் அவன் தென்பட்டாலும் மனம் பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தது என்பது உண்மை.

''ஹலோ ஜெகந்நாத்!'' என்று அதிகாரமாகக் கத்திக் கொண்டே கதவைத் திறந்துகொண்டு நுழைந்தான் அவன் பிராண சிநேகிதன் நாகலிங்கம்...

''வாப்பா, உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்ப நிலைமையே ரொம்ப மோசமாகி விட்டதே!'' என்று கவலையுடன் பதிலளித்தான் ஜகந்நாதன்.

''என்னப்பா! அபாயம் வந்துவிட்டது! எது வந்தாலும் கவலைப்படுவது என்பதுதான் என் அகராதியில் கிடையாதே!'' என்று கூறிக்கொண்டு சிரித்தவண்ணம் மற்றொரு சோபாவின்மீது சாய்ந்து கொண்டான் நாகலிங்கம்.

''மாதம் பத்துத் தேதிக்குள் சம்பளம் தீர்ந்துவிட்டது. அப்பா கண்டிப்பாயிருக்கிறார். இனிச் செலவுக்குக் கேட்டால் தரமாட்டார்.

'எண்ணூறு ரூபாய் சம்பளம் போட்டுக் கொடுத்திருக்கிறேன். கார் ஒன்று உன் தயவில் கிடக்கிறது. இதற்கு மேலும் பணம் வேண்டுமென்றால் இது என்ன பகல் கொள்ளையா?' என்று அன்றைக்கு என்னிடம் இரைச்சல் போட்டார். அம்மாவிடம் போன மாதம் கைமாற்றாக வாங்கிய இருநூறு ரூபாயை இன்னும் திருப்பித் தந்த பாடில்லை. மேலும் கேட்டால் நன்றாக இருக்காது. நார்ட்டன் கம்பெனியாரிடமிருந்து ஐநூறுக்கு 'பில்' வந்திருக்கப்பா. அதே கவலைதான்!'' என்று ஒரு பெருமூச்சு விட்டான்.

நாகலிங்கம் பதிலுக்குக் கம்பெனியே இடிந்து விழுகிறாற்போலச் சிரித்தான். பிறகு ஒருவாறு சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''இதுதானா பிரமாதம்! பணம் வேண்டுமானால் நம் கம்பெனி பணத்தைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டால் போச்சு!'' எனறான் அலட்சியமாக.

''என்ன சொல்கிறாய்! அந்த வேலை மட்டும் இங்கே வேண்டாம்!'' என்று திடுக்கிட்ட ஜகந்நாதன் அலறினான்.

''என்னப்பா! சமயத்திற்குப் பணத்தைக் கம்பெனியிலிருந்து, கைமாற்றாக எடுத்துக் கொண்டால் போகிறது. பணம் வந்தவுடனே திருப்பிப் போட்டால் போகிறது'' என்றான் அலட்சியமாக.

''கம்பெனிப் பண விஷயமே வேண்டாம் அப்பா நமக்கு! என் யோசனை என்னவென்றால், பொங்கல் வருகிறதே, ஏன் கம்பெனி வேலைக்காரர்களுக்குப் 'போனஸ்' ஒன்று வழங்கக்கூடாது? நமக்குக் கொஞ்சம் பணம் தாராளமாகக் கிடைக்குமே என்று பார்க்கிறேன்!'' என்றான் குதூகலமாக ஜகந்நாதன்.

''அச்சா! அதுவும் நல்ல ஐடியாதான்! இது விஷயமாக சரபோஜிக்குக் கடிதம் எழுதுகிறேன். நீ உன் அப்பாவைத் தாஜா பண்ணி வை!'' என்றான் ஆனந்த மிகுதியுடன் நாகலிங்கம்.

ஜகந்நாதன் கவலையெல்லாம் இந்த யோசனையைக் கேட்டதும் பறந்து போய்விட்டது. மகிழ்ச்சியுடன் ''சரி! அப்படித்தான் செய்ய வேண்டும்!'' என்று கூறி விட்டு, பிடித்திருந்த சிகரெட்டைத் தூக்கி எறிந்தான்.



''நான் போகவேண்டும், வேலையிருக்கிறது. சாயங்காலம் நம் 'புரோகிராம்' என்ன? அதேதானே? ஆண்டிக்குன்றுபக்கம் போகிறோமல்லவா?'' என்று கேட்டான் நாகலிங்கம்.

''ஆமாம்! கட்டாயம் போகிறோம்! காருக்குப் 'பெட்ரோல்' கொஞ்சம் தாராளமாக ஏற்பாடு செய்'' என்று கூறிய மானேஜிங் டைரக்டர் இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

## 3

கோமதி வித்தியாலயத்தின் உபாத்தியாயினிகள் சாப்பிடும் அறையின் கடிகாரத்தின் முள் பகல் ஒரு மணி என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது. மறுபடி பிற்பகல் இரண்டு மணிக்குத்தான் வகுப்புத் துவங்குவார்கள். அதுவரை ஒருமணி நேரத்தைச் சாப்பாட்டறையிலேயே உட்கார்ந்துகொண்டு எப்படிக் கழிப்பது என்பதன் ரகசியம் கோமதி வித்தியாலயத்தின் சில உபாத்தியாயினிகளுக்குத் தெரியும்.

''என்ன ஆறாவது பாரத்திற்கு கணக்கு டீச்சர் ஞானமணிக்குப் பதில் இப்போ யார் வருகிறார்களாம்? ஏதாவது சங்கதி தெரியுமா உங்களுக்கு?'' என்று தயிர்சாதத்தை விழுங்கிக் கொண்டே தன் தோழிகளைக் கேட்டாள் காமாக்ஷி.

''பெருச்சாளியின் இஷ்டப்படிதானே எல்லாம் நடக்கும்? இந்தப் பள்ளிக்கூடத்தின் சர்வாதிகாரி அவள்தானே? தேவியின் கிருபை எப்படியிருக்கிறதோ, யார் கண்டார்கள்?'' என்று வயலட் மேகநாதன் எரிச்சலுடன் பதில் சொன்னாள்.

''சர்வாதிகாரிகளின் ஆட்சி எல்லாம்தான் இப்பொழுது அனுபவத்தில் விளங்கிவிட்டதே! பெருச்சாளியின் ராஜ்யம் கொஞ்ச நாளைக்குத்தான் என்று நினைத்துக் கொள்ளுங்கள். வரவர ரொம்ப அட்டகாசம் செய்கிறது பெருச்சாளி. நாம் எத்தனை வேலை செய்தாலும் திருப்தியே கிடையாது. எவ்வளவோ படித்துவிட்டுக்

கடைசியாக இந்தக் துரதிர்ஷ்டம் பிடித்த பள்ளிக்கூடத்திற்கு வந்தோமே என்று நான் நொந்து கொள்கிறேன்'' என்று சலிப்பாகப் பதிலளித்தாள் ஈஸ்வரி பி.ஏ.எல்.டி.

''நாம் எல்லாம் கணக்குத் தெரியாதவர்களா? எனக்கு பி.ஏ.க்கு கூடக் கணக்குச் சொல்லித்தரத் திறமை உண்டு. என்னை ஒரு வார்த்தை கூடக் கூப்பிட்டுக் கேட்கவில்லை. பேப்பரில் கணக்கு உபாத்தியாயினி பி.ஏ., பட்டத்துடன் தேவை என்று விளம்பரம் செய்துவிட்டதே பெருச்சாளி! ஒரு சமயம் அதனுடைய அக்கா, தங்கை பெண்கள் எவளாவது ஒருத்தி வேலையற்றுத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ!'' என்று ஆயாசத்துடன் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயினி -சௌந்தரம்மாள் எம்.ஏ.எல்.டி.யைப் பற்றித் தூற்றினாள் வயலட் மேகநாதன்.

''அரை வருஷப் பரீட்சைப் பேப்பரை எல்லாம் திருத்தி விட்டீர்களா? என் கிளாஸ் பெண்கள் சுத்த மோசம். எனக்கென்று பார்த்து வடிகட்டின மக்கு சுப்பிகள் வந்து சேர்ந்திருக்கின்றார்கள். நான் தொண்டைத்தண்ணி வற்ற அதுகளுக்குக் கத்துகிறதுதான் மிச்சம். பத்துப்பெண்கள் கூடப் பாஸ்மார்க் வாங்கவில்லை. பெருச்சாளி பார்த்ததென்றால் என் போதனை சரியில்லை என்று குறைகூறும். உதாரணமாக சரபோஜி கெமிகல் ஒர்க்ஸ் நாகராஜய்யர் பெண் சகுந்தலா இருக்கிறாளே வெறும் சாம்பிராணி. கணக்கிலே ஸைபர், இங்கிலீஷில் எட்டு. பிரம்மதேவன் வந்துதான் அவள் கையெழுத்தைப் படிக்கணும். நாகராஜய்யர் வீட்டவர்கள் பெருச்சாளிக்கு வேண்டியவர்கள். இந்த மார்க்கைப் பார்த்தால் என்மேல் பெருச்சாளி எரிந்துவிழும். நான் என்ன செய்யட்டும்? தலைவிதி!'' என்று கடுத்துக் கொண்டாள் காமாக்ஷி.

''அது கிடக்கட்டும், நாகராஜய்யர் பிள்ளை ஜகந்நாதன் ஏன் இப்படி ஆளுவார் அடக்குவார் இன்றித் திரிகிறான்; அவனுக்கு ஒரு சகா வாய்த்தானே! இரண்டு பேருமாச் சேர்ந்து செய்யும் அட்டகாசம் ஊர் சகிக்கவில்லை. அன்றைக்கு எங்கள் வீட்டில் சினிமாவுக்குப் போயிருந்தோம். முதல் வகுப்பில் யாரோ தெரிந்தவர் போல் உட்கார்ந்திருந்தார்கள். திரும்பிப் பார்த்தேன். ஜகந்நாதன் பக்கத்தில் ஒரு நாகரீகப் பெண்மணி இருந்தாள். ஊருக்கு அவள் புதிதுபோல் இருக்கு. தெரிந்த முகமல்ல. அவன் நடத்தை சுத்தமோசம்!



சகிக்கவில்லை!'' என்று வெறுப்புடன் பகர்ந்தாள் ஈஸ்வரி.

''அவன் ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?'' எனக் கவலையுடன் வினவினாள் காமாக்ஷி.

''மோசமான நடத்தை கொண்ட துஷ்டனுக்குப் பெண் கொடுக்க எல்லாரும் பயப்படுகிறார்கள். குடிகூட 'உண்டாம்'' என வெறுப்பாகச் சொன்னாள் ஈஸ்வரி.

''இல்லவே இல்லை! காவாலியோ, கழிசடையோ எவனாயிருந்தாலென்ன! பெண் ஒன்றை அவன் தலையில் கட்ட எத்தனையோ தகப்பன்மார்கள் தயார்தான்! ஆனால் அவன்தான் கல்யாணமே வேண்டாமென்று இருக்கிறானாம்!'' என்றாள் சாரதா.

''டீச்சர் பங்கஜம் இருந்தாளே ஞாபகமிருக்கா? இரண்டு வருஷங்களுக்கு முன்பு கல்யாணம் பண்ணிக் கொண்டு வேலையைக்கூட ராஜினாமா பண்ணிவிட்டுப் போனாளே! நாகராஜய்யர் என்னமோ உறவாம் அவளுக்கு. பங்கஜத்தைத் தன் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிவைத்து விடுவது என்று அவர் ஒன்றைக்காலில் நின்றாராம். பங்கஜம் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டாளாம்!'' என்று சரடு விட்டாள் வயலட் மேகநாதன்.

''ஐயோ, இதென்ன பொய். பங்கஜத்தை அவன்தான் வேண்டாம்னுட்டானாம். வேடிக்கையம்மா, இந்த ஊர் விஷயங்களே!'' எனப் பெருமூச்சு விட்டாள் சாரதா.

''உங்களையெல்லாம் தலைமை உபாத்தியாயினி அவர் அறைக்கு வரும்படி அழைத்தார்கள். சரியாக இரண்டு மணிக்கு எல்லோரும் தயவு செய்து வந்து விடுங்கள்'' என்று கூறிக்கொண்டு பள்ளிக்கூடத்தின் காரியதரிசி சொக்கம்மாள் நுழைந்தாள்.

அதுவரை பேசிவந்த சங்கதிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. தலைமை ஆசிரியை எதற்காகத் தங்கள் அனைவரையும் பார்க்க அழைக்க வேண்டும் என்ற திகிலுடன் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டனர் அந்த வம்பிகள்.

''டங் டங்'' எனக் கடிகாரத்தில் மணி இரண்டு அடிப்பதைக் கேட்ட அவர்கள் திடுக்கிட்டு, ''ஒரு மணி நேரம் போனதே

தெரியவில்லை; வாருங்கள் பெருச்சாளியைப் பார்க்க!'' என்று கிளம்பினார்கள்.

தனது அறையிலே பதினைந்து நிமிஷமாகப் படபடத்த இதயத்துடன் தனக்காகக் காத்திருக்கும் உபாத்தியாயினிகளை உள்ளே நுழைந்த தலைமை ஆசிரியை சௌந்தரம்மாள் புன்சிரிப்புடன் நோக்கினாள். அவள் பின்னால் கூடவே வந்தாள் ஒரு பெண்மணி.

''நமது பள்ளிக்கூடத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்திரா, பி.ஏ.,எல்.டியை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கவே இப்போது அழைத்தேன்'' என்று கூறிய வண்ணம் சௌந்தரம்மாள் சந்திராவை நோக்கினாள்.

ஏக காலத்தில் எல்லோருடைய கண்களும் சந்திரா பி.ஏ., எல்.டி., மீது பாய்ந்தன. சௌந்தர்ய தேவதை போல் நின்ற சந்திராவைக் கண்டு அவர்கள் ஒருகணம் திகைத்துப் போய்விட்டனர்.

''மிஸ். சந்திராதான் இனிமேல் ஆறாவது பாரத்தின் கணக்கு உபாத்தியாயினி'' என்று கூறிய செந்தரம்மாள், ''மிஸ் சந்திரா! இவர்தான் கல்யாணி; இரண்டாவது பாரத்தின் கணக்கு ஆசிரியை. இவர் சாரதா'' என்று முறையே ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தி விட்டு, ''அவ்வளவுதான்! நீங்கள் உங்கள் வகுப்பிற்குப் போகலாம்'' என முடித்தாள்.

சந்திராவை நோக்கி ஒரு அசட்டுப் புன்னகை புரிந்து விட்டு உபாத்தியாயினிகள் யாவரும் வெளியேறினார்கள். வராந்தாவில் மறுபடியும் ஒன்றாகச் சந்தித்த அவர்கள் எல்லோருடைய உள்ளமும் பொறாமையினால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

''தேவலை! பெயருக்கு ஏற்றபடி பெண் ஜோராக இருக்கிறாளே. இந்தப் பேர்வழியை எங்கிருந்து பெருச்சாளி தருவித்தார், தெரியவில்லையே!'' என்று சீறினாள் சாரதா.

''வெளியூர்க்காரிபோல் இருக்கிறது. புது வாத்தியாரம்மா மோகத்தில் பள்ளிக்கூடமே கொஞ்சநாள் திணறப் போகிறது'' என்று பல்லைக் கடித்தாள் காமாக்ஷி.

''என்னவோ, எனக்கு ஒன்றுமே பிடிக்கவேயில்லை. பல வருஷங்கள் உழைத்த நாமெல்லாரும் இருக்க, சந்திரா, இந்திரா என்று



புதிய ஒரு பெண்ணைக் கொண்டு வந்து போட்டது அக்கிரமம். இருக்கட்டும் பார்ப்போம்'' எனக் கருவினாள் வயலட். பிறகு ஆக்ரோஷ மிகுந்த மனத்துடன் எல்லோரும் தத்தம் வகுப்புகளுக்குச் சென்றனர்.

## 4

சந்திரா பி.ஏ.,எல்.டி., கவலை நிறைந்தவளாகக் கூடத்துத் தரையில் உட்கார்ந்திருந்தாள். எதிரே சமையற்கட்டின் வாசற்படிமீது சாய்ந்துகொண்டு நின்ற சித்தி பார்வதியின் முகத்தில் கோபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

''சரி! முடிவாக உன் தீர்மானத்தைத்தான் சொல்லிவிடேன்'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் பார்வதி.

''சொல்றதுக்கு இனி ஒன்றும் இல்லை. இந்த வரன் என் மனசுக்கே பிடிக்கவில்லை. அதனால் வீணாக ஏன் அவர்கள் வந்து அலையவேண்டும்? பிறகு பொல்லாப்புப் படுகிறதை இப்போதே வேண்டாமென்று விட்டால் தீர்ந்தது. அவ்வளவுதானே?'' என்று பிடிவாதமாகப் பதிலளித்தாள் சந்திரா.

''நல்ல பொண்ணுடி நீ, நல்லபொண்ணு. குடு குடுன்னு அங்கிருந்து வந்தாளாம்; இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்திலே வேலை காலின்னு கேள்விப்பட்டாளாம், அதைப் போய் ஒப்புக்கொண்டாளாம். வேடிக்கைதான்! அந்த வரன் வீட்டிலிருந்து மனுஷர்கள் நாளைக்கு உன்னை வந்து பார்க்கணுங்கறாங்களே, வரச் சொல்றதான்னு உன்னை உங்கப்பா கேட்கச் சொன்னார். அதுக்குத்தான் ஒரு நாழியா கேட்கிறேன். பிடிகொடுத்து பதில் சொல்ல மாட்டேங்கறியே'' என்று சீறினாள் பார்வதி.

''நீங்கள் சொல்கிற வர்ணனையைக் கேட்டாலே எனக்கு வாந்தி வருகிறது. வேண்டாம்! நான் அவர்களுக்கு என் தரிசனத்தைத் தரத் தயாராயில்லை!'' என்று பதிலுக்குச் சீறினாள் சந்திரா.

''ரொம்ப அழகுதான் போ! இவ்வளவு சாமர்த்தியமாகப் பேசக் கத்துண்டியே, அம்மா! உனக்கு ஒரு வழி பண்ணாட்டா அப்புறம் கமலிக்கு எப்படிக் கல்யாணம் பண்றது? அதைச் சொல். நீ இப்படி இருப்பது உன் பின்னால் இருப்பவர்களைன்னா பாதிக்கறது!'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் சித்தி.

''குஷாலாய் அவளுக்குப் பண்ணிக் கொள்ளுங்கள்; எந்தச் சட்டத்திலாவது அக்காவிற்குப் பின்னால்தான் தங்கைக்கு கல்யாணம் செய்ய வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறதா?'' என்றாள் சந்திரா பரிகாசமாக.

''சட்டத்தில் எழுதி வைக்கவில்லை. உலக சம்பிரதாயம் அது... இதோ பார் மகராஜி! உன் அந்தஸ்திற்கு ஐ.ஸி.எஸ். மாப்பிள்ளை மாலையுடன் வந்து வாசலில் நிற்பான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா, நான் கேட்கிறேன்'' என்றாள் சித்தி கோபத்துடன்.

''நிற்கமாட்டான். அதற்காகச் சாக்கடையில் போய் விழ வேண்டுமா?'' என்று பதிலுக்குக் கத்தினாள் சந்திரா.

''உன்னோடு பேச என்னாலாகாது. உங்கப்பாவிடம் சொல்லிக்கோ'' என்று இரைந்தாள் முடிவில் பார்வதி.

''அப்பா சொன்னால் என்ன? யார் சொன்னால் என்ன? தற்போது நீங்கள் சொல்லும் வரன் எனக்குப் பிடிக்கவேயில்லை. எங்கேயோ டில்லியில் வேலை பார்க்கிறானாம். வயது நாற்பத்தைந்துதான் ஆகிறதாம். முதல் பெண்டாட்டியைத் தள்ளி வைத்திருக்கிறானாம். மூத்தாள் விட்டுப்போன இரண்டு குழந்தைகளை இளையவள் வந்து வளர்க்க வேண்டுமாம். சித்தி! தலைபோனாலும் சரி, இந்த வரனை நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்.''

''எனக்கென்ன, உங்கப்பாகிட்டே உன் தீர்மானத்தைச் சொல்லிவிடு'' என்று வெடுவெடுத்த பார்வதி சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கே ஈரவிறகை அடுப்பில் வைத்துக்கொண்டு திண்டாடிக் கொண்டிருந்தாள் கமலா.

''இன்னுமாடி அடுப்பு எரியாது உனக்கு? துப்புக்கெட்ட பிணமே! ஒரு சீசா கிரஸின் எண்ணையை வீணாக்கியிருக்கிறாயே. அடுப்புக்கூட மூட்டத் தெரியல்லே. குதிராட்டம் வயசாச்சு! என்



தலையெழுத்து ஒரு வாயாடி பெண்ணையும், தொடைநடுங்கிப் புருஷனையும் கட்டிண்டு கஷ்டப்பட வேண்டும்... போ, சனீஸ்வரனே! புழக்கடைப் பக்கம் போய் ஒரு பிடி ஓலை கொண்டுவா'' என்று கடுகடுத்தாள்.

''ஆமாம், ஈர விறகை வாங்கிப் போட்டுண்டு கண்ணுதான் அவிகிறது. எப்பவும் இந்த அம்மா இப்படித்தான்'' என்று முணுமுணுத்துக் கொண்டே பின்பக்கம் சென்றாள் பார்வதியின் பெண் கமலா.

கூடத்திலே உட்கார்ந்திருந்த சந்திராவின் உள்ளம் அல்லற்பட்டிருந்தது; இன்னும் இரண்டு நாளில் சிநேகிதி அம்புஜத்திற்குக் கல்யாணம். ஊரே திமிலோகப்படுகிறது. சித்தியின் உத்தரவின்றி கல்யாணத்திற்குப் போக முடியாது. இப்போதிருக்கும் மனநிலையில் சித்தி உத்திரவு தரமாட்டாள். கல்யாணத்திற்குப் போகாவிட்டாலோ அம்புஜம் வருத்தப்படுவாள். ஒரே ஊரில் இருந்துகொண்டு தன் கல்யாணத்திற்கு வரவில்லை என்று கோபித்துக் கொள்வாள். இப்படிப் பலவாறு யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவள் மனதில் பழைய சம்பவங்கள் எழுந்தன.

''ஆமாம், பதினான்கு வயதிலிருந்தே இதே பேச்சுதான் வீட்டில். வரன் வந்திருக்கிறது, பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்ப்பாட்டம் ஏற்படும். சித்தி விழுந்தடித்துக்கொண்டு டிபன் எல்லாம் தயார் செய்வாள். சந்திரா அந்த பயங்கரமான நிமிஷத்தை எதிர்பார்த்துக் கொண்டு படபடத்த நெஞ்சுடன் பொம்மை போன்று அலங்கரித்துக்கொண்டு நிற்பாள். ''நமஸ்காரம் பண்ணம்மா'' என்று தந்தையின் குரல் கேட்கும். யாருக்கு என்று நினைவு இல்லாமல் சந்திரா எதிரே உட்கார்ந்திருப்பவர்களின் பாதங்களில் வீழ்ந்து எழுந்திருப்பாள். பிறகு உள்ளே சமையற்கட்டின் புகையின் நடுவே கதவிடுக்கில் பல மணி நேரம் தபசு செய்வாள். அப்பாவுடன் அவர்கள் பேசுவார்கள் வெகுநேரம். மாப்பிள்ளை என்று உட்கார்ந்திருப்பவனைக் கண்டு சந்திராவின் உள்ளம் திடுக்கிடும். 'கல்யாணம் நடக்கக்கூடாது ஸ்வாமி' என்று மனத்தில் பிரார்த்திப்பாளவள். எப்படியோ ஜாதகத்தின் மீது குறை சொல்லியோ அல்லது வேறு வரதட்சணை விஷயமாகவோ கல்யாணம் தடைபட்டுவிடும். சந்திராவின் மனம் அப்பா என்று

விச்ராந்தியடையும்.

சந்திரா பெரியவளாகிக் கொண்டு வந்தாள். அவளுடன் தைரியமும் வளர்ந்துகொண்டே வந்தது. பழைய நாட்களைப் போல மனத்திற்கு இஷ்டமில்லாத வரன்களைக் கண்டு நடுங்கிக் கடவுளைப் பிரார்த்திப்பதில்லை. அதற்குப் பதில் 'எனக்கு இந்த வரன் பிடிக்கவில்லை' என்று அழுத்தந் திருத்தமாகப் பதிலளிக்கும் துணிச்சல் அவளுக்கு ஏற்பட்டது. பெற்றோர்கள் கல்யாண முஸ்தீபுகள் செய்துகொண்டிருக்கையில் சந்திரா படிக்க ஆரம்பித்தாள். சித்தியின் கையிலிருந்து ஒரு பைசாகூட எதிர்பார்க்காமல் அவள் மேல்படிப்பு முழுவதையும் உபகாரச் சம்பளங்களின் மூலமே முடித்துக் கொண்டாள். இப்போது எண்பது ரூபாயில் உத்தியோகமும் பார்க்கிறாள். இப்படியே பலவிதம் யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவள் முன்னால் வியர்க்க விறுவிறுக்கத் தம்பி வேணுகோபால் வந்து நின்றான்.

''சந்திரா, ஒரு சந்தோஷச் சமாசாரம் சொல்ல வந்தேன். எனக்கு வேலை கிடைத்துவிட்டது. 'சரபோஜி கெமிக்கல் வொர்க்ஸ்'ஸில் என்னையும் முப்பத்தைந்து ரூபாய்ச் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். நாகராஜய்யர் மிகவும் நல்லவர். என்னிடம் பிரியமாகப் பேசினார். நாளையிலிருந்தே வேலையை ஒப்புக்கொள்ளப் போகிறேன்'' என்று மூச்சுத் திணறக் கூறினான்.

''ரொம்ப சந்தோஷம்! போ! சித்திக்கிட்டச் சொல்லு'' என்று சந்திரா மெல்லிய குரலில் சொன்னாள். பதிலுக்கு வேணுகோபால், ''சித்திகிட்ட ஏன் சொல்ல வேண்டும்? வெறும் தடியன் சாப்பிட்டுவிட்டு வேலையற்றுத் திரிகிறான் என்று என்னைக் கரித்துக் கொண்டிருக்கிறாள். ஜுரத்தில் அடிபட்டுக் கிடந்த என்னால் உடனே வேலை செய்ய முடியுமா! ஆறு மாதமா நீயும் அருகில் இல்லை. சித்தியிடம் நான் பட்ட துன்பத்தை... அதெல்லாம் பெரிய கதை!'' என்று கூறியவன் பார்வதி சமையலறையிலிருந்து வெளிப்படுவதைக் கண்டு, ''சித்தி! எனக்கு வேலை கிடைத்துவிட்டது'' என்றான் பெருமையுடன்.

''அக்காவுக்கும் தம்பிக்கும் உத்தியோகம் கிடைத்துவிட்டது. இனி நம் வீட்டில் அஷ்ட ஐஸ்வர்யந்தான் போ'' என்று எகத்தாளமாகப் பதில் அளித்த பார்வதி மிடுக்காகக் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு புழக்கடைப் பக்கம் சென்றாள்.



அதுசமயம் உள்ளே வந்த கல்யாணராமய்யர் அங்கவஸ்திரத்தைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, தொண்டையைச் சற்றுக் கனைத்துக் கொண்டு, ''எங்கே சந்திரா உங்கம்மா?'' என்று கேட்டார்.

''புழக்கடையில் இருக்கிறாள்'' என்று சந்திரா ஒரே வார்த்தையில் பதிலளித்துவிட்டுப் பேசாமலிருந்தாள்.

''எங்கே போய்விட்டேன் உங்களையெல்லாம் தவிக்க விட்டுவிட்டு?'' என்று கடுகடுப்பாகப் பதிலளித்துக் கொண்டே வந்த பார்வதி குடத்தை ஆத்திரத்துடன் டக்கென்று கீழே வைத்தாள்.

தொண்டையை மறுபடியும் கனைத்துக்கொண்ட கல்யாணராமய்யர் கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ''சந்திரா என்ன சொல்றா? நாளைக்கு அவாள்ளாம், வரலாமான்னு கேட்டா! கேட்டுச் சொல்றேன் என்றேன்'' என்று மெதுவாகக் கேட்டார்.

''உங்கள் பெண்ணிற்கு வரன் பிடிக்கவில்லையாம்!'' என்ற பார்வதி அங்கிருக்க இஷ்டமில்லாதவள்போல் உள்ளே சென்றுவிட்டாள்.

''என்ன அப்படியா?'' என்று கேட்ட கல்யாணராமய்யர் திகைத்துப் போய்விட்டார். பெண்ணைப் பார்க்க வரலாமென்று அவர்களிடம் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தவர் சந்திராவின் பதில் இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகவே, ''என்ன சந்திரா, அப்படிச் சொல்கிறாய்? வந்து பார்த்து விட்டுப் போவதில் உனக்கென்ன?'' என்றார் ஏமாற்றத்துடன்.

சந்திராவுக்கு அப்பாவிடம் அபாரமான மதிப்பும் மரியாதையும் உண்டு. கொஞ்சம் அவரிடம் பயம்கூட உண்டு எனச் சொல்லலாம். இருந்தபோதிலும் நன்றாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''இல்லை அப்பா! வரன் வீட்டவர்கள் அனாவசியமாக என்னை வந்து பார்ப்பதை நான் விரும்பவில்லை. என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம்'' என்று கூறிவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டியதற்கு ஆயத்தம் செய்யக் கிளம்பினாள்.

''சந்திரா! வந்தேனா பார்!'' என்று ஒரு அதட்டல் போட்டு அவளது தளிர்மேனியை நடுங்க வைக்கும் ஆதிக்கம் கொண்டிருந்த தந்தையான அவர் அது சமயம் மௌனமாகவே இருந்துவிட்டார்.

# 5

வஸந்த நிலையம் என்ற அந்தக் கடைசி பங்களாவின் வாசற்புரத்தில் பதிக்கப்பட்டிருந்த 'நாகராஜய்யர்' என்ற பித்தளைத் தகட்டில் சூரிய வெளிச்சம் பட்டு, பொன்போல் மின்னும் வரையில் அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தான் தோட்டக்கார பெரியசாமி.

''அம்மா அரைநாழியா உன்னைக் கூப்பிடறாங்க! அதைக் காதிலே வாங்காம ஒரே முட்டா கையிலே ரத்தம் வராப்பிலே இதைத் துடைச்சிக்கிட்டு இருக்கியே!'' என்று அதட்டிய மனைவி ராமக்காவின் குரல் அவன் வேலையை நிறுத்தியது.

''என்னாத்துக்கு அதுக்குள்ளே கூப்பிடறாங்களாம்? இந்த வேலையை எவன் செய்வானாம்?'' என்று எரிந்து விழுந்தான் மனைவிமீது அவன். பிறகு அவிழ்ந்து போயிருந்த தன் முண்டாசை இறுக்கிக் கட்டிக் கொண்டு கையிலிருந்த துணியை வெறுப்புடன் வீசி எறிந்துவிட்டு, ''இந்த வீட்டிலே வேலை செய்வதைக் காட்டிலும் எங்கேயாவது பிச்சையெடுத்துப் புளைக்கலாம்'' என்று முனகிக்கொண்டே தன் மீசையைத் தடவிக்கொண்டான்.

வேலையாட்களின் சிரமம் தெரியாது புண்பட்ட குதிரையைச் சவுக்கினால் அடித்து ஓடச் செய்ய முயற்சிப்பது போன்று மேலும் மேலும் கிட்டிபோட்டு வேலை வாங்கும் இயல்பு கொண்டவர்கள் நாகராஜய்யர் குடும்பத்தினரில் பலர். முணுமுணுத்துக் கொண்டே சென்ற பெரியசாமியின் மனக்கண்முன் அந்தப் பங்களாவின் ஒவ்வொரு ஆத்மாவும் வந்து நின்றனர்.

பெரிய ஐயா - அவர்தான் - நாகராஜய்யர் - சரிகைத் தலைப்பாவும், முழங்கால்வரை தொங்கும் கறுப்புக் கோட்டும், அதன் மேல் பட்டை ஜரிகை அங்கவஸ்திரமுமாகக் காட்சியளிப்பவர்!



துர்வாச முனியின் குணம்படைத்த ஆசாமி! எதற்கெடுத்தாலும் மூக்கின்மேல் கோபம். அய்யருக்குக் கோபம் வந்துவிட்டால் போதும். வேட்டை நாயைக் கண்டு பதுங்கும் பிராணிகளைப் போல் வேலையாட்கள் யாவரும் தத்தம் இருப்பிடத்தில் கொஞ்சம் தலைமறைவாகவே இருந்து கொள்வார்கள். எத்தனை வேலை செய்தாலும் அவர் குற்றங்கண்டு பிடித்துக்கொண்டுதான் இருப்பார். அது அவர் வழக்கம். சின்ன ஐயா ஜெகந்நாதனைக் கண்டால் சகல வேலையாட்களுக்கும் மனசிலே வெறுப்புத்தான். ஏழைகளிடம் இரக்கமற்றுக் கடுமையாக நடந்துகொள்ளும் முரடன் என்று அவன்மீது துவேஷம்.

நடு ஐயா பாலகிருஷ்ணன் வேலைக்காரர்கள் விஷயமாக வம்புக்கு வராவிட்டாலும் சுத்தக் கருமி. எச்சிற்கையால் காக்காய் ஓட்டாத தர்மிஷ்டர்! ஐம்பது பொத்தல்கள் கொண்ட ஒரு கந்தல் வேஷ்டியைக் கொடுப்பதற்கு அறுபது நாழி யோசனை செய்து பார்க்கும் லோபி. அவருக்கு மனைவியாக வாய்த்திருக்கும் அலமேலு அம்மாவைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. சதா மூஞ்சியில் சிடுசிடுப்புத்தான்.

பெரிய அய்யரின் கடைக்குட்டிச் செல்லப் பெண் சகுந்தலா அம்மாவோ சுத்த அசடு. அதனால் வேலைக்காரர்களுக்கு ஒருவித நன்மை இல்லாவிட்டாலும் தீமைகள் அதிகம். பூப்பறிப்பதாகக் கூறிச் செடிகளையெல்லாம் துவைத்துப் போட்டு விடுவாள். இல்லாவிட்டால் கடிதங்களைக் கிறுக்கிக் கிழித்துப் பொடியாக்கிப் பெருக்கிய வராந்தாவில் தூவிவிட்டுப் போய்விடுவாள்.

வீட்டில் ஒரே ஒரு ஆத்மாவின்மீதுதான் அவனுக்கு மதிப்பு அதிகம். அதுதான் காமாக்ஷி அம்மாள்; நாகராஜய்யரின் மனைவி. மஞ்சள் ஒளிவீசும் சிவந்த முகத்தில் குங்குமம் பிரகாசிக்க மகாலக்ஷ்மி போன்று பெரியசாமியின் கண்களுக்குத் தோன்றினாள் அந்த அம்மாள். வேலைக்காரர்களிடம் பேசும்போது அந்த அம்மாவின் குரல் மெதுவாகத்தான் ஒலிக்கும். அந்த அம்மாள் ஒரு குறைகூறிக் கேட்கப் பெரியசாமி சகிக்கமாட்டான். அவ்வளவு மரியாதை அந்த அம்மாளிடம்!

யோசித்துக்கொண்டே பெரியசாமி சின்ன எஜமானியின்

கட்டளையைக் கீழ்ப்படியச் சென்றான். ஆனால் அலமேலு அவனுக்காக அங்கே காத்திருக்கவில்லை. வசந்த நிலையத்தின் இரண்டாவது மாடி ஹாலில் நடுவில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலில் சோம்பலின் வடிவமாக வந்து உட்கார்ந்து அதன் சங்கிலி ஒன்றின்மீது சாய்ந்த வண்ணம் அவள் தன் மெல்லிய விரல்களினால் கனகாம்பரப் பூக்களை மாலையாகக் கட்டிக் கொண்டிருந்தாள்.

அப்போது வெளியில் செல்ல ஆயத்தமான உடைகளுடன் உள்ளே வந்த பாலகிருஷ்ணன், ''அலமு! போய் ஒரு டம்ளர் தீர்த்தம் கொண்டுவா. சீக்கிரம்!... உம் நாழியாச்சு'' என்று உத்தரவிட்டுவிட்டு, ''ஸ்...'' என்று ஆயாசத்துடன் பெருமூச்சுவிட்டான்.

''அங்கே யாருமில்லையோ உங்களுக்குத் தீர்த்தம் கொடுக்க? சித்தநேரம் நான் உட்கார்ந்திருப்பதைக் காண சகிக்கமாட்டீர்களே!'' என்று சீறிய அலமேலு இடத்தைவிட்டு அசையக்கூடவில்லை.

''பாரு; ஆபீஸுக்கு நாழியாச்சு. நீதான் போய்ச் சீக்கிரம் கொண்டுவாயேன், அப்பப்பா! எத்தனை வேலையோ உனக்கு இந்த வீட்டில்! விடிந்ததும் விடியாததுமாகப் பத்துப் பேருக்குச் சமைத்து நிமிர்த்தி ரொம்பக் களைத்துப் போய்விட்டாய், பாவம்'' என்று பரிகாசமாக கூறியவண்ணம் அவள் எதிரில் வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தான்.

''பரிகாசத்திற்குக் குறைச்சலில்லை. தினம் பத்துப் பேருக்கு அப்படி உழைத்துப் போட எனக்குத் தலைவிதி ஒன்றுமில்லை. நான் 'இல்லாதவன் வீட்டுப் பெண்' என்று நினைக்க வேண்டாம்!'' என்று அவள் மேலே கோபத்துடன் ஏதோ கூறி முடிப்பதற்குள் பாலகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே, ''கோலாலம்பூர் கோகிலம் எம்.எஸ்.எம். ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரின் ஏக புதல்வி... இன்னும்... உன் மலர் போன்ற கரங்களால் பாவம், சமையற் பாத்திரங்களைத் தூக்கினால், ஐயோ, அவை...'' என்று முடிக்காமல் நிறுத்தினான்.

அலமேலுவின் முகத்தில் கோபம் பொங்கி எழுந்தது. ''போதும் நிறுத்துங்கள் விளையாட்டை. எப்பவும் ஆபீஸ் ஆபீஸ்தான், விடிஞ்சதும் விடியாததுமாக விழுந்தடித்து ஓடணுமாக்கும். என்னை எங்கேயும் அழைத்துக்கொண்டு போறதேயில்லை. சினிமாவுக்குப்



போகணும் போகணும்னு ஒரு மாசமா அடிச்சுக்கிறேன். ஒண்ணும் கேட்கிறதில்லை'' என்றாள். சொல்லி முடிப்பதற்குள் அவள் தொண்டை துக்கத்தில் அடைத்துக் கொண்டது.

''சரி, இன்னிக்குப் போகலாம். போய் ஒரு டம்ளர் ஜலம் சீக்கிரம் கொண்டுவா; ஆபீஸுக்கு போக நாழியாச்சு என்று எத்தனை தடவை சொல்வது'' என்றான் சலிப்புடன் அவன்.

அரை மனசுடன் எழுந்திருந்த அலமேலு தனது அவிழ்ந்த கூந்தலை முடித்துக்கொண்டே ஜலம் கொண்டு வரச்சென்றாள்.

ஐந்து நிமிஷங்களில் திரும்பிய அவள், ''இந்தாங்கள், நீங்க ஒருத்தர்தான் இப்படித் துடிக்கண்டு ஆபீஸுக்கு ஓடறேள். உங்க தம்பியைப் பாருங்க. இன்னும் தூங்கி எழுந்திருக்கவில்லை. மகாராஜன் அவன்!... உங்கப்பா பண்ற ஓரவஞ்சனை எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை'' என்றாள் கோபத்துடன்.

தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்த பாலகிருஷ்ணன் மனத்திலும் அந்தச் சமயம் அதேமாதிரியான எண்ணந்தான் வியாபித்திருந்ததாகையால் மிக்க சலிப்புடன், ''என்ன செய்வது, அவர்கள் அதிர்ஷ்டம்'' என்றான்.

அலமேலுவின் கண்கள் அனலைக் கக்கின. ''அதிர்ஷ்டமாம், அதிர்ஷ்டம்! நீங்களா பண்ணிக் கொள்வது முக்கால்வாசி எல்லாம்! உங்கள் தம்பி தஸ்ஸு புஸ்ஸுன்னு சில்க் ஸூட்டும் ஹாட்டுமா கிளம்பறான், நீங்கள் என்னடான்னா குசேலரைப் போலக் கோட்டுகளில் பொத்தலுக்கு ஐம்பது ஒட்டுப் போட்டாவது போட்டுக் கொண்டு ஓடறேள்! எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை. நீங்கள் இப்படி ஏழை வேஷம் போடறது எனக்குத்தான் அவமானமாயிருக்கு'' என்றாள் வெறுப்புடன்.

''தம்பி மைனர்; அவனுக்குத் தளுக்கு மினுக்கு வேண்டும். எனக்கென்ன, வயசாயிப் போச்சு இல்லையா?'' என்றான் பாலகிருஷ்ணன் பரிகாசமாக.

அலமேலு கோபம் பொங்கிவர, ''ரொம்ப ஒழுங்குதான்! நமக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷங்கள்கூட ஆகவில்லை. எனக்கு இன்னும் முழுக்க இருப்பத்தைந்து வயது நிரம்பலை. அதுக்குள்ளே கிழவி வேஷம் போடச் சொல்றேளா!'' என்று சிடுசிடுத்தாள்.

''அம்மு! இன்னும் மூணு வயசை விழுங்கிவிட்டுப் பேசறேயே, உனக்கு இருபத்தெட்டாகிறது. எனக்கு முப்பத்தி ஆறு ஆகிறது. நாம் என்ன சின்னக் குழந்தைகளா? உல்லாசமாக வெளியே போய்வர?'' என்று அவன் கூறவே அலமேலுவின் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடியது.

''இந்த வயசிலே சகல ஆசையையும் துறந்து சன்யாசியாக இருக்கணும்னா என்னை ஏன் கல்யாணம் பண்ணிக் கொண்டேளாம்?'' என்று விம்மினாள் அலமேலு.

பாலகிருஷ்ணனுக்கு மனைவியின் கண்களின் அபார வேலைத் திறமையைப் பற்றிப் பழக்கமாதலால், ''அம்மு, விளையாட்டா உன்கிட்ட ஒன்றுமே நான் பேசக்கூடாதா? சினிமாவுக்கு அழைச்சுண்டு போன்னா, நாயாட்டமா வர்றேன். இதுக்கு அழுது அட்டஹாசமெல்லாம் என்னத்துக்கு? அசடுன்னா உன்னைப்போல் கடைஞ்செடுத்த அசடு கிடையாது. நாலு மணிக்கு நேரே ஆபீஸ் முடிஞ்சதும் சினிமாவுக்குக் கிளம்பி விடலாம்... சே! அழாதே!'' என்று கொஞ்சலாகக் கூறிக் கண்ணீரை நிறுத்திவிட்டு ஒரு வழியாக அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

மௌனமாக மாடிப் படிகளைக் கடந்து உற்சாகமற்றுச் சென்று கொண்டிருந்த அவன் தனது 'அதிர்ஷ்ட'த்தைச் சிரித்துக் கொண்டே நடந்தான்.

## 6

வஸந்த நிலையத்தின் வாசற்புறத்து ஹாலின் மூலையில் இருந்த ரேடியோவிலிருந்து இனிமையான கீதம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. நாற்காலியொன்றில் உட்கார்ந்திருந்தவாறு பாடலை ரஸிக்க முயன்று கொண்டிருந்த காமாக்ஷியம்மாளை, சங்கீதத்தைக் கேட்க முடியாதவாறு மூன்று வயதுப் பேரன் ராஜு ஓயாமல் அழுது கொண்டிருந்தான்.



தன்னைத் தனியே விட்டுவிட்டுப் பெற்றோர்கள் எங்கேயோ வெளியில் போய்விட்டதற்காக அழ ஆரம்பித்த ராஜு, பாட்டி தனக்கு அளித்த பிஸ்கோத்துகளை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்துவிட்டான். தாயார் சென்றிருந்த இடத்திற்குத் தானும் போகவேண்டும் என்று அவனுடைய சின்னஞ்சிறு மனம் போராட்டம் செய்து கொண்டிருந்தது.

''அசடாடா நீ ராஜா? பாரு, அத்தையை! இப்பத்தான் பள்ளிக்கூடத்திலிருந்து வரா. அவளோட நம்ம எல்லோரும் போகலாம்'' என்று சமாதானப்படுத்திக் கொண்டே காமாக்ஷியம்மாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த தனது 'கடைக்குட்டி' சகுந்தலாவைச் சுட்டிக் காட்டினாள்.

வரும்பொழுதே சகுந்தலா கோபாவேசத்துடன் நுழைந்தாள். ''ஆமாம்! அத்தை ராஜாவை அழைச்சிண்டு போகத்தான் வராள்'' என்று உறுமியவள், தொப்பென்று புஸ்தகங்களை ஒரு மூலையில் வீசி எறிந்துவிட்டு சோபா ஒன்றின்மீது உட்கார்ந்து விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

திக்பிரமையடைந்த காமாக்ஷியம்மாள், ''என்னடி சக்கு, என்னத்துக்கு அழறே? சமாசாரத்தைச் சொல்லேண்டி,'' என்று பதறிய வண்ணம் மகள் அருகில் வந்து நின்றாள்.

''நான் அப்பவே சொன்னேன்? யார் கேட்டா என் பேச்சை? டியூசன் வாத்தியார் வைச்சால்தான் படிப்பேன்னு. நீங்கள் எல்லாம் காதில் போட்டுக்கலை...! இதோ பார் என் 'பிராகிரஸ் ரிப்போர்ட்' வந்திருக்கு. கணக்கிலே எட்டு மார்க், இங்கிலீஷில் பதினைந்து, தமிழிலே பதினெட்டு...'' என்று ஆத்திரத்துடன் கூறியவள் மேலே பேச முடியாமல் ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

அதுசமயம் டென்னிஸ் மட்டையை கையிற் சுழற்றிக் கொண்டே, வாயில் மெல்ல சினிமாப் பாட்டைப் பாடியவாறு அங்கே வந்த ஜகந்நாதன், தன் தங்கை சகுந்தலா கண்ணீரும் கம்பலையுமாயிருப்பதைக் கண்டு, ''சகுந்தலா ஏன் அழறே?'' என்றான் வியப்புடன்.

சகுந்தலா பதில் சொல்லாமல் தமையனைக் கண்டதும் இன்னும் பலமாக அழத் தொடங்கினாள்.

காமாக்ஷியம்மாள் சட்டென்று ''சகுந்தலாவுக்குப் பரீக்ஷையில் மார்க் குறைச்சலா வந்திருக்காம், அதுக்காக அழறாள்'' என்றாள்.

சமாசாரத்தைக் கேட்ட ஜகந்நாதன் வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான். ''பூ இவ்வளவுதானா? என்னடாப்பான்னு பார்த்தேன். அரை வருஷப் பரீக்ஷைதானே போகட்டும்! இல்லாவிட்டாலும் உன் படிப்பு கல்யாணப் படிப்புத்தானே? இதுக்கு நீ அழ ஆரம்பிச்சா இன்னும் இருக்கே உலகத்திலே அழறதுக்கு ஆயிரம் விஷயங்கள்'' என்றான் பரிகாசமாக.

சகுந்தலா தமையனின் கேலிப்பேச்சுக்களைக் கேட்டு ரோஷமடைந்தவளாய், ''போ அண்ணா! உங்களுக்கு எப்பவும் என்னைக் கண்டால் பரிகாசந்தான்!'' என்றாள்.

''சீ அசடே! சும்மா தமாஷ்டி! இப்போது அழறதை நிறுத்திறியா, இல்லையா? பள்ளிக்கூடத்திலே உங்களுக்கு அழறதைத் தவிர வேறே ஏதாவது சொல்லித் தராளா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் அவன்.

சகுந்தலாவின் அழுகை நின்றது. அதற்குப் பதில் அவள் உதடுகளில் சிரிப்பின் சாயை படிந்தது. ''போ அண்ணா! பாடம் எல்லாம் நன்னாத்தான் சொல்லித் தரா?'' என்றாள் வெட்கத்துடன்.

''வம்பு எப்படிப் பேசறது என்கிறதைப் பற்றி நன்றாகச் சொல்லித் தராளாமே உங்க பள்ளிக்கூடத்தில்? கோமதி வித்யாலயம் என்பது பெண்கள் பள்ளிக்கூடம் இல்லை; வம்பிகள் வாசகசாலைன்னு என் சிநேகிதர்கள் சொல்லுவார்களே நிசந்தானா, சக்கு?'' என்று மேலும் பரிசாகமாகக் கேட்டான்.

சகுந்தலாவிற்கு வெட்கம் தாங்க முடியவில்லை. ''யார் சொன்னா அப்படியெல்லாம் எங்க பள்ளிக்கூடத்தைப் பத்தி?'' என்று சற்று கோபமாகக் கேட்டாள்.

''என்னைப் பற்றி உங்கள் உபாத்தியாயினிகள் வம்பு பேசறதாகக் காதில் பட்டது. என்னைப்பற்றி அவர்களுக்கெல்லாம் ரொம்ப அனுதாபம் போலிருக்கு. கல்யாணம் பண்ணிக்காமல் கட்டைப் பிரம்மச்சாரியாக இருக்கேனே என்று அவர்கள் உருகுகிறார்கள். யாராவது உனக்குப் பிடிச்சவ இருந்தா சொல்லு. கல்யாணம் பண்ணிக்கிறேன். உனக்கும் நிறைய பரீக்ஷயில் மார்க் கிடைக்கும்''



என்று கூறி விட்டுக் கண்ணைச் சிமிட்டினான்.

அதுவரை மௌனமாய் அண்ணனுக்கும் தங்கைக்கும் நடுவில் நடந்த சம்பாஷணையைக் கேட்டு ரஸித்துக் கொண்டிருந்த தாயார் காமாக்ஷியம்மாள் குறுக்கிட்டு, 'போறுண்டா அவகிட்டே போய் உன் விளையாட்டெல்லாம்' என்று கடிந்ததைக் கூட கவனிக்காமல் அவன் மேலும், ''நிஜமாகவேதான் சொல்றேன். சக்கு! உங்கள் பள்ளிக்கூடத்திலே யாராவது இருந்தால் சொல்லு. எனக்குத் தெரிந்தவரை எல்லோரும் குரங்கு சொரூபங்கள்தான்'' என்று ஹாஸ்யமாகக் கூறிய ஜகந்நாதன் எழுந்திருந்தான் இடத்தைவிட்டு.

சகுந்தலாவுக்கு அண்ணன் தன் பள்ளிக்கூடத்தைக் கேவலமாகப் பேசியது பிடிக்கவில்லை. ரோஷம் தாங்காத அவள் ஆத்திரத்துடன், ''சந்திரான்னு ஒரு டீச்சர் எங்க பள்ளிக்கூடத்துக்கு வந்திருக்கா. அவளைப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லுங்கோ... அழகுன்னா அழகு அவளைப் போல் யாரும் கிடையாது. செகப்பா, உயரமா சுருண்ட தலைமயிருமா பொம்மை போல இருக்கிற அவளைப் பள்ளிக்கூடத்துக் குட்டிகள் எல்லோருக்கும் ரொம்பப் பிடிக்கும். பாடம் சொல்லிக் கொடுப்பதிலேயும் கெட்டிக்காரி'' என்றாள் சகுந்தலா பெருமையுடன்.

ஜகந்நாதன் சற்றுநேரம் மௌனமாக ஏதோ யோசனை செய்தான். பிறகு மறுபடியும் பழைய பரிகாச தோரணையில் ''ஏன் சக்கு! அந்த சந்திரா டீச்சரை உனக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு பண்ணிக்கொள்ளேன். இங்கே அவள் வந்தாள் என்றால் நான் கூட அகஸ்மாத்தாக, அவள் நீ சொல்கிறதுபோல் அழகிதானா என்று பார்த்துச் சொல்றேன்'' என்று கூறிச் சிரித்தான்.

சகுந்தலா தமையனின் பரிகாசப் பேச்சுகளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவளுடைய மூளையில் பளிச்சென்று அப்பொழுதுதான் ஒரு யோசனை தோன்றியது. உடனே மலர்ந்த முகத்துடன் தாயின் பக்கம் திரும்பி, ''அம்மா! அதுதான் உன் கிட்டச் சொல்லணும்னு நினைச்சுண்டு இருந்தேன். சந்திரா டீச்சரை சௌந்திரம்மா கிட்டச் சொல்லி எனக்கு 'டியூஷன்' சொல்லித்தர ஏற்பாடு பண்ணினால் ஒழிய நான் பரிக்ஷயிலே பாஸ் பண்ண முடியாது! எனக்கு டியூஷன் வைக்கலைன்னா நான் நாளையிலிருந்து

பள்ளிக்கூடம் போக மாட்டேன்'' என்று சற்று பயமுறுத்தினாள்.

''உங்கப்பாகிட்ட சொல்லி ஏற்பாடு பண்றேன். இதுக்கெல்லாமா உனக்கு அழுகை! போய் மூஞ்சியை அலம்பிக்கொண்டு வா. காப்பி சாப்பிட்டதும் ராஜாவையும் அழைச்சுண்டு கோயில் பக்கம் போயிட்டு வரலாம். அவனும் அம்மா சினிமாவுக்கு போயிட்டாளேன்னு அழுது கொண்டிருக்கான்!'' என்று சமாதானமாகக் கூறினாள் காமாக்ஷியம்மாள்.

''மன்னியைச் சினிமாவுக்கு அழைச்சுண்டு போகாட்டா அவள் அழுவாள் என்ற பயம் அண்ணாவுக்கு. அப்பப்பா! பொம்மனாட்டிகள் காரியங்களைச் சாதிக்கறதுன்னா ஒரே ஆயுதம் வைத்திருக்கிறார்கள். அழுகை அழுகைதான்!'' என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தான் ஜகந்நாதன். காமாக்ஷியம்மாளும் கூடவே சிரித்தாள்.

சகுந்தலா உள்ளே போக எழுந்தவள் பாதிக் கோபமும் பாதி சிரிப்புமாக, ''உங்களுக்கு ஒரு வாயாடிப் பெண்டாட்டி வரணும்னு சாமியை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அவள் உங்களை ஆட்டிவச்சு அலக்கழிக்கணும்'' என்று பல்லைக் கடித்தாள்.

ஜகந்நாதன் பதிலுக்கு லேசாகச் சிரித்தான். ''உன் பிரார்த்தனை ஈடேறாது, என் அருமைத் தங்கையே! நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தானே?'' என்றான் பரிகாசமாக.

காமாக்ஷியம்மாளுக்குத் தன் மகன் கடைசியாகச் சொன்ன மொழிகள் சுருக்கெனப்பட்டன. தாய்மை நிறைந்த அவள் உள்ளம் வேதனையால் வெதும்பியது.

## 7

பள்ளிக்கூடத்திலிருந்து அலுப்புடன் திரும்பி வந்த சந்திராவுக்கு உடனேயே பரபரப்பாக வெளியே செல்ல வேண்டுமென்றால் கஷ்டமாகத்தான் இருந்தது.



சந்திராவின் மதிப்புக்குகந்த தலைமை உபாத்தியாயினி சௌந்திரம்மாளின் வேண்டுகோளின் பேரிலும் சகுந்தலாவின் கள்ளங்கபடமற்ற நடத்தைமீது கொண்ட அனுதாபத்தினாலும், சித்திக்கு இன்னும் பண உதவி செய்து அவளது வாயை மூடிவைக்க ஒரு வழியாகும் என்ற எண்ணத்திற்காகவும், இவ்வாறு பல நன்மைகளை குறித்துத்தான் சந்திரா நாகராஜய்யர் வீட்டில் பாடம் சொல்லித்தர ஒப்புக் கொண்டாள்.

எடுத்த எடுப்பில் சித்தி பார்வதி, நாகராஜய்யர் வீட்டில் சந்திரா பாடம் சொல்லித் தரப்போவதை விரும்பவில்லை. ''அவர் வீட்டுப் பக்கம் பெண்கள் போவார்களோ?'' என்றாள் அதிசயத்துடன்.

''ஏன் சித்தி இப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று சந்திரா கேட்டதற்குச் சித்தி கோபத்துடன், ''தெரியாதது போல் பேசாதே! அவாத்துப்பிள்ளை ஜகந்நாதன் போக்கிரி என்பது ஊரறிந்த விஷயம். அங்கே போவது நல்லதில்லை. அவ்வளவுதான் நான் சொல்வேன். பின் உன் இஷ்டம்'' என்று சற்றுப் பதட்டமாகச் சொன்னாள்.

சந்திரா யோசித்துப் பார்த்தாள். ஒரு விஷயத்தில் சித்தி சொன்னபடி ஜகந்நாதனின் கெட்ட பெயர் கௌரவமுள்ள ஸ்திரீகளை அவன் வீட்டுப் பக்கம் போனால்கூட பாதிக்கக் கூடியதுதான். ஆனால், அவன் வீட்டில் அவன் ஒருவன்தானா மனிதன்; நாகராஜய்யர் கௌரவமுள்ள பெருந்தன்மை வாய்ந்த மனிதர் இல்லையா? அவர் மனைவி காமாக்ஷியம்மாள் தங்கக் கம்பியாயிற்றே! இன்னும் அவர்கள் மூத்தபிள்ளையின் மனைவி அலமேலு வேறு அங்கேயே வசிக்கிறாள். பெண்கள் வசிக்கும் ஒரு நன்மதிப்புடைய ஆசாமி வீட்டில் போய் பாடம் சொல்லித் தருவதில் தப்பென்ன இருக்கிறது? என்று அவளுடைய மனச்சாட்சி தர்க்கிக்கவே சித்தியின் பேச்சை லட்சியம் செய்யவில்லை.

சந்திராவின் தந்தைக்கும் இந்த டியூஷன் விஷயம் மனதிற்குப் பிடிக்கவில்லை. 'சந்திரா! வேண்டாம், அவர்கள் வீட்டு சங்கதியே நமக்கு வேண்டாம்!' என்றார்.

சந்திராவுக்கு அப்பாவின் வார்த்தைகளைக் கேட்டு கோபம்தான் வந்தது. ''அவர்கள் வீட்டுப்பையன் நடத்தை மோசமென்றால் வீட்டவர்கள் என்ன செய்வார்கள்? நாம் நடந்துகொள்வதைப்

பொறுத்திருக்கிறது எல்லாம்'' என்று அழுத்தந்திருத்தமாக பதிலளித்தாள்.

கல்யாணராமய்யரும், ''உன் இஷ்டம், ஆனால் நம்மீது பழிச்சொல் ஏற்படாமல் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நான் சொல்லக்கூடிய புத்திமதி'' என்றார். பாடம் சொல்லித்தர ஒப்புக்கொண்டு இரண்டு வாரங்களுக்குமேல் ஆகிவிட்டன. சந்திராவைப் பொறுத்தவரை நாகராஜய்யர் வீட்டு ''டியூஷன்'' அவளுக்குத் திருப்தியாகத்தான் இருந்தது.

சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து சந்திரா வந்த அரைமணிக்கெல்லாம் நாகராஜய்யர் வீட்டு இரட்டை மாட்டு வில்வண்டி அவளை அழைத்துப்போக வரும். ஐந்திலிருந்து ஆறரை மணிவரை சகுந்தலாவுக்குப் பாடம் போதிப்பாள். திரும்ப வண்டியிலேயே வீட்டுக்கு விளக்கு வைக்கும் சமயத்திற்கு வந்துவிடுவாள்.

சகுந்தலாவிற்கு வயது பதின்மூன்று ஆகிக்கொண்டிருந்தது. ஐந்தாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். சிகப்பாக, பார்ப்பதற்கு லட்சணமான பெண்ணாயிருந்தாலும் வெகுளித்தனம் நிரம்பப் பெற்றவளானதால் சிறுவயதில் குறுகுறுப்பாக இருக்க வேண்டிய முகத்தில் அசட்டுச் சாயை படிந்திருந்தது. அவளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதென்பது கஷ்டமான காரியம் என்பதைச் சந்திரா சீக்கிரத்திலேயே கண்டு கொண்டாள்.

சகுந்தலாவின் தாயாரான காமாக்ஷியம்மாளைச் சந்திராவிற்குப் பார்த்த அளவிலே பிடித்துவிட்டது. பிறர் மனம் நோவதை சகியாத புண்ணியவதி அவள் என்பதை சந்திரா கண்டுகொண்டுவிட்டாள். பாலகிருஷ்ணன் மனைவி அலமேலுவைத்தான் பார்த்ததுமே சந்திராவுக்கு பிடிக்கவில்லை. முதல் நாள் வேலையை ஒப்புக்கொண்டு சகுந்தலாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த சமயம் ஒய்யாரமாக மயில்போல் தளுக்கு நடையுடன் அங்கு மேற்பார்வையிட வந்த அலமேலு, சந்திராவைக் கடையில் விலைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஓர் பொருளை உற்றுக் கவனிப்பது போல் ஏற இறங்கப் பார்த்தாள். ''நீதான் சந்திரா பி.ஏ., எல்.டி.,யோ?'' என்றாள் அலமேலு அலட்சியமான பாவனையில்.



''ஆமாம், நான்தான்'' என்று சந்திரா மரியாதைக்காகப் பதிலளித்தாள். அலமேலு மேன்மேலும் தன்னை ஆராய்ந்து உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கவனிப்பதைக் கண்டு அவளுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

''உனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லையோ?'' என்று அலமேலு கேட்டது சந்திராவின் முகத்தை அவமானத்தினால் சிவக்கடித்தது.

''இல்லை'' என்று சுருக்கமாகக் கூறினாள் சந்திரா தன் மனத்தில் ஏற்பட்ட அருவெருப்பை வெளிக்காட்டாமல்.

''கல்யாணம் பண்ணிக்கிறதாக உத்தேசமுண்டோ? இல்லையோ?'' என்று மேலே அலமேலு கேட்ட கேள்வி சந்திராவின் மனதில் சுருக்கென்று பாயவே தன்னையும் மீறிவந்த கோபத்தைக் கட்டுப்படுத்த மாட்டாமல், ''நீங்கள் எல்லாம் கல்யாணம் பண்ணிக் கொண்டு என்ன மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டீர்கள்?'' என்று படக்கெனக் கேட்டுவிட்டாள் பதிலுக்கு.

அலமேலுவுக்குச் சந்திராவின் துடுக்கான பதில் கோபத்தை உண்டாக்கியது. தான் வீட்டின் எஜமானி என்ற ஹோதாவில் எது வேண்டுமானாலும் பேசலாம் என்பது அவளுடைய எண்ணம். ஆகவே அவள் கோபத்துடன் மேலே பேசாது விடுவிடுவென மிடுக்காக உள்ளே சென்றுவிட்டாள். சந்திராவும் தான் அலமேலுவின் அதிருப்திக்குப் பாத்திரமானோம் என்பதை உணர்ந்து கவலைப்படவில்லை.

பலவாறு இதையெல்லாம் பற்றி யோசித்துக் கொண்டே ஒரு நாள் சந்திரா வாசலில் டியூஷனுக்கு அழைத்துச் செல்லத் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் வண்டியில் போய் ஏறி உட்கார்ந்தாள்.

''சீ! ஆனாலும் இந்த ஊரைப்போல ஒரு ஊரும் பார்த்ததில்லை'' என்று அவள் வாய் முணுமுணுத்தது. வண்டி தெருக்கோடி மறையும் வரை தம்தம் வீட்டினின்று ஓடிவந்து வாசலில் நின்று வேடிக்கை பார்க்க வந்த பெண்களைக் கண்டதும்தான் சந்திராவுக்கு இப்படி எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

சந்திராவின் வீட்டிற்கும் வசந்த நிலையத்திற்கும் குறைந்தது மூன்று பர்லாங்குகள் இருந்தன. வழியில் இரண்டு தெருக்களைத்

தாண்டி, குறுக்குப் பாதை வழியாக இரண்டு பக்கமும் மரங்கள் அடர்ந்த ஒரு சாலை வழியாக வண்டி செல்லும். சந்திராவுக்கும் அந்த இடம் மிகவும் பிடித்திருந்தது. கொஞ்ச தூரத்தில் தெரியும் வாழைத் தோட்டமும் அதற்கப்பால் புலப்படும் ஆண்டிக்குன்றின் தோற்றமும் அவள் மனத்தைக் குதூகலிக்கச் செய்தன.

வண்டியோட்டி கோவிந்தன் அந்தப் பாதை வழியாகப் போகும்போது சந்திரா கேட்காவிட்டாலும் ஊரைப் பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டு போவான். ''அதோ தெரியுது பாருங்க. அதைத்தான் ஆண்டிக் குன்றும்பாங்க. வருஷத்துக்கு ஒரு தடவை பெரிய உற்சவம் நடக்கும். நம்ப எஜமானுக்கு அந்த சாமி குலதெய்வங்க. இந்த வாழைத்தோட்டம் நம்ப ஐயாவுடையதுதான். ரஸ்தாலித்தோட்டத்திலே இருக்கு பாருங்க ஒட்டு மாமரங்க, அதெல்லாம் எங்கப்பா காலத்திலேயே பயிரிட்டது. பழம் திங்க தேனாக இருக்கும் போங்க. இப்பத்தான் காய்க்கற காலம். பழமாகட்டும். உங்களுக்குப் பறிச்சுத்தரேன். தின்னுட்டுச் சொல்லுங்க...'' என்று தானே வழவழாவென்று பேசிக் கொண்டே போனான்.

எல்லாவற்றிற்கும் சந்திரா புன்னகை செய்து கொண்டும் தலையை அசைத்துக்கொண்டும் இருந்தாள்.

சகுந்தலாவுக்குப் படிப்புச் சொல்லித் தர ஏற்பட்டிருந்த இடம், தோட்டத்தை நோக்கி அமைந்திருந்த மாடி வராந்தாவின் ஒரு பக்கம். மேஜை மீது அடுக்குப் புஸ்தகங்களுடன் சகுந்தலா சந்திராவின் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

''டீச்சர் உங்களுக்கு டீ பிடிக்குமா? காபி பிடிக்குமா? தினம் உங்களுக்கு டீ கொடுக்கும்படி அம்மா சொன்னா'' என்று உபசாரத்துடன் சகுந்தலா வரவேற்றாள்.

''எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் சொல்லிக் கொடுத்த பாடத்தை நீ நன்றாகப் படித்தால் போதும்'' என்று சந்திரா வேலையை ஆரம்பித்தாள்.

''இந்தக் கணக்கைப் போடு. ஏ, என்பவன் மூன்று மைல் நடப்பான்...'' என்று சந்திரா கணக்கொன்றைப் போட்டாள்.

சகுந்தலா அந்தக் கணக்கை அரைமணி நேரம் போட்டாள்.



அதுவரையில் அவளுடைய பாடப் புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரா பொறுமையை இழந்து, ''சக்கு! இன்னுமா கணக்குப் போடறே? போ! சின்னக் கணக்குக்கு இத்தனை நாழியா!'' என்றாள் கோபமாக.

''டீச்சர் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விடை வரதே!'' என்று சலிப்பாகப் பதிலளித்த சிஷ்யையைக் கண்டு சந்திரா, ''இப்படிக் கொண்டா பார்க்கலாம்'' என்று அவள் புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தாள்.

''என்ன சக்கு! டியூஷன் மோகத்திலே இப்போவெல்லாம் அண்ணாவை மறந்துட்டியே?'' என்று ஒரு புருஷனின் துணிச்சலான குரலையும் பூட்ஸின் சப்தத்தையும் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சந்திரா.

''இல்லையண்ணா! கணக்கு வரவே மாட்டேங்கறது எனக்கு!'' என்று பதிலுக்குக் கொஞ்சலாகச் சகுந்தலா மொழிந்ததைக் கேட்டதும்தான் சந்திராவுக்கு அவன் சகுந்தலாவின் தமையன் என்று புரிந்தது.

மடிப்புக் கலையாத ஷர்ட், அதற்குத் தகுந்த கோட்டு, வாரிவிடப்பட்ட சுருண்ட கிராப்புத் தலை, சிவந்த நிறம், கம்பீரமான தோற்றம், கர்வம் ததும்பும் கண்கள். அகங்காரத்துடன் தூக்கி நிற்கும் முகவாய், பிடிவாதத்தை உணர்த்தும் மெல்லிய உதடுகள் என்று ஒரே பார்வையில் சந்திரா தனக்கெதிரில் சற்று தூரத்தில் வந்து நின்ற ஜகந்நாதனைக் கண்களால் கணக்கிட்டுவிட்டாள்... பல நாட்களாகப் பலவாறு கேள்விப்பட்டிருக்கும் ஜகந்நாதனை நேரில் பார்க்க நேர்ந்துவிட்டதே என்று பயந்த நெஞ்சுடன் இடத்தைவிட்டு எழுந்து, தலையைக் குனிந்து கொண்டு அசைவற்று நின்றாள்.

அவளது கலவரத்தை ஊகித்துக் கொண்டவன்போல் ஜகந்நாதன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவன் போல், ''சகுந்தலாவின் டீச்சராக வந்ததுபற்றி சந்தோஷம். கொஞ்சம் அவளுக்குக் கவனித்துப் பாடம் சொல்லித்தர வேண்டும்'' என்று கூறிவிட்டு திரும்பினான்.

அவன் தலை மறைந்ததும் சந்திரா. ''அப்பாடா!'' என்று பெருமூச்சுவிட்டாள். ஜகந்நாதன் கண்முன் தென்பட்டு விட்டோமே

என்று அவள் மனத்தில் பயம் குடிகொண்டு விடவே, மேலே பாடம் சொல்லித்தர முடியவில்லை.

''சக்கு! தலையை வலிக்கிறது! மிகுதியை நாளைக்கு சொல்லித்தரேன்'' என்றாள்.

''சரி, டீச்சர்!'' என்று சந்தோஷத்துடன் சகுந்தலா கூறிவிட்டு வண்டிக்காரனை அழைக்க ஓடினாள்.

# 8

காலை மணி பதினொன்று; 'சரபோஜி கெமிகல் வொர்க்'ஸின் ஒவ்வொரு பாகத்திலும் வேலை செய்பவர்கள் மும்முரமாகத் தத்தம் அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தனர்.

''வேணுகோபால், உங்களை 'மானேஜிங் டைரக்டர்' பார்க்கவேணும் என்கிறார்!'' என்று தன்னை ஒரு டவாலிச் சேவகன் அழைப்பதைக் கேட்டதும், சுபாவத்தில் பயங்கொள்ளியான வேணுவின் கைகள் வெடவெடவென்று நடுங்கின.

''என்னத்துக்குப் பார்க்கணுமாம்?'' என்று அவன் தயக்கத்துடன் கேட்பதைக் கண்ணுற்ற பழம்பெருச்சாளியான தங்கவேலு சிரித்துக்கொண்டே, ''என்னப்பா நீ இப்படி பயந்து சாகிறே? நீ இந்த டிபார்ட்மெண்ட்டுக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாச்சு. உன்னை இன்னும் மானேஜிங் டைரக்டர் பார்க்கலை. புதுசா வேலைக்கு வந்தவர்களைக் கூப்பிட்டு எந்த ஊரு, என்ன படிச்சுருக்கேன்னு விசாரிக்கக் கூப்பிட மாட்டாரா? போய் வா, தம்பி!'' என்றான்.

''என்னைத்தான் நாகராஜய்யர் பார்த்து, விசாரித்து வேலை கொடுத்தாரே? இவர் வேறே என்னத்துக்குப் பார்க்கணுமாம்!'' என்று அவன் உளறியதைக் கேட்ட தங்கவேலுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

''அசட்டுப்பிள்ளை! இப்படிக் குளறி அடிச்சுக் கொண்டே இந்த ஆபீஸிலே நீ வேலை பார்த்து உருப்பட்டாற் போல்தான். போ! நாகராஜய்யர் வேலை கொடுத்தார். ஜகந்நாதன் கம்பெனியில் மானேஜிங் டைரக்டர். நமக்கெல்லாம் ஒரு 'போனஸ்' கொடுக்கப் போகிறார்களாம். வேலை செய்கிறவர்கள் பேரெல்லாம் டைப் அடித்து அனுப்பச் சொன்னார். அதில் உன் பெயரும் இருக்கு. புதுப்பெயரா இருக்கே, இவன் யாருன்னு பார்க்க உன்னைக் கூப்பிட்டார்! பயப்படாமல் நிதானமாய்ப் போய்விட்டு வா. இதுக்கே இப்படிப் பயந்தா, முதலாளிக்குக் கோபம் வந்தால் போடற சத்தத்தைக் கேட்டு நீ செத்துப் போயிடுவே போலிருக்கே!'' என்று பிரசங்கித்துவிட்டு, மற்ற குமாஸ்தாக்களைப் பார்த்துச் சிரித்தான் தங்கவேலு.

''சின்னப் பையன், தெரியாதவன்! அவனைப்போய் கலாட்டா பண்ணாதே நீ'' என்று தலைமைக் குமாஸ்தா சுப்பிரமணியம் வேணுவின் மீது அனுதாபத்துடன் பரிந்து சொல்லவே, தங்கவேலு தனது பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டான்.

டவாலிச் சேவகனைப் பின்தொடர்ந்து பயந்து கொண்டே போய் மானேஜிங் டைரக்டரின் அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான் வேணுகோபால்.

பெரிய சோபா ஒன்றின் மீது சாய்ந்தவாறு கையில் பிடித்திருந்த பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த ஜகந்நாதன் முன், பூனைக்குட்டியைப் போல் வேணு வந்து நின்றான்.

பத்திரிகையை முகத்தினின்றும் தாழ்த்திய ஜகந்நாதன் வேணுவை நோக்கி, ''புதிய குமாஸ்தா வேணுகோபால் நீ தானே?'' என்றான் அதிகாரத் தோரணையில்.

''ஆமாம் ஸார்'' என்று பதிலளித்த வேணுவுக்கு நாக்கு வரண்டு போயிற்று.

''உனக்கு இந்த ஊரே சொந்த ஊரா?'' என்று மேலே கேள்வியைக் கேட்டான் மானேஜிங் டைரக்டர்.

''இல்லை, ஸார். என் அப்பா கல்யாணராமையர் என்பவர், இந்த ஊர்ப் பையன்கள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வேலை பார்க்கிறார். நாங்கள் ஊருக்குப் புதிது'' என்று மென்று விழுங்கினான் வேணு.

''சின்னப் பையனாயிருக்கிறாயே, உனக்கு வயசு என்ன ஆகிறது?'' என்று சற்றே அனுதாபத்துடன் விசாரித்தான் ஜகந்நாதன்.

மானேஜிங் டைரக்டரின் கேள்விகளின் போக்கில் வேணுகோபாலின் மனத்தில் குடிகொண்டிருந்த பயம் கொஞ்சம் குறைந்தது. ''பதினெட்டாகிறது ஸார்'' என்று சற்றுத் துணிவாகப் பதிலளித்தான்.

''நீதான் மூத்த பிள்ளையோ உன் தகப்பனாருக்கு?'' என்று ஜகந்நாதன் கேட்டதற்கு, ''இல்லை ஸார்! நான் இரண்டாவது. எனக்கு முன் அக்கா ஒருத்தி இருக்கிறாள். அவளும் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி வேலை பார்க்கிறாள்'' என்று முடித்தான்.

ஜகந்நாதன் சோபாவில் சற்று நன்றாக உட்கார்ந்து கொண்டு, ''ஓகோ! உன் அக்கா பெயர் மிஸ் சந்திராதானே?'' என்று உற்சாகத்துடன் கேட்டான்.

வேணுவுக்கு அதிசயமாக இருந்தது. ''இவருக்கெப்படி என் சகோதரியின் பெயர் தெரிந்தது?'' என்று அதிசயமடைந்தவனாய் ''ஆமாம் ஸார்!'' என்று விழித்தான்.

''என் தங்கைக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கிறாள் சந்திரா என்ற ஒரு உபாத்தியாயினி. அதனால்தான் கேட்டேன். அவள்தான் உன் சகோதரியா?... நீ எந்த டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கிறாய்?'' என்றான் ஜகந்நாதன் சட்டென்று.

''ஹெட்கிளார்க் சுப்பிரமணியத்தின் கீழ் குமாஸ்தாவாக இருக்கிறேன்'' என்று வேணு மனக்குறையுடன் மொழிந்ததைக் கேட்ட ஜகந்நாதன் லேசாகச் சிரித்துக் கொண்டு, ''நீ நன்றாகப் படித்த பையனாயிருக்கிறாய் பாவம், உனக்கு இதைவிட நல்லவேலை தரலாமே? அடுத்த மாசத்திலிருந்து உன்னை 'பயோகெமிக்கல்' டிபார்ட்மெண்டிலே ஐம்பது ரூபாய் உத்தியோகத்தில் போட ஏற்பாடு பண்ணுகிறேன்... இதை மனதிலேயே வைத்துக்கொள். பெருமையாக வெளியே சொல்ல வேண்டாம்'' என்றான்.

வேணுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''பார்த்த க்ஷணத்தில் கருணையைப் பொழியும் இவரைப் போய் ஜனங்கள் பொல்லாதவன் என்று கூறுகிறார்களே?'' என்று மனத்தில் எண்ணிக்கொண்டு, ''ரொம்ப வந்தனம் ஸார்'' என்று கூறிவிட்டு நன்றியுடன் நோக்கினான்.



''போகலாம் நீ'' என்று ஜகந்நாதன் தலையை ஆட்டவே மறுதடவை ஒருமுறை நமஸ்கரித்துவிட்டு வெகு குதூகலமாகச் சென்றான்.

ஜகந்நாதனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சந்திராவின் சகோதரனா இவன்? கர்வமும் ஆணவமும் கொண்ட அழகிய பதுமை போன்ற சந்திரா எங்கே? அசட்டுத்தனமும் பயந்த குணமும் கொண்ட இந்தப் பையன் எங்கே? வேடிக்கைதான்! இவர்களை உடன் பிறந்தவர்கள் என்று நினைக்கவும் முடியவில்லையே! என்று மனதிற்குள் யோசித்தவன் மனக்கண்முன் சந்திரா வந்து நின்றாள்.

அவளை அன்று நேரிடையாக சந்தித்ததிலிருந்து கடந்த ஒரு வாரமாக ஜகந்நாதன் மனம் ஒரு நிலையில் இல்லை. அவள் எழில் உருவம் அவனது சிந்தனையில் தோன்றிக்கொண்டே இருந்தது.

நண்பனின் மனப்பிரமையைக் கலைப்பவன்போல் நாகலிங்கம் உள்ளே பிரவேசித்தான். ''என்னப்பா இப்படியா மோசம் பண்ணுகிறது? நேற்று நம் புரோகிராம் கெட்டே போச்சே?'' என்று சலிப்பாகச் சொல்லிக் கொண்டே எதிரில் உட்கார்ந்தான்.

''என்ன செய்வேன் நான்? நேற்று என்னால் வெளிக்கிளம்ப முடியவில்லையே?'' என்று ஜகந்நாதன் அலட்சியமாகப் பதிலளித்தான்.

''வர வர எனக்குப் பிடிக்கவேயில்லை, போ. அந்தப் பெண் வழிக்கு வரமாட்டாள் போலிருக்கு. இதெல்லாம் விட்டு ஒழிக்க வேண்டியதுதான்''. என்று நாகலிங்கம் வெறுப்பாகக் கூறிவிட்டு ஸிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டான்.

''என்ன, ரூபாய் ஆயிரம்வரை செலவழித்துக் கூடவா?'' என்று ஜகந்நாதன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

''செலவழித்தென்ன பயன்? அவள் என்ன சொன்னாள். தெரியுமா? தாசி குலத்தில் பிறந்துவிட்டால் நாங்கள் கேவலம் என்று நினைக்கவேண்டாம். என்மேல் பிரியம் என்றால் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள் என்றாள். அங்கே பிடித்த ஓட்டம்

இங்கே வந்தேனப்பா!'' என்று கூறிவிட்டு உற்சாகமாகச் சிரித்தான் நாகலிங்கம்.

''இவ்வளவுதானா! ஆண்டிக்குன்றுக்கு தினம் தினம் போய், பெட்ரோல் செலவழித்ததும், உன்கூட நான் திரிந்ததில் என் பெயர் கெட்டதும்தான் மிச்சமாக்கும்! போ அப்பா! நான் அப்பவே சொன்னேன். நீதான் கேட்கவில்லை!'' என்று மனத்தாங்கலாக மொழிந்தான் ஜகந்நாதன்.

''இப்பொழுதுதான் என்ன முழுகிவிட்டது! சனி ஒழிகிறது என்று விட்டுவிட்டேன் போ'' என்றான் நாகலிங்கம்.

''நான்கூட இது மாதிரி சங்கடங்களில் சில சமயம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அமெரிக்காவுக்குப் படிக்கப் போயிருந்த சமயம், அங்கே ஒரு பெண்ணுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தேன். அடிக்கடி வெளியே உல்லாசமாகப் போய் வருவது உண்டு. கொஞ்ச நாளாயிற்று. ஒருநாள் அவள் என்னைப் பார்த்து ''எப்ப நம் கல்யாணம்'' என்றாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''கல்யாணமா யாருக்கு?'' என்றேன் பதிலுக்கு. அவ்வளவுதான், ராட்சஸியாக மாறி என்மீது பாய்ந்து புலிநகம் போல் இருந்த தன் நகத்தினால் என் முதுகைப் பிராண்டி விட்டா. ''என்ன நினைத்துக் கொண்டீர், ஏமாற்றி விட்டுப் போகலாம் என்று பார்த்தீரா! நீர் எழுதிய கடிதங்கள் இருக்கின்றன'' என்று என்னைப் பயமுறுத்தி... அப்பப்பா! அவள்கிட்ட இருந்து நான் தப்புவதற்குள் இருபதினாயிரம் ரூபாய் செலவழித்து, அப்பாவின் மனஸ்தாபமும் கிடைத்தது. இந்த விஷயங்களில் நாம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். வரவர இதனாலே எனக்கு ஸ்திரீகள் என்றால் கொஞ்சம் பயம் வந்துவிட்டது'' என்று சிரித்தான் ஜகந்நாதன்.

''அது கிடக்கட்டும், விட்டு ஒழி. நான் உண்மையாகக் கேட்கிறேன். நேற்று நீ ஏன் வரவில்லை?'' என்று நாகலிங்கம் கேட்டதும் ஜகந்நாதன் சற்றுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''கோபித்துக் கொள்ளாதேய்யா, நேற்று வராத காரணம் என்ன என்றால் என் இதயம் சில நாளாகக் கொஞ்சம் இடக்குப் பண்ணுகிறது'' என்று கூறி மெல்லச் சிரித்தான்.



''அது யாரது புதிய பேர்வழி. எனக்குக் கூடத் தெரியாமல்,'' என்று நாகலிங்கம் பரிகாசமாகக் கேட்டு ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

''என் தங்கைக்கு டியூஷன் சொல்லித்தர ஒரு டீச்சரை அமர்த்தியிருக்கிறேன். அவளைப் பார்த்த பின் நீ சொல்லுவே, டியூஷன் முடிந்து அவள் போகிறவரை எனக்கு வீட்டை விட்டுக் கிளம்ப மனதேயில்லை'' என்றான் ஜகந்நாதன்.

''பைத்தியக்காரா! அப்படிப் பெரிய ரதியா அவள்? நீ சொல்றதைப் பார்த்தால் எனக்குக் கூடன்னா அவளை ஒரு தடவை பார்க்கணும் போல இருக்கு?'' என்றான் நாகலிங்கம்.

ஜகந்நாதன் முகம் சட்டென்று கறுத்தது.

''வேண்டாம், வேண்டாம்; அந்தப் பெண் கௌரவமான இடத்துப் பெண். நமது வாலை அங்கே ஆட்டினால் வம்புதான்'' என்று கூறிவிட்டுப் பேச்சை வேறு பக்கம் திருப்பினான்!

# 9

கோமதி வித்யாலயத்தின் உபாத்தியாயினிகளில் சந்திராவையும் ஒரு சிலரையும் தவிர முக்கால்வாசிப்பேர் சாப்பாட்டிற்குப் பிறகு இளைப்பாறும் நிமித்தம் கூடியிருந்தார்கள்.

''நான் சொன்னபடி கடைசியில் நடந்ததா இல்லையா?'' என்று ஆரம்பித்தாள் வயலெட் மேகநாதன்.

''புதிர் போடுவது போல் பேசினால் யாருக்குப் புரிகிறது? நன்றாக விளக்கிச் சொல்'' என்று காமாக்ஷி கடிந்து கொண்டாள்.

''புது டீச்சர் நாகராஜய்யர் வீட்டுக்கு டியூஷன் சொல்லித் தருகிறாளாம். நம்ப பெருச்சாளிதான் சிபாரிசு பண்ணியதாம். தெரியாதா சங்கதி? தினம் அம்மாவுக்கு அவர்கள் வீட்டிலிருந்து வில் வண்டி போகிறதே'' என்று கூறிவிட்டு எல்லோரையும் பார்த்தாள் வயலெட்.

''நாகராஜய்யர் வீட்டு டியூஷனைப் பற்றி விசேஷம் ஒன்றுமில்லை. சந்திராவை அந்த ஜகந்நாதன் நேரில் பார்த்தானா என்கிறதுதான் முக்கியமாகத் தெரிய வேண்டியது'' என்று ஒருத்தி குறும்புத்தனமாகக் கூறியதைக் கேட்டு மற்ற உபாத்தியாயினிகள் கலகலவென நகைத்தனர்.

''அது தெரிகிறது ஒன்றும் கஷ்டமில்லையே! அந்த அசடு சகுந்தலாவைக் கூப்பிட்டு விசாரித்தால் எல்லாவற்றையும் கடகடவென்று ஒப்புவித்து விடுமே!'' என்று உபாயம் சொன்னாள் வயலெட்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொள்வதற்கும் அவர்கள் விரும்பிய சகுந்தலா, அகஸ்மாத்தாக அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. அதைக் கண்டு ஆச்சரியமடைந்த உபாத்தியாயினிகளில் ஒருத்தி, ''சகுந்தலா! என்னம்மா வேணும்?'' என்று கேட்டாள்.

''சந்திரா டீச்சர் இங்கே இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டுப் போக வந்தேன்'' என்று கூறிய சகுந்தலாவிடம் வயலெட் திரும்பி, ''எதுக்கும்மா டீச்சரைத் தேடறே?'' என்று கேட்டாள் விஷமமாக.

''ஒன்றுமில்லை. வீட்டிலிருந்து எங்க அம்மா டீச்சருக்கு கொஞ்சம் ரோஜாப்பூ அனுப்பினாள். அதைக் கொடுக்கறதுக்குத் தேடறேன்'' என்று சகுந்தலா பதில் அளித்ததைக் கேட்ட வயலெட் மற்ற உபாத்தியாயினிகளை அர்த்த பாவனையில் பார்த்தாள்.

''உங்கம்மாவுக்கு டீச்சர் மேலே ரொம்பப் பிரியம் போலிருக்கு? ஏன் சகுந்தலா, உனக்குப் பாடம் நன்றாய்ச் சொல்லித் தருகிறாளா டீச்சர்?'' என்று கேட்டாள் சாரதா கொஞ்சமும் பயமின்றி.

''ஓ! நன்றாய் சொல்லித் தருகிறார்களே! எங்க வீட்டில் எல்லோருக்கும் டீச்சரைக் கண்டால் பிடிக்கும். எங்கண்ணா கூடச் சொன்னார் அன்றைக்கு என்னிடம் சந்திரா டீச்சர் ரொம்பக் கெட்டிக்காரின்னுட்டு!'' என்று அவர்கள் மேலே கேட்காமலிருக்கும்போது பேசினாள் சகுந்தலா.

''உங்கண்ணா ஜகந்நாதனைத் தானே சொல்றே?'' என்று தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் நிமித்தம் விசாரித்தாள் சாரதா.



''ஆமாம். ஜகந்நாதன் தான் சொனனார். டீச்சர் கிட்டேயே முந்தா நாள், சகுந்தலாவுக்கு நன்றாகப் பாடம் சொல்லித் தாருங்கள் என்று சிபாரிசு கூடப் பண்ணினார்'' என்றாள் சகுந்தலா தனது பேச்சின் தாத்பரியத்தை அறியாமல்.

''ஓகோ! உங்களண்ணா சந்திராவோட பேசுவாரா?'' என்று கேலிக் குரலில் வயலெட் கேட்டுக் கொண்டே கடைக்கண்ணால் தன் சகாக்களை நோக்கினாள். அது சமயம் எல்லோருடைய உதடுகளிலும் விஷமப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

''சரி... சந்திரா டீச்சர் இப்போ ஹெட்மிஸ்ட்ரஸ் ரூமிலே ஏதோ பேசிண்டு இருக்கா. இங்கே இல்லை... அப்புறம் வா'' என்றுகூறிச் சகுந்தலாவை அனுப்பிவிட்டு, ''வயலெட் மேகநாதன் சொன்னால் சொன்னதுதான்! எப்படி என் ஜோசியம்?'' என்று பெருமையாகக் கேட்டாள் மற்றவர்களை நோக்கி வயலெட்.

''பட்டிணத்து உபாத்தியாயினி பலே பேர்வழியா இருப்பான்னு நீ அப்பவே சொன்னே. இருந்தாலும் நான் நம்பவில்லை. பார்த்தால் பூனையாட்டமா இருக்கிறா எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்கிறதோ, யார் கண்டா?'' என்று சிரித்தாள் காமாக்ஷி.

''பசுப்போல் இங்கே நடந்து கொள்வதெல்லாம் பெருச்சாளியைக் காக்காய் பிடிப்பதற்கு, அதற்குதான் மூளை என்கிறதே கிடையாதே! வெளி வேஷத்தைக் கண்டு மயங்கி 'சந்திரா, சந்திரா' என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு திரிகிறது இப்போ. ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் சாயம் தானே வெளுத்துப் போகிறது. நமக்கென்ன?'' என்றாள் குரோதத்துடன் சாரதா.

அதுசமயம் சந்திராவே அங்கு வந்துவிடவும் அவர்கள் பேச்சைச் சட்டென்று மாற்றிக் கொண்டார்கள்.

''அப்பப்பா! நாலு நாளாக எனக்குத் தூக்கமே கிடையாது. ஊரு ரெண்டாகிறது. இந்த முதலியார் வீட்டு கல்யாணம்!'' என்று ஆரம்பித்தாள் ஜானகி.

''ஆமாம், வெள்ளிக்கிழமை ஊர்கோலம், எங்கள் தெரு

வழியாகத்தான் போச்சு. பாண்டென்ன, வள்ளுவர் சகோதரர்களின் இரட்டை நாதஸ்வரக் கச்சேரியென்ன, அன்று ராத்திரி நாங்கள் தூங்க மணி மூணு ஆச்சு!'' என்றாள் சாரதா.

''ஸ்வர்ணாபாயின் நாட்டியக் கச்சேரி நேற்று நடந்தது. நான் போயிருந்தேன். முதலியார் பெண்ஜாதியே என்னை நேரே கூப்பிட்டார்கள். மறுக்க முடியவில்லை. என்ன கூட்டம் போங்கள்! முதலியார் வீட்டவர்களுக்குப் பந்துக்கள் அதிகம்'' என்று பேசினாள் காமாக்ஷி.

''பெண் எப்படியிருக்கிறாள்? பார்க்க நன்றாகயிருக்கிறாளா?'' என்றாள் ஒருத்தி.

''சுமாராக இருக்கிறாள். ரொம்ப அழகி என்று சொல்ல முடியாது. சரியா எங்கே பார்க்க முடிந்தது? காலிலிருந்து தலைவரை வைரத்தால் மூடியிருந்தார்கள். அவள் பிறந்த வீட்டில் கொடைப் பணக்காரர்களாம், ஒரே பெண்ணாம்'' என்று மூச்சு விடாமல் பேசினாள் காமாக்ஷி.

தனது சிநேகிதியின் விவாகத்தைப் பற்றி அவர்கள் பேசுவதைக் கேட்டு சந்திரா, தான் கல்யாணப் பெண்ணின் சிநேகிதி என்று சொல்லிக் கொள்ள முன்வரவில்லை. தனக்கு ஒன்றுமே விஷயம் விளங்காதது போல அவள் முகத்தைச் சாந்தமாக வைத்துக் கொண்டிருந்தாள். பல வருஷங்கள் பழகிய அம்புஜத்தின் விவாகத்தின் அழகை தான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறை ஒரு புறமும், அம்புஜம் தான் வராததை குறித்து எவ்வளவு வருந்துவாள் என்பதை கற்பனை செய்ததனால் ஏற்பட்ட துயரம் ஒரு புறமும் அவள் மனத்தில் குடி கொள்ளவே சந்திரா அங்கே கிடந்த பத்திரிகை ஒன்றை படிப்பவள் போல் பாவனை செய்தாள். ஒருவரிடமும் பேச இஷ்டப்படவில்லை.

தங்களுடைய சம்பாஷணையைச் சந்திரா ரசிக்காமல் பத்திரிகை ஒன்றைப் படிப்பதைக் கண்ட சாரதாவிற்குக் கோபம் உண்டாகியது.

''ஏன் கௌரி; நீ இப்பொழுதெல்லாம் மிகச் சாதாரணப் புடவைகளை உடுத்திக் கொண்டு பள்ளிக்கூடம் வருகிறாய்?'' என்று கேட்டாள்.

அவளுடைய கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு கௌரி



அசட்டு சிரிப்பு சிரித்துக் கொண்டு ''பள்ளிக்கூடத்திற்கு என்ன அலங்காரம் என்று அலட்சியம் மனத்தில் ஏற்பட்டு விட்டது'' என்று கபடமாகப் பேசினாள்.

''சாயங்கால வேளைகளில்தான் நீ அழகா உடுத்திக் கொள்வாய் போலிருக்கிறது? தலையில் ரோஜாப்பூவும் அதுவுமாக நீ கிளம்பினால் எல்லோரும் மூர்ச்சை போடுவார்கள்'' என்று துடுக்காகக் கூறியதைக் கேட்ட சந்திராவுக்கு அவர்கள் தன்னைப் பற்றித்தான் குத்திக்காட்டிப் பேசுகிறார்கள் என்று புரிந்து விட்டது.

ஒருகணம் அவர்கள் வார்த்தை அவளது மென்மையான மனத்தில் சுருக்கெனத் தைத்து வேதனை உண்டு பண்ணியது. படித்திருக்கும் சில ஸ்திரீகளும் துடுக்குத் தனமும், பொறாமைக் குணமும், அசட்டு சுபாவமும் கொண்டிருக்கிறார்கள். படிப்பதில் என்ன இருக்கிறது? நல்ல குணமும் பெருந்தன்மையும் ஸ்திரிகளுக்குத் தானே பிறப்புடன் இருக்க வேண்டுமேயொழிய படிப்பினால் சம்பாதிக்க முடியாதவைகள் அவை என்று எண்ணிய சந்திரா அவர்களின் குத்தல் பேச்சுக்காக வருந்தவில்லை. அதை புரிந்து கொண்டதாகவும் வெளிக்காட்டவில்லை. இதற்குள் மணியடிக்கவே எல்லோரும் வகுப்பறைக்குப் புறப்பட்டனர்.

தன் முன்னால் ஒன்றாகக்கூடிப் பேசிச் சிரித்துச் செல்லும் அந்த வம்பிகளான உபாத்தியாயினிகளைக் கண்டு அவளது தளிர் மேனி நடுங்கியது. ''புலிகள் கூட்டத்தினிடையே மான் போல அகப்பட்டுக் கொண்டு விட்டோமே'' என்று எண்ணி நடுங்கிய அவள், ''இவர்களிடையே நல்ல பெயரெடுத்து எப்படி வெளிவரப் போகிறோம்?'' என்று கலக்கமும் அடைந்தாள்.

# 10

வசந்த விலாசத்தின் மாடி ஹாலில் ஊஞ்சலின் மீது உட்கார்ந்திருந்த அலமேலுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. கொஞ்ச தூரத்தில் நாற்காலியொன்றின்

மீது கவலை தோய்ந்த முகத்துடன் சாய்ந்து கொண்டிருந்தான் அவள் கணவன் பாலகிருஷ்ணன். மனைவியும் புருஷனும் ஒரு சிறு சண்டை போட்டு அப்போதுதான் சற்று ஓய்ந்திருந்தார்கள்.

ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டதனால் ஏற்பட்ட முதிர்ச்சியின் சாயலைத் தவிர யௌவனத்தின் சோபை அழியாமல் விளங்கினாள் அலமேலு. அவளையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த பாலகிருஷ்ணன், 'ஸ்திரீ'கள் மனிதனின் வாழ்க்கையை விஷமாகவும், அமிர்தமாகவும் ஆக்கும் வல்லமை பெற்றவர்கள் என்பார்கள். என் வாழ்வை விஷமாக்க வந்த என் அருமை அலமேலு என்று தனக்குள்ளே குமுறினான். ஆனால், அதைக் காட்டாமல், ''அம்மு, உனக்குக் கொஞ்சம் கூடப் புத்திங்கிறதே கிடையாது. குழந்தைக்குக் கண்டதைக் கொடுத்துத் தொலைக்காதே உடம்புக்கு ஆகாதுன்னு சொன்னா ஒரே முட்டாக் கோபிச்சுக்கிறியே! ஏதாவது அர்த்தம் இருக்கா?'' எனறான் சற்றே அதட்டலாக.

''நான்தான் கொடுத்தேனாக்கும்! வேணும்னு அழறான்; தின்னுட்டு வாந்தி எடுக்கிறான்... எல்லாம் உங்களைக் கொண்டிருக்கு பிடிவாதத்துக்கு. அது நாசமாப் போக! யார் தவசு கிடந்தா இதெல்லாம் பிறக்கணும்னு'' என்று வார்த்தைகளை வாரிப் பொழிந்தாள் அலமேலு.

குழந்தைக்கு வேணும் வேண்டாங்கறது தெரியுமா? பிடிவாதம் பிடிச்சதுன்னு ஒரு முழு மைசூர்ப்பாகைக் கையிலே கொடுப்பாளா? அம்மா குழந்தையை வைச்சிண்டு கஷ்டப்படறா, வயிற்று வலியின்னு அது துடிக்கிறது. அம்மா கவலைப்படுகிறாள். எல்லாம் உன்னால் வந்தது. குழந்தையைப் பெற்றவளுக்கு வளர்க்கிற சிரத்தையில்லை என்றால்'' என்று பல்லைக் கடித்தான் பாலகிருஷ்ணன்.

''நான் வளர்க்காத குழந்தையை நீங்கள்தான் வளர்க்கிறேள். எனக்கு அவ்வளவுதான் தெரியும்... என் தலையெழுத்து வார்த்தையை வாங்க வேண்டிய காலம். எங்கப்பாவுக்கு எவ்வளவோ செல்லப் பெண் நான். ஒரு வார்த்தைகூட மனசு நோகச் சொல்ல மாட்டார். செல்லமாக வளர்ந்துட்டு இங்கே வந்து நான் உங்கள்கிட்ட இடிபடுறேன்'' என்று அலமேலு துக்கத்துடன் புலம்பியதைக் கேட்ட



பாலகிருஷ்ணனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''அம்மு, உன்னை நான் எப்போதாவது வைது இருக்கேனா? வீணாக அபாண்டமாகச் சொல்றேயே? உன் பிடிவாத குணந்தான் சில சமயத்திலே எனக்குக் கோபத்தைக் கிளறிவிடும். கிடக்கிறது. நான் சொல்றதைக் கேளு, உனக்கு குழந்தையை எப்படி வளர்க்கிறதுங்கறதைப் பத்தி யாராவது எழுதியிருக்கிற புஸ்தகத்தை வாங்கி வந்து தரேன். அதைப் படிச்சுட்டுக் குழந்தையை சரிவர வளர்த்துப் பார்'' என்று ஹாஸ்யமாகச் சொன்னான்.

மாரிகாலச் சந்திரன் மூடியிருக்கம் மேகக் கூட்டங்களினின்று அபூர்வமாக வெளிப்பட்டுப் பிரகாசிப்பது போல் அலமேலுவின் முகத்தில் புன்னகைரேகை அரும்பியது. ''வாங்கிக் கொண்டு வந்து கொடுங்கள். படித்துப் பார்க்கிறேன்'' என்று ஒய்யாரமாகப் பகர்ந்தாள் அவள்.

பாலகிருஷ்ணன் சந்தோஷமிகுந்தவனாய், ''நம் சக்குவுக்கு ஒரு டீச்சர் வந்து சொல்லித் தருகிறாளே' அவள்கிட்டக் கேட்டுப் பாரேன், குழந்தையை வளர்ப்பது எப்படின்னு. டீச்சர்களுக்கு மனோதத்துவ சாஸ்திரம் தெரிந்திருக்குமே'' என்று கூறி முடிப்பதற்குள் அலமேலுவின் முகத்தில் மீண்டும் சினத்தின் குறிகள் உதயமாவதைக் கண்டு பயந்து விட்டான்.

''சந்திராவாம், சந்திரா! பேரை பார்க்கவில்லை, மரியாதை இல்லாதவள்... வெறும் வாய்த்துடுக்கு'' என்று பல்லைக் கடித்தாள் அலமேலு.

தன் மனைவி டீச்சர் சந்திராவிடம் ஏதோ பேசி அனாவசியமாக அவள் மீது மனத்தாங்கல் கொண்டிருக்கிறாள் என்பதை நொடிப்பொழுதில் ஊகித்துக் கொண்டான் பாலகிருஷ்ணன்.

''உனக்குப் பிடிக்காவிட்டால் விட்டுத் தள்ளு! நமக்கு கீழே வேலை செய்பவர்களிடம் சிநேகிதமே வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என் கொள்கை. வேண்டாம் அவள் சிநேகிதம்! உனக்குத் தேவையில்லை'' என்று அலமேலுவின் சார்பாகவே பேசினான்.

''அந்தப் பித்து இருக்கே, உங்க தங்கைக்கும் உங்க அழகு தம்பிக்கும் தவிர இங்கே யாருக்குப் பிடிக்கிறது அவளை'' என்று துச்சமாக அலமேலு கூறியதைக் கேட்ட பாலகிருஷ்ணன் திடுக்கிட்டு

விட்டான்.

''அம்மு! ஜகந்நாதனுக்கு சந்திராவைப் பிடிக்கிறதா? இதென்ன கூத்து!'' என்று ஆச்சரியத்தை அடக்க மாட்டாதவனாய்க் கேட்டான்.

''கூத்தோ, பாட்டோ, உங்கள் தம்பிக்குச் சந்திரா டியூஷனுக்கு வந்து விட்டால் போதும். கிழக்கேயும் மேற்கேயுமா, அகஸ்மாத்தாப் போகிறாப்போல அவள் இருக்கிற பக்கமே அடிக்கடி போகிறதும், வரதுமாகவே இருக்கார். அந்த ராக்ஷசியும் ஒண்ணுமே அறியாதவள் போலக் குனிஞ்சதலை நிமிர்கிறதில்லே. எல்லாம் வேஷம்! இத்தனை நாளும் உங்க தம்பி தன் நாடகத்தையெல்லாம் வெளியில் வச்சிண்டிருந்தார். இப்ப என்னடான்னா வீட்டிலேயே அவர் லீலைகளை ஆரம்பிச்சுட்டார். இது இனிமே குடித்தன ஸ்திரீகள் இருக்கிற வீடான்னுதான் கேட்கிறேன்'' என்றாள் அலமேலு மூச்சுவிடாமல்.

பாலகிருஷ்ணன் பதில் பேசவில்லை. என்ன ஆச்சரியம்? சந்திராவை அவனும் பார்க்காததுபோல் சில தடவைகள் கூர்ந்து கவனித்து இருக்கிறான். களங்கமற்று விளங்கும் அவளது சாந்தமான முகத்தைக் கண்ட அவன் மனத்தில், அவள் மனமும் பளிங்கைப் போன்றது என்ற எண்ணந்தான் உண்டாகியது. பாவம், உலகம் சரிவரத் தெரியாத சிறுபெண்! அவளுடைய பெயருக்கு எக்காரணமுமின்றி அபக்யாதி வரும்படி தம்பி நடந்து கொண்டுவிடப் போகிறானே என்று சிந்தித்த அவன் மனத்தில் சந்திராவின் மேல் இரக்கம் பிறந்தது.

அலமேலுவிடம் தற்போது தனது அபிப்ராயத்தை வெளியிட்டால் வீண் கலகம்தான் ஏற்படும் என்று அவன், ''அம்மு! ஜகந்நாதன் பேச்சையே என் காதில் போடாதே. சந்திரா சிறு குழந்தையல்ல. தனக்கு வரும் நன்மை தீமைகளுக்கு அவள்தான் பொறுப்பாளி. நமக்கென்ன அம்மு. உனக்கு உன் பிறந்தகம் போகணும்னு சொன்னியே, எனக்குக் கூட எங்கேயாவது போய் இருந்துவிட்டு வரலாம்னு தோன்றுகிறது. அடுத்த மாதம் லீவு எடுக்கறேன். ஹாய்யா இரண்டு பேரும் பத்து நாள் இருந்துவிட்டு வரலாம்'' என்று பேச்சை மாற்றினான்.



அலமேலுவுக்குப் பிறந்தகம் என்று சொல்லிவிட்டால் போதும் என்பது பாலகிருஷ்ணனுக்குத் தெரியும். அவ்வளவுதான். அவளுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. ''இதெல்லாம் என்ன ஊரு! எங்கள் கோலாப்பூர் அழகு ஒண்ணே போறாதா...!'' என்று ஆரம்பித்ததைத் தன் விதியை நொந்து கொண்டே பாலகிருஷ்ணன் அரைத் தூக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

# 11

விளக்கு வைக்கும் நேரமாகியும் வழக்கம்போல் வரும் நாகராஜய்யர் வீட்டு வில்வண்டி வராததைக் கண்டு டியூஷனுக்குப் போகத் தயாராக உட்கார்ந்திருந்த சந்திராவின் மனது மிகவும் சஞ்சலப்படத் தொடங்கியது. தனது அதிகப் பிரசங்கித் தனமான பதிலினால் மனத்தாங்கல் அடைந்த அலமேலு சந்திராவின் டியூஷனை நிறுத்தி விட்டாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அன்று டியூஷன் வேண்டாம் என்றால் சகுந்தலா முன்கூட்டியே சொல்லி அனுப்பியிருப்பாளே...? சந்திரா மிகவும் குழப்பமடைந்தவளாய் வைத்திருந்த கதைப் புத்தகமொன்றைப் படிக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

சூரியன் மறைந்து நன்றாக இருட்ட ஆரம்பித்து விட்டதனால் அவளுடைய தங்கை கமலி வீட்டுக் கூடத்தில் ஹரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்தாள். மற்றக் குழந்தைகள் வாசலில் விளையாடப் போய்விட்டனர். தம்பி வேணு ஆபீஸிலிருந்து இரவு எட்டு மணி சுமாருக்குத்தான் வருவானாதலால் அவனைப் பற்றிக் கவலைப்பட ஒன்றுமில்லை. அப்பா வெளியில் போயிருக்கிறார். சித்தி வம்பளக்கும் நிமித்தம் கையில் ஒரு சிறு கிண்ணத்தில் எண்ணெயுடன் கோயிலுக்குப் போனவள் திரும்பி வரும் சமயம்.

''பெரிய மனிதர்கள் வீட்டுச் சமாச்சாரமே இப்படித்தான் நிலையற்றது போலும்?'' என்று தனக்குள் முணுமுணுத்த சந்திரா படித்துக் கொண்டிருந்த புஸ்தகத்தைப் படக்கென மூடிக் கீழே

வைப்பதற்கும் அவள் சித்தி கோயிலிலிருந்து வருவதற்கும் சரியாக இருந்தது.

''இன்னுமா சந்திரா நீ டியூஷனுக்குப் போகலியே?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் பார்வதி. ''இல்லை, அவா விட்டு வண்டி வரக் காணோமே?'' என்று சந்திரா கூறி முடிப்பதற்குள் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ஆச்சரியத்துடன் சந்திரா எழுந்திருந்து வாசற்பக்கம் போனாள்.

''வண்டி வேறு வேலையாக வெளியே போயிருக்கு. கார் அனுப்பிச்சுக் கூட்டியாரச் சொன்னாங்க'' என்று நாகராஜய்யர் வீட்டுக் கார் டிரைவர் கூறியதைக் கேட்டதும் உள்ளே திரும்ப நுழைந்த சந்திரா, ''சித்தி! அவாத்துக் காரை அனுப்பிக் கூட்டி வரச் சொன்னாளாம், போயிட்டு வரேன்'' என்று கூறிவிட்டு, அவசரமாகப் போய் அதில் ஏறிக் கொண்டாள். மறுவிநாடி கார் கன வேகமாகப் புறப்பட்டது.

நாகராஜய்யரின் பங்களாவின் வாயிலை அடைந்ததும் காரின் கதவைத் தனக்குத் திறந்துவிட்ட டிரைவரின் முகத்தைக் கூடக் கவனியாது சந்திரா பரபரப்பாக மின்சார விளக்கினால் ஜெகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கும் ஹாலுக்குள் நுழைந்தாள். ஆனால், அங்கு ஒருவரும் இல்லாதது கண்டு திகைத்துப் போய் நின்று விட்டாள்.

''சகுந்தலா! சகுந்தலா'' என்று இரண்டு மூன்று முறை மெல்ல வாய்விட்டுக் கூப்பிட்டாள். அதற்கும் ஒருவிதப் பதிலையும் காணாதது கண்டு அவள் நெஞ்சு 'திக் திக்'கென அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. ஒருவரும் வராவிடில் திரும்பி விடலாம் என்று எண்ணிக் காலடி எடுத்து வைத்த சந்திராவை, ''சந்திரா உட்கார்ந்து கொள்ளுங்கள்! நிற்கிறீர்களே!'' என்று உபசரித்த புருஷக் குரலைக் கேட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். அவள் மேனி பயத்தால் நடுங்க ஆரம்பித்தது.

ஜகந்நாதன் புன்னகை தவழும் முகத்துடன் மாடிப் படியினின்று இறங்கி அவள் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

தனது கலவரத்தை வெளியில் காட்ட மனமில்லாத சந்திரா முகத்தைச் சாந்தமாக வைத்துக் கொண்டு, ''சகுந்தலா எங்கே



இருக்கிறாள்? சற்றுக் கூப்பிடுங்கள் தயவுசெய்து! எனக்கு நேரமாகிவிட்டது'' என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

''சகுந்தலா வீட்டிலிருந்தால்தானே அவளைக் கூப்பிட முடியும்?'' என்று பரிகாசமாக ஜகந்நாதன் சொன்னதைக் கேட்ட அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''வீட்டில் இல்லையா? பின் எதற்காக என்னை வரவழைத்தார்கள்?'' என்று பதறினாள் பயத்துடன். அவள் உடல் நடுங்குவதைக் கண்ணுற்ற ஜகந்நாதனுக்கு சிரிப்பே வந்தது.

''சகுந்தலா, என் அம்மா, அண்ணா, மன்னி, ராஜு எல்லோரும் சினிமாப் பார்க்கப் போயிருக்கிறார்கள். அவர்கள் வருவதற்குப் பத்து மணிக்கு மேல் ஆகும்.''

''சமையற்கார அம்மா ஊருக்குப் போய் நான்கு நாளாகிறது. அப்பா கம்பெனி விஷயமாகச் சென்னைக்குப் போயிருக்கிறார். வீட்டில் நம் இருவரைத் தவிர இப்பொழுது ஒருத்தரும் கிடையாது. தோட்டக்காரன் கூடத் தற்சமயம் இல்லை'' என்றுகூறி லேசாக நகைத்தான் அவன்.

சந்திராவின் இருதயம் திகிலினால் நின்றுவிடும் போலிருந்தது. ''சகுந்தலா வீட்டில் இல்லாதபொழுது எதற்காக எனக்கு வண்டி அனுப்பினார்கள்?'' என்று குழப்பத்துடன் கூறியவள், மெல்ல வெளியேற நினைத்தாள்.

''அம்மா அனுப்பவில்லையே? என்னுடைய காரை நான்தானே அனுப்பினேன்!'' என்று ஜகந்நாதன் சொல்லியதைக் கேட்டதும் சந்திரா தீயை மிதித்தவள் போலத் துணுக்குற்றாள்.

''உங்கள் காரா? ஐயோ! எனக்கு ஒன்றும் தெரியாதே. எதற்காக எனக்குக் கார் அனுப்பினீர்கள். யாருமில்லாத சமயத்தில்...'' என்று அவள் தடுமாறுவதைக் கண்ட ஜகந்நாதன், ''சந்திரா, இதோ பார்! நீ புத்திசாலி அல்லவா? இது கூடத் தெரியவில்லை என்றால் நீ நடிக்கின்றாய் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கும்! உன்னுடன் தனிமையில் சில விஷயங்கள் பேசவே இந்தச் சந்தர்ப்பத்தை நான் உபயோகப்படுத்திக் கொண்டேன்'' என்றான் சாவதானமாக.

சந்திராவின் பயமெல்லாம் மறைந்து அதற்குப் பதில் கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தன.

''வேடிக்கைதான்! யாருமற்ற சமயம் என்னிடம் பேச வேண்டியது என்ன விஷயமோ? அழகாகத்தான் இருக்கிறது நீங்கள் நடந்து கொள்ளும் முறை'' என்று கடுமையாகச் சொன்னவள் வாசலை நோக்கிப் போனாள்.

ஜகந்நாதன் ஒரே பாய்ச்சலில் வாசற்படியில் வந்து நின்று கொண்டு, ''நல்ல சமயத்தில் நழுவப் பார்க்கிறாயே. நான் எத்தனை கஷ்டப்பட்டு உன்னை இங்கே வரவழைத்தேன்! அத்தனையும் வீணாகப் போகலாமா? அங்கேயே சற்று நில்'' என்றான்.

சந்திரா பயந்து விட்டாள். ''எதற்காக இப்படி வழி மறைக்கிறீர்கள்? இப்படி நீங்கள் கேவலமாக நடந்து கொள்வது தர்மமா?'' என்று கேட்ட அவளுக்கு மேலே பேச வார்த்தைகள் வரவில்லை. சந்திரா பதிலளித்ததைக் கேட்ட ஜகந்நாதன் கிஞ்சித்தும் அதை லட்சியம் செய்தவனாகக் காணவில்லை. அச்சத்தினால் தன் எதிரே அரண்ட மான் போல் நிற்கும் அவளை குறும்புத்தனமாகக் கண்காணித்துக் கொண்டு ஜகந்நாதன், ''நீ எவ்வளவு அழகாக இருக்கிறாயோ அவ்வளவு அழகாகப் பேசவும் பேசுவாய் என்பதை இப்போது தெரிந்து கொண்டேன். சந்திரா! வீணாக நான் பொழுதைக் கழிக்க விரும்பவில்லை. உன்னைப் பார்த்ததிலிருந்து என் மனம் என் வசமேயில்லை. இதுதான் காதல் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். சந்திரா! என்னை நீ கல்யாணம் செய்து கொள்ள உடன்பட வேண்டும் என்று கேட்கத்தான் இத்தனை தந்திரமாக ஏற்பாடு செய்தேன்'' என்று ஒரு அடி எடுத்து வைத்தான்.

சந்திராவின் உள்ளத்தில் கோபம் குமுறிக் கொண்டிருந்தது. அதைத் தாங்காத அவள், ''பேஷ்! பேஷ் தாங்கள் ஒரு சார்பாகப் பேசுகிறீர்களே ஒழிய இதில் என் இஷ்டத்தையே சிந்திக்கவில்லை போலிருக்கிறது. எனக்கு உம்மீது ஒருவிதமான பற்றுதலும் கிடையாது. ஆகையினால் தயவு செய்து பிறர் வீட்டுப் பெண்ணிடம் அகௌரவமாக நடந்து கொள்ளாமல் என்னைப் போக விடுங்கள்'' என்று கூறி தீப்பொறிகள் பறக்கும் தனது அகன்ற விழிகளால் அவனை எரித்து விடுபவள் போல் பார்த்தாள்.

ஜகந்நாதன் முகம் சந்திராவின் அவமதிப்பான துடுக்குச் சொற்களைக் கேட்டுச் சிவந்தது.



''கல்யாணம் செய்து கொள்கிறாயா என்று ஒரு ஸ்திரீயிடம் ஒரு புருஷன் கேட்பது அவளைக் கௌரவிப்பதாகும் என்பது என் அபிப்ராயம். இதைவிட உன்னை நான் எப்படி கௌரவிக்க முடியும் என்பதைத்தான் சற்றுச் சொல்லேன்! நீ படித்தவள், அழகி என்பதைத் தவிர ஒரு ஏழைப் பெண்தான்! நான் மட்டும் உன் மீது இத்தனை பிரேமை கொண்டிராவிடில் உன் அந்தஸ்து பிரகாரம் என் வீட்டு சமையற்காரிக்கு உதவியாளாக இருக்க வேண்டியவளே நீ! உன் மீது கொண்ட கரைகாணாத காதலால் உன்னை நான் மதிக்கிறேன். முட்டாள் பெண்ணே! அசட்டுத்தனமாகப் பேசாதே'' என்று கர்வமாக மொழிந்தான்.

சந்திரா புலிபோல் உறுமினாள் உரத்த குரலில், ''போதும் உமது பேத்தல்! நான் ஏழை என்றால் என் மட்டில், உங்கள் வீட்டுப் பெண்களைவிட நாங்கள் தன்மதிப்பை அதிகம் போற்றுகிறவர்கள் என்று ஞாபகமிருக்கட்டும். நீர் மன்மதனாயிரும், குபேரனாகத்தான் இருமே, எனக்கென்ன? உமது கேவலமான நடத்தையைக் கேட்ட எந்த மானமுள்ள ஸ்திரீயாவது உம்முடன் பேசுவாளா? சந்தர்ப்பக் கொடுமையால் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். உங்கள் வீட்டு உத்தியோகத்திற்கு முழுக்கு போட்டு விடுகிறேன் இந்த க்ஷணம்! மரியாதையாய் வழியை விடுங்கள்! இன்றேல் கூச்சல் போட்டு எல்லோரையும் இங்கே வரவழைத்து விடுவேன்'' என்று அவனை மிரட்டும் பாவனையில் பேசியதைக் கேட்ட ஜகந்நாதன் தன் வரிசைப் பற்கள் தோன்ற கேலியாக நகைத்தான்.

''நீ தொண்டை கிழியச் சத்தமிட்டாலும் கேட்பவர்களில்லை. என் ரதியே! அப்படியே நீ கத்தி யாரையாவது உதவிக்குக் கூப்பிட்டாலும் எனது நடத்தை இந்த ஊர் ஈ, எறும்பு முதலிய சகல ஜீவன்களுக்கும் தெரிந்ததுதானே! என் வீட்டில் அகால வேளையில் என்னைச் சந்திக்க நீ தனிமையாக வந்திருப்பது சுய விருப்பத்தினால் தான் என்று நான் சொன்னால் உன் நிலைமை என்னவாகும்? உனது சகோதரன் எனது கம்பெனியில் வேலை பார்க்கிறான் என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். மடச்சாம்பிராணியான அவனுக்கு எழுபத்தைந்து ரூபாய் மாதம் சம்பாதிக்க என்ன யோக்யதாம்சம் இருக்கிறது? நினைத்துப் பார்த்தாயா? மூளையிழந்து நடந்து கொள்ளாதே!'' என்று பாதி சரசமாகவும் பாதி மிரட்டலாகவும்

நவின்றான்.

''பிச்சை எடுத்துச் சாப்பிட்டாலும் சாப்பிடுகிறோம். உங்கள் சங்கதியே எங்களுக்கு வேண்டாம்! குடிகாரன்! ஸ்திரீ லோலன்! சூதாட்ட மோசக்காரன்! தூ! உன் பணமும் அந்தஸ்தும் எங்களுக்குத் துச்சம்!'' என இகழ்ச்சியாக அவள் பதிலளித்ததைக் கேட்ட ஜகந்நாதன் மிகவும் கோபம் கொண்டு விட்டான்.

''நிறுத்து அதிகப் பிரசங்கி! உன்னை நயமாகக் கேட்பதில் பயனில்லை. நான் விரும்பியது எதையும் அடையாது கைவிட்டதில்லை. நீ என் பொறுமையைச் சோதித்து விட்டாய். உன்னை நான் விடப் போவதில்லை'' என்று கூறியவன் அவள் அருகில் நெருங்கினான்.

என்ன செய்வதென்று குழப்பமடைந்த சந்திரா பங்களா வாயிற்பக்கம் யாரோ மனித உருவம் தென்படுவதைக் கண்டு தைரியமடைந்தவளாய், ''என் அருகில், வந்தால் தெரியுமா?'' என்று மிரட்டினாள்.

''அம்மா கேட்டனுப்பிச்ச பருப்பு கடையிலே இல்லீங்களாம். அடுத்தவாரம் சரக்கு வரச்சே தாரேன்னான்!'' என்று கூவிக்கொண்டு உள்ளே ஓடி வந்த வேலையாள் மன்னார்சாமியைப் பொசுக்கி விடுபவன் போல் நோக்கிய ஜகந்நாதன், ''சரி! சந்தோஷம்! அவன் கடையில் இடி விழட்டும்! உன் தலையிலும் அது சேர்ந்து விழட்டும்! வெளியே போடா நாயே!'' என்றான்.

சந்தர்ப்பத்தை நழுவவிடாத சந்திரா, ஒரே பாய்ச்சலாக வாயிலைக் கடந்து ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் பறந்தாள்.

''சத் பிசாசு!'' என்று தன்னை மீறிச் சலிப்பாக வந்த வார்த்தைகளுடன் சந்திரா போன திக்கையே ஏமாற்றத்துடன் பார்த்து நிற்கும் எஜமானனை மன்னார்சாமி முகத்தில் கேலிப் புன்னகையுடன் கவனித்தான்.

''விசயம் இப்படிப் போவுதா? வீட்டில் ஒருத்தருமில்லாத சமயத்திலே...'' என்று தனக்குள் வியப்படைந்தவனாய், 'யாரிடம் சொல்லுவோம் தான் கண்ட காட்சியை' என்று துடித்துக் கொண்டு வாசலை நோக்கி விரைந்தான் மன்னார்சாமி.

# 12

ஏகாம்பர முதலியாரின் புதிய மருமகள் அம்புஜம் அன்று பகல் தனக்கு வந்த கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். தனது பிராண சிநேகிதி சந்திராவிடமிருந்து வந்த கடிதம்தான் அது. ஒரே ஊரில் இருந்தும் தனது விவாகத்திற்குத் தோழி வராதிருந்ததைக் குறித்து அம்புஜத்திற்கு மகத்தான மனத்தாங்கலாகத்தான் இருந்தது. வேண்டுமென்றே சந்திரா வராதிருந்து அவமானப்படுத்தி விட்டதாகக் கூட அவள் தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டாள். ஆனால், சிநேகிதி மனதைவிட்டு, தான் சித்தியின் ஆணைக்குப் பயந்தே அவள் கல்யாணத்திற்கு வர முடியவில்லை என்பதை விளக்கியவுடன் மிகவும் இளகிவிட்டாள். ''பாவம், அனாவசியமாக சந்திரா மீது மனத்தாங்கலடைந்தேனே! அவள் என்ன செய்வாள்! பெற்றோர்களுக்குப் பயந்து தானே அவள் நடக்க வேண்டும்?'' என்று எண்ணி எண்ணிப் பச்சாதாபமடைந்தாள். திரும்பவும் அந்தக் கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் ஊடுருவிப் படித்துக் கொண்டிருந்தாள்.

பின்னால் வந்து நின்ற அவள் கணவன் எஞ்சினியர் ராமநாதன்.

''நான் வந்ததுகூடத் தெரியாதபடி உன் மனத்தைக் கவரும் அந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்தது?'' என்று பரிகாசமாக வினவினான்.

''யாரிடமிருந்து வந்ததென்று சொன்னால் நீங்கள் பொறாமைப் படுவீர்கள்!'' என்று பதிலுக்கு உல்லாசமாக மொழிந்தாள் அம்புஜம்.

''அடேயப்பா! பீடிகை பலமாக இருக்கிறதே. யாரிடமிருந்து வந்தது, சொல்லேன்'' என்று கொஞ்சலாகக் கேட்டான்.

''என் சிநேகிதியிடமிருந்து வந்தது. படித்துப் பாருங்கள், எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறாள் என்று. சிலருக்குத்தான் தங்கள் மனவெழுச்சிகளை வார்த்தைகளில் தெரிவிக்கத் தெரியும்'' என்று கூறிய வண்ணம் அந்தக் கடிதத்தை அவன் கையில் கொடுத்தாள்.

ராமநாதன் அதைப் பிரித்துப் படிக்காமல் அம்புஜத்தின் முகவாய்க் கட்டையைத் தன் வலக்கரத்தினால் நிமிர்த்திக் கொண்டு, ''உண்மையைச் சொல்! மனவெழுச்சிகளை வார்த்தைகளில் தெரிவிக்கத் தெரிவது சிலருக்குத்தானே? எனக்கு தெரியாதல்லவா?'' என்று குறும்புத்தனமாகக் கேட்டுக் கொண்டே அவளது கண்களை கூர்ந்து நோக்கினான்.

''நீங்கள் மெத்தக் கற்றவர்! உங்களுடைய குதர்க்கமான கேள்விகளுக்குப் பதில் சொல்லும் திறமை எனக்கில்லை. கடிதத்தைக் கொஞ்சம் படித்துப் பாருங்களேன்'' என்று கொஞ்சியவாறு அவனது கரத்தை அகற்றிவிட்டுத் தனது கருவிழிகளால் அவனைக் கடாக்ஷித்தாள்.

ராமநாதன் அம்புஜத்தின் வேண்டுகோளை நிராகரிக்க மனமற்ற வகையில் கடிதத்தைப் பிரித்து விட்டு, ''ஆகா! எழுத்துக்கள்தான் என்ன முத்துப் போலிருக்கிறதே'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

''எழுத்துக்களும் முத்துக்களைப் போன்றது; அவளது உள்ளமும் விலையில்லா மாணிக்கம் போன்றது; சந்திராவைப் போல உலகத்தில் வேறு பெண்கள் இருக்கிறார்களா?'' என்று தன்னையே மறந்து பரவசமாக அம்புஜம் பேசியதைக் கேட்ட ராமநாதன் புன்னகையுடன், ''ஏன் இல்லை? என் அம்புஜம் இருக்கிறாளே'' என்றான்.

கணவனது அன்பான புகழ்ச்சிக்குத் தனது நன்றியறிவிப்பாக, ''சந்திராவும் நானும் சிநேகிதிகள் என்றால் கேவலம் சாதாரணக் கலாசாலைத் தோழிகள் அல்ல! சகோதரிகளுக்கு மேல். எங்களுடைய அன்பு நிரம்பி இருந்தது. அவளிடம் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. ஏழைப் பெண் என்பதை ஒப்புக் கொண்டு என் தயவை ஒருவிதத்திலும் எதிர்பார்க்க அவளது கர்வம் வழி விட்டதில்லை. எந்தக் கஷ்டத்தையும் மனம் விட்டுச் சொல்லவே மாட்டாள். என்னைப் போல் எதற்கெடுத்தாலும் கண்ணீர் விட்டுக் கதறவும் மாட்டாள். எந்தக் காரியத்தையும் சாதிக்கும் பிடிவாதம் கொண்ட பெண். மனப்போராட்டங்களை முகபாவத்தில் காட்டாது அமுக்கி வைத்துக் கொள்ளும் திறமை கொண்டவள். கெட்டிக்காரி அதோடு தூய்மையான உள்ளன்பு கொண்டவள்'' என்று வர்ணித்தவள் தன்னையும் மறந்து பெருமூச்சு விட்டாள்.



சந்திராவின் கடிதத்தைப் பாதி படித்துவிட்டு ராமநாதன், ''அம்புஜம்! உன் சிநேகிதி நீ சொல்வது போல் உண்மையில் அவ்வளவு சிறந்த குணம் கொண்டவளோ என்னமோ. ஆனால், ஒன்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்'' என்று கனிவுடன் பகர்ந்தான்.

''என்ன சொல்லுங்கள்?'' என்று அம்புஜம் வினவியதைக் கேட்ட அவன், அருகில் வந்து அன்பு ததும்பும் குரலில், ''அம்புஜம்! உன் உள்ளம் பரிசுத்தமானது; பிறரிடம் நற்குணங்களையே காணும் பெருந்தன்மை வாய்ந்தது'' என்றான்.

அம்புஜத்தின் முகத்தில் ரத்தம் குபீரென ஏறியது. கணவன் தன்னைப் புகழ்ச்சியாகப் பேசியதைக் கேட்ட அவள் வெட்கம் அடைந்தவளாய், ''நீங்கள் மட்டும் எப்படிப்பட்டவர்? உங்கள் அம்மா உங்களைப் புகழ்வதைக் கேட்டால் என் மனம் எவ்வளவு பெருமைப்படுகிறது தெரியுமா? எனக்கு வாய்த்த இந்த உத்தம புருஷனைப் போல் என் சிநேகிதிக்கும் ஒரு நல்ல குணமுடைய கணவன் கிடைக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை'' என்றாள் உணர்ச்சியுடன்.

ராமநாதனுக்கு மேலே பேச வார்த்தைகள் தோன்றவில்லை. அம்புஜம் தன் ஆசைக் கணவனை அன்புடன் நோக்கினாள். அவளது பார்வையில் ராமநாதன் மன்மதனைப் போல் தோன்றினான். தூய்மையின் இருப்பிடமான அவனை அவள் மனமார நேசித்தாள். சூரியன் மேற்கே உதித்தாலும் உதிப்பான். ஸத்புத்ரன் எனப் பெயர் படைத்த ராமநாதன் நடத்தையில் மாசு ஏற்படாது என்று தன் மனத்திலே எண்ணிய அம்புஜம் பூரித்துப் போனாள். ''ரொம்பக் களைத்துப் போயிருக்கிறீர்களே! டீ கொண்டு வருகிறேன், ஒரே நொடியில்'' என்று உள்ளே சென்றாள்.

# 13

சேடத்து அறையின் ஜன்னல் மிகச் சிறியது. காற்றுப் போக்கு

தாராளமாக இல்லாது திருடனுக்காக பயந்து கட்டப்பட்ட வீடு. பகல் வேளைகளிலேயே இருள் கவ்வி நிற்கும்; அஸ்தமித்த பின்பு அதன் அழகை விஸ்தரிக்கவே வேண்டாம். சாதாரண நாட்களில் அந்த அறையின் பக்கமே எட்டிப் பார்க்கக் கூட விரும்பாத சந்திரா சில நாட்களாக அந்த அறையிலேயே இருட்டில் மணிக்கணக்காக உட்கார்ந்து சிந்தித்துச் சிந்தித்து மனம் புண்ணாகி வெந்ததற்குக் காரணங்கள் பல இருக்கத்தான் செய்தன.

அன்று ஜகந்நாதனிடம் அசம்பாவிதமாக அகப்பட்டுக் கொண்டு தெய்வாதீனமாக தப்பி வந்தவள், ஒரே ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் பரக்கப் பரக்க ஓடி வந்தாள் அல்லவா? சிறிது தூரம் வந்ததுமே மனக்கலவரத்தை அதிகம் தெரிவிக்காமல் சாந்தமாக வீட்டை நோக்கி நடந்தாள். எனினும், அவள் குடியிருந்த தெருவில் பலர் அவள் அகால வேளையில் கால்நடையாக வீட்டை நோக்கி பரபரப்புடன் செல்வதை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

வீட்டு வாசற்படியில் காலை வைத்ததும் வைக்காததுமாகச் சித்தியானவள் ''ஏண்டி சந்திரா! நீ இன்னிக்கு டியூஷனுக்கு வரவேண்டாம்னு இந்தக் கடுதாசியை அவாத்திலிருந்து அனுப்பியிருக்காளே அந்தப் பொண்ணு. உன் தங்கை கமலி புழக்கடைப்பக்கம் மூஞ்சியலம்பப் போனவள் யாரோ வேலைக்காரன் கொடுத்துட்டுப்போனதை வாங்கி வச்சாளாம்; உன்கிட்டச் சொல்ல மறந்துட்டாளாம். வேண்டாம்னுட்டு அப்புறம் ஏன் கார் அனுப்பிச்சாளாம்?'' என்று கேட்டாள்.

தன்னைப் பொறுத்தவரை ஒருவிதக் குற்றமும் செய்யாதிருந்தும் கூட சந்திராவின் மனமென்னமோ பார்வதியின் வார்த்தைகளைக் கேட்டு அளவற்ற, வேதனை அடைந்தது.

''அவாத்து டிரைவர் தவறிப்போய் வந்து கூப்பிட்டு விட்டானாம். அதனால்தான் திரும்பி வந்துவிட்டேன்'' என்று முகம் சிவக்கக் கூறித் தடுமாறினாள்.

சித்தி பார்வதி அவள் சொன்ன பதிலை நம்பத் தயாராக இல்லை என்பதைப் போல் கண்களால் சந்திராவை ஒரு தடவை ஏறிட்டு நோக்கிவிட்டு, ''போனவள் அவர்கள் இல்லாவிட்டால் உடனே



திரும்ப வேண்டியதுதானே? இதற்கு இத்தனை நாழியேன்?'' என்று மேலே கேட்டாள்.

''அவர்கள் இல்லை என்றதும் காருக்குக் காத்திராமல் நடந்து வந்தேன். அதனால்தான் நாழி'' என்று சந்திரா கொஞ்சம் ஆத்திரத்துடன் கூறினாள்.

''என்னவோ நீ பண்ணறது ஒண்ணும் நன்னாயில்லை!'' என்று பார்வதி சப்புக் கொட்டிவிட்டுச் சமையலறைப் பக்கம் சென்றாள். கூடத்துப் பழைய மேஜை மீது சகுந்தலா எழுதியிருந்த கடிதம் கிடந்தது. அதைப் படித்த சந்திராவிற்கு யார் மேல் கோபம் கொள்வதென்று புரியவில்லை. தான் சினிமாவுக்குப் போவதாயும் ஆகையால் அன்று டியூஷனுக்கு அவள் வரத்தேவையில்லை என்றும் சகுந்தலா அதில் தெளிவாக எழுதியிருந்தாள்.

'இப்படி ஒரு பெண் உண்டா! எனக்குக் கடிதம் வந்திருப்பதாகச் சொல்ல வேண்டாமா? இதுவும் என் தலைவிதிதான்' என்று மனம் நொந்த அவளுக்கு ஜகந்நாதன் மீது மகத்தான வெறுப்பும் கோபமும் உண்டாயின.

வாழ்க்கைத் துறையில் வறுமையுடன் போராடும் தன்னைப் போன்ற ஒரு ஏழைப் பெண்ணின் வயிற்றெரிச்சலை அவன் ஏன் கொட்டிக் கொள்ள வேண்டும் என்று அவளுக்கு விளங்கவில்லை. ஜகந்நாதன் தன்னுடன் வாதாடிக் கொண்டிருக்கையில் வேலைக்காரன் ஒருவன் தென்பட்டதால் தான் தப்பியதாக அவள் பங்களாவினின்று வெளிப்படுமுன் நினைத்தாள். வீட்டை வந்து அடைந்த பிறகு அந்த வேலையாள் தன்னைச் சந்தேகமாகப் பார்த்த பார்வையைப் பற்றிச் சிந்தித்தாள். அகால வேளையில் இருவரும் தனித்துப் பேசிக் கொண்டிருந்ததைத் தான் கண்ணால் பார்த்ததாக அவன் நாலு பேரிடம் வம்பளந்தால் அவள் கதி என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்கையில் ஏற்பட்ட திகிலினால் அவள் உடல் நடுங்கியது.

சந்திரா கவலைப்பட்டது முற்றிலும் உண்மையாகி விடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாவது நாள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிகளின் அறைப்பக்கம் சென்ற அவள் காதுகளில் மற்ற ஆசிரியைகள் பேசிக் கொண்டிருந்த சம்பாஷணை கொடூரமாக

விழுந்தது.

''அவன் காரை அனுப்பி அழைத்துவரச் செய்தானாம். ஜகந்நாதன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்ததை வேலைக்காரனே கண்களால் பார்த்து விட்டானாம். வெட்கக்கேடுதான்'' என்று பல்லைக் கடித்தாள் ஒருத்தி.

''எனக்கு இப்படி நடக்கப் போகிறதென்று அப்பவே தெரியும்! பூ! இது ஒரு அதிசயமா?'' என்று அலட்சியமாகப் பேசினாள் இன்னொருத்தி.

கர்ணகடூரமான அந்தப் பழிச் சொற்களால் வேதனைக் கொண்ட சந்திராவுக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. மனந்தாளாத அவள் அறைக்குள்ளே நுழையவே பயந்து கொண்டு நேரே வகுப்பிற்குள் சென்று விட்டாள்.

அத்துடன் அந்த ராக்ஷஸிகள் சந்திராவை விட்டு விடவில்லை. அவளைக் கண்டபொழுதெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களை விஷமமாகச் சிமிட்டியும், 'பிடித்தாலும் புளியங்கொம்பையல்லவா பிடிக்க வேண்டும்' என்று மறைபொருளாக குத்திப் பேசியும் சந்திராவின் மென்மையுள்ளத்தை நோகச் செய்தனர்.

சந்திரா நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு அவர்களின் பேச்சை லட்சியம் செய்யாமல் இருந்திருப்பாள். ஆனால், தலையில் பேரிடி விழுவதைப் போன்றிருந்தது ஒருநாள் தலைமை உபாத்தியாயினி அவளைத் தனிமையில் பேச விரும்புவதாகக் கூப்பிட்டனுப்பிய பொழுது.

''நான் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானா சந்திரா? ஜகந்நாதனுக்கும் உனக்கும் சிநேகிதமென்று கேள்விப்பட்ட சில செய்திகளைக் கேட்கக் கூட எனக்கு விரசமாக இருக்கிறதே?'' என்று மிகவும் கடுமையாகச் சௌந்தரம்மாள் எடுத்த எடுப்பிலேயே கேட்டு விட்டாள்.

தன்னிடம் மிகவும் மரியாதையாகவும் பிரியமாகவும் நடந்து கொண்டு வந்த சௌந்தரம்மாள் ஒரே க்ஷணத்தில் கண்டிக்கும் பாவனையுடன் மிகக் கடுமையாகத் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்ட சந்திராவுக்குப் பேச நா எழவில்லை.



''இல்லை! அவ்வளவும் பொய்!'' என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க.

''எப்படி இருக்க முடியும் பொய்யாக? நெருப்பில்லாமல் புகை வருமா? கொஞ்சமாவது உண்மையில்லாத கதைகள் காற்றிலே பறக்குமா என்ன? நீ இப்படிக் கேவலமாக நடந்து கொள்வாய் என்று தெரிந்திருந்தால் உன்னை அந்தப் பெரிய மனிதர் வீட்டுக்குச் சிபாரிசு பண்ணியிருந்திருக்கவே மாட்டேன். காமாட்சி அம்மாளிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு. நான் அனுப்பிய உபாத்தியாயினி நடத்தை தவறியவள் என்றால், என்னைப் பற்றி அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' என்று படபடத்தாள் சௌந்தரம்மாள்.

''நான் சொல்வதைச் சற்றுக் கேட்க மாட்டீர்களா தயவு செய்து?'' என்று கெஞ்சிய சந்திராவின் கண்களில் நீர் நிறைந்து விட்டது.

''அவ்வளவும் பொய். எனக்கு ஒன்றுமே தெரியாது என்றுதானே சொல்லப் போகிறாய்? இல்லையா? கோமதி வித்தியாலயத்து உபாத்தியாயினிகள் சற்று வம்பிகள்; என்னைப் பற்றியே தூற்றுகிறார்கள் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், வாயினால் பேசுவார்களே ஒழிய அவர்கள் நடத்தையில் தூய்மையான பெண்கள். என் பள்ளிக்கூடத்திற்கு இதுவரை எந்தவிதமான அபகீர்த்தியும் அவர்களால் ஏற்பட்டதில்லை. உன் நடத்தை கோமதி வித்யாலயத்தின் பெருமையைப் பாதிக்கின்றது தெரியுமா?'' என்று கேட்டாள் சீற்றத்துடன் சௌந்தரம்மாள்.

''நான் சொல்வதைக் கேட்காமலே தாங்கள் பேசுகிறீர்கள்'' என்று சந்திரா கண்களைத் துடைத்துக் கொண்டு சொல்ல வந்தபோது சௌந்தரம்மாள் நிறுத்தி ''போதும்! பத்துப்பேர் சொன்னால் பொய். ஒரே சொல்லும்போது கூடவா பொய் என்று நினைப்பது சந்திரா. உன் முகலக்ஷணத்திற்கும் படிப்பிற்கும் சாதுர்யத்திற்கும் மெச்சி நான் பல பழைய உபாத்தியாயினிகளிருக்க உன்னைக் கௌரவித்தேன். நீ அதற்குச் சற்றும் உகந்தவளல்ல என்பதை இன்று உணருகிறேன்'' என்று வெறுப்புடன் சௌந்தரம்மாள் மேலும் பேச விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சந்திராவிற்குத் துக்கம் தாங்க முடியவேயில்லை. தன்னையும் மீறி வந்த விம்மல்களுடன் அவள் சட்டென அறையை விட்டு

வெளியே வந்தாள்.

மற்ற உபாத்தியாயினிகள் தன்னைப் பற்றிப் பேசிய தூஷணைகளுக்காக அவள் வருந்தவில்லை. சௌந்தரம்மாளின் தூய்மையான உள்ளத்தில் தன்னைப். பற்றி அகௌரவமாக நினைக்கும்படி நேர்ந்து விட்டதே; பெருந்தன்மை வாய்ந்த அந்த அம்மாளின் நன்மதிப்பை இழந்து விட்டோமே என்ற துக்கத்தினால் விம்மி யாருமில்லாத ஒரு அறையில் உட்கார்ந்து அழுதாள்.

சற்று நேரம் கழித்துத் தன் கையிலிருந்த ஒரு நோட் புத்தகத்திலிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்து தன் வேலையை ராஜினாமா செய்து விட்டதாக அதில் எழுதி, அங்கிருந்த பள்ளிக்கூட வேலையாளைக் கூப்பிட்டு, ''இதைக் கொண்டு போய் பெரிய வாத்தியாரம்மாவிடம் கொடு'' எனக் கூறிவிட்டு ஒரே மூச்சில் வீடு வந்து சேர்ந்தாள்.

பட்ட காலிலேயே படும் என்பதைப் போல அன்று சாயங்காலம் வீடு வந்து சேர்ந்த கல்யாணராமய்யர் என்றுமில்லாத அதிகாரத் தோரணையில், ''சந்திரா'' என்று அதட்டிக் கூப்பிட்டதைக் கேட்ட அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''நான் ஒண்ணு கேட்கணும்! உனக்கும் அந்த அயோக்கியப் பயல் ஜகந்நாதனுக்கும் சிநேகிதம் ஆரம்பிச்சி எத்தனை காலம் ஆகிறது? நிஜம் எனக்குத் தெரிய வேண்டும் இப்போ'' என்று மிரட்டலாகத் தந்தை கேட்டதும் சந்திரா வெலவெலத்துப் போனாள்.

''எனக்கும் அவருக்கும் சிநேகிதமா?'' என்று அவள் மெல்லிய குரலில் இழுத்தாற்போல் சொன்னதைக் கேட்டதும் அவர் எரிமலையைப் போல் வெகுண்டு எழுந்தார்.

''அப்பன் ஒருத்தன் உயிரோட இருக்கான்னு நீ நெனைச்சுண்டிருக்கிறாயா; உன் அகங்காரமும் ஆணவமும் என் மானத்தைக் கப்பலேத்தி விட்டதே! என் பள்ளிக்கூட வாத்திப் பசங்கள் உன்னைப் பத்தி ஜாடையாகக் கேலியாப் பேசறச்சே என்னைக் குத்திக் கொண்டு சாகலாம்னு இருக்கேடி! கேடு கெட்டவளே உண்மையை ஒப்புக் கொள்!'' என்று கர்ஜித்தார்.

''என்ன இருக்கிறது ஒப்புக் கொள்ள! ஒருநாள் தவறுதலாக அவர் வீட்டிலிருக்கையில் நான் போக நேர்ந்தது தவிர எங்களிடையில்



ஒருவிதப் பற்றுதலும் கிடையாது அப்பா, என்னை நம்புங்கள்!'' என்று சந்திரா துக்கத்துடன் கெஞ்சினாள்.

''கல்யாணராமய்யர் கோபந் தணியாதவராய் ''நம்புங்கள், நம்புங்கள், நம்புங்கள்'' என்றுதான் என்னை சரியா நம்ப வச்சுட்டியே! அவனுடைய காரில் நீ போனாயாம், வெட்கக்கேடு! பெண்களைப் பெற்றாலும் உன்னைப் போல் மானங்கெட்ட பெண்களைப் பெற வேண்டாம்! என் மானம் போய்விட்டதே!'' என்று தம் தலையில் ஆத்திரத்துடன் படீர் படீர் என்று அடித்துக் கொண்டார்.

''ஆமாம், நீலி! எனக்குத் தெரியும் தெரியும் என்று வீம்பு பிடிச்சு அடங்காப்பிடாரியா நின்னதுதான் மிச்சம். நீ இனி வேலை பார்த்து நாசமாய்ப் போனது போதும். வீட்டிலேயே கெட? எந்த வரன் கேட்டாலும் வாயை மூடிண்டு பேசாம கல்யாணம் பண்ணிண்டு போயிடு. உன்னால் நான்பட்ட துன்பம் போறும்டி அம்மா! இந்த ஜன்மத்துக்கும் போதும். இன்னும் ஏழேழு ஜன்மத்துக்கும் போதும்'' என்று பார்வதி கத்தினாள்.

சந்திரா அன்று பூராவும் பட்டினியாகக் கிடந்தாள். ஏனென்று கேட்பவர்கள் இல்லை. மறுநாள் காலை அவள் தங்கை கமலியின் வேண்டுகோளின் பேரில் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டாள். அப்பா, சித்தியிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டாள்.

சந்திரா இருட்டறையில் சிறைபுகுந்து ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. மனம் புழுங்கித் தன்மீது ஆற்றாமை கொள்ள யாரும் இல்லையா என்று ஏங்கிய சமயம் அவள் தன் சிநேகிதி அம்புஜத்தை நினைத்துக் கொண்டாள்.

''யார் நம்மை அறிந்து கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் சரி, அம்புஜம் நம்மிடம் பழகியவள். அவள் கட்டாயம் அறிந்து கொள்வாள். தனது மனக் கஷ்டங்களைக் குறித்து அவளுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு சற்று ஆறுதலை ஏன் பெறக்கூடாது?'' என்று எண்ணினாள் சந்திரா.

# 14

ராட்டன் அண் கோவின் உள்புறப் பிரத்தியேக அறைகளில் ஒன்றில் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் வெகுநேரம் ஜகந்நாதனும் நாகலிங்கமும் வீற்றிருந்தனர். திடீரென்று நாகலிங்கம் மவுனத்தைக் கலைத்துத் தன் நண்பனைப் பார்த்துப் பேசினான்.

''என்னப்பா, இது, ஒரே சத்தியாக்கிரகம் பண்றே! இப்படியே உட்கார்ந்திண்டு இருந்தால் நேரமாகவில்லையா? ஒரு கிளாஸ் திராக்ஷை ரசத்தைச் சாப்பிடு. ரெண்டு பேரும் குஷியாக எங்கேயாவது சுற்றிவிட்டு வரலாம்'' என்று உற்சாகப்படுத்திவிட்டுத் தன் கையிலிருந்த பானத்தை ஒரே வாயில் மடக்கென்று குடித்தான்.

''எனக்கு ஒண்ணுமே பிடிக்கவில்லை. மனசு இருக்கிற நிலையில் பயித்தியம் பிடித்து விடுமோ என்றுகூடத் தோன்றுகிறது'' என்று சலிப்பாகக் கூறினான்.

''ஒரேமுட்டாக இந்த வஸ்துக்கள் மீது விரக்தியுண்டாகும்படி செய்த அவள் பெரிய மோகினியாகத்தான் இருக்க வேண்டும்'' என்று பரிகாசமாகக் கூறிச் சிரித்தான் நாகலிங்கம்.

இதைக் கேட்டதும் ஜகந்நாதன் முகம் சிவந்து கொண்டது. ''என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுக்கக் கூடிய பெண்களும் இருக்கிறார்கள் என்பது எனக்கு இப்பொழுதுதான் புலனாகிறது. எங்கள் சமூகத்தில் பெண்கள் மிகவும் மலிந்து கிடக்கிறவர்கள்; புருஷன் என்று பெயர் படைத்தால் போதும், காலடியில் வரதட்சனையுடன் வந்து விழுவார்கள் என்று நான் நினைத்திருந்ததையெல்லாம் பொய்யாக்கி விட்டாளே சந்திரா. என்னைத் துச்சமாக தூக்கி எறிந்து பேசி விட்டல்லவா சென்றாள்!'' என்று மிகவும் அலுப்புடன் ஜகந்நாதன் சொன்னான்.

''எவளோ ஒருத்தி வந்து உன்னைப் பாழ்படுத்தி விட்டாளே, கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதென்ற உன் கொள்கைகளை எல்லாம் பொடியாக்கிவிட்ட அவளை எனக்குக் கூடப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டாகிறது!'' என்று பரிகாசமாய்க் கூறிய நண்பனின் பேச்சைக் கேட்டதும் ஜகந்நாதன், ''எல்லாப்



பெண்களையும் போல் இவள் இல்லை. இவள் மீது நான் காதல் கொண்டிருக்கிறேன்'' எனப் பகர்ந்தான்.

''காதல்! காதல்! காதலாவது மண்ணாங்கட்டியாவது! கதாசிரியர்களும் கவிகளும் உளறும் அபத்தம் அது! நீயும் பேத்தறயே? புறப்படு சொல்கிறேன். அந்தக் கழுதைக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றால் விட்டுத்தள்ளு! ஒரு விஷயத்தில் நீ பிழைத்தாய்! கல்யாணத்திற்கு அவள் சம்மதித்து விட்டிருந்தால் நீ இப்பொழுது பெரிய பந்தத்தில் அல்லவா சிக்கிக் கொண்டிருப்பாய்?'' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான் நாகலிங்கம்.

அவன் சந்திராவை அலட்சியமாகப் பேசியது ஜகந்நாதனுக்கு அருவருப்பை உண்டாக்கியது. ''உனக்குக் காதல் என்பது புரியாவிட்டால் போகிறது. சந்திராவை நீ அவமரியாதையாக இனிமேல் என் எதிரில் பேசாதே. அவளை நான் மிகவும் மதிக்கிறேன்'' என்றான் கோபமாக.

''அடேயப்பா! பரவாயில்லையே! அவள் என்னை விட உனக்கு உயர்ந்தவளாகப் போய்விட்டாள் போலிருக்கிறதே!'' என்று கூறிய நாகலிங்கத்திற்குத் தன் நண்பனின் விசித்திர மனப்போக்கு சிறிதும் விளங்குவதாக இல்லை.

''இதனால் என்ன வந்தாலும் சரி! நான் அவளை எப்படியாவது மணந்து கொள்ள முடிவு செய்துவிட்டேன். அவள் இல்லாவிட்டால் எனக்கு உலகத்தில் ஒன்றும் இல்லை. அவள் மட்டும் என்மீது கொஞ்சம் பிரேமை காட்டினால் வாழ்க்கை ஈடேறிவிடும்!'' என்று சொல்லி ஜகந்நாதன் பெருமூச்செறிந்தான்.

''வேண்டுமானால் உன்னுடன் நான் பந்தயம் வைத்துக் கொள்ளவும் தயார். மனிதர்கள் மனமே குரங்கைப் போன்றது. கிடைக்கும் வரைதான் ஒரு பொருள் மீது மகத்தான ஆசை இருக்கும். கைக்கு அது வந்தபின் அந்த ஆசை அடங்கிவிடும். சந்திராவை நீ கல்யாணம் செய்து கொண்டதும் உண்மையான கிரகஸ்தனாக ஆகிவிடுவாய் என்பதை நான் நம்பமாட்டேன்'' என்றான் நாகலிங்கம்.

''வேண்டுமானால் நீ பாரேன்!'' என்று வீம்பு பேசிக் கொண்டு

ஜகந்நாதன் தன் கடிகாரத்தை உற்று நோக்கினான். சட்டென்று நிமிர்ந்து, ''மணி ஒன்பதாகப் போகிறது. இன்று உன்னோடு வெளியில் வர சௌகரியப்படாது... எனக்கு வீட்டுக்குப் போக வேண்டும்...'' என எழுந்து அவசரமாக அறையை விட்டு வெளியேறினான்.

நாகலிங்கத்திற்கு ஜகந்நாதனின் மனப்போக்கு மிக்க வியப்பையும் வேதனையையும் உண்டாக்கியது. ''காதலென்றால் மனிதனைப் பித்தனாக்கி விடுமா, என்ன? என்னைப் பொறுத்தவரையில் காதல் என்பது என் அகராதியில் இல்லையே?'' என்று முணுமுணுத்துக் கொண்டு, தனியே வெளியே போக மனமற்றவனாய்த் திரும்ப ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, ''பையா, 'போர்ட்' ஒரு பாட்டில்'' என்று கூவினான்.

வீட்டையடைந்த ஜகந்நாதன் சாப்பாடு ஆனதும் வழக்கம்போல் தனது அறைக்குச் செல்லாமல், சமையற் கட்டிலேயே மேற்காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்த தன் தாயார் காமாக்ஷியம்மாளிடம் வந்து நின்றான்.

காமாக்ஷியம்மாள் எல்லோருக்கும் சாப்பாடு போட்டுவிட்டுத் தான் சாப்பிட உட்கார்ந்திருந்த சமையற்கார சேஷிக்கு சாதம் பறிமாறிக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா நீ சாதம் போடாவிட்டால் வேறு யாருமில்லையா?'' என்று ஆதரவுடன் அவன் வினவியதைக் கேட்ட காமாக்ஷியம்மாளுக்குத் தன் காதுகளையே சிறிது நேரம் நம்ப முடியவில்லை.

''பாவம், சேஷி இத்தனை நாழியாகக் கைவேலையாக இருந்தாள்'' என்று பரிந்துகொண்டு சொன்னாள் காமாக்ஷியம்மாள்.

''மன்னியை வேண்டுமானால் உதவிக்குக் கூட்டிக் கொள்கிறதுதானே? உனக்கு இந்த வேலையெல்லாம் செய்ய சக்தி இருக்கா அம்மா?'' என்று அன்புடன் கடிந்து கொண்டான் பிள்ளை.

''நான் பழைய காலத்துப் பொம்மனாட்டியப்பா! இன்னும் சக்தி குறையலை'' என்று காமாக்ஷியம்மாள் புன்னகையுடன் கூறினாள்.

''அம்மா, உங்கிட்ட ஒண்ணு பேசணும். ஹால் பக்கம் சித்த



வாயேன்!'' என்று மகன் என்றுமல்லாத கனிவுடன் அழைத்ததைக் கேட்டவுடன் காமாக்ஷியம்மாள் கை வேலையைப் போட்டுவிட்டு அவனைத் தொடர்ந்து சென்றாள்.

முதலில் ஜகந்நாதனுக்கு எப்படி ஆரம்பிப்பது என்றே புரியவில்லை. சற்றுத் தயங்கிவிட்டுத் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டான். ''அம்மா! நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன். உனக்கு அந்தக் குறை இருக்க வேண்டாம் என்பதனால் அப்படி ஒரு தீர்மானம் செய்தேன்'' என்று ஒரு வழியாக விஷயத்தைச் சொன்னான்.

காமாக்ஷியம்மாளின் மனம் சந்தோஷத்தினால் பூரித்தது. ''நிஜமாகவா?'' என்றாள் குதூகலத்துடன்.

''பெண் கூட யார் என்று தேர்ந்தெடுத்து விட்டேன். மேலே கல்யாணம் செய்து வைப்பது பெற்றோர்களின் பொறுப்பு. இங்கே சகுந்தலாவுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க வந்திருந்தாளே சந்திரான்னு ஒருத்தி. அவளை எனக்கு மிகவும் பிடிக்கிறது. கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவளையே பண்ணிக் கொள்வேன். அப்பா, அவள் வீட்டு அந்தஸ்து போதாதென்று தகராறு செய்தால் அவ்வளவு தான்! என் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாக இருக்கத் தீர்மானித்து விட்டேன். அப்பாவிடம் சொல்லிச் சரிப்படுத்த வேண்டியது உன் வேலை'' என்று மேலும் நிற்காமல் தைரியமாகச் சொன்னான்.

காமாக்ஷியம்மாளுக்குச் சட்டெனப் பதில் என்ன சொல்வதென்று தெரியவில்லை. சந்திரா 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க வந்தவள் திடீரென்று தானே நின்று விட்டாள். கூப்பிட்டனுப்பிய பிறகு, தான் இனி வர முடியாது என்று பதில் அனுப்பியிருந்தாள். காமாக்ஷியம்மாளின் மனதை அது சற்று வருந்தச் செய்தது என்றே சொல்லலாம். தாங்கள் வெளியே போயிருந்த அன்று அவள் பங்களாவுக்கு வந்ததாகவும் ஜகந்நாதன் அவளிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதாகவும் வேலையாள் அவளிடம் சொன்ன பொழுது அவளுக்குப் பலவித சந்தேகங்கள் தோன்றி மனம் குழம்பினாள் என்பது வாஸ்தவம்.

''அதைப் பற்றி நீ யோசிக்க வேண்டாம் அம்மா. வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் அவளை நான் இங்கே நீங்கள் வரச்

சொன்னதாகத் தருவித்துச் சம்மதம் பெற்றுவிட்டேன். இனி நடக்க வேண்டியது அப்பா அவளுடைய தந்தையைப் பார்த்துக் கேட்க வேண்டியதுதான். நாம் போய்ப் பெண் தேடுவது இழிவு. அவர்கள் ஏழைகள் என்றெல்லாம் அப்பா யோசித்தால் நான் இப்படியேதான் இருப்பேன். அம்மா அவள் எவ்வளவு புத்திசாலி தெரியுமா? ஏழைப் பெண் என்றால் என்ன? ரொம்ப நல்ல் குணம்'' என்று புகழ்ந்து கொண்டே போனான்.

காமாக்ஷியம்மாள் வாயோடு மெல்லச்சிரித்தாள். ''சந்திராவைப் பார்த்த முதலிலிருந்து எனக்குக்கூட அவள்மேலே ஆசைதான். உங்கப்பா வழிக்கு வந்தால் நான் விவாகத்துக்கு தடை செய்ய மாட்டேன். அவளை நாட்டுப் பெண்ணாக அடையக் கொடுத்து வைக்க வேண்டும். கடவுள் கிருபை என்னவோ அப்பாவிடம் மெதுவாகப் பேசிப் பார்க்கிறேன்!' என்றாள்.

அம்மாவைச் சுலபமாகக் காக்காய்பிடித்த மகிழ்ச்சியில் ஜகந்நாதன் ஆங்கிலப் பாட்டொன்றைப் பாடிக் கொண்டு மாடி ஏறினான்.

## 15

அம்புஜத்திற்குத் தன் மனத் துயரங்களை வெளிப்படுத்தி எழுதியிருந்த நீண்டதான கடிதத்தைப் பலமுறை படித்துவிட்டுக் கடைசியில் தானே அதைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து வெறுப்புடன் எறிந்தாள் சந்திரா. தனது துயரங்களை எடுத்துக்கூறி ஒருவருடைய ஆறுதலைப் பெற அவள் இதுவரை முயற்சித்ததில்லை. ''நான் கஷ்டத்திலிருக்கிறேன். என் மனம் கவலையில் ஆழ்ந்திருக்கிறது'' என்று ஒருவருடைய தயவையும் இன்றுவரை கோரியதில்லை. இனி மட்டும் ஏன் பிறர் உதவியை நாடவேண்டும், என்று தன்னையே கடிந்து கொண்டவள், 'பெற்ற தந்தையே நம்பிக்கையிழந்தார் என்றால் வேறு யாரிடம் சொல்லிக் கொள்வது? வெட்கக்கேடு!' என்று எண்ணியவளாய்ச் சிலை போல் உட்கார்ந்திருந்தாள்.



அது சமயம் உள்ளே நுழைந்த கல்யாணராமய்யர், மிகவும் பரபரப்புடன் தென்பட்டார்.

''பார்வதி! கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வா!'' என்று உரத்த குரலில் என்றுமில்லாத அதிகாரத்துடன் அவர் கூவுவதைக் கேட்ட சந்திராவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பார்வதி ஒரு டம்ளர் ஜலத்தைக் கொண்டு வந்து மேஜைமீது நறுக்கெனவைத்துவிட்டு, ''என்ன இப்போ தலை போகிற காரியமா? அவசரமாகக் கூட்பிட்டேளே'' என்றாள்.

''நமக்கு நல்ல காலம் வந்திருக்குன்னா, எனக்கே சொப்பனமாட்டமா தோன்றது. நாகராஜய்யர் என்னைப் பார்க்கணும்னு சொல்லியனுப்பியிருந்தார்; போனேன். நம்ப சந்திராவை அவர்கள் பிள்ளை ஜகந்நாதனுக்குக் கல்யாணம் செய்து வைப்பதைப் பற்றி நமது அபிப்பிராயம் என்னன்னு எடுத்த எடுப்பிலேயே கேட்டார். எனக்கு இது பூலோகமா கைலாசமான்னு நிலை தடுமாறிப் போச்சு. 'எங்களுக்கு உங்கள் சம்பந்தம் கிடைக்கக் கொடுத்து வைக்க வேண்டாமா'ன்னு முகஸ்துதியாகச் சொல்லி விட்டு வந்தேன். மனுஷர் ரொம்பக் கறார் ஆசாமி. 'பிஸினஸ்' தோரணையில்தான் பேசினார். நாளன்னிக்கு வெள்ளிக் கிழமை பெண்ணைப் பார்க்க சம்பிரதாயத்திற்காக அவரும் சம்சாரமும் மற்றவர்களும் வருகிறார்களாம்!'' என்றார்.

சந்திரா சங்கதியைக் கேட்டதும் திடுக்கிட்டாள். ஜகந்நாதன் அவளைப் பலவந்தமாக மணம் புரிந்து கொள்வதாக அன்று பயமுறுத்துவதற்காகக் கூறினான் என்றுதான் நினைத்தாளேயொழிய உண்மையிலே அதை நிறைவேற்றச் செய்வான் என கிஞ்சித்தும் நினைக்கவில்லை.

தொண்டையைக் . கனைத்துக் கொண்ட கல்யாணராமய்யர், ''சந்திரா! அவர்கள் வெள்ளிக் கிழமை காலை வருவார்கள். கொஞ்சம் நன்றாகவே டிரஸ் கிரஸ் செஞ்சுண்டு தயாராயிரு'' என்றார்.

சந்திரா பல்லைக் கடித்ததும் அவள் முகம் ஆத்திரத்தால் சிவந்ததையும் அந்த அறையின் மங்கிய வெளிச்சம் வெளியிடச் சக்தியற்று இருந்தது, ''நான் நாகராஜய்யர் பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை, அப்பா! அதனால் அவர்கள்...''

என்று சந்திரா பதட்டத்துடன் ஆரம்பிப்பதற்குள் கல்யாணராமய்யர் இடத்தைவிட்டுத் துள்ளிக் குதித்தெழுந்து, ''நிறுத்து உன் அழுகைத்தை! உன் இஷ்டப்படியெல்லாம் இனி நடக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்காதே! உன்னைப் பெற்ற அப்பன் மடையன் என்பது உன் எண்ணமா என்ன? உன்னைப்பற்றி ஏற்பட்ட பழி இந்தக் கல்யாணத்தோடயாவது மறையட்டும். இதைவிடவும் ஒரு பாக்கியம் நமக்கு உண்டா? இது விஷயத்தில் உன் இஷ்டத்தை நான் கேட்கப்போவதே கிடையாது. வாயைக் மூடிக்கொண்டு நான் சொல்வதைக் கேட்டால் நீ என் பெண், இல்லாவிட்டால் வீட்டைவிட்டு இப்போதே வெளியே போய்விடு!'' என்று கர்ஜித்தார். தந்தையின் சீற்ற மொழிகளைக் கேட்ட சந்திராவுக்குப் பதில் சொல்ல வாயெழவில்லை. துக்கம் நெஞ்சடைத்துக் கொண்டு வந்து ஒரு பெரும் விம்மலாக வெளிப்பட்டது.

''இந்த அழுகை ஜாலம் இதெல்லாம் இனிமேல் எங்ககிட்டே பலிக்காது! இப்பவாவது உங்கப்பாவுக்கு உங்கிட்டே தைரியமாகப் பேச வந்ததே! அதுவே போதும்'' என்று சந்திராவை நோக்கி ஒரு அதட்டல் போட்டுவிட்டுப் போனாள் சித்தி.

திடீரென நினைத்துக் கொண்டவர் போல் கல்யாணராமய்யர் கூடத்து அறைக்குள் தம் தலையை நீட்டி, இருட்டில் மறைந்து நின்று கொண்டிருந்த தமது மகளிடம், ''சந்திரா! உனக்கு இதைவிட நல்ல வரன் கிடைக்கவே கிடைக்காது... வலுவிலே வரவிருக்கும் சீதேவியைத் தள்ளாதே. உன் தங்கை கமலிக்காகவும், உன் அப்பாவின் குடும்ப கௌரவத்திற்காகவும் நீ கட்டாயம் ஜகந்நாதனை மணந்து கொள்ள வேண்டும்'' என்று கூறிவிட்டு, அவள் பதிலை எதிர்பாக்காமலே வாசற் பக்கம் நடையைக் கட்டினார்.

சந்திராவுக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. 'ஜகந்நாதனின் மனைவி ஆவதா; அப்பப்பா. என்ன துர்பாக்கியம் அது!' என்று மனம் வெதும்பினாள். அவள் மனத்தில் பலவிதக் குருட்டு யோசனைகள் எழுந்தன. கதைகளில் வரும் சில கதாநாயகிகளைப் போல் விடிவதற்குள் எங்கேயாவது ஓடிவிட்டால்... வீட்டை விட்டு அவள் எங்கே போவது...? யாரைத் தெரியும்...? யாரை நம்பி வெளியே போவது? அல்லது இந்த அல்ப உயிரை ஏதாவது விஷத்தினால் முடித்துக் கொண்டு விட்டால்? எனப் பலவாறு எண்ணிய அவள்



கண்ணீர் உகுத்தாள்.

மறுநாள் விடிந்தால் அவர்கள் வரப் போகிறார்கள்! நாகராஜய்யரை அவள் பார்த்ததில்லை. வந்து பார்க்கப் போகும் காமாக்ஷியம்மாளை நினைக்கையிலேயே அவளுக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது. ஜகந்நாதன் தன்னைப் பற்றி அந்த அம்மாளிடம் என்னவெல்லாம் கூறியிருக்கிறானோ என்று எண்ணி அவள் மனம் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில் அவள் தம்பி வேணுகோபாலன், ''சந்திரா!'' என அருமையுடன் அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

''என்ன வேணு?'' என்றாள் சந்திரா வாஞ்சையாக. அருகில் வந்து உட்கார்ந்த வேணு மிகவும் ரகசியமாக ''அக்கா நீ ஜகந்நாதனை மணப்பதற்குத் தடை சொல்வதா அப்பா எங்கிட்ட சொல்லி வருத்தப்பட்டார். ஜகந்நாதன் நேற்று என்னைக் கூப்பிட்டு உன்னைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசினார். உன்னை அவர் மணந்து கொண்டால் எனக்குப் பெரிய வேலைக்குச் சிபாரிசு செய்ய முடியுமென்றும் இன்னும் பல உதவிகள் செய்வதாகவும் சொன்னார். அவர் எவ்வளவு நல்லவர்! உனக்கு ஏன் அவரைப் பிடிக்கவில்லை? நாம் ஏழைகள். நமக்கு அவர்கள் சம்பந்தம் கிடைக்கக் கூடியதா? வலுவில் பெண்கேட்பது நமது சமூகத்தில் நடக்கக்கூடிய விஷயமா?'' என்றான் பசப்பாக.

வேணுகூட சமயம் வரும்போது சாதுர்யமாகப் பேசுவான் என்பதை அன்றுதான் சந்திரா உணர்ந்தாள். தம்பியின் மனப்போக்கை அறிந்த அவள், ''ஏழைகள் என்பதற்காக பணத்திற்கு ஆசைப்பட்டு பிடிக்காத ஒருவரை மணந்து கொள்ள வேண்டுமா...?'' என்றாள் அலுப்புடன்.

''அவர்கள் வீட்டு டியூஷனை நீ ஒத்துக் கொண்டதனால் ஜகந்நாதனுக்கும் உனக்கும் சிநேகிதமெனச் சில போக்கிரிகள் கதைகட்டி விட்டார்கள். அதைக் கேட்கும்பொழுது எனக்கு எவ்வளவு அவமானமாயிருந்தது தெரியுமா? அக்கா, நீ அவரை மணந்து கொண்டால் அந்தப்பழிச் சொல்லாவது மறையுமல்லவா?'' என்றான் தம்பி வேணு துணிவாக.

சந்திரா திகைப்படைந்தாள். வேணுவுக்குக்கூட இப்படித்

தன்னை அதட்டிப் பேசும் ஆற்றல் எங்கிருந்து வந்தது என வியப்படைந்தவளாய், ''அவரை மணந்து கொண்டால் அந்தப் பழிச் சொல்லை இன்னும் ஒத்துக் கொண்டதாகாதா?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஆகாது, அக்கா - அது மறைந்து விடும். ஜனங்கள் அதைப் பற்றிப் பேசவே மாட்டார்கள். நீ இதை மறுத்தால் நமது குடும்ப கௌரவமும் மறையும்; என்னையும் ஜகந்நாதன் வேலையை விட்டு நீக்கி விடுவார். எனக்கு வரப்போகும் பிற்காலத்து மகத்தான வாழ்க்கைக்கு நீ குறுக்காக நிற்கிறாய்! என் சகோதரியின் நடத்தையைக் குறித்துப் பிறர் பேசுவதைக் கேட்டு நான் தலை குனிந்து நிற்கவும் நேரிடும்'' என்றான்.

சந்திராவிற்குத் தன் தம்பி மீது பாசம் அதிகமென்றாலும் அவனது சுயநலமான மனப்போக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. ''வேணு! நீ என்னால் தலைகுனிந்து நிற்க வேண்டாம். நான் அவரையேதான் மணந்து கொள்ளப் போகிறேன்! உனக்கு வரவிருக்கும் அஷ்ட ஐசுவரியங்களுக்கும் நான் குறுக்கே நிற்க மாட்டேன், போ. மனசு சமாதானத்துடன் அப்பாவிடம் சொல்லிக் கவலைப்படாமலிருக்கச் சொல்!'' என்று படபடவென்று பொழிந்து விட்டாள்.

மறுநாள் காலை பத்து மணியடித்ததும் கல்யாணராமய்யர் இருப்புக் கொள்ளாதவராய் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தார். சந்திரா சித்தியின் உத்தரவின்படியே தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நாகராஜய்யரை மரியாதையுடன் வரவேற்று கூடத்தில் அமரச் செய்தார். பின்னால் வந்த ஜகந்நாதன் கண்களால் சுற்றுமுற்றும் ஆராய்ந்து கொண்டே பெஞ்சியின் மீது உட்கார்ந்தான்.

''வாருங்கள்'' என்று பல்லை எல்லாம் காட்டிக் காமாக்ஷி அம்மாளையும் கூடவந்த அலமேலுவையும் உபசரித்த பார்வதி, சமையலறைக்கு முன்பக்கத்திலிருந்த வராந்தாவில் அவர்களை உட்காரும்படி உபசரித்தாள்.

''சந்திரா வந்து நமஸ்காரம் பண்ணம்மா'' என்று தந்தையின்



கனிவான குரலைக் கேட்ட சந்திரா கொலைக் களத்துக்கு அழைத்துச் செல்லப்படும் கைதியைப் போன்ற மனவேதனையுடன் வெளியில் வந்தவள் நாற்காலியில் கம்பீரமாக வீற்றிருந்த நாகராஜய்யரை ஏறெடுத்துப் பார்க்கவும் வெட்கினாள்.

சந்திராவின் மோகன உருவத்தை நன்கு நோக்கிய நாகராஜய்யரால் ஒரு கணம் தனக்குள்ளே ஜகந்நாதனின் அதிர்ஷ்டத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

நமஸ்கரித்து எழுந்த பெண்ணை, ''இங்கே வந்து இவர்களுக்கும் நமஸ்காரம் பண்ணம்மா?'' என்று அன்பு ததும்ப பார்வதி அழைத்தாள். அவர்களின் முகத்தைப் பார்க்க அஞ்சி நமஸ்கரித்துவிட்டு எழுந்து நின்றாள்.

மலர்ந்த முகத்துடன் தனது கைகளின் பக்கம் காமாக்ஷியம்மாள் நீட்டிய பழம், புஷ்பம் முதலியவைகளை இயந்திரம் போல் வாங்கிக் கொண்டு திரும்பிய சந்திராவிற்கு அங்கே கூடத்தில் தன் தந்தைக்குப் பக்கத்தில் வீற்றிருந்த ஜகந்நாதன் தன்னையே விழுங்கிவிடுபவன் போல் நோக்குவது தெரிந்தது. இருவர் கண்களும் சந்தித்தன. வெற்றிக் குறியுடன் ஜகந்நாதன் அவளைக் குறும்புத்தனமாகப் பார்த்தான். சந்திரா தன் அழகிய கண்களால் அவனை வெட்டி விடுபவள்போல் ஒரு பார்வை பார்த்தாள். மறுகணம் அவள் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். ஏனெனில் அவள் கண்களில் பெண்மைக்குரிய தோல்விக்குறியான கண்ணீர் பொங்கிவழிந்து கொண்டிருந்தது.

நாகராஜய்யர் அப்போதே கல்யாணத்திற்குத் தேதியைக் குறிப்பிட்டு விட்டார் என்றும், கல்யாணத்தைத் தமது வீட்டிலேயே விமரிசையாக நடத்தப் போகிறார் என்றும் தந்தையின் வாயிலாக உணர்ந்த சந்திரா, வரப்போகும் அந்த நாளைக் குறித்து வெறுப்போ அல்லது விருப்போ கொள்ளச் சக்தியற்று மரக்கட்டை போன்று தன்னை மறந்த நிலையை அடைந்தாள்.

# 16

அன்று கல்யாணராமய்யர் கூடத்தில் பெஞ்சிமீது உட்கார்ந்து கொண்டு கல்யாணப் பத்திரிகையை யார் யாருக்கு அனுப்ப வேண்டும் என்ற ஜாபிதா ஒன்றைத் தயாரித்துக் கொண்டு இருந்தார். கல்யாணத்திற்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை இருந்தது. அக்காவின் அதிர்ஷ்டத்தைக் குறித்துச் சற்று பொறாமையடைந்திருந்த கமலி தனக்கு வரப்போகும் கணவனை மானசிகமாக பார்த்து மகிழ்ந்து கொண்டே தாயாருக்கு ஒத்தாசை செய்தாள். சந்திரா என்றும்போல் கூடத்து இருட்டறையில் தனது பிற்கால வாழ்க்கையின் பயங்கரத்தைப் பலவாறு சித்தரித்து வெளியில் சொல்ல வகையின்றித் தவித்துக் கொண்டிருந்தாள்.

வாசலிலே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் கல்யாணராமய்யர் பரபரப்பாக எழுந்து வாசலை எட்டிப் பார்த்தார். கூடத்திற்குள் மாப்பிள்ளை ஜகந்நாதன் நுழைவதைக் கண்டு ஆனந்தத்துடன், ''வரணும், உட்காருங்கள்'' என்று வரவேற்றார்.

''ஒன்றுமில்லை. சந்திராவிற்குப் பிடித்த புடவைகளை அவளே பார்த்து வாங்கி கொள்வதுதான் நல்லது என்று அம்மா சொன்னாள். அம்மாவுக்கு உடம்பு சற்று அசௌக்கியம். அதனால் கடைக்கு அழைத்துப்போக என்னை அனுப்பினாள். உங்களுக்கு சந்திராவை நான் கடைக்கு அழைத்துப் போவதில் ஆக்ஷேபணையில்லையே'' என்று அதிகாரமாகக் கேட்டான்.

கல்யாணராமய்யருக்கு என்ன பதில் சொல்வது என்பது தெரியவில்லை. ஆகவே அவர், ''சந்திராவையே கூப்பிடுகிறேன்'' என்று இழுத்தாற்போல் பதிலளித்து விட்டு ''சந்திரா, சந்திரா'' என்று அழைத்தார்.

சம்பாஷணை முழுவதையும் நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்த சந்திராவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இதுவும் ஜகந்நாதனின் ஒரு சூழ்ச்சியாக இருக்கும் என்று எண்ணிய அவள் அறையிலிருந்து வெளிப்பட்டு ''ஏன் அப்பா!'' என்று மெதுவாகக் கேட்டாள்.



''உங்கிட்ட என்னவோ கேட்கணும்னு இவர் வந்திருக்கார்'' என்று மகளின் சிவந்த முகத்தைப் பார்த்துத் தடுமாறிவிட்டுக் கல்யாணராமய்யர் ஜாடையாக வாசற் பக்கம் சென்றார்.

தனியாக விடப்பட்ட சந்திரா தனது சீற்றத்தை அடக்க முடியாதவளாய் ஜகந்நாதனின் பக்கம் திரும்பி, ''என்ன பேச வேண்டும்?'' என்று மிடுக்காகக் கேட்டாள்.

''விஷயம் முழுவதும் உன் காதுகளில் பட்டிருக்கும்! அதனால் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. டிரஸ் செய்து கொண்டு புறப்படு. நேரமாகிறது!'' என்றான் அவன்.

சந்திராவிற்கு அவனது அதிகாரப் பேச்சுக்களைக் கேட்க ஆத்திரம் பற்றிக் கொண்டது. ''எனக்கு அம்மா இஷ்டப்பட்டு வாங்கிய புடவை போதும். நான் வெளியே கடைக்கு வரப்போவதில்லை!'' என்று எரிச்சலுடன் பதில் அளித்தாள்.

''நான் என் மனைவிக்குப் புடவைகள் வாங்கிப் பரிசளிக்க ஆசைப்படுகிறேன். அதனால் புறப்படு. தாமதிக்க வேண்டாம்!'' என்று துரிதப்படுத்தினான்.

''இன்னும் நான் உங்கள் மனைவியாகவில்லை என்பது ஞாபகமிருக்கட்டும். எனக்கு உங்கள் பரிசுகள் தேவையில்லை!'' என்று வெறுப்புடன் பதிலளித்து விட்டு கூடத்து அறைக்குள் சட்டெனப் புகுந்து கொண்டாள்.

ஜகந்நாதனின் கர்வம் அவள் செய்கையால் சிறிது பங்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட மனவெழுச்சிகளை அடக்க முடியாதவனாக அவன் விர்ரென வெளியேறினான். வாசலில் நின்று கொண்டிருந்த கல்யாணராமய்யர், ''என்ன மாப்பிள்ளை!'' எனக் கவலையுடன் கேட்டார்.

''சந்திராவிற்குத் தலையை வலிக்கிறதாம்! பாவம் சிரமப்படுத்த வேண்டாமென்று விட்டுவிட்டேன்?'' எனப் பளிச்சென ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டான் அவன்.

அவன் சென்ற சில மணி நேரங்கழித்து வேலையாள் ஒருவன் பெரிய மூட்டையொன்றைக் கொண்டு வந்து கூடத்தில் வைத்துவிட்டுப் போனான்.

சந்திராவுக்கு என விலாசமிட்ட கவரொன்றைக் கண்ட கல்யாணராமய்யர் ''சந்திரா, உனக்கு அனுப்பியிருக்கார் மாப்பிள்ளை'' எனப் பகர்ந்து, மகளிடம் கடிதத்தைக் கொடுத்தார். 'பிரியமுள்ள சந்திராவுக்கு ஜகந்நாதனின் அன்பளிப்பு' என அதில் எழுதப்பட்டிருந்தது. சித்தி, தங்கை, அப்பா முதலியவர்களுடைய ஆவலின் நடுவே மூட்டையைப் பிரித்த சந்திராவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. விதம் விதமான வர்ணங்களில் விலை உயர்ந்த பல பட்டுப் புடவைகள் அதிலிருந்தன.

பட்டுக்களின் நயத்தையும் அவைகளின் தற்கால விலையையும் கணக்கிட்டு பார்த்துக் கொண்டிருந்த சந்திரா கடைசியில் ''சித்தி! உனக்கு வேண்டிய கலர்ப் புடவையை எடுத்துக் கொள். கமலியும் வேண்டியவைகளை எடுத்துக் கொள்ளட்டும். எனக்கு என்னத்துக்கு இத்தனை!'' எனக் கூறிவிட்டு அந்தப் புடவைகளைத் திரும்பவும் பார்க்க வேண்டாது அலட்சியமாகப் புழக்கடைப் பக்கம் சென்றாள்.

''புடவையைக் கொடுத்து என் அன்பை விலைக்கு வாங்கிவிடலாமென்று அவர் எண்ணமா?'' என்று சந்திரா தனக்குள்ளே ஜகந்நாதனைப் பற்றிக் கேவலமாக எண்ணிக் கொண்டிருப்பதை அறியாத சித்தி, சந்திராவின் தாராள புத்தியை மனத்திற்குள் வியந்த வண்ணம் தனக்குப் பிடித்து புடவைகளைத் தேர்தெடுப்பதில் முனைந்தாள்...!

★ ★ ★

ரமணீயமான மாலைச் சூரியன் மறைந்து இருளும் பகலும் கலந்திடும் இன்பமான அந்திநேரம். பங்களாவாசல் தோட்டத்து முன் வரிசையில் வானையளாவி நின்ற கொன்றை மரங்கள், இலை தெரியாதவாறு புஷ்பக் கொத்துக்களைத் தாங்கி நின்று கொண்டிருந்த பூஞ்செடிகளின் காட்சி மிக்க ரம்மியமாகத்தானிருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை பசுமை பாய்விரித்து இயற்கையன்னை பூமிக்குச் செய்திருந்த அழகையும் சந்திராவால் அப்போதிருந்த மனநிலையில் அனுபவிக்க முடியவில்லை.

கண்களுக்கு எட்டாத தூரத்தில் தனக்காக விதிக்கப்பட்டிருந்த வாழ்க்கையின் முடிவை எண்ணிக் கொண்டு சோகத்தின் பிம்பமாகக் கைப்பிடிச் சுவர்ப் பக்கத்திலிருந்த பெருந்தூண் ஒன்றில் சாய்ந்து



கொண்டிருந்தாள்.

இடையிலே அவள் உடுத்தியிருந்த விலையுயர்ந்த புடவையையும், மேனியை அலங்கரித்துக் கொண்டிருந்த நகைகளையும், கூந்தலின் மீதிருந்த பூக்களின் சுமையையும் எல்லாவற்றையும் விட அவள் கழுத்திலே இருந்த மஞ்சள் நிற கயிற்றையும் பார்த்த அளவிலேயே அவள் ஜகந்நாதனின் மனைவியாகி விட்டாள் என்பது விளங்கிவிடும்.

விவாகம் நாகராஜய்யர் வீட்டிலே நடந்தது. கல்யாணமான ஐந்தாவது நாள், சந்தடியிலும் கல்யாண அமர்க்களத்திலும் தனது முழு நிலைமையைச் சற்று மறந்திருந்த சந்திரா பெற்றோர்கள் தன்னைப் புருஷன் வீட்டிலேயே இருக்கும்படி தனியாக விட்டுச் சென்ற அன்று தான் தனது வாழ்க்கையில் வரவிருக்கும் புது மாறுதல்களை நினைத்துத் திகைப்புடன் கலங்கிக் கொண்டிருந்தாள்.

நான்கு நாட்களுக்கு முன்பு அவள் சுதந்திரமுள்ள ஒரு பறவைபோல இருந்தாள். இன்று அவள் ஜகந்நாதனின் மனைவி! மெல்லிய தன் விரல்களால் கழுத்தைத் தொட்டு மஞ்சள் கயிற்றைப் பார்த்துக் கொண்டதும் அவள் நெஞ்சைத் துக்கம் பலமாக அழுத்தியது.

சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்த அவள் தன் பின்னே காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் ஜகந்நாதன் பின்னால் வந்து நிற்பதைக் கண்டு வெலவெலத்துப் போனாள். அவளது நெஞ்சம் பயத்தினால் வேகமாக அடித்துக் கொண்டது.

ஆசையுடன் கணவனது வரவை எதிர்பார்க்க வேண்டியது போக கலங்கிய உள்ளத்துடனும் திகிலுடனும் அவனது வரவை எதிர்நோக்குவது விசித்திரமானதுதான்!

பக்கத்திலே வந்து விட்ட ஜகந்நாதன் அவளை ஆதரவுடன் சற்று நேரம் மௌனமாகக் கவனித்துக் கொண்டு நின்று பார்த்தான். பிறகு சற்று அருகில் நெருங்கி அன்பு ததும்பும் குரலில், ''சந்திரா, எத்தனை நாழிதான் இங்கேயே நின்று கொண்டிருக்கப் போகிறாய் உள்ளே வா!'' என்று அழைத்தான்.

''வருகிறேன், நீங்கள் போங்கள்'' என்று வெறுப்புடன் அவன் பக்கமே பாராது மொழிந்தாள் சந்திரா.

''வானத்தையே பார்த்துக் கொண்டு நிற்க சந்திரன் கூட இல்லையே! இருட்டிலே பைத்தியம் போல் நின்று கொண்டிருக்கிறாயே?'' என்று கடிந்த வண்ணம் அவளது தோள்களின் மீது தனது கரங்களை வைத்துக் கொண்டான் ஜகந்நாதன்.

சந்திரா ஒரு துள்ளலில் தன்னை விடுவித்துக் கொண்டதைக் கண்ட அவன் மெல்லச் சிரித்த வண்ணம் ''என் கை பட்டால் உன்மேனி கருகிவிடுமோ?'' எனக் கொஞ்சலாகக் கேட்டான்.

''உங்கள் பாபக் கரங்களால் தீண்டினால் கருகித் தான் போகும்!'' எனக் கடுமையாகப் பேசிவிட்டு சினம் தாங்காத அவள் விர்ரென்று பக்கத்திலுள்ள ஹாலுக்குள் நுழைந்தாள்.

மின்சார வெளிச்சத்தில், கோபமே உருவாக சோபா ஒன்றின் மீது உட்கார்ந்த சந்திரா தன்னைப் பின் தொடர்ந்த ஜகந்நாதனின் முகத்தைக் கவனித்தாள்.

ரத்தமென அவன் முகம் சிவந்ததிலிருந்து அவன் கோபத்தின் அளவை உணர்ந்து கொண்டாள். எதிரே வந்து நின்ற அவன், ''சந்திரா, உனக்கு என் குணம் எப்படிப்பட்டதென்று இன்னும் தெரியாது. அதிகப் பிரசங்கித்தனமாக யாரும் என்னிடம் இதுவரை பேசி நான் கேட்டதில்லை, தெரியுமா?'' என்று உறுமினான்.

''மனைவியென்றால் உங்கள் வீட்டு அடிமை என்று நினைக்க வேண்டாம். எனக்குப் பேச்சுரிமை உண்டு. உங்கள் குணத்தை நான் நன்றாக அறிவேன்'' என்று பதிலுக்கு பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னாள் சந்திரா.

அவள் கோபத்துடன் பேசும் பொழுது புருவங்களை நெரிக்கும் பாவனை அவளுக்கு அழகை மேலும் அதிகப்படுத்துவது போல ஜகந்நாதனுக்குத் தோன்றியது.

''என்னைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்று சற்று எரிச்சலுடன் கேட்டான்.

''தெரியாதது என்ன? உங்கள் குணம் ஊர் முழுவதும் வெட்ட வெளிச்சமாயிருக்கிறதே! குடிகாரன், ஸ்திரீ லோலன், வெறியன், என் போன்ற ஏழைப் பெண்களைத் தன் பணத் திமிறினால் விலைக்கு வாங்கி விட்டதாக மமதை கொள்ளும் மூர்க்கன்'' என துச்சமாக



வார்த்தைகளைப் பொழிந்த அவள் உதடுகள் துடித்தன.

''நீ சொன்னபடி நான் மிகவும் கெட்டவனாக இருக்கக்கூடும். ஆனால், நான் ஒரு பெண் மீது உண்மையாக காதல் கொள்ளக் கூடாதா, என்ன?'' என்று சிரமத்துடன் கோபத்தை அடக்கிக் கொண்டு சாந்தமாகவே கேட்டான் ஜகந்நாதன்.

வெருண்டெழுந்த சந்திரா, ''காதல்! காதல்! அந்தப் புனிதமான வார்த்தைகளை உங்கள் வாயினால் உச்சரிக்காதீர்கள். மிருக உணர்ச்சிகளுக்கே வாழ்க்கையைக் கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார் என நினைக்கும் கயவர் நீர். உம் மனத்தில் காதல் ஏற்படுவது நம்பக்கூடிய விஷயமா? இதுமாதிரி எத்தனை பெண்களிடம் நீர் காதல், காதல் எனக் கூறி அவர்களை ஏமாற்றியிருக்கிறீரோ?'' என ஆத்திரமாகக் கேட்டாள்.

ஜகந்நாதனுக்கு கோபம் தாங்க முடியவில்லை.

''கடந்துபோன என் வாழ்க்கையைப் பற்றி உன்னுடன் நான் தர்க்கிக்க தயாராயில்லை. இதுவரை நான் ஒரு ஸ்திரீயையும் காதலித்ததில்லை. உன்னை நான் மதித்து கல்யாணம் செய்து கொண்டதே நான் உன்னை மனசார நேசிக்கிறேன் என்பதற்கு அறிகுறி. உனக்கு அது விளங்கவில்லை என்றால் நான் என்ன செய்வேன்'' எனப் பல்லைக் கடித்தான்.

''பூ எனக்கா விளங்கவில்லை. கல்யாணம் என்ற பந்தத்தில் அன்றி என் உறவை உங்களால் அடைய முடியாது என்பது தெரிந்து என்னை மணந்து கொள்ளத் துணிந்தீர்கள். எனக்குத் தெரியும். உங்கள் பணத்தினாலும் செல்வாக்கினாலும் அன்றி என்னிடம் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையில் வெற்றி கொண்டு விட்டீர்கள். தோல்வியடைந்தவள் நான்'' என்று ஆக்ரோஷத்துடன் பேசினாள் சந்திரா.

''எப்படி வேணுமோ இருக்கட்டும். என் பணத்தின் உதவியாலோ அல்லது விதியின் வலிமையாலோ! நாம் இருவரும் கணவன் மனைவியென ஆகி விட்டோம். இது மறுக்க முடியாத உண்மை. நமது வாழ்வின் முதல் நாள் இது. வேறு ஏதாவது மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயம் பேசலாம், சந்திரா'' என சாந்தமும் அன்பும் ததும்பக் கூறியவன் அவளது முகவாய்க் கட்டையை

நிமிர்த்திக் கேட்டான்.

''எனக்கு மகிழ்ச்சி என்பது இனி என்ன இருக்கிறது? என் மீது பழி ஏற்படும்படி சூழ்ச்சி செய்து எனது கௌரவத்தை நாசமாக்கி, மனத்திலே நான் கொண்டிருந்த இலட்சிய இன்பக் கோட்டையைத் தகர்த்து என் இதயத்தை ஒடித்து விட்டீர்கள். ஒன்று கேட்கிறேன், நான் உங்களை என்ன செய்தேன்? ஏழைப்பெண். வாழ்க்கையிலே முன்னேறப் பாடுபட்டுக் கொண்டிருந்த ஒரு அபலை, என் வாழ்வின் இன்பத்திலே மண்ணை அள்ளிப் போடத் தாங்கள் ஏன் முற்பட வேண்டும்?'' என உணர்ச்சிப் பெருக்கால் உரத்துப் பேசியவள் மேலே வார்த்தைகள் வராது விம்மினாள்.

''உன்மேல் கொண்ட கரை காணாக் காதலால் நான் பித்தனாகி விட்டேன் சந்திரா! அழாதே!'' என பச்சாதாபத்துடன் அவளைத் தேற்ற முயன்றான் அவன்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட சந்திரா திடமான குரலில், ''உங்கள் பணத்தினாலும், அந்தஸ்தினாலும், அதிகாரத்தினாலும், சூழ்ச்சியினாலும், என் உரிமையை விலைக்கு வாங்கி விட்டீர்கள். ஆனால் என் உள்ளத்தை வாங்கவில்லை. உங்களுக்கு இடமளிக்க என் இதயம் மறுக்கிறது. ஆனால், அதனால் என்ன உங்களுக்கு வேண்டியது இந்த உடல்தானே? எடுத்துக் கொள்ளுங்கள்'' எனத் தனது கரங்கள் இரண்டையும் நீட்டினாள்.

தீயை மிதித்தவன் போல் ஜகந்நாதன் இரண்டடி பின்னால் நகர்ந்து நின்றான்.

''சந்திரா! உன் அன்பை வேண்டுகிறேனே ஒழிய உன் உடலையல்ல. முன்பிருந்த ஜகந்நாதன் அல்ல நான்! இன்று வேறு ஜகந்நாதனாக மாறிவிட்டேன்!'' எனத் தணிவாகச் சொன்ன அவன் சந்திராவின் பதிலை எதிர்பாராமலே வெளியே சென்று விட்டான்.

தனியாக விடப்பட்ட சந்திராவுக்கு இவ்வளவு நேரமும் இருந்த தைரியம் திடீரென்று அகன்றது. கதவை நன்றாகத் தாளிட்டுக் கொண்டு தரைமீது படுத்தவள் வாய்விட்டு விம்மி அழுது கொண்டிருந்தாள்.

# 17

கோமதி வித்தியாலய உபாத்தியாயினிகள் அறையில் அன்று பகல் என்றும் போல் கலகலப்பாகத்தான் இருந்தது. ''அதிர்ஷ்டம் என்றால் அப்படியல்லவா வர வேணும்? மல்லித்தோட்டத்திற்கு பெரிய யோகம் அல்லவா அடிக்கிறது? கொஞ்ச நாட்களுக்கு முன் முதலியார் வீட்டுக் கல்யாணம் ஊர் இரண்டுபட்டது. சரபோஜி கெமிகல் கம்பெனி முதலாளி வீட்டுப் பிள்ளையின் கல்யாணமோ ஊரையே பறக்கடித்து விட்டது. சந்திரா கெட்டிக்காரிதான். தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டாளே!'' என வியப்புடன் ஆரம்பித்தாள் கனகவல்லி.

''கல்யாணம் பண்ணிக் கொள்ளும் வகையைச் சேர்ந்தவன் ஜகந்நாதன் என்று நான் நினைக்கவேயில்லை! பரவாயில்லை; சந்திரா அதிர்ஷ்டக்காரிதான். ஒன்று பார்த்தீர்களா! கோமதி வித்தியாலயத்திற்கு வரும் புது உபாத்தியாயினிகளுக்கு யோகம் திடீரென்று அடிக்கிறது!'' என்று ஒருத்தி கூறியதைக் கேட்ட யாவரும் சிரித்தனர்.

''அவனைச் சரியாகக் கைக்குள் போட்டுக் கொண்டதனால் தான் பெருச்சாளியைக்கூட அவள் லட்சியம் பண்ணாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட்டாள்'' என்று மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சர்யப்பட்டாள் சாரதா.

''உலகம் முட்டாள் தனமானது என்பதில் ஆட்சேபணை என்ன? ஜகந்நாதனும் சந்திராவும் பங்களாவில் தனிமையாக இருந்தார்கள் என்று வேலைக்காரன் சொன்னதும், பல பல கதைகள் அதனிலிருந்து எழுந்தன. அவர்கள் பல நாட்கள் தொடர்பு கொண்டவர்கள் என்று பேசிச் சிரித்தார்கள் எல்லோரும். ஆனால், இன்று அவள் அவனுடைய மனைவியாகி விட்டதும் அந்தக் கதைகள் சுவாரஸ்யமற்றதாய் விட்டன. ஏன், மறைந்தே விட்டன! தப்புகள் எத்தனை செய்தாலும் ஒரு ஸ்திரீ கடைசியில் விவாகம் என்னும் போர்வைக்குள் மறைந்து கொண்டுவிட்டால் சமூகம் அதைப் பற்றி மறந்து விடுவது விந்தையல்லவா?'' என்று பிரசங்கித்துவிட்டுப் பெருமூச்செறிந்தாள் காமாக்ஷி.

''கேட்டாயா கதையை? அவள் சித்தி கோவிலில் நேற்று என் பாட்டியிடம் பெருமையடித்துக் கொண்டிருந்தாளாம். ஜகந்நாதன் விதவிதமான புடவைகளை வாங்கி கொண்டு வந்து கூடமெல்லாம் பரப்பிவிட்டானாம். அந்த அம்மாள் இப்படியே சம்மந்தி பெருமையைப்பற்றி மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருந்தாளாம்'' என்று கூறி விட்டுச் சிரிக்க முயற்சித்தாள் ஜானகி.

''அது கிடக்கட்டும், சந்திராவுக்குக் கொடுத்த அந்த ஸ்தானம் காலியாயிருக்கிறதே. பெருச்சாளி அதில் இனி யாரைப் போடுமோ, தெரியவில்லையே! சந்திரா இருந்த இடத்தில் இருந்தாலாவது அவளுக்கு அடித்த யோகம் நம் யாருக்காவது ஒருத்திக்கு வரட்டுமே?'' என்று சாரதா கண் சிமிட்டினாள்.

''எங்கள் பக்கத்து வீடு ரொம்ப நாளாகக் காலியாகக் கிடந்தது. அதில் பேய் வந்து நடமாடுவதாக வதந்தியொன்றினால் யாரும் குடி வந்ததில்லையல்லவா? அதில் தைரியமாக யாரோ முந்தாநாள் குடி வந்துவிட்டார்கள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது'' என்று ஆரம்பித்த ஜெயலக்ஷ்மியின் வாயை எல்லோரும் ஆவலுடன் பார்த்தனர்.

''ஊருக்கு புதிது போல இருக்கு! விஷயம் தெரிந்தால் அவர்கள் காலி செய்து விடுவார்கள். அது கிடக்கட்டும், அவர்கள் யார்?'' என்று கவலையுடன் வினவினாள்.

''குழந்தைகள் தாய்மார்கள் போஷணை நிர்வாகம், என இருக்கிறதே இவ்வூரில், அதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் மருத்துவ ஸ்திரீயும் அவள் குடும்பமும்தான் புதிதாக வந்தவர்கள். வந்திருக்கும் பெண்மணிக்கு வயது முப்பதிருக்கும். மங்களூர் ஸ்திரீ. சிவப்பாக இரட்டை நாடியாயிருக்கிறாள். அவள் புருஷன் ஒருத்தன் வேலையற்ற தடியன்; மூன்று குழந்தைகள், சதா சத்தம் அவர்கள் வீட்டில். எனக்குத்தான் வேதனை சகிக்க முடியவில்லை!'' எனச் சலிப்பாகக் கூறி முடித்தாள் ஜெயலக்ஷ்மி.

''முன்பு இருந்தாளே ஒரு மருத்துவ ஸ்திரீ! ஏழைக் குழந்தைகளுக்கு என்று அளிக்கப்பட்ட பாலை வாங்கித் தன் குழந்தைகளுக்கும் கொடுத்து தானும் குடித்துவிட்டு நூறு ஏழைக் குழந்தைகளுக்குப் பால் வார்த்ததாகக் கணக்கெழுதி விடுவாள். ஒருவருக்கும் சமயத்தில் மருத்துவ உதவி பண்ணின்றிச் செய்யமாட்டாள்; அவள் பண்ணிய அட்டகாசம் சகிக்காமல் நாங்கள் எல்லோரும் கூடி ஒரு விண்ணப்பம் அனுப்பி அவளை வேறு ஊருக்கு மாற்றச் செய்தோம். பிறகு இவ்வளவு நாட்கள் கழித்துத்தான் நீ சொல்லும் இவள் வந்திருக்கிறாள். இவள் எப்படியோ பார்க்கலாம்'' என்றாள் சாரதா.

இவ்வாறு பற்பல விஷயங்கள் பேசி முடிக்கப்படுவதற்குள் வகுப்புத் துவங்கும் மணியடிக்கவே எல்லோரும் தத்தம் வகுப்புகளுக்குச் சென்றனர்.



# 18

விடிந்ததும் அறைக் கதவைத் திறந்து கொண்டு முன் ஹால் பக்கம் வந்த சந்திரா, அங்கிருந்த நீண்டதொரு சோபாவின்மீது ஜகந்நாதன் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு திகைப்படைந்தாள். 'இரவு முழுவதும் இந்தச் சிறிய சோபாவின்மீதா கஷ்டப்பட்டு நித்திரை செய்திருக்கிறார்?' என எண்ணியவள் சந்தடி செய்யாது கீழே சென்று ஸ்நானம் செய்துவிட்டு வந்தாள்.

ஸ்நானம் செய்ததும் தலை காய வைக்கும் நிமித்தம் கூந்தலை அவிழ்த்துவிட்ட வண்ணம் நின்று கொண்டிருந்த சந்திரா ஹாலின் ஜன்னல் வழியே வெளியே தெரியும் தோட்டத்தின் மீது திருஷ்டியைத் திருப்பினாள். இளஞ் சூரியனின் பொற்கதிர்கள் பளீரென்று ஜன்னல் வழியே உட்புறம் வீசிக் கொண்டிருந்தன.

''விடிஞ்சு போச்சா? அப்பாடா?'' எனத் தன்னையும் அறியாது கூறிய வண்ணம் எழுந்திருந்த ஜகந்நாதன் கண் திறந்து முதன் முதல் பார்த்த வஸ்து காற்றிலசைந்தாடும் கூந்தல் பறக்க சௌந்தர்ய தேவதைபோல நின்ற சந்திராதான்! முதல் நாள் இரவு கேட்ட அவளுடைய கொடுஞ்சொற்கள் சட்டென அவன் கவனத்திற்கு திரும்பி வந்தன. சோபாவிலிருந்து எழுந்தவன் அவளிடம் ஒரு

வார்த்தை கூடப் பேசாது கீழே சென்று விட்டான்.

அவன் அங்கிருந்து சென்றதைச் சந்திராவும் லட்சியம் செய்யவில்லை. அவள் அப்போது ஜகந்நாதனைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். உண்மையாகவே அவன் அவளுடைய அன்பை வேண்டுகிறானா? அல்லது இப்படியெல்லாம் பேசி வசப்படுத்த ஏதாவது சூழ்ச்சி செய்கிறானா? உண்மையிலேயே அவன் அவளைக் காதலித்தாலும் அவள் அவனை விரும்பவில்லை. அவள் வாழ்க்கையில் கொண்ட இலட்சியங்கள் எத்தகையவை! அவளது லட்சியக் கணவன், ஸ்திரீயைத் தெய்வமெனப் பாராட்டி அவளது சம உரிமையைப் போற்றி, அவளுடைய அன்பைப் பெற முயற்சிக்கும் உத்தம புருஷன்! ஏகபத்தினி விரதம் கொண்டவன்; உயர்ந்த இலட்சியங்களுக்கே உயிரை வைத்திருக்கும் தியாகி! ஆனால் அவளுக்கு விதி கொடுத்த புருஷன் எப்படிப்பட்டவன்? பெண் என்பவள் புருஷர்களின் அடிமையென எண்ணும் மனப்பான்மை கொண்டவன்; கெட்ட குணங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடமானதொரு வஞ்சகன்! இதையெல்லாம் நினைத்துப் பார்த்த அவளுக்குத் தன் கொடுமையான விதியின் மேல் கோபமும் துக்கமும் சேர்ந்து வந்தன.

ஜகந்நாதனை அவளுக்குப் பிடித்ததோ பிடிக்கவில்லையோ வாழ்வு பூராவும் அவள் அவனுடன் மன்றாடக் கடமைப் பட்டிருக்கிறாள்! அவனைப் பிடிக்கவில்லையென்று பிறந்தகம் போயிருக்கலாமென்றால் அவளை ஏற்றுக் கொள்பவர்கள் அங்கே ஒருவரும் இல்லை.

இந்தச் சிந்தனையினால் அவள் கண்களிலிருந்து அவளையும் அறியாது கண்ணீர் பொங்கிக் கன்னங்களின் மீது தாரை தாரையாக வழிந்தது.

''சந்திரா! காப்பி சாப்பிட வரவில்லையா, அம்மா'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த காமாக்ஷியம்மாள், சந்திராவின் முகத்தை நோக்கினாள். முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் அவள் கன்னங்களில் பிரகாசிப்பதைக் கண்டு காமாக்ஷியம்மாளின் உள்ளம் துணுக்குற்றது.

'சந்திரா, இங்கே வா' என அன்பொழுக அழைத்தாள் மாமியார்.



சந்திரா கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு மாமியாரின் அருகில் சென்றாள்.

''இப்படி உட்கார் சொல்றேன்'' என அருமையாகத் தன் அருகில் அவளை அமரச் செய்த காமாக்ஷியம்மாள் ''ஏம்மா அழறே அவன் ஏதாவது சொன்னானா?'' என்று கேட்டுக்கொண்டே அவளது நெற்றியை வருடினாள்.

சந்திராவுக்குப் பதில் பேச சட்டென்று தோன்றவில்லை. அதற்கு பதில் கண்ணீர் வெள்ளம் மடை திறந்தாற்போல் பெருகி ஓடியது. யாரிடமாவது சொல்லி அழ வேண்டுமென நினைத்திருந்த அவளது ஏக்கம் நிறைந்த உள்ளத்தில் காமாக்ஷியம்மாளின் அன்பான மொழிகள் பாதிக்கவே அடுத்த கணம் தனது உண்மை மனநிலையை எடுத்து மாமியாரிடம் கூறி ஆறுதல் மொழி பெறலாமென்று நினைத்தாள். ஆனால் மேலே தொடர்ந்தாற்போல் காமாக்ஷியம்மாள் பேசிய வார்த்தைகளைக் கேட்டு சந்திரா மன உணர்ச்சிகளை மனதிற்குள்ளேயே அடக்கிக்கொள்ள நேரிட்டது. ''ஜகந்நாதன் முரடன், அவன் அப்பாவைப்போல் சற்று முன்கோபம். ஏதாவது சொல்லுவான். அதையெல்லாம் நீ லட்சியம் பண்ணி அழுது கொண்டிருக்கக் கூடாது. நீ எவ்வளவோ சமத்துன்னு நினைச்சுண்டு இருக்கேன். அவன் கல்யாணம் பண்ணிண்டு குடியும் குடித்தனமுமாக இருக்க மாட்டானான்னு நான் இத்தனை நாள் பட்ட கஷ்டமும், வேண்டாத தெய்வமும் பாக்கியில்லை. என் பிரார்த்தனை வீணாகவில்லை. நாட்டுப் பெண்ணாக எனக்கு வந்த நீயும் மகாலக்ஷ்மிபோல் என் மனசிலே பால் வார்த்துட்டே! இனி எனக்குக் கவலைவிட்டது'' என்று தழுதழுத்த குரலில் பேசினாள் மாமியார்.

சந்திராவுக்குப் பதில் பேச முடியவில்லை. தம்பதிகளின் உண்மை நிலையை அறிந்தால் காமாக்ஷியம்மாளின் தூய உள்ளம் எத்தனை ஏமாற்றமடையும் என்று எண்ணிப் பார்த்த அவள் பச்சாதாபமடைந்தாள்.

''சந்திரா, அவன் எங்கே?'' என்று காமாக்ஷியம்மாள் பரிவுடன் கேட்ட வண்ணம் எழுந்திருந்தாள்.

''கீழே போயிருக்கிறார்'' என்று மெல்லப் பதிலளித்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள் சந்திரா.

"அவன் குளிச்சிட்டு வர நாழியாகும். சித்தே என்னோடு வா! உனக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள் இருக்கு" என்று மாமியார் கூறியதைக் கேட்ட சந்திரா பதில் பேசாது காமாக்ஷியம்மாளைப் பின் தொடர்ந்தாள்.

மாடியின் மூலையிலிருந்த விஸ்தாரமான ஒரு அறைக்குள் புகுந்த காமாக்ஷியம்மாள் மூலையிலிருந்த ஒரு இரும்புப் பெட்டியைத் திறந்தாள். கையிலே ஒரு சிறு வெல்வெட் பெட்டியை எடுத்து அதிலிருந்து நீலவொளி வீசிக் கொண்டிருந்த வைர மாலையொன்றை எடுத்து சந்திராவின் கழுத்தில் பூட்டினாள். "இந்த மாலை ஜகந்நாதனுக்கு வரப்போகிற பெண்டாட்டிக்குன்னு நான் ஆசையோடு செஞ்சு வெச்சது. மூணு மாலை பண்ணினேன். ஒண்ணு அலமேலுவுக்கு, ஒண்ணு சகுந்தலாவுக்கு, ஒண்ணு உனக்கு. சிலரைப் போல் நான் பெண், நாட்டுப் பெண் என்று வித்தியாசம் பார்க்க மாட்டேன். எனக்கு இரண்டு பேரும் சமம்தான்" என்று கூறி காமாக்ஷியம்மாள் தன் மருமகளின் அழகிய கழுத்தில் அது பூரிப்பதைக் கண்டு மகிழ்ந்தாள்.

சந்திரா மௌனமாக இருந்தாள். காமாக்ஷியம்மாளின் உதார குணம் அவள் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தது. "பொம்மனாட்டிகளான நமக்குப் பொறுமை கொஞ்சம் வேணும். நீ புத்திசாலிப் பெண். ஜகந்நாதன் கோபத்தில் முரட்டுத் தனமாக நடந்தாலும், அதையெல்லாம் பாராட்டாமல் சமத்தா நடக்கணும். உங்க மாமனார் குணம் உனக்குத் தெரியாது. முன் கோபக்காரர். சின்ன வயசிலே அவரோடு குடித்தனம் பண்ணறச்சே அப்பப்பா! எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கேன்! எனக்கு இன்னும் ஒரே ஒரு ஆசை தான் இருக்கு. ஜகந்நாதனுக்கு ஒரு பிள்ளை பிறந்து பார்த்துட்டுக் கண்களை மூடிண்டா போறும்" என்று உணர்ச்சியுடன் பேசினாள் காமாக்ஷியம்மாள். சந்திராவின் முகம் சற்று நாணத்தால் சிவந்தது.

"சரி... கீழே போய்க் காப்பியை எடுத்துண்டு வந்து அவனுக்குக் கொடு! வந்திருப்பான் இத்தனை நாழி" என உத்தரவிட்டாள்.

சந்திராவும் மாமியாரின் கட்டளையை நிறைவேற்ற வேகமாகக் கீழே இறங்கினாள்.

காப்பியை ஒரு டம்ளரில் எடுத்துக் கொண்டு அவள் ஹாலுக்குள்



நுழைந்த பொழுது ஜகந்நாதன் காலை ஸ்நானத்திற்குப் பிறகு பத்திரிகையொன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

'டக்' என பக்கத்தில் டம்ளர் வைக்கும் சப்தம் கேட்ட அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"அம்மா காப்பியை கொடுக்கச் . சொன்னார்" என்று வெடுவெடுத்துவிட்டு சந்திரா வேறு திக்கைப் பார்ப்பதைப் போல் நடித்தாள்.

"ஏது! உனக்கு என் மேல் இவ்வளவு கிருபை ஏற்பட்டதுன்னு நினைத்து ஆச்சரியப்பட்டேன்" என்று தாராளமாகச் சொன்னதைக் கேட்ட அவள் கோபத்துடன் "கிருபை ஒன்றும் திடீரென்று வந்து விடவில்லை. உங்கம்மாவின் வேண்டுகோளை நிராகரிக்க விரும்பவில்லை" எனச் சுடச் சுடப் பதிலளித்தாள்.

"சந்திரா! ஒன்றே ஒன்று உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். நீயே சொல்லி விட்டாய். என் தாயார் நான் சந்தோஷமாகக் குடும்பம் நடத்தப் போவதாக எவ்வளவோ இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். நான் உன்னை மணந்து கொண்டதைப் பற்றி அவளுக்கு மிக்க சந்தோஷம். பாவம் அப்படியே அவள் நினைத்துக் கொண்டிருக்கட்டும். அவள் முன்னிலையில் மட்டுமாவது தயவு செய்து என்னிடம் அலட்சியமாக நடந்து கொள்ளாதே! நமது மனவேற்றுமை வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். நமக்குள்ளேயே ரகசியமாயிருக்கட்டும். உனக்கு ஒருவிதத் தீங்கும் நேராது. பயப்பட வேண்டாம்" என்று கூறியவன் மறுபடியும் பேப்பரைப் படிக்க ஆரம்பித்தான்.

## 19

"கடைசியில் நீங்கள் எப்பத்தான் என் பிறந்தாத்துக்குப் புறப்பட போறேளோ, தெரியவில்லை! அழைச்சுண்டு போறேன்னு தாராளமாய்ச் சொல்லிவிட்டு நிறுத்திப்பிட்டேள்" என்று சொல்லம்பு

ஒன்றை கணவன் மீது விடுத்தாள் அன்று அலமேலு.

''என்ன செய்யட்டும்? அழைச்சுண்டு போகணும்னு நினைச்சபோது ஜகந்நாதன் கல்யாணத் தடபுடல் வந்துடுத்து'' என்று எரிச்சலாகக் கூறினான் பாலகிருஷ்ணன்.

''என் அதிர்ஷ்டத்தைச் சொல்லணுமே ஒழிய உங்களைக் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்? உங்கள் தம்பி பெண்டாட்டியைப் போல எல்லோரும் பிறக்கச்சே அதிர்ஷ்டக்காரியாகப் பிறக்கிறாளா?'' என்றாள் அலமேலு.

''இனி பெரிய புலம்பல்தான்'' என உணர்ந்த பாலகிருஷ்ணன், ''சந்திராவைப் பெரிய அதிர்ஷ்டக்காரின்னு சொல்லமாட்டேன். என் தம்பியை வேணுமானால் அதிர்ஷ்டக்காரன்னு சொல்வேன். இவ்வளவு நாள் பிரம்மச்சாரியாக இருந்து விட்டுக் கடைசியிலே அழகான படிச்ச பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொண்டானே, ரொம்பக் கொடுத்துவச்சவன் அவன்!'' என்றான்.

அலமேலுவுக்குத் தன் கணவன் சந்திராவை உயர்த்திப் பேசியது பிடிக்கவில்லை. ஏற்கனவே அவள் மீது துவேஷம். இப்போது தனக்குச் சமமாக அவள் ஓரகத்தியாக மாறிவிட்டது, அவளால் பொறுக்கவே முடியவில்லை.

''உங்களுக்கு அவளைக் கண்டால் என்னிக்குமே பிடிக்கும். எனக்குத் தெரியும் புருஷர்கள் எல்லாருமே இப்படித்தான்! தனது பெண்டாட்டியை விடப் பிறத்தியார் மனைவியின் அழகும் சாதுர்யமும்தான் அவர்கள் கண்ணுக்குப் புலப்படும்'' என்று கோபமாக அலமேலு கூறினதைக் கேட்ட பாலகிருஷ்ணன், ''நன்னாயிருக்கு நீ பேசுகிறது! ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் குறுகிய புத்தி. ஒவ்வொருத்தியும் தன்னைவிட அழகியும், புத்திசாலியும் இல்லை என நினைத்துக் கொள்கிறது. எதற்கும் சந்தேகம்'' என்று வெறுப்பாகச் சொன்னான்.

''உங்கம்மாவுக்கு ஆனாலும் ஓரவஞ்சனை ஜாஸ்தி. சந்திரா நேற்று வந்த நாட்டுப் பெண். தலையைப் பின்னறதும், அவளை அலங்கரிப்பதும் அப்பப்பா! என்ன உபசாரம் நடக்கிறது தெரியுமா? எனக்கு வைர மாலை ஒண்ணு கல்யாணத்துக்குப் போட்டாளே, அதையும் இப்போ சந்திராவுக்குக் கொடுத்திருக்கிற மாலையையும்



ஒத்திட்டுப் பாருங்கோ. நான் என்ன உங்கம்மா முழியைப் பிடுங்கி விட்டேனா? ஒண்ணு சொல்றேன்! சந்திராவைப் போல் உங்கம்மாவுக்கு சலாம் போட்டுண்டு இருக்க எனக்குப் பிடிக்காது'' என மனக் குறையுடன் பொழிந்தாள் அலமேலு.

பாலகிருஷ்ணன் மௌனமாக மனைவியின் பேச்சுக்களைக் காதில் வாங்கிக் கொண்டிருந்தான். அவனது மூளை தம்பியின் அதிர்ஷ்டத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தது.

பொழுது விடிந்ததும் சந்திரா எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு, குங்குமம் திகழும் நெற்றியுடன் அவள் மாமியாருக்குப் புஷ்பங்கள் பறித்துக் கொடுப்பாள். பிறகு சமையற்காரச் சேஷியம்மாளுக்குக் கூடமாட ஒத்தாசை செய்து கொண்டிருப்பாள். ஜகந்நாதன் கூப்பிடும் சமயங்களில் கைவேலை எதுவானாலும் போட்டுவிட்டுப் போய்க் கேட்கும் அழகுதான் எல்லாவற்றையும் விட மிகுதியாகத் தோன்றியது பாலகிருஷ்ணனுக்கு. 'அலமேலு, அலமேலு!' என்று தொண்டை வறண்டு போகும் வரைக்கும் கத்தினாலும் எருமை மாட்டைப் போன்று அசைந்து கொடுக்காத அலட்சியம் அவன் மனைவிக்கு உண்டு! எல்லாவிதத்திலும் தன்னைவிடச் சலுகையடைந்த தம்பி மீது பாலகிருஷ்ணன் பொறாமை கொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

''பாருங்கள், உங்கம்மாவை! நேத்திக்கி வள்ளுரான் கிட்ட இரண்டு புடவை தறி போடச் சொல்லி வாங்கினார். அதிலே எனக்கு மேகவர்ணக் கலர்தான் பிடித்திருந்தது. அதைச் சந்திராவுக்குக் கொடுத்து விட்டு எனக்கு ஆத்திப் பழுப்பைக் கொடுத்தார். எனக்கு இந்தப் புடவையெல்லாம் அதிசயமில்லை. நினைச்சா எங்கப்பா நூறு வாங்கித் தருவார். அவளுக்குந்தான் கிடைக்காது. பிறந்தாத்திலே விதியத்தவள்!'' என்று உறுமினாள் அலமேலு.

''ஒண்ணு சொல்றேன் கேளு அம்மு! சந்திரா ஏழையோ பணக்காரியோ, இப்போது அவள் உன் ஓரகத்தி. அவளிடம் உனக்குப் பேசப் பிடிக்காவிட்டால் தூர இருந்துவிடு. சண்டை கிண்டை போட்டு ரகளை பண்ணினால் அப்பாவுக்குப் பிடிக்காது. அது தான் எனக்குச் சொல்லத் தெரியும்'' என்று பாலகிருஷ்ணன் முடிப்பதற்குள், ''என்னைச் சண்டைக்காரின்னு நினைச்சுட்டேளா?'' என

ஆத்திரமாகக் கேட்டாள் அலமேலு.

''உன்னோடு பேச இரும்பு வாய்தான் படைக்கணும். தூ! கொஞ்சம் கூட மனுஷனை அறிந்து கொள்ளும் சக்தி இல்லாத மிருகம்'' என வெறுப்புடன் பகர்ந்த பாலகிருஷ்ணன் வெளியே கிளம்பினான்.

அதேசமயம் பங்களாவின் மறுபுறமிருந்து ஜகந்நாதன் வாசஸ்தலத்தின் ஹாலில் கண்ணாடி எதிரில் சந்திரா தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கையில் கணவன் ஆதரவு அவளுக்கு இல்லையென்று ஏற்படுத்திய விதி அவளுக்கு செல்வத்தின் சுகங்களை அளித்திருந்தது. வலுவிலே வந்திருக்கும் ராஜயோகத்தை அவள் ஏன் அனுபவிக்க மறுக்க வேண்டும்!

வாரி முடித்திருந்த கூந்தலைச் சீர்படுத்திக் கொண்டு நின்ற அவளை, ''மன்னி! மன்னி!'' எனக் கூவி அழைத்துக் கொண்டே சகுந்தலா உள்ளே ஓடி வந்தாள்.

''என்னம்மா வேணும்?'' எனச் சந்திரா பரிவுடன் கேட்டாள்.

''இந்த 'ஆல்ப'த்தைப் பார்த்தது இல்லையே நீங்கள். அண்ணா பீரோவில் கிடந்தது. இதிலே விதம் விதமான போட்டோக்கள் இருக்கு'' என இரைக்க இரைக்கச் சொல்லி முடித்த அவள் அங்கிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்தாள்.

சந்திராவுக்கு என்னவோ அதைப் பார்க்க வேணுமென ஆசை தோன்றவே சகுந்தலாவின் பக்கமாய் உட்கார்ந்து அந்தப் போட்டோக்கள் நிறைந்த புத்தகத்தைப் புரட்டிக் கவனித்தாள். ஜகந்நாதன் கலாசாலையில் படித்த பொழுது எடுத்த படங்கள் பல. விதவிதமான உடைகளில், பலரகத் தோற்றங்களில் இருந்தான் அவன். சில ஸ்திரீகளுடைய படங்களும் அதிலிருந்தன.

''இவாள்ளாம் அண்ணாவோடு கூடப்படிச்சவளாம்!'' என வியாக்கியானம் செய்தாள் சகுந்தலா.

சந்திரா ஒரு அழகிய புன்னகையுடன் மேலே புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்தாள். ஜகந்நாதன் ஒரு ஐரோப்பியப் பெண்ணுடன் கைகோர்த்துக் கொண்டு எடுத்திருந்த ஒரு படத்தைக் கண்டதும் திகைத்துப் போய் அங்கேயே கண் கொட்டாது நோக்கினாள்.



''இதுதான் மன்னி ரொம்ப விசேஷமானது. அண்ணாவோட இருக்காளே அவள் பேரு டல்கியோ என்னவோவாம். அமெரிக்காவிலே அண்ணாவோட சிநேகிதமா இருந்தாளாம். தன்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு அண்ணாவைத் தொந்தரவு படுத்தினாளாம். அண்ணா மட்டும் அவளைக் கல்யாணம் பண்ணிண்டு இருந்தா அம்மாவோட ஆசாரமெல்லாம் காத்திலே பறக்கணும்!'' என்று சிரித்துக் கொண்டே சகுந்தலா கூறிமுடிப்பதற்குள் சந்தடி செய்யாது உள்ளே வந்த ஜகந்நாதன் கோபத்துடன், ''சக்கு! போ வெளியே'' என கர்ஜித்தான்.

சகுந்தலாவின் முகம் பயத்தினால் களை இழந்து விட்டது. ''இல்லை...''எனத் தடுமாறினாள் பீதியுடன்.

''இல்லையாவது நொள்ளையாவது! அதிகப் பிரசங்கி! உன்னை யார் அந்தப் புஸ்தகத்தை எடுத்து வரச் சொன்னது? போ, கீழே!'' என மிகவும் ரௌத்ராகாரமாய் அண்ணன் இரைந்ததைக் கேட்ட சகுந்தலா ஓவென அழுது விட்டாள்.

அதுவரைக்கும் பேசாது நின்று கொண்டிருந்த சந்திராவுக்குச் சினம் தாங்க முடியவில்லை. ''உள்ளதைச் சொன்னால் உடம்பெரிவானேன்?'' என்று அவனைப் பார்த்து ஒரு பாணத்தைப் போட்டு, சகுந்தலாவை நெருங்கி அணைத்துக் கொண்டு, ''அவர் கிடக்கிறார் நீ அழாதே'' எனத் தேற்றினாள்.

சந்திரா கூறிய வார்த்தைகளால் கோபமடைந்த ஜகந்நாதன் ''நான் தான் அயோக்கியன் எனத் தெரிந்து கிடக்கிறதே அதைத் திரும்பத் திரும்பக் கூறுவதில் பயனில்லை'' என மொழிந்தான்.

சினத்தினால் சிவந்திருந்த அவன் முகத்தை உற்றுப் பார்த்த சந்திராவின் மனம் ஒரு நிமிஷம் பயத்தினால் நடுங்கியது. ஜகந்நாதன் சட்டெனக் குனிந்து, பிரித்து வைக்கப்பட்டிருந்த அந்த புஸ்தகத்தினின்று அந்தப் படத்தைக் கிழித்து எடுத்தான். ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்து அதைப் பற்ற வைத்தான். எப்படியாவது தப்பித்துக் கொள்ளச் சமயம் பார்த்துக் கொண்டிருந்த சகுந்தலா அப்போது சந்திராவின் பிடியினின்று திமிறிக் கொண்டு ஓடிவிட்டாள்.

'போட்டோவை வேண்டுமானால் நீ வைத்துக் கருக்கி

மறைக்கலாம். செய்த தப்புகளை மறைக்க முடியாதே'' என்று எகத்தாளமாகக் கேட்டாள் சந்திரா.

அது சமயம், ''நீங்க ரெண்டு பேரும் இன்னிக்கு ஆண்டிக்குன்று போகணுங்கறது மறந்து போச்சு. சுவாமி வேண்டுதலை. கல்யாணம் நிறைவேறினால் தம்பதிகள் சமேதராய் அபிஷேகம் பண்ணிவைக்கிறேன்னு வேண்டிக் கொண்டேன். இன்னிக்குப் போகணும்னு நேத்திக்கே சொல்லியிருந்தேனே, எங்கே சந்திரா?'' எனக் காமாக்ஷியம்மாள் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

''சந்திரா! புறப்படு, நாழியாச்சு... கார் ரெடியாயிருக்குன்னு சொல்ல வந்தவன் மறந்தே போய்விட்டேன்'' என இரைந்து சொன்னான் ஜகந்நாதன் அதுவரை எதுவும் நடக்காதது போன்று.

''இதோ வந்துவிட்டேன்!'' எனத் தேனினும் இனிய குரலில் சந்திரா பதிலளித்தாள்.

'சர்' எனக் கார் ஆண்டிக்குன்றின் பக்கம் ஓடிக் கொண்டிருந்தது. காரை ஓட்டிச் சென்ற ஜகந்நாதன், பக்கத்தில் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மனைவியை ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் கற்சிலை போல் காரை செலுத்திக் கொண்டு சென்றாலும் மென்மையான காற்றினூடே பறந்து முகத்தில் வந்து படியும் மல்லிகை மலரின் மணமும், அடிக்கொரு தடவை அவன் கை மீது படிந்து கொள்ளும் அவளது புடவையின் மென்மையும், ஒரு ஆனந்தத்தை அறிவுறுத்திக் கொண்டிருந்தன. ஜகந்நாதனுக்கு அருகில் சந்திரா உட்கார்ந்திருந்தாள். ஆனால், அவளுடைய மனம் அவனுக்கு எட்டாத தூரத்தில் அல்லவா இருந்தது!

நினைத்துப் பார்த்த ஜகந்நாதன் மிக்க வேதனையடைந்தவனாய் ''சந்திரா!'' எனத் தன்னையும் மீறிய அன்புடன் அழைத்தான். திரும்பிப் பார்க்காமல் சந்திரா, ''கார் ஜாக்கிரதை! எங்கேயாவது மோதிக் கொள்ளப் போகிறது!'' என இடங்கொடுக்காமல் பேசினாள்.

குன்றின் அடிவாரத்தில் ஜகந்நாதன் காரை நிறுத்தினான். இந்த விசித்திர தம்பதிகளை வரவேற்பது போன்று ஆலாட்சிமணி 'ஓம்! ஓம்!' என முழங்கிக் கொண்டிருந்தது.

# 20

அம்புஜத்திற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அன்று பொழுதுபோக்காகக் கையிலிருந்த கதைப் புத்தகமொன்றை படித்துக் கொண்டிருந்த அவளிடம் மாமியார் புவனேஸ்வரி வந்து, ''அம்புஜம் உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்கோ! முன் வீட்டில் உட்கார வச்சிருக்கிறேன்'' என்று சொன்னாள்.

''யாராக இருக்கக்கூடும்?'' என எண்ணி எழுந்து சென்ற அம்புஜம் முன் வீட்டுப்பக்கம் வந்தவள், தன்னை மறந்து மலைத்து நின்றுவிட்டாள். சர்வாலங்கார பூஷிதையாய் சந்திரா அங்கிருந்த ஆசனங்களில் ஒன்றின் மீது சாய்ந்து கொண்டு அவள் வரவிற்காகக் காத்திருந்தது அம்புஜத்தைப் பிரமிக்கச் செய்தது.

''இரு சந்திரா, அப்படியே! என்னைக் கிள்ளிவிட்டுக் கொண்டு பார்த்துச் சொல்கிறேன். இது நிஜந்தானா கனவா என்று?'' என வேடிக்கையாக அம்புஜம் தன் சிநேகிதியைப் பார்த்துச் சிரித்தாள்.

''நன்றாகக் கிள்ளிப் பார்த்துக்கொள். கனவல்ல என்பது தெரியும். அம்புஜம்! நீ கோபித்துக் கொள்வதில் பிரயோஜனமில்லை. வீட்டில் கிடக்கும் வேலைகளுக்கு நடுவில் வெளியே புறப்படுவது என்பது மிக்க கஷ்டமாயிருக்கிறது. வருகிறேன் என்று சொன்னோமே, ஒரு நாளாவது போய்ப் பார்க்காவிட்டால் நன்றாயிருக்காது என்று வந்தேன்'' என்று எடுத்த எடுப்பிலேயே சந்திரா சொல்லி முடித்தாள்.

''தனியாகவா வந்தே, அல்லது அவர் கூட வந்திருக்கிறாரா?'' என்று கண்ணைச்சிமிட்டிய வண்ணம் அம்புஜம் அவள் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

''அவர்தான் என்னை அழைத்து வந்தார்; இன்னும் இரண்டு மணி நேரங்கழித்துத் திரும்ப அழைத்துப்போவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்'' என்று சந்திரா சாதாரணமாகப் பகர்ந்தது

அம்புஜத்திற்கு வேடிக்கையாகத் தோன்றிற்று.

''இரண்டு மணி நேரம் உன்னைத் தனியா விட்டிருக்க அவருக்கு மனசு வந்ததே அதுவரை நான் பாக்கியசாலிதான்'' எனப் பரிகாசமாகக் கூறிவிட்டு, அம்புஜம் சந்திராவின் முகத்தைக் கூர்மையாக ஆராய்ந்தாள்.

சந்திராவின் மனவெழுச்சிகளை ஒரு நாளும் முகத்திலிருந்து அறிய முடியாது என்பது அம்புஜம் அறிந்திருந்த உண்மை. சலனமற்ற அவளது சாந்த முகத்தைப் பார்த்து ஏமாந்த அம்புஜம், ''சந்திரா ஒன்றே ஒன்று எனக்குச் சொல்ல வேண்டும். நீ அவருடன் சந்தோஷமாக இருக்கிறாயா?'' என்று சட்டெனக் கேட்டாள்.

''இதென்ன அசட்டுக் கேள்வி? என்னைப் பார்த்தால் எப்படித் தோன்றுகிறது?'' என மெல்லச் சிரித்துக் கொண்டே பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டாள்.

அவள் சிரித்துப் பேசினாள் எனினும், நெஞ்சில் கட்டுப்பட்டு நின்ற துக்கத்தின் சுமையைத் தாங்காத அவளது இதயம் குமுறிக் கொண்டிருந்தது. அன்று அவள் தன் சிநேகிதியை பார்க்க வந்ததன் முக்கிய நோக்கம், சில மாதங்களாக தன் உள்ளத்திலே புதைத்து வைத்திருந்த பெரும் துக்கச் சுமையை எடுத்துக் கூறி ஆறுதல் பெறுவதேயாகும். ஆனால், அம்புஜத்தைப் பார்த்த உடனே சந்திரா தன் மனத்தை மாற்றிக் கொண்டுவிட்டாள்.

அம்புஜம் மிகவும் அழகி என்றில்லாவிடினும் கவர்ச்சிகரமான தோற்றங்கொண்டவள் என்பது சந்திராவின் அபிப்பிராயம். அந்த அம்புஜம் சந்திராவின் கண்களுக்கு அன்று ஒரு தேவமங்கையைப் போல் எழிலுடன் தோன்றினாள்! அலாதியான ஒரு வனப்பு அவளைச் சூழ்ந்து நிற்பதை சந்திரா உணர்ந்தாள். யௌவனத்திற்கு அழகு செய்யும் அந்த சோபை அவளது இன்பமான இல்லற வாழ்வின் சாயை என உணர்ந்த சந்திரா, தன் மனத்திற்குள் தடை உத்தரவு பிறப்பித்துக் கொண்டாள். தனது பாழும் வாழ்க்கையைப் பற்றி சிநேகிதியிடம் சொல்லி அவள் மனதைப் புண்படுத்துவதில் பலன் என்ன? அம்புஜம் அறிந்து கொள்வதினால் சந்திராவின் நிலைமை எந்த விதத்தில் உயர்வை அடையப் போகின்றது? என்றும் பிறர் தயவை நாடாத அந்த கர்வ உணர்ச்சி சந்திராவின் நாக்கினின்று எழ இருந்த வார்த்தைகளைத்



தடுத்து விட்டது.

''உனது வெளித்தோற்றத்தைப் பார்த்தால் சந்தோஷமாக இருப்பவள் போல்தான் தெரிகிறது. மனதிலே என்ன இருக்கிறதோ, யார் கண்டார்கள்? உன் மனதுதான் பிறர் அறிய முடியாத ஆழமான சமுத்திரமாச்சே!'' என வெகுளியாகச் சிரித்தாள் அம்புஜம்.

சந்திரா தன்னைப் பற்றிய சம்பாஷணையை மேலே வளர்க்க இஷ்டமில்லாமல், ''அது கிடக்கட்டும்! உன் சமாசாரத்தைச் சொல்'' எனச் சிரித்தாள்.

அம்புஜத்தின் முகம் மிகப் பிரகாசமடைந்தது. ''அவர் என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார். என்னைப் போல் அதிர்ஷ்டமான ஸ்திரீகள் மிகச் சிலர் தான் இருப்பார்கள் சந்திரா! என் கணவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா? அவருக்கு முன் நான் தூசுக்குச் சமம். என்னைத்தவிர வேறு ஒரு ஸ்திரீயையும் கனவில்கூட நினைக்கமாட்டாத தூய்மை உள்ளம் படைத்தவர். பொய்யே அவர் வாயில் வராது. கோபம் என்பதே அவருடைய அகராதியில் இல்லை. அப்பாவுக்குச் செல்லப் பிள்ளையானாலும், பிடிவாத குணம் மருந்துக்கும் இல்லை. பெற்றோர்களிடம் என்ன மரியாதை! வேலையுண்டு தானுண்டு என்றிருக்கும் கண்டிப்பான ஆசாமி. எவ்வித துர்ப்பழக்கமும் கிடையாது. வெற்றிலைகூடப் போட்டுக் கொள்ள மாட்டார் என்றால் பார்த்துக் கொள்ளேன்!'' என்று ஒரே புகழ்ச்சியாகப் பேசி முடித்தாள்.

சந்திரா பதிலுக்குச் சிரித்தது அம்புஜத்திற்கு வெட்கமாகப் போய்விட்டது. ''சந்திரா, என்னைப் பயித்தியமென நினைத்துத் தானே சிரிக்கறே? உண்மையைத்தான் சொல்கிறேன். அவரை அடைய நான் முன் ஜன்மத்தில் தவமிருந்திருக்க வேண்டும்!'' என்று முடித்தாள் உற்சாகமாக.

''அம்புஜம்! நீ சந்தோஷமாயிருப்பதைக் கேட்க எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது!'' என்று சந்திரா கடைசியாகச் சொன்னதைக் கேட்ட அம்புஜம் திருப்தியடைந்தவளாய், ''சந்திரா! நிச்சயமாகச் சொல், என்னைப் போல் நீயும் சந்தோஷமாயிருக்கிறாய் அல்லவா?'' என்று கேட்டாள்.

''என்னவோ அம்புஜம், உன்னைப்போல எனக்குப் பேசத்

தெரியாது! என்ன சொல்ல முடியும்? எப்போதும் போல் தானிருக்கிறேன் என வைத்துக்கொள்ளேன்'' என்றுசந்திரா மழுப்பிப் பேசியதைக் கேட்ட அம்புஜம் மேலே வற்புறுத்திக் கேட்க இஷ்டப்படாமல் ''உன் மனதைவிட்டு நீ என்றுதான் விஷயங்களைச் சொல்வாயோ தெரியாது!'' என்று கூறிவிட்டு மேலே பற்பல விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். நடுவில் புவனேஸ்வரி அம்மாள் சந்திராவுக்குச் சாப்பிட பழங்களை கொண்டுவந்து உபசரித்தாள்.

சிநேகிதிகள் இருவரும் ஆனந்தமாக நேரம் போவது தெரியாது உலக விஷயங்களைப் பற்றி மகிழ்ச்சியுடன் பேசினார்கள். வாசலில் கார் வந்து நிற்கும் சப்தத்தைக் கேட்ட சந்திரா, ''போய்விட்டு வருகிறேன். அவர் வந்து விட்டார்'' எனக் கூறிவிட்டு எழுந்திருந்தாள்.

''ஒன்று கேட்க மறந்து விட்டேன் சந்திரா. உனக்கு கீதா என்ற பெயர் பிடிக்குமா?'' என்று கேட்டாள் அம்புஜம்.

''புரிந்தது! பிடிக்கும், பிறக்கப்போவது பிள்ளையாக இருந்தால்?'' எனப் புன்னகை செய்தாள் சந்திரா.

அம்புஜத்தின் முகத்தில் நாணம் பிரதிபலித்தது. ''பிள்ளையாக இருந்தால் என்ன பெயர் வைக்கலாம்? நீயே தான் சொல்லேன்'' எனப் புன்முறுவலித்தாள்.

''பிறக்கட்டும் சொல்கிறேன்! இன்னும் நாலைந்து மாதங்கள் இருக்கின்றனவே. யோசித்துச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு அம்புஜத்தினிடமிருந்து பிரிந்து சென்றாள் சந்திரா.

கணவனின் பக்கத்தில் அமர்ந்து காரில் செல்லும் தனது தோழியை ஜன்னல் வழியே கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்துக் கொண்டு நின்ற அம்புஜத்திற்கு அதிசயமாகத் தான் இருந்தது. சந்திராவின் வாழ்க்கை, சந்திராவின் கொள்கைகள், இலட்சியங்கள் முதலியவைகள் அம்புஜத்திற்கு நன்கு தெரியும். உயர்ந்த நோக்கங்கள் பல கொண்டவள் சந்திரா. துர்க்குணங்களுக்கு இருப்பிடம் என்று பெயர்பெற்ற ஜகந்நாதனுக்கு அவள் வாழ்க்கைத் துணைவியாக உடன்பட்டது அம்புஜத்திற்கு வியப்பாகத்தான் இருந்தது.



ஜகந்நாதன் பொல்லாதவன் என அம்புஜம் கேள்விப்பட்டிருந்தாள். அவனைச் சந்திரா மணந்து கொண்டு அவனுடன் இன்பமாக வாழ முடியும் என்பதே அம்புஜத்தினால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. தன் சிநேகிதியின் இல்லற வாழ்வைக் குறித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த அம்புஜம் தன் கணவனைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாள்.

ராமநாதன் அவளது கணவன், கட்டழகன், தங்க மனம் வாய்ந்தவன். ஸ்திரீயைத் தெய்வமெனக் கொண்டாடும் உன்னத நோக்கங் கொண்ட ஞானி. அவனைக் கணவனாக தான் பெற்றோமே என்று மனம் புளகாங்கிதமடைந்தாள் அவள்.

ஜகந்நாதன் அருகில் வீற்றிருந்த சந்திராவின் மனத்திலும் பல சிந்தனையலைகள் எழுந்து கொண்டிருந்தன அதே சமயத்தில். ''அம்புஜம் வர்ணிக்கும் வண்ணம் அவள் கணவன் அவ்வளவு உத்தமனா? அம்புஜம் என்றுமே வெள்ளை மனம் படைத்த பேதை. வெளுத்ததெல்லாம் பால் என எண்ணும் குழந்தையுள்ளம் கொண்டவள். புருஷர்கள் நயவஞ்சகர்கள். பேதை ஸ்திரீகளைத் தங்கள் அன்புப் பிடிப்பில் சிக்க வைக்க எவ்வளவு வேண்டுமானாலும் நடிப்பார்கள். அதையெல்லாம் அம்புஜம் அறிந்தவள் இல்லை'' என எண்ணித் தன்னையுமறியாது ஒரு பெருமூச்சு விட்டாள்.

## 21

மங்களூர்ப் பெண்களுக்கு உரித்தான வெண்மை நிறம் ஒரு விதத்தில் அழகை அபரிமிதமாகச் செய்கிறதென்பது வாஸ்தவந்தான். கோமதி வித்தியாலயத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டிருந்த ஹேமலதாவைக் கண்டவுடன் மூர்ச்சையடையும் நிலைமையை அடைந்தனர் மற்ற உபாத்தியாயினிகள். ஹேமலதாவிற்கு இருபத்தைந்து வயதிற்கு மேல் ஆகியும் பதினெட்டே வயதுடைய இளம் பெண்ணின் யௌவனத் தோற்றம். சற்று பூசினாற்போல் அமைந்திருந்த அவளது மேனி தந்த நிறத்தையொத்திருந்தது. சுருண்ட

கூந்தலை அவள் அலட்சியமாக வாரி முடித்திருந்த அழகொன்றே பார்ப்பவர் மனதைக் கவர ஏதுவாயிருந்ததென்றால் மேலே சொல்லத் தேவையில்லை.

பழைய உபாத்தியாயினி சந்திராவின் ஸ்தானத்தை ஹேமலதா என்பவளுக்குக் கொடுத்தது உபாத்தியாயினிகள் ஒருவருக்குமே பிடிக்கவில்லை. புதிதாக வந்தவள் சந்திராவை வனப்பில் மிஞ்சியதுடன் மட்டுமின்றி கோமதி வித்தியாலயத்தில் பல நாளாக இருந்து வம்பில் ஊறி வளம் பெற்றிருந்த பழைய உபாத்தியாயினிகளைச் சிறு துரும்பென மதித்து அலட்சியமாக நடத்து கொண்டது தான் எல்லாவற்றிலும் விசித்திரமாக இருந்தது!

அன்று பகல் ஒய்வு நேரத்தில் ஒன்று கூடிய உபாத்தியாயினிகளிடையே ஹேமலதாவைப் பற்றித்தான் பேச்சு நடந்து கொண்டிருந்தது.

''இவள் சந்திராவை நல்லவளாக்கி விட்டாளே! அப்பப்பா, பெரிய எமகாதகி போலிருக்கே!'' என ஆரம்பித்தாள் காமாக்ஷி.

''நான் சொல்கிறேன், நீங்கள் எல்லோரும் கோவிக்கக் கூடாது! சந்திரா எப்படியோ என்னவோ என்றாலும் ஒரு விதத்திலே ரொம்ப நல்லவள். நம்பகிட்டே வாயெடுத்துப் பேசவே மாட்டாள். அடக்க சுபாவம். அந்த மட்டில் அவள் குணம் போற்றத்தக்கது'' என சந்திராவை மெச்சிக் கொண்டு பேசினாள் கமலா.

''ஆமாம்! அதை நான்கூட கவனித்திருக்கிறேன். சில சமயங்களில் என் மனது சந்திராவை நினைத்துக் கொண்டு வருத்தப்படும். அனாவசியமாக புண்பட நாம் ஏதாவது சொன்னால் கூட அதற்கும் பதிலே பேச மாட்டாள் அவள். நல்லபெண். அதனால் தான் கடவுள் அவளுக்கு நல்ல வாழ்வைக் கொடுத்திருக்கிறார்'' என அனுதாப மிகுதியில் சந்திரா மீது கொண்டிருந்த பகையை மறந்து பேசினாள் வயலெட் மேகநாதன்.

''இந்தச் சனியன் பெரிய ராட்சஸ வம்சத்திலிருந்து வந்திருக்க வேண்டும். முந்தாநாள் சாதாரணமாக 'நீங்க தங்கியிருக்கிறது எந்தத் தெரு?' என்று கேட்டேன். பதிலுக்கு மரியாதை இல்லாமல் வெடுக்கென்று 'தெரிந்து தான் ஆகவேண்டுமோ?' என்று கேட்டாள்! ஏன் கேட்டோமென்று எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை.



எந்தச் சர்வகலாசாலை இவளுக்கு பி.ஏ. பட்டமளித்ததோ தெரியவில்லை! கிஞ்சித்தும் மரியாதை கிடையாது. மற்ற சகோதர உபாத்தியாயினிகளைத் தூக்கி எறிந்து பேசும் அகம்பாவகுணம். வேண்டும் நமக்கு! அந்தச் சந்திராவிடம் குறும்புத்தனமாக நடந்து கொண்டதற்கு இப்போது தண்டனை கிடைத்திருக்கு!'' என்று பிரசங்கித்தாள் கல்யாணி.

''அவளைப் போய் ஏன் கேட்டாய்? என்னைக் கேட்டிருந்தால் அவள் ஜாகை எங்கே என்று சொல்லியிருப்பேன். எங்கள் வீட்டுப் பக்கத்திலிருக்கும் அந்தப் பேய் உலாவும் வீட்டில் ஒரு மருத்துவ ஸ்திரீ வந்திருக்கிறாள் என்றேனே, அவளுக்கு இவள் என்னவோ உறவாம். அவர்களோடு தங்கியிருக்கிறாள். இரண்டு நாளைக்கு முன் நான் மாடியில் நின்று கொண்டிருந்த பொழுது அதே வீட்டு ஜன்னல் பக்கம் அவளைப் பார்த்து விட்டேன். மெதுவாகப் பேச்சுக் கொடுத்து அந்த வீட்டில் பேய் நடமாட்டம் இருக்கிறது என்று சொல்லி பயமுறுத்திப் பார்த்தேன். பதில் என்ன சொன்னாள், தெரியுமோ? 'பேயாவது பிசாவது! நாம் தாம் உலாவும் பேய்கள்!' என்று ஹாஸ்யமாகக் கூறுவது போல் என்னைக் குத்திக் காட்டினாள். வாயை மூடிக் கொண்டு திரும்பிவிட்டேன். பேர்வழி துணிந்த கட்டை. நாம் ஜாக்கிரதையாக இருந்தோமோ பிழைத்தோம்!'' எனப் பொழிந்து கொட்டினாள் ஜெயலக்ஷ்மி.

''பெருச்சாளிக்குப் பிடித்திருக்கிறாப்போல இருக்கிறது அல்லது பெருச்சாளியிடம் மிகவும் வினயமாக நடந்து கொண்டு நன்றாகக் காக்காய் பிடித்து வைத்திருக்கிறாளோ என்னவோ? இருக்கட்டும். இந்த அழகியின் ஆர்ப்பாட்டம் எத்தனை நாட்கள் எனப் பார்க்கலாம்!'' என்று பேசினாள் வயலெட் மேகநாதன்.

''சரி, இந்த வருஷம் நம் பள்ளிக்கூடத்தில் 'ஸ்தாபன தினம்' வருகிறதே, விமரிசையாகக் கொண்டாட வேண்டாமா?'' என்று கேட்டாள் காமாக்ஷி.

''கொண்டாடத்தான் வேண்டும். அதற்குப் பெரிய அம்மாள் என்ன சொல்கிறாளோ, தெரியவில்லை. இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டுப் போகும் காலம் என்று தான் வருமோ தெரியவில்லை!'' என வயலெட் அங்கலாய்த்துக் கொண்டாள்.

அதுசமயம் மிக்க ஒய்யாரமாக உள்ளே நுழைந்த ஹேமலதா அங்கே கூடியிருந்த மற்ற உபாத்தியாயினிகளைக் கர்வத்தோடு நோக்கிய வண்ணம் அங்கிருந்த ஆசனமொன்றில் சாய்ந்து கொண்டாள்.

திடீரெனத் தன் வருகையானது விகல்பமானதொரு மௌனத்தை அங்கே நிலவச் செய்ததைக் கண்ட ஹேமலதா தனக்குள்ளே புன்முறுவல் செய்து கொண்டாள். அரட்டைப் பேர்வழிகள் என்று பெயர் வாங்கிய பழம் புலிகளான கோமதி வித்தியாலயத்து உபாத்தியாயினிகளுக்கு என்னவோ ஹேமலதாவைக் கண்டதும் நெஞ்சம் பதை பதைத்தது! வாய்கள் பேச மறுத்து வார்த்தைகள் தொண்டையிலேயே தங்கிவிட்டன.

மௌனமாக ஒருவரையொருவர் குற்றவாளிகளைப் போல் நோக்குவதைக் கண்ணால் பார்த்தறிந்த ஹேமலதா கையில் கொண்டு வந்திருந்த சின்னத் தோல்பையைத் திறந்து அதிலிருந்து கண்ணாடியொன்றை எடுத்து முகத்தில் கொஞ்சம் பவுடரை அப்பிக் கொண்டதுடன், அடுத்தபடியாக அவள் செய்து கொண்ட அலங்காரம் அங்கிருந்த உபாத்தியாயினிகளைத் திடுக்கிட வைத்தது. நான்கு பேர்களுக்கு நடுவில் பவுடர் அப்பிக் கொள்வது குடும்ப ஸ்திரீகளுக்கு அழகல்ல என்று கொள்கை கொண்டிருந்த அவர்கள் நடுவில், ஹேமலதா உதடுகளில் பூசும் வர்ணக் குச்சியினால் தனது அதரங்களைச் சிவக்கச் செய்து கொண்டிருந்ததைக் கண்ட உபாத்தியாயினிகளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

வெள்ளை வாயில் புடவையின் தலைப்புக் காற்றில் பறக்கத் தன்னைச் சுற்றிலும் பவுடர் மணம் கமழ, கொவ்வைக் கனிபோல் வர்ணம் தீட்டப்பட்ட அதரங்களில் கேலிப் புன்னகை தவழ எழுந்து ராணி போல் கம்பீரமாக நடந்த அவள் காலடியின் சப்தம் அடங்கும் வரை தம்மையும் மறந்து திக்பிரமை அடைந்தவர்களாய் உட்கார்ந்திருந்தனர் மற்ற உபாத்தியாயினிகள்!

# 22

சந்திராவுக்குத் தன் வாழ்க்கை ஏறக்குறைய பழக்கமாகி விட்டது. விவாகம் நடந்து பல மாதங்கள் ஆகியும் அவளும் ஜகந்நாதனிடம் முதல் நாள் ஆரம்பித்த விவாதத்திலிருந்து பேசிக் கொண்டதே கிடையாது. நான்கு பேர்கள் நடுவில் தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அன்பொழுகப் பேசிக் கொள்வார்கள். தனிமையில் விடப்பட்டால் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்க அஞ்சி, பேசாது கற்சிலைகளாகி விடுவார்கள்.

இரவு போஜனத்திற்குப் பிறகு ஜகந்நாதன் பத்திரிக்கை ஒன்றைப் படித்துக் கொண்டு ஹாலில் உட்கார்ந்திருப்பான். சந்திராவும் புத்தகமொன்றைப் படிப்பது போல் பாவனை செய்து கொண்டிருப்பாள். நடுவில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூட முயற்சிக்க மாட்டார்கள். மணி பத்தடிப்பதைக் கேட்டதும் அவள் படுக்கை அறைக்குள் நுழைந்து தாளிட்டுக் கொள்வாள். மறுபடியும் அவள் கணவனைக் காண்பது மறுநாள் காலை விடிந்த பிறகுதான்.

முன் மேலிருப்பது போல் ஜகந்நாதனது எதிரில் உட்காரக் கூடக் கூசிய அவள், நாளாவட்டத்தில் அவனுடைய அருகாமையை அவ்வளவாக வெறுக்கவில்லை. தனக்கொரு விதத் தீங்கும் நேராது என உறுதியடைந்த அவள் மனம் ஜகந்நாதனின் அருகாமையை அவ்வளவாக ஆட்சேபிக்கவில்லை.

ஒரு நாள் இரவு போஜனத்திற்குப் பிறகு வழக்கம் போல் ஜகந்நாதன் ஒரு பத்திரிக்கையைப் படித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் திறந்த சாளரத்தின் வழியே வெளியுலகை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திராவின் முதுகுப்புறம் அவனுக்குத் தெரியும்படி இருந்தது. பத்திரிக்கையிலிருந்து நிமிர்ந்த ஜகந்நாதன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''உன் தம்பிக்கு ராஜப்பேட்டை பிராஞ்சுக்கு உதவி மானேஜர் வேலையைச் சிபார்சு பண்ணியிருக்கிறேன். சம்பளம் நூற்றம்பது ரூபாய். அநேகமாக

இன்னும் இரண்டே தினங்களில் அவன் இங்கிருந்து போக வேண்டியிருக்கும்'' என்றான்.

''சந்தோஷம்'' என்று அவளையும் அறியாது எகத்தாளமாக அந்தச் சொல் அவள் வாயினின்று எழுந்தது. சந்திரா பிறகு தன் நாவையே கடித்துக் கொண்டாள். ஜகந்நாதனிடம் அனாவசியமாக கொடுமையாகப் பேசக் கூடாது என்று அவள் சில நாட்களாகத் தீர்மானித்திருந்தாள். ஏனெனில், சந்திராவின் மனது புண்பட அவன் ஒரு வார்த்தையும் இதுவரை பேசியதே இல்லை. எவ்வளவோ துர்க்குணம் படைத்தவன் எனப் பெயர் எடுத்த அவனிடம் சில நற்குணங்களும் இருப்பதைச் சந்திரா நாளடைவில் உணர்ந்தது வாஸ்தவம்தான். அவன் விஷயமாக அவள் நடந்து கொண்ட விதம் அவன் நிலைமையில் வேறு யாராயிருந்தாலும் சாத்தியப்பட்டிருக்காது. அவள் தனது மனைவி என்ற உரிமையை அவளிடம் ஒருநாளும் ஜகந்நாதன் காட்டியதில்லை. தன்னால் ஸ்மரிக்கக் கூடாத ஒரு பரதேவதை அவள் என ஜகந்நாதன் சந்திராவை எண்ணி வந்தான்.

சந்திரா தன் விவாகத்திற்குப் பிறகு ஜகந்நாதன் அவளது குடும்பத்தவர்களுக்குச் செய்துள்ள உபகாரங்களை யோசித்துப் பார்த்தாள். அவள் தந்தைக்குச் சிபாரிசு செய்து ஆரம்பப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் வேலை வாங்கிக் கொடுத்திருந்தான். அதன் பயனாக அவளது குடும்பம் மல்லித்தோட்டத்தை விட்டு மாற்றலாகிப் போக நேர்ந்தது. சந்திரா அதற்காக வருந்தவில்லை. பாசமற்ற சிற்றன்னையும் அவளுக்குப் பயந்த தந்தையும் எங்கிருந்தாலும் அவளுக்கு ஒன்றே! பிறகு ஜகந்நாதன் அவள் தங்கை கமலிக்குத் தக்க வரன் ஒன்றைத் தேடிக் கொடுத்தான். கமலியின் கல்யாணம் சாதாரண ஹோதாவில் மல்லித்தோட்டத்தில் சந்திராவின் விவாகம் ஆன சில மாதங்களில் நடந்தது. அவளும் இப்போது புக்ககம் போய்ச் சேர்ந்து விட்டாள். தம்பி வேணு ஒருத்தன்தான் தற்போது மல்லித்தோட்டத்தில் இருந்து வந்தான்.

சந்திராவுக்கு வேணுகோபால் மீது மகத்தான பாசம் உண்டு. தாயற்ற தன் தம்பியை அவள் எளிதில் மறக்க முடியவில்லை. அனாதை போல் தனியே விடப்பட்ட அவன் கஷ்டப்படுவானே என எண்ணியிருந்த சந்திராவின் மனம் ஜகந்நாதன் வேணுவுக்கு அளித்த



உயர்ந்த பதவியைக் கேட்டு மகிழ்ந்தது என்றே சொல்ல வேண்டும். வேணுவை ஊரை விட்டுப் போகும்போது தன்னைப் பார்த்துவிட்டுப் போகச் சொல்ல வேண்டும் என்ற ஆசை ஒன்று தோன்றவே ஜகந்நாதன் பக்கம் திரும்பி, ''நாளைக்கு வேணுவைப் பார்த்தால் இந்தப் பக்கம் வந்துபோகச் சொல்லுங்கள். அவன் இங்கே வருகிறதே அபூர்வம்'' என்று சொன்னாள்.

ஜகந்நாதனிடம் ஒரு தயவைக் கோரியது இதுவே முதல் தடவையாதலால், சந்திராவின் முகம் சற்று நாணத்தினால் சிவந்தது.

''சொல்கிறேன், கட்டாயம்!'' எனக் குதூகலத்துடன் மொழிந்த ஜகந்நாதன் அவளை ஆதரவுடன் நோக்கினான். ஒரு கணம் இருவர் கண்களும் சந்தித்தன. காந்தசக்தி வாய்ந்த அவனது கண்கள் எங்கேயாவது தனது திட விரதத்தைப் பங்கப்படுத்தி விடுமோவென்று அஞ்சிய சந்திரா சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அது சமயம், ''அண்ணா உங்களைப் பார்க்கணும்னு நாகலிங்கம் வந்திருக்கிறார். கீழ் ஹாலில் இருக்கிறார்!'' என்று சொல்லிக் கொண்டு சகுந்தலா உள்ளே பிரவேசித்தாள்.

''சரி! ஐந்து நிமிஷம் இருக்கச் சொல்; வந்து விடுகிறேன்'', என்று தங்கையிடம் உத்தரவிட்ட ஜகந்நாதன், பக்கத்து அறைக்குள் மிக்க அவசரமாகச் சென்றான். கொஞ்ச நேரத்தில் வெளிவந்த அவன் வெளியே போக அழகாக உடுத்திக் கொண்டு இருப்பதைக் கவனித்த சந்திராவின் மனம் துணுக்குற்றது. அவள் பக்கங்கூடத் திரும்பாமல் ஜகந்நாதன், ''இன்றிரவு நான் வர நேரமானாலும் ஆகலாம். ஒரு சமயம் வராமலிருந்தாலும் இருப்பேன். அதனால் ஹால் கதவைச் சாத்தி உள்ளே பூட்டிக் கொண்டு படுத்துக் கொள். துணைக்கு வேண்டுமானால் சகுந்தலாவை அழைத்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினான்.

அடக்க முடியாத ஆவலினால் மாடி வராந்தாப் பக்கம் வந்த சந்திரா, வீசிக் கொண்டிருந்த நிலவொளியில் பங்களா முன் பக்கத்துத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்த பெரிய காரைப் பார்த்தாள். பேசிக் கொண்டே தன் கணவன் மற்றொரு புருஷனுடன் அதில் ஏறிக் கொண்டதையும், மறுகணம் 'கிர்' என்ற சப்தத்துடன் கார் வெளியே

புறப்பட்டதையும் கண்ட அவள் மனதிலே அடக்க முடியாத பொறாமையுணர்ச்சி தோன்றியது.

இரவு மணி பத்துக்கு மேலாகி விட்டது. நிம்மதியாக நித்திரை செய்ய வேண்டிய இரவில் அவன் திடீரென்று நண்பனுடன் வெளியே போகக் காரணம் என்னவாயிருக்கும்? சந்திராவை மணந்தபின் அன்றுவரை ஜகந்நாதன் இரவு வேளைகளில் வெளியில் போனதே இல்லை. அதற்கு முன்பு எப்படியோ சந்திராவுக்குத் தெரியாது! விபரீத நடவடிக்கை கொண்ட நாகலிங்கத்துடன் அகால வேளையில் வீட்டைவிட்டு அவன் போவது வேறு எதற்காக இருக்கும்? தனிமையில் தவித்த ஜகந்நாதன் மறுபடியும், மதுவையும், ஸ்திரீகளின் உறவையும் விரும்பித்தான் கிளம்பிவிட்டானோ?

சந்திராவின் மனம் காரணமின்றிக் கொதித்தது. ஜகந்நாதன் அவள் கணவன், அவனை அடைய வேறு எந்த ஸ்திரீக்கும் உரிமை கிடையாது என்ற எண்ணம் அவள் மனதிலே குமுறி எழுந்தது. வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டவள் தனது கட்டு மீறிய உணர்ச்சிகளின் போக்கை நினைத்துச்சற்று வெட்கமடைந்தாள். அவள்தான் ஜகந்நாதனுக்கு ஹிருதயத்தில் இடமளிக்க மறுத்து விட்டாளே! மனைவி என்ற தனது உரிமையை அவனிடம் பெற்றுக் கொள்ள விரும்பவில்லையே! அவன் வேறு ஸ்திரீயுடன் அன்பைப் பகிர்ந்து கொள்வதை நினைத்து ஏன் பொறாமைப்பட வேண்டும்?

இதென்ன வேடிக்கை... சந்திராவுக்கு அப்பொழுதுதான் பளிச்சென உதயமாகியது. ஜகந்நாதன் காந்தசக்தி வாய்ந்த மனிதன். அவளது அந்தராத்மாவில் சந்திராவையும் அறியாது தனது காந்த சக்தியால் காதலை விதைத்து விட்டான். கொஞ்ச நாட்களுக்கு முன் துவேஷம் கொண்டிருப்பதாக நடந்து கொண்டு அவனது அன்பை நிராகரித்த சந்திரா, அன்று இரவு ஒரே நிமிஷத்தில் தன் மனம் காதல் புயலில் கொந்தளிப்பதைக் கண்டு தன் செய்கைக்கே வெட்கமடைந்தவளாய் சட்டெனப் படுக்கையறைக்குள் நுழைந்து தலையணை மீது முகத்தை மூடிக் கொண்டாள்; உடம்பைக் குலுக்கும் பெரும் விம்மல்கள் அவளது இதயத்தைப் பிளந்து கொண்டெழுந்தன.



# 23

கோமதி வித்தியாலய உபாத்தியாயினிகள் அன்று ஒன்று கூடியபொழுது ஒருவரோடு ஒருவர் வாய் திறந்து பேசும் சக்தியை இழந்து திக்பிரமையடைந்திருந்தனர். ஆதலின் அரைமணி நேரம் ஒன்றாக இருந்தும் ஒருவரும் பேசத் துவங்கவில்லை.

முதல் நாள் நடந்த ஸ்தாபன தினக் கூட்டத்தின் பொழுது ஹேமலதா நடந்து கொண்ட விதந்தான் அவர்களை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி ஊமையாக்கி விட்டது.

எல்லா வருஷமும் போலில்லாமல் அந்த வருஷமும் ஹேமலதா பள்ளிக்கூடத்தில் வேலை ஒப்புக்கொண்டதும் தலைமை உபாத்தியாயினி சௌந்திரம்மாள் எம்.ஏ.,எல்.டி., அந்தக் கொண்டாட்டத்தை நடத்தும் பொறுப்பு முழுவதையும் அவள் கையிலேயே விட்டுவிட்டது மற்ற உபாத்தியாயினிகளுக்குப் பெரும் புதிராக இருந்தது. ஹேமலதா இஷ்டப்படியெல்லாம் சௌந்தரம்மாளை ஆட்டி வைப்பதாக அவர்கள் நினைத்து ஏமாந்த சோணகிரியான தலைமை உபாத்தியாயினிக்காக உள்ளூர வருந்தினர்.

ஹேமலதா என்றுமில்லாத புதுமையாகக் கொண்டாட்டத்தைத் திறந்து வைப்பதற்கு அழைத்த பிரமுகரின் பெயரைக் கேட்டதுமே சகோதர உபாத்தியாயினிகளுக்கு மூர்ச்சை போட வேண்டும் போலிருந்தது. நாகலிங்கம் அவர்களைத்தான் கோமதி வித்தியாலயத்தின் வருஷ விழாவிற்கு ஹேமலதா அக்ராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாள் என்பதானது அவர்களைத் திகைக்க வைத்தது. நாகலிங்கம் எப்பேர்ப்பட்டவன்! பெரிய மனுஷர் வீட்டுப் பிள்ளையென்றும் சரபோஜி கெமிக்கல் ஒர்க்ஸில் பெரிய உத்தியோகம் வகிப்பவன் என்றும் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? பருவமங்கைகள் நிறைந்த ஒரு பெண்கள் பள்ளிக்கூட விழாவிற்குத் தலைமை வகிக்க அவனையா கூப்பிடுவது? தனது விஷக்கண்களால் எல்லோரையும் விழுங்கிவிட மாட்டானா?

இப்படி திகிலடைந்த உபாத்தியாயினிகள் உடனே தலைமை உபாத்தியாயினியிடம் நாகலிங்கம் எப்படிப்பட்டவன் எனவும் இளம் பெண்கள் நிறைந்த இடத்தின் பக்கமாகக் கூடச் செல்ல யோக்கியதையற்றவன் எனவும் கூறி, இந்த யோசனையைக் கைவிடும்படி புத்தி கூற வேண்டுமெனக் கூடி யோசித்தனர். ஆனால், ஹேமலதாவை எண்ணிய மாத்திரத்தில் அவர்கள் தைரியமெல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடியது! எண்ணிக்கையில் தாங்கள் எவ்வளவு இருந்த போதிலும் அவளை எதிர்த்துப் பயன் இல்லை என உணர்ந்த அவர்கள் தாங்கள் கொண்ட கவலையை வெளியிடாது வாயை மூடிக் கொண்டு பூனைகளைப் போல ஹேமலதா செய்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துக் கொண்டனர்.

கொண்டாட்டத்தின் போது ஹேமலதா செய்த அட்டகாசம் அவர்களைப் பைத்தியக்காரர்களாகச் செய்தது. மெல்லிய சிவந்த ''டிஷ்யூ'' புடவையொன்று அவளது மேனியழகை மிகைப்படுத்திக் கொண்டிருந்தது. உதடுகளில் பூசப்பட்ட வர்ணமும் கைவிரல் நகங்களில் மின்னும் நகக்குழம்பு, புடவையின் நிறத்திற்கு ஒத்திருந்ததையும் இரட்டைப் பின்னலிட்டு பாம்பு போல் வளைத்து விஸ்தாரமாக முடிந்திருந்த தலையலங்காரத்துக்குச் சிகரம் வைத்தாற் போல் இருந்த ரோஜாப் புஷ்பங்களின் வரிசைத் தோற்றமும், அவள் காதுகளிலே மின்னிய சிவந்த தோடுகளும், அவளது நாகரீக வேஷத்தை மிகைப்படுத்திக் காட்டின. இதையெல்லாம் கண்டு பயந்து விட்டனர் மற்ற உபாத்தியாயினிகள்.

மைதீட்டிய விழிகளால் மருள மருள விழித்த ஹேமலதா நாகலிங்கத்தை வரவேற்றுப் புகழ்ந்து பேசி அவனை உபசரித்ததையும், சதாசர்வ நாழிகையும் அவன் அருகிலே அமர்ந்து கொண்டாட்டத்தின் போது புன்னகை தவழும் முகத்துடன் அளவளாவிக் கொண்டிருந்ததையும் பார்த்த மற்ற உபாத்தியாயினிகளுக்கு மிக்க அருவருப்பாக இருந்தது.

தாங்கள் ஹேமலதா மீது கொண்டிருந்த துவேஷத்தைச் சந்திரா மீது புகழ் மாலைகளாகச் சொரிந்து தீர்த்துக் கொண்டனர். கொண்டாட்டத்தின் போது அழைப்புக் கிணங்கி வந்த சந்திராவைத் தங்கள் பழைய துவேஷத்தை மறந்து அத்தியந்த சிநேக பாவனையில் வரவேற்றுப் பலவித உபசாரங்கள் செய்தனர்; சந்திராவுக்கு அவர்கள்



செய்கை மிகவும் அதிசயமாயிருந்தது என்றாலும் மரியாதையை உத்தேசித்துக் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

சௌந்தரம்மாளும் சந்திராவை மிகவும் கொண்டாடி வரவேற்றாள். ஹேமலதா காதில் படும்படி வேண்டுமென்றே சந்திராவைப் புகழ்ந்து பேசித் தீர்த்தார்கள் உபாத்தியாயினிகள். ஆனால், எமகாதகியான ஹேமலதா தனது சகோதர உபாத்தியாயினிகளின் பேச்சுகளுக்கோ செய்கைகளுக்கோ அசைந்து கொடுத்ததாகக் காணோம். அதற்குப் பதில் அவள் கூட்டம் முடியும் பொழுது ஒரு சிறு பிரசங்கம் செய்து முடித்தாள்.

''சமத்துவம், சமத்துவம் என்று உரிமை கோரும் ஸ்திரீகள், தாங்கள் பெண்கள் என்னும் மனப்பான்மையை மறந்து சகோதர பாவத்துடன் புருஷர்களுடன் நன்றாகப் பழக வேண்டும். மேல் நாடுகளைப் போல் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து கல்வி கற்கும் முறையை இங்கும் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் ஆதரவளிக்க வேண்டும்'' என்றும், இன்னும் இதே போன்ற பல விஷயங்களும் அவள் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

அதைக் கேட்ட மற்ற உபாத்தியாயினிகள், ''விபரீதம்தான்! இனிப் பள்ளிக்கூடம் உருப்பட்டாற் போலத்தான்'' எனக் கவலையடைந்தவர்களாய்ப் பிரசங்க முடிவில் கைதட்டவும் மறந்து சுற்சிலைகளாயினர்.

நாகலிங்கம் முடிவாகக் கொண்டாட்டத்தைப் புகழ்ந்து அதை வெற்றிகரமாக முடித்ததற்கு ஹேமலதாவை மெச்சிப் பேசியதைக் கேட்ட அவர்களுக்குத் தங்கள் செவிகளில் நாராசம் பாய்ந்ததைப் போல் முகங்களைச் சுளுக்கிக் கொண்டனர்.

முதல் நாள் நடந்த சம்பவங்களில் மனது கசந்து போயிருந்த அவர்கள் மறுநாள் வழக்கம் போல் கூடியதும் பேசச் சக்தியற்றிருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.

மேற்கூறியபடி அவர்களிடையே நிலவியிருந்த மௌனத்தைக் கடைசியில் துணிந்து சாரதா கலைத்தாள். ''எனக்குப் புரிந்தது, இந்த ஹேமலதாவின் சூழ்ச்சி! பெரிய காரியவாதி அவள். ஏதோ முக்கிய நோக்கத்துடன்தான் நாகலிங்கத்தைத் தேர்ந்தெடுத்தாள்'' என

''சந்திரா ஜகந்நாதனைக் கடைசியில் மணந்து கொண்டாள் என்று கேள்விப்பட்டதும் அவன் சிநேகிதனான நாகலிங்கத்தைத் தானாவது மணந்து கொள்ள முயற்சிக்கப்படாது என்பதுதான் அவள் நோக்கம் போலும்! ஜகந்நாதன் எவ்வளவு கெட்டவனானாலும் சில கொள்கைகள் கொண்டவன். இந்த நாகலிங்கம் அதமனாயிற்றே?'' எனப் பல்லைக் கடித்தாள் ஜெயலக்ஷ்மி.

''அவளே துணிந்து விட்டாள், நமக்கென்ன!'' என்று சிரித்தாள் காமாக்ஷி.

''நமக்கென்ன? நமது பள்ளிக்கூடத்தின் பரம்பரையான பெரும் அந்தஸ்தும் எப்பேர்ப்பட்டவைகள்? ஹேமலதாவின் கையில் அதிகாரம் சிக்கி அவள் இஷ்டப்படியெல்லாம் நடத்த ஆரம்பித்தால் கௌரவமுள்ள பெற்றோர்கள் தங்கள் பெண்களைப் படிக்க அனுப்ப அஞ்சுவார்கள். சந்திரா, பாவம்! ஜகந்நாதன் வீட்டில் இருந்ததாகச் சொன்ன ஒரு வதந்திக்காகப் பல கேவலமான கதைகளைக் கட்டி, அவளைத் துரத்த ஏற்பாடு செய்த நமக்கு உண்மையிலேயே அட்டகாசம் பலபுரியும் ஹேமலதாவை வெளியேற்றத் தெரியவில்லையென்றால் வெட்கக்கேடு!'' என ஆத்திரமாகப் பேசினாள் கௌரி.

''ஆமாம்!'' கட்டாயம் எல்லோரும் ஒன்று கூடி இவளை இங்கிருந்து வெளியேற்றப் பெருச்சாளியிடம் வழி பண்ண வேண்டும். இல்லையெனில் நமது மானத்தை காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தம் வேலையை ராஜினாமா செய்ய வேண்டும்'' எனத் தீர்மானமாகச் சொன்னாள் வயலெட் மேகநாதன்.

அவர்கள் பேசி முடிப்பதற்குள் அங்கு தோன்றிய ஹேமலதாவைக் கண்டதும் சட்டென்று எல்லோரும் வாயை மூடிக் கொண்டனர். அந்த அகங்காரியின் எதிரில் தாங்கள் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போவதை உணர்ந்த அவர்களுக்கு அவமானம் தாங்க முடியவில்லை.



# 24

**வா**னத்தின் மீது கூடியிருந்த மேகக் கூட்டங்களும், அடிக்கொரு தடவை சாளரத்தின் வழியே வீசிய சில்லென்ற காற்றும் வரப்போகும் பெரும் மழைக்கு அடிகோலிக் கொண்டிருந்தன.

பச்சை ஜலத்திலே காலையில் ஸ்நானம் செய்ததனாலோ அல்லது விடாது பெய்து கொண்டிருந்த மழையினாலோ சந்திராவிற்கு அன்று தலை மிகப் பாரமாகத் தோன்றியது. அதைக் கவனியாமல் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்த அவள், சாயங்காலம் தலை நோவு பொறுக்க முடியாமல் ஸோபா ஒன்றில் சோர்ந்து விழுந்து, முனகிக் கொண்டே படுத்திருந்தாள். ஆபீசிலிருந்து வந்த ஜகந்நாதன் வழக்கம்போல உடைகளைக் களைந்து வேறு உடுத்திக் கொண்டு ஹால்பக்கம் வந்தான். வழக்கமாகக் காப்பியுடன் வந்து நிற்கும் சந்திரா அன்று ஸோபா ஒன்றில் சுருண்டு படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டான். கணவனின் காலடிச் சப்தத்தைக் கேட்ட சந்திராவும் சோபாவில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிவந்திருந்த அவளது கண்களையும் வாடியிருந்த முகத்தையும் கண்ட ஜகந்நாதன் கவலையடைந்தவனாய் அருகில் சென்று, ''சந்திரா, சந்திரா! உடம்புக்கென்ன?'' என்று அன்புடன் வினவினான்.

''தலையை வலிக்கிறது'' என மெதுவாக மொழிந்தாள். சட்டென அவளது மிருதுவான கன்னத்தில் தன் கையை வைத்துப் பார்த்த ஜகந்நாதன் அந்த ரோஜாக் கன்னம் கொதிப்பதை உணர்ந்து கவலையுடன் ''ஜுரம் அல்லவா அடிக்கிறது! தலைவலி எப்போ பிடித்து இருக்கிறது! அம்மாவுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் வாத்ஸல்யத்தோடு.

அவனது ஸ்பரிசத்தினால் இன்பவாரியொன்று தேக முழுவதும் பாவியோடுவதை உணர்ந்தாள் சந்திரா. மிகுந்த

வெட்கமடைந்தவளாய், ''அம்மாவிடம் சொல்லவில்லை. லேசான தலைவலிதானே என்று பேசாமலிருந்து விட்டேன். நாழிகை ஆக ஆகப் பொறுக்க முடியவில்லை. நீங்கள் இன்னும் காப்பிக் கூடச் சாப்பிடவில்லையே?'' என்று சகஜமாக வினவினாள்.

தன்னிடம் அவள் வேற்றுமையை மறந்து பேசுவதை கவனித்த ஜகந்நாதன் சந்தோஷமடைந்தானெனினும் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமலே, ''என்னைப் பற்றி பிறகு பார்க்கலாம். முதலில் நீ போய் படுக்கையில் படுத்துக் கொள்'' எனப் பரிவுடன் பகர்ந்தான்.

எழுந்திருந்த சந்திரா தள்ளாடுவதைக் கண்டு சட்டென்று அவளைத் தன் கரங்களால் தாங்கியவாறு படுக்கையறைக்குள் மெதுவாக அழைத்துச் சென்று அவளைப் பத்திரமாக படுக்க வைத்தான். மெல்லிய போர்வையொன்றை எடுத்து அவள் தேகத்தை மூடிக் கொண்டே அவன் ''அம்மாவிடம் போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன். டாக்டருக்கும் ஆள் அனுப்புகிறேன்'' என்று கூறினான்.

''அம்மா வேண்டுமானால் வரட்டும். டாக்டர் ஒன்றும் வேண்டாம். சாதாரண ஜுரத்திற்கு எத்தனை அமர்க்களம்! நாளைக்கே சரியாகிவிடும்'' என்றாள் சந்திரா.

விஷயம் அறிந்த காமாக்ஷியம்மாள் பறந்து கொண்டு ஓடி வந்தாள். மாமியார் செய்த உபசாரத்தையும் கணவன் எடுத்துக் கொண்ட சிரத்தையையும் கண்டு சந்திரா பெருமிதம் அடைந்துவிட்டாள்.

தன் பேச்சை நிராகரித்துவிட்டு ஜகந்நாதன் லேடி டாக்டரை அழைத்து வந்ததையும், அவள் கொடுத்துச் சென்ற மருந்துகளை மிகவும் அருமையாக வேளா வேளைக்குக் கொடுத்ததையும், இரவு முழுவதும் கண்விழித்துப் பக்கத்தில் அமர்ந்து அவன் செய்த சிசுருஷைகளையும் பார்த்த சந்திராவின் மனம் பாகாய் இளகிவிட்டது. தன் மீது அன்புமழை பொழியும் ஆசைக் கணவனிடம் இத்தனை நாள் விசித்திரமாக நடந்து கொண்டு வாழ்வை வேம்பாகச் செய்து கொண்டோமே என்று நினைத்துப் பச்சாதாபமடைந்தாள். அவள் மனமும் குழைந்து போய்விட்டது.

இரண்டு நாட்கள் ஜுரத்தில் சந்திரா மிகவும் பலஹீனம்



அடைந்து படுக்கையிலேயே சோர்வுடன் படுத்திருந்தாள். அவள் மணந்து கொண்ட பின் முதல் தீபாவளி தினம். அதை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று அவள் சித்தி பார்வதிகூடக் கடிதம் போட்டு விட்டாள்.

''சாஸ்திரம், ஒரு கை எண்ணெய் வச்சிண்டு ஸ்நானம் பண்ணிவிட்டு புதுசு கட்டிக்கணும். நாளுங்கிழமையுமாப் படுத்துண்டு இருந்தால் நன்னாயிருக்காது'' என்று வற்புறுத்தினாள் மாமியார்.

''ஆமாம்! சந்திரா, எழுந்திருந்து சீக்கிரம் ஸ்நானம் பண்ணி விடுங்கோ!'' என்று ஓரகத்தி அலமேலுகூட உபசரித்தாள்.

தீபாவளி காலை ஸ்நானம் செய்த கூந்தல் காற்றில் பறக்க, காமாக்ஷியம்மாள் கஷ்டப்பட்டு தேடி வாங்கிய விலையுயர்ந்த ஜரிகைச் சேலையை உடுத்திக் கொண்டு சந்திரா மிக்க லாவண்யமாக உட்கார்ந்திருந்தாள்.

ஹாலுக்கு வந்த ஜகந்நாதன் அவள் அருகில் வந்து நின்று சற்று நேரம் தயங்கினான். பிறகு சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, ''சந்திரா, உனக்கொரு பரிசு அளிக்க விரும்புகிறேன். அதை ஏற்றுக் கொள்ள மறுக்க மாட்டாயே?'' என மெதுவாகக் கேட்டான் கெஞ்சிய குரலில்.

சந்திராவின் இருதயம் வேகமாக அடித்துக் கொண்டது. ''ஏற்றுக் கொள்கிறேன்'' என தலை குனிந்த வண்ணம் பகர்ந்தாள். சட்டைப் பையில் கையை விட்டு வைரங்கள் இழைத்த உயர்ந்த வேலைப்பாடமைந்த ஒரு அழகிய மோதிரத்தை எடுத்தான் அவன்.

''வீட்டில் எல்லோர் முன்னிலையிலும் இதைக் கொடுக்க எனக்கு வெட்கமாயிருந்தது'' என்று சொல்லிக் கொண்டே அவளது இடக்கரத்தைப் பிடித்து அவள் வெண்மையான விரலில் அதைப் போட்டான். அவள் விரலில் அழகுடன் மின்னிய அந்த நகையை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஜகந்நாதன் அவள் கரத்தின் மீது கொண்டிருந்த பிடியைத் தளர்த்தாமலே, ''சந்திரா! உன் வாழ்க்கையின் இன்பத்தைப் பாழடித்து விட்டேன் நான். அதற்கு எது செய்தாலும் ஈடாகாது என்பது நிச்சயம். என்னால் கேவலம் இதைப் போன்ற நகைகளைத்தானே கொடுக்க முடியும்!'' எனத் தழுதழுத்த குரலில் கூறினான்.

உணர்ச்சி வசப்பட்ட சந்திராவின் உதடுகள், 'இவைகள் ஒன்றும்

எனக்குத் தற்போது வேண்டாம். உங்கள் அன்பு ஒன்றுதான் வேண்டும்' என்று சொல்ல வேண்டுமெனத் துடித்தன. ஆனால், அவன் அன்பைத் தான் வேண்டுவதாக நேரில் ஒப்புக்கொள்வது பெண்மைக்கு இழிவு என்பது அவள் கருத்தாயிற்றே; ஆகவே, தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஜகந்நாதன் மேலே பேசாது அவ்விடத்தைவிட்டு அகன்றான். சந்திராவின் உணர்ச்சிவெள்ளம் கண்ணீராக வழிந்தோடியது.

அன்று சாயங்காலம் சந்திரா என்றுமில்லாத அக்கரையுடன் கண்ணாடி எதிரில் நின்று கொண்டு தன்னை அலங்கரித்துக் கொண்டாள். வாரிப் பின்னிவிட்ட அலைகள் எனப் படிப்படியாகச் சரிந்து நிற்கும் தனது கேசத்தின் மீது மணங்கமழ்ந்த பூச்சரங்களை மிக்க கவனமாக வைத்துக் கொண்டாள். மல்லிகையின் மணம் ஜகந்நாதனுக்கு மிகவும் பிடிக்கும் என்பது சகுந்தலாவின் வாயிலாகச் சந்திரா தெரிந்து கொண்டிருந்த விஷயம்.

கல்யாணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு ஜகந்நாதன் பெரிய மூட்டையொன்றில் அனுப்பியிருந்த புடவைகளில் சித்தி, தங்கை முதலியவர்களுக்குக் கொடுத்தது போகச் சில அவளிடம் இருந்தன. அவைகளை அன்று வரை அவள் கையால் கூடத் தொட்டவளில்லை. திடீரென்று அதை நினைத்துக் கொண்ட சந்திரா அந்தப் புடவைகளில் ஒன்றை எடுத்து அன்று உடுத்திக் கொண்டாள்.

மை தீட்டிய தன் கருவிழிகள் குதூகலத்தில் மின்னுவதையும், கண்ணாடியில் தெரிந்த தன்னுருவம் என்றுமில்லாத காந்தியுடன் அன்று பிரகாசிப்பதையும் கண்ட அவள் திருப்தியடைந்தவளாய் திரும்பினாள். இத்தனை நாட்களும் அவள் அலங்காரம் செய்து கொள்ளத் தவறியதேயில்லை. ஆனால், தான் செல்வத்தில் புரள்வதைப் பிறருக்கு அறிவிக்கும் அகம்பாவத்தின் அறிகுறி அது. ஆனால் இன்று அவள் செய்து கொண்ட அலங்காரம் ஜகந்நாதன் கண்களுக்கு விருந்தளிக்கவேயாகும்.

தன்னழகையே பார்த்துப் பூரித்துப் போன அவள் கண்ணாடியினின்று திரும்புவதற்கும் அவளது கணவன் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.



'எங்கேயானும் சிநேகிதியைப் பார்க்கத்தான் புறப்படுகிறாளோ?' என எண்ணிய அவன், ''வெளியே போகப் போகிறாயா நீ?'' என்று கேட்டான்.

சந்திராவுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. தனது அலங்காரம் அவனது உள்ளத்தை மகிழ்விக்க என அவன் அறிந்து கொள்ளவில்லையென்று துக்கமும் வெட்கமும் அடைந்த அவள் ''அம்மாவுடன் கோவிலுக்குப் போகலாமென்றுதான் கிளம்பினேன். பிறகு என்னவோ பிடிக்கவில்லை'' என்ற பெரிய பொய்யைச் சொல்லி, பெண்மையின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டாள்.

அது சமயம் இரைக்க இரைக்க ஓடிவந்த அவனது தங்கை சகுந்தலா, ''அண்ணா, உங்கள் சிநேகிதர் வந்து நாழியாச்சுன்னு கூப்பிடறார்'' என மூச்சுத் திணறச் சொன்னாள்.

சந்திராவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. கொஞ்ச நாட்கள் அடிக்கடி சிநேகிதனுடன் கேளிக்கையாகத் திரிந்து கொண்டிருந்த ஜகந்நாதன் சந்திராவுக்கு உடம்பு சரியில்லாதிருந்த அந்த இரண்டு மூன்று தினங்கள் எங்குமே போகாமல் இருந்தான். மறுபடியும் நண்பனுடன் குஷியாகப் பொழுதைக் கழிக்கக் கிளம்பி விட்டாரே என உணர்ந்த அவள் உள்ளம் அனலில் இட்ட புழுவாகத் துடித்தது.

''இதோ வந்து விட்டேன்'' எனக்கூறிய ஜகந்நாதன் அவசரமாக உடுத்திக் கொண்டு வெளிக் கிளம்பினான்.

''வர நேரமாகும். ஜாக்கிரதை!'' எனச் சந்திராவின் பக்கம் திரும்பிக் கூறிவிட்டு வேகமாக வெளியேறினான் அவன்.

அண்ணன் வெளியே சென்றதும் நிம்மதியடைந்த சகுந்தலா, ''மன்னி, நீ இன்னிக்கு ரொம்ப அழகாயிருக்கே!'' என ஆச்சரியத்துடன் கூறினாள்.

''அதுக்கென்ன குறைச்சல்!'' என்று பதிலளித்த சந்திரா வேண்டா வெறுப்பாகப் பதிலளிக்கும் போதே துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்துவிட்டது. முகத்தை மறைக்க அவள் சட்டென மாடி வராந்தாவில் சென்று கீழே தோட்டப்பக்கம் எட்டிப் பார்த்தாள்.

''ஏறிக்கோ அப்பா சீக்கிரம்! நல்ல ஆளு நீ! வீட்டிலே மனைவிக்கு

உடம்பு சரியில்லை என்றால் ஒரேமுட்டா வீட்டோடவா கிடக்கிறது? பேஷ்! பேஷ்! இன்னிக்கு நான் வந்து இழுத்துக் கொண்டு போகாவிட்டால் நீ வருகிறது ஏது?'' என வேடிக்கையாக மொழிந்த அந்தப் புருஷனைச் சந்திரா கவனித்தாள்.

ஜகந்நாதனைப் படுகுழி நோக்கி அழைத்துச் செல்லும் நாகலிங்கம் அவளுக்கு எமன் போல் அப்பொழுது தென்பட்டான். உலகம் பிளந்து அந்த பாவியை விழுங்கி விடக்கூடாதா என்று மனதிற்குள்ளே சபித்துக் கொண்டு நின்றாள் அவள். கார் புறப்பட்டதும் சந்திரா துக்கந்தாளாது உள்ளே திரும்பினாள்.

கண்ணாடியில் தெரிந்த தனது பிரதிபிம்பத்தின் மீது அவளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ஜகந்நாதனின் அன்பைக் கவர அலங்கரித்துக் கொண்டது கேவலம் ஒரு தாசியின் செய்கை என மனச்சாட்சி உறுத்தவே சந்திரா கூந்தலில் வைத்திருந்த மல்லிகை மலரை வெடுக்கென எடுத்து கசக்கித் தூர வீசினாள். கழுத்திலே மின்னிய வைர மாலையைக் கழற்றி வெறுப்புடன் பீரோவுக்குள் எறிந்துவிட்டுச் சோபாவில் பொத்தென்று விழத் திரும்பினாள்.

யாருடைய காலடிச் சத்தமோ சமீபத்தில் கேட்பதை உணர்ந்த சந்திரா நிமிர்ந்து பார்த்த பொழுது புன்னகை ததும்பப் புதுமையிலும், புதுமையாய் ஓரகத்தி அலமேலு நுழைந்து ''உங்களைத்தான் தேடிக் கொண்டு வந்தேன்'' எனப் பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

கையிலே அவள் பிடித்துக் கொண்டு வந்த மைந்தன் ராஜா துருதுருவென்று தாயின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டவன், அங்கிருந்த பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் புரட்டி விஷமம் செய்ய ஆரம்பித்தான்.

அதைக் கவனித்த அலமேலு, ''டே ராஜா? வந்தேனா தெரியுமா!'' என்று அதட்டிவிட்டு, ''இந்த வாலை அழைச்சுண்டு எங்கேயும் போக பயமாயிருக்கு. எங்க பாட்டி ஒருத்தி மதுரைப்பக்கம் ஒரு கிராமத்திலே இருக்கா. இந்தப் பிரயாணக் கஷ்டத்திலே போனாக்கப் பத்து நாளாவது இருந்துட்டு வரணும். இவனைக் கூட்டிண்டு ஒருத்தர் வீட்டுக்கும் போகக் கூடாதுன்னு அவர் ஒரேயடியாய் நிற்கிறார்'' என சரமாரியாகப் பேசிக் கொண்டே உட்கார்ந்தாள்.



''எங்கிட்ட இருப்பான்னா நான் பார்த்துக்கிறேன்! நீங்கள் போயிட்டு வாருங்களேன்'' என்றாள் சந்திரா புன்னகையுடன்.

''அதுக்கு உங்களுக்கு சௌகரியப்படுமான்னு கேட்கத்தான் வந்தேன்!'' என அலமேலு சந்தோஷத்துடன் சொன்னாள்.

பிறகு ஓரகத்திகள் இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பொழுதுபோவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர்.

## 25

தோளின் மீது சாய்ந்து கொண்டிருந்த தனது குழந்தை பிரகாசனுக்கு அம்புஜம் அன்று வேடிக்கை காட்டிக் கொண்டு ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்தாள்.

''அதோ பார், காக்கா, குருவி'' என அவள் தன் ஆறுமாதக் குழந்தைக்கு வானத்திலே பறக்கும் பட்சி ஜாலங்களை எல்லாம் அறிமுகம் செய்து வைக்க முயற்சிப்பதைத் தூரத்திலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தாள் மாமியார் புவனேஸ்வரி. அவளுக்கு அது வேடிக்கையாகத் தோன்றியது.

''உனக்கிருக்கிற ஆசையினாலே அவனுக்கு உலகத்தையே காட்டிப்பிடணும்னு இருக்கு'' என மாமியார் பரிகாசமாக மொழிந்ததைக் கேட்ட அம்புஜம், ''இல்லை மாமி, இவன் அப்பாவைப் போல படுசுட்டி; அதுக்குள்ள எத்தனை சூது தெரியுங்களா?'' எனத் தாய்க்குரிய புகழ்ச்சி தொனிக்கப் பேசினாள்.

''ஆமாம்! போக்கிரிப்பயலுக்கு அம்மா, பாட்டி எல்லா வித்தியாசமும் தெரிஞ்சிருக்கு. நீ இருந்தேன்னா எங்கிட்ட அவனுக்கு லட்சியமே கிடையாது'' எனச் சிரித்தாள் பெருமையுடன் புவனேஸ்வரி.

அது சமயம் வீட்டு வேலைக்காரன் அங்கு வந்து ''சின்ன அம்மா! உங்களைத் தேடிக்கிட்டு, ஒரு அம்மா வந்திருக்காங்க. முன் வீட்டுலே குந்தியிருக்காங்க'' என்றான்.

குழந்தையை மாமியாரிடம் கொடுத்து விட்டு ஆவலுடன் ஓடிய அம்புஜம், யாரோ ஒரு ஸ்திரீ நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு சற்று பிரமித்து போனாள்.

அம்புஜம் தன்னை எதிர்ப்பார்க்கவில்லை என அறிந்து, வந்தவள் எழுந்திருந்து புன்னகையுடன் ''தாங்கள்தான் ஸ்ரீமதி அம்புஜம் ராமநாதரோ?'' எனக் கேட்டாள்.

அம்புஜம் பதிலுக்கு மரியாதையாக, ''ஆமாம் நீங்கள்?'' என இழுத்தாற்போல் கேட்டு விட்டு சோபாவில் அமர்ந்தாள்.

''என் பெயர் மிஸ் ஹேமலதா. கோமதி வித்தியாலயத்தில் உபாத்தியாயினி வேலை பார்க்கிறேன். உங்களிடம் ஒரு தயவைக் கோரி வந்திருக்கிறேன்'' என முறுவலித்தாள் ஹேமலதா.

''அப்படியா? சந்தோஷம்? உங்களை நான் இதற்கு முன் பார்த்ததேயில்லை' என அம்புஜம் ஏதோ மரியாதைக்குச் சொல்ல வேண்டுமெனக் கூறி வைத்தாள்.

''ஆமாம் பார்த்திருக்க முடியாது. நானே ஊருக்குப் புதிது. உங்களிடம் வந்த காரணமென்னவென்றால் எங்கள் பள்ளிக்கூடத்தில் பரிசு வழங்கும் நாளைக் கொண்டாட உத்தேசித்திருக்கிறோம். அதற்குத் தாங்கள் தலைமை வகித்துக் குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்க வேண்டும் என்பது எங்கள் அவா'' என மிகவும் வினயமாக மொழிந்தாள்.

அழகு தேவதையே வெளிப்புறப்பட்டு விட்டாள் எனக் கூறும் படியான ஹேமலதாவின் மோகன வடிவத்தையும் அவள் வாயினின்று எழுந்த இனிய சொற்களில் ததும்பி நின்ற வினயத்தையும் கண்ட அம்புஜத்திற்கு அவள் மீது மகத்தான மரியாதை ஏற்பட்டு விட்டது. சாதாரண ஸ்திரீயான தன்னை ஒரு உயர்தரப் பள்ளிக் கூடத்தின் பரிசு வழங்கும் கொண்டாட்டத்திற்கே தலைமை வகிக்கக் கேட்டது கிடைத்தற்கரிய பெருமைதான் என்று உள்ளூர உவகையடைந்த அம்புஜம், ''எனக்கு அதைப் பற்றி ஆக்ஷேபணை இல்லை. அவர் என்ன சொல்வாரோ என்றுதான் யோசிக்கிறேன்'' என்று முளகினாள்.

ஹேமலதா பதிலுக்கு வெண்கலச் சிரிப்பொன்றைச் சிரித்தாள். ''வேடிக்கை! நீங்கள் படித்தவர்கள்தானே? உமது கணவர் உங்களது



சொந்த விஷயங்களில் தலையிடாத பரந்த நோக்கமுடையவராகத் தானிருக்க வேண்டும் என்பது என் எண்ணம். மேலும் எங்கள் பள்ளிக்கூடம் பெண்கள் பள்ளிக்கூடந்தானே?'' என உல்லாசமாகப் பேசினாள்.

''என் கணவர் அப்படியொன்றும் என் சுதந்திரங்களைப் பறிக்கும் குறுகிய நோக்கமுடையவரில்லை. இருந்தாலும் ஒரு வார்த்தை அவரைக் கேட்டுவிட்டே ஒப்புக் கொள்கிறேன். அதனால் அவரை நான் கௌரவிப்பதாகவும் இருக்கும். அவர் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை. வரும் நேரம்தான். ஐந்து, பத்து நிமிஷங்களில் வந்து விடுவார். அதுவரை நீங்கள் இங்கே இருக்க ஆக்ஷேபணை இல்லையென்றால்...'' என அம்புஜம் முடிப்பதற்குள் ஹேமலதா, ''எனக்கு ஆக்ஷேபணை இல்லை. உங்கள் வேலைதான் என்னால் கெட்டுப் போகும்'' எனப் பல்வரிசை தோன்றச் சிரித்தாள்.

''எனக்கு வீட்டில் வேலையொன்றும் கிடையாது. சாப்பிடுவதும் தூங்குவதுந்தான் வேலை'' எனப் பதிலுக்குப் பரிகாசமாகக் கூறிவிட்டு, வேலைக்காரப் பையனை அழைத்து, ''சமையற்கட்டுக்குப் போய்க் காப்பி பலகாரம் எடுத்து வா, போ!'' என உத்தரவிட்டாள்.

ஹேமலதா வீண் தொந்தரவு எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கூறியதை ஆட்சேபித்து, ''நன்றாயிருக்கிறது! எங்கள் வீட்டிற்கு முதல் தடவையாக வருகிறீர்கள். காப்பி கூட அருந்தாமல் போவது அழகா?'' என அம்புஜம் வெகுளியாகக் கேட்டாள்.

''உங்களுடைய மேன்மையான நட்பு ஒன்றே போதும். அதன் மூலம் உங்கள் கிரகத்திற்கு அடிக்கடி வர பாக்கியம் கிடைத்தால் அதுவே என் மனத்திற்கு ஆனந்தமளிக்கும் விஷயம்'' எனப் பகட்டாக ஹேமலதா கூறியதும் அம்புஜம் சந்தோஷமடைந்தவளாய் வேலைக்காரன் கொண்டு வந்து வைத்துப் போன காப்பியை எடுத்து அவளுக்களித்து உபசரித்தாள்.

அவள் கணவன் ராமநாதன் வியர்வை வழியும் நெற்றியைத் துடைத்துக் கொண்டு அப்போது உள்ளே வந்தான். தன் மனைவியுடன் பேசிக்கொண்டிருந்த அந்நிய ஸ்திரீயைக் கண்ட அவனுக்குக் கால்கள்

தரை மீதிருந்து பெயர்க்க முடியாது தான் சிலையாகி விட்டதைப் போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அம்புஜம் புன்னகையுடன் அவன் பக்கம் திரும்பி, ''இவர்தான் மிஸ் ஹேமலதா. கோமதி வித்தியாலயத்தின் உபாத்தியாயினி'' என அறிமுகம் செய்துவிட்டு அவள் வந்திருந்த விஷயத்தைக் கூறினாள்.

''சந்தோஷம்! அம்புஜத்தை நீங்கள் இவ்வளவு தூரம் கௌரவப்படுத்தி அழைத்ததற்கு வந்தனம்!'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டுத் தனக்கு வேலையிருப்பதாகச் சொல்லி உள்ளே சென்று விட்டான் அவன்.

ஹேமலதா போன பிறகு, தன் கணவனைத் தேடிக் கொண்டு தோட்டத்திற்கு வந்த அம்புஜம், ''ஏன் நீங்கள் கடுமையாகப் பேசினது போலத் தென்பட்டதே. உங்களுக்கு நான் அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வது பிடிக்கவில்லையோ?'' எனக் கவலையுடன் வினவினாள்.

''ஹேமலதா என்பவளைப் பற்றி நான் பல கேள்விபட்டிருக்கிறேன். உன் சிநேகிதத்திற்கு அவள் அருகதையற்றவள். இந்தத் தடவை நீ கொண்டாட்டத்திற்குப் போய் வா. ஆனால், இனி இவளை இந்த வீட்டிற்குள் விடாதே!'' என்றான் கண்டிப்பாக.

என்றுமே கோபங்கொள்ளாத தன் சாந்த குணக் கணவன் ருத்திர மூர்த்தியாக இருப்பதைப் பார்த்து அம்புஜம் ஆச்சரியமடைந்தாள்.

# 26

தலையை வாரிவிட்டு சுத்தமான சட்டையொன்றை போட்டுக் குழந்தை ராஜுவை அழகுபடுத்திய சந்திரா அவனை அன்புடன் அணைத்துத் தன் மடிமீது உட்கார வைத்துக் கொண்டாள்.

பத்து நாட்களாகத் தாயாரை விட்டிருந்த ராஜு சந்திராவிடம் மிகவும் நேசங்கொண்டு, ''சித்தி! சித்தி!'' என்று உரிமை கொண்டாட



ஆரம்பித்து விட்டான். ''குழந்தைகளும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்... பாரேன்! நீதான் சாதம் போடணும், நீதான் தலைவாரணும்னு ஆரம்பிச்சுட்டானே ராஜு!'' என்று காமாக்ஷியம்மாள் மருமகளுக்கு நற்சாட்சி பத்திரமளித்து விட்டாள்.

தன் சொந்த தாயார் ஊரிலிருந்து திரும்பிவிட்டதைக் கூட ராஜு லட்சியம் பண்ணவில்லை. மேலும் அலமேலுவும் சுபாவத்தில் சுத்தச் சோம்பேறி. தன் பிள்ளையைச் சந்திரா கவலையெடுத்துக் கொண்டு குளிப்பாட்டித் தலைவாரி சாதம் ஊட்டிக் கவனித்துக் கொள்வதைப் பார்த்து, 'சரிதான், தொந்தரவு இல்லை' என்று கவலையற்றிருந்தாள் அவள்.

ராஜுவுக்கு வயது நான்கு ஆகிக்கொண்டிருந்தது. குறுகுறுப்பான முகம் அவனுக்கு. பளிச் பளிச்சென்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டும் சதா விஷமம் செய்து கொண்டுமிருக்கும் அவன் சுபாவத்தைக் கண்டு அவன்மீது சந்திராவுக்கு மகத்தான ஆசை பிறந்துவிட்டது.

சித்தியின் மடிமீது உட்கார்ந்திருந்த ராஜு எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் பிரதிபிம்பம் தெரிவதைக் கண்டு ''சித்தி, அதோ பார் இன்னொரு சித்தி, இன்னொரு ராஜு!'' எனக் களிப்புடன் ஆர்ப்பரித்தான்.

ராஜு காட்டிய தங்களுடைய பிரதிபிம்பங்களைச் சந்திரா கவனித்தாள். மடியிலே வைத்திருந்த குழந்தையின் முகம் மாறுபட்டிருந்ததை போன்ற பிரமை ஏற்பட்டது அவளுக்கு.

மடியிலேயே வீற்றிருக்கும் குழந்தைக்குத் தானே தாயாகவும், ஜகந்நாதன் தந்தையாகவும் இருந்தால்? — என்று நினைவு ஓடியது. சிறிது நேரம் அந்தச் சிந்தனைகளிலேயே அசைவற்று உட்கார்ந்து விட்டாள்.

தனது அந்தராத்மா புனைந்த கனவினின்று சந்திரா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். வெட்கமடைந்தவளாய் மடிமீதிருந்த ஓரகத்தியின் மகனை இறுக அணைத்துக் கொண்டு, ''இரண்டு சித்தி, இரண்டு ராஜு இல்லையடா. கண்ணாடிதான் நம்முடைய உருவத்தைக் காட்டுகிறது'' என்று விளக்கிக்கூற ஆரம்பித்தாள்.

ராஜு விஷயம் புரியாது விழித்தவன் மேலே பல கேள்விகளைக்

கேட்க ஆரம்பித்தான். சந்திராவும் சலிக்காமல் பதிலளித்துக் கொண்டே வந்தது அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. ''சித்தி! நீ ரொம்ப நல்ல சித்தி'' என ஆர்வத்துடன் கூறித் தன் சிறு கைகளால் அவளது கன்னத்தை வருடினான்.

''போக்கிரிப் பயலே! நன்னா காக்கா பிடிக்க இந்த வயதிலேயே தெரிஞ்சுண்டு இருக்கிறாயே! பிழைச்சுடுவே போ'' எனக் கொஞ்சிக் கொண்டிருந்தவள் கணவன் வரும் காலடிச் சப்தம் கேட்டுக் குழந்தையைக் கீழே இறக்கி விட்டாள்.

ஜகந்நாதன் உள்ளே நுழைந்தவன் மிக்க களைப்புடன் தோன்றினான். அரும்பு அரும்பாக அவன் நெற்றிமீது படிந்திருந்த வியர்வையைக் கண்ட சந்திராவின் மனம் நெகிழ்ந்தது. களைத்து வீடு திரும்பும் தன் கணவனுக்கு இத்தனை நாளாகத் தான் அளித்த சுகம் என்ன என்று தன்னையே நொந்து கொண்டாள்.

தொப்பென்று சோர்வு மிகுதியால் உட்கார்ந்து கொண்ட ஜகந்நாதன், ''சந்திரா! நாளை இரவு நான் ஆபீஸ் விஷயமாகச் சென்னைக்குப் போக வேண்டும். வர இரண்டு வாரங்களாகும்'' என்றான்.

'என்ன விஷயமாகச் சென்னைக்குப் போக வேண்டும்?' என்று விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலினால் சந்திரா துடித்தாள். ஆனால் அதுவரை அவள் ஜகந்நாதனிடம் பழகிவரும் முறை நினைவுக்கு வரவே அவனது வாழ்க்கை இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளத் தனக்கு உரிமை ஏது என்றே தோன்றியது.

ஆகவே அதைவிட்டுவிட்டுத் துணிவுமிக்க குரலில் ''உங்களுக்கு வேண்டிய சாமான்களைச் சொல்லுங்கள். பெட்டியில் தயாராக எடுத்து வைக்கிறேன்'' என்றாள்.

ஜகந்நாதன் அவள் முகத்தைக் கூர்ந்து ஒரு நிமிஷம் நோக்கினான். முகத்திலே பிரதிபலித்த உணர்ச்சியின் வேகத்தை அவன் அறிந்து கொண்டுவிடப் போகிறானோ என்ற பயத்தில் சந்திரா சட்டென்று தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''என் விஷயங்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? நான்தான் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்?'' ஏக்கம் தொனிக்கும் குரலில் ஜகந்நாதன் பகர்ந்ததைக் கேட்ட சந்திரா மனம் புண்பட்டவளாய்,



''தெரிந்தவரை நானே செய்கிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம்'' என பளிச்சென்று பதிலளித்தாள்.

''ராஜு'', சித்தப்பாக்கிட்டே உட்கார்ந்திரு விஷமம் பண்ணாமல்!'' எனக் குழந்தையிடம் கூறிவிட்டு மற்றக் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

மறுநாள் பொழுது விடியும் போதே வீட்டில் ஏக அமர்க்களம். சமையல்கார அம்மாள் சேஷியைத் தேள் ஒன்று கொட்டி விடவே அதனால் அந்த அம்மாள் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தாள்.

காலை காப்பி போட்டாக வேண்டுமென்ற கவலையினால், இரண்டு நாளாகத் தள்ளவில்லை எனக் குறை சொல்லிக் கொண்டிருந்த காமாக்ஷியம்மாள் அடிக்கொரு தடவை முழங்காலைத் தடவிக்கொண்டு சமையற்கட்டில் இங்கும் அங்கும் வகை தெரியாது சுற்றி வந்தாள்.

அந்தப் பக்கம் வந்த பாலகிருஷ்ணன், ''ஏம்மா? உன்னால் முடியாவிட்டால் போகட்டும். அவளுக்குக் கூடத் தலைவலியாம். ஏன் நீங்கள் எல்லாம் கஷ்டப்படணும்? ஹோட்டலிலிருந்து இன்னிக்கு எல்லாம் தருவித்துக் கொண்டால் போச்சு'' என்றான்.

ஜகந்நாதன் அன்றிரவு சென்னைக்குப் பிரயாணமாகிறான். ஊருக்குப் போகும் தினத்தன்று அவனுக்கு வீட்டில் சாப்பாடு இல்லை என்றால் வெட்கக்கேடு என வெகுண்ட சந்திரா தணிவான குரலில், ''கறந்த பாலும் டிகாஷனும் வீணாகப் போக ஹோட்டலில் காப்பி வாங்குவாங்களா? வேண்டாம் நான் இன்று எல்லாம் கவனித்து கொள்கிறேன்'' என்று மைத்துனன் காதில் படும்படி மாமியாரிடம் கூறினாள்.

பாலகிருஷ்ணன் பதில் பேசாது மாடிப்பக்கம் சென்றவன், ஊஞ்சலில் படுத்துக் கொண்டிருந்த அலமேலுவை நோக்கிக் கோபத்துடன் ''நீயும்தான் கூடப் போய் ஒத்தாசை செய்யேன். அவளே இன்னிக்குச் சமைக்கப் போறாளாம், நீ பேசாமலிருந்தா நன்னா இருக்காது'' என்று கடிந்து கொண்டான்.

''என்னால் இந்த வீட்டுக்கு சமைச்சுக் கொட்ட முடியாது. அவள் வேண்டுமானால் செய்யட்டும். எனக்குத் தலைவலி மண்டையைப் பிளக்கிறது'' என பிடிவாதமாக மறுத்த அலமேலு ஊஞ்சலினின்று

அசையவில்லை. உதட்டைப் பிதுக்கிவிட்டுப் பாலகிருஷ்ணன் அங்கிருந்து சென்றான்.

மாமியார் கூடமாட செய்த ஒத்தாசைகளையும் நிராகரித்துவிட்டு சந்திரா குதூகலமாகச் சமையல் செய்யும் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டு முனைந்தாள்.

ஜகந்நாதனுக்குப் பிடித்தவை உருளைக் கிழங்குக் கறி, டொமாடோ ரஸம், முருங்கைக்காய் சாம்பார் என்பது அவளுக்கு மனப்பாடம். ஆதலால் தனது சமையல் திறமை முழுவதையும் வெளிக்காட்டி மிக்க ஜாக்கிரதையுடன் ஒவ்வொன்றையும் தயாரித்தாள்.

புருஷர்கள் எல்லோரும் சாப்பிட வந்துவிட்டதும் அலமேலுவும் தன் கணவன் தூண்டுதலின் மேல் வேண்டா வெறுப்பாக ஓரகத்திற்குப் பரிமாறுவதில் உதவி செய்யச் சமையற்கட்டின் பக்கம் வந்தாள்.

''வேண்டாம், நானே கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் ராஜாவுக்கு சாதம் போடுங்கள். அவன் அவர்கள் எதிரில் உட்கார்ந்து சாதத்தை வாரியிறைப்பான்'' என்று சந்திரா உத்திரவிட்டதைக் கேட்ட அலமேலுவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

முன் கூடத்தில் சமையல் செய்தவைகளைப் பரப்பித் தயாராக வைத்தாள் சந்திரா. புடவைத் தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு தினமும் பழகியவள்போல் மருமகள் அழகாகப் பரிமாறுவதைக் கவனித்த நாகராஜய்யருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

''இன்னிக்கு சேஷியைத் தேள் கொட்டினதும் எனக்குத்தான் திகிலாப் போயிடுத்து. சாப்பாட்டு வாயில் மண்; என்ன பண்ணுகிறதுன்னு நினைச்சுண்டு இருந்தேன். நாட்டுப் பெண்ணுக்கு சமையல்கூடத் தெரியுங்கறது இன்னிக்குத்தான் புரிஞ்சது! சமையல் ஜோராயிருக்கே'' என ஹாஸ்யம் ததும்பப் புகழ்ச்சியாகக் கூறினார்.

''ஆமாம், அப்பா! சந்திரா மன்னி எல்லாத்திலேயும் கெட்டிக்காரி'' என்று தன் சுபாவப்படி சகுந்தலா சாப்பிட்டுக் கொண்டே உரத்த குரலில் கத்தினாள்.

சந்திரா நாகராஜய்யரை தன் மாமனார் என்பதை அறிவாளேயொழிய அவர் முன்பு தாராளமாக வந்ததில்லை. தான்



அத்தனை மரியாதை வைத்திருக்கும் மாமனார் தன்னைப் புகழ்வதைக் கேட்ட சந்திரா நாணமும் மகிழ்ச்சியும் அடைந்தாள்.

குனிந்த தலை நிமிராது சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜகந்நாதனைப் பார்த்துத் தந்தை பரிகாசமாக ''உன்னைத்தானே! உனக்குக் கறி வேணுமான்னுட்டு அவள் தட்டை வைச்சுண்டு நிற்கிறாளே, வேணும் வேண்டாம்னு சொல்லக்கூடாதா? இத்தனை நாள் கழிச்சும் உங்களுக்கு வெட்கமா வச்சிருக்கு?'' எனக் குஷியாகப் பேசினார். ஜகந்நாதன் பதிலுக்குச் சிரித்தானே ஒழிய ஒன்றுமே பேசவில்லை.

இது சமயம் தான் ஏதாவது பேசாவிட்டால் நன்றாக இருக்காது என எண்ணிய பாலகிருஷ்ணனும் ''இன்னிக்கு ரசம் படுஜோர்!'' எனப் புகழ்ந்தான். ஆனால் சமையற்கட்டின் வாயிற்படியில் நின்று கொண்டிருந்த அலமேலுவின் கண்களில் எழுந்த கோபக் கனலைக் கண்டதும் பயந்தவனாய் அத்தோடு நிறுத்திக் கொண்டான்.

அன்று முழுவதும் கணவனுக்கு செய்த சிசுருஷைகளில் மனம் மகிழ்ந்த சந்திரா தான் ஏதோ பெருங்கோட்டை ஒன்றைக் கட்டிவிட்டதாக இன்பமடைந்தாள்.

ஜகந்நாதன் மாடிக்கு வந்தபொழுது தயாராகப் பெட்டிப் படுக்கைகள் கட்டப்பட்டு வைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தவனாய் அதில் எல்லாம் இருக்கின்றனவா என்று பார்க்க முயற்சித்தான்.

அருகில் ஓடிவந்த சந்திரா, ''திறந்து பார்க்க வேண்டாம். என்னை நம்புங்கள், சீப்பு, கண்ணாடி, சோப்பு வரை சகல சாமான்களும் இருக்கின்றன. கவலை வேண்டாம்'' எனச் சற்று கேலியாகக் கூறினாள்.

பெட்டியை மூடிவிட்டு ஜகந்நாதன் அவள் அருகில் வந்தான். அவனது இதயம் திக்திக்கென அடித்துக் கொண்டது. அவளது இரு கரங்களையும் சட்டெனப் பிடித்துக்கொண்டு, ''சந்திரா! நீ ஒரு இனிய குணம் வாய்ந்த பெண். கசடனான என் கௌரவத்தை காக்க நீ எவ்வளவு கஷ்டப்படுகிறாய் என்பதை நான் உணர்வேன். உன் தூய உள்ளத்தில் எனக்கு இடமளிப்பது தகாதுதான்'' என்றான் உணர்ச்சியுடன்.

'என் இதயத்தில் தாங்கள் புகுந்து பல நாட்களாகி விட்டனவே?' என உண்மை நிலையை ஒப்புக்கொண்டு விட வேண்டுமென சந்திராவின் நெஞ்சம் ஒரு கணம் உணர்ச்சிவசத்தில் நினைத்தது. ஆனால் வார்த்தைகளுக்கு பதில் துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ளவே அவள் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றுவிட்டாள்.

ரயிலுக்குப் போகக் கிளம்பிய ஜகந்நாதனை சந்திரா வாயில் வரை வந்து வழியனுப்பினாள். காரில் ஏறிக் கொள்ளும்முன் யாரும் பார்க்காத சமயம் ஜகந்நாதன் அவள் பக்கம் திரும்பி, ''போயிட்டு வரேன், சந்திரா சமத்தாயிரு'' எனக் கூறியவன் அவளது கன்னத்தை லேசாக அன்புடன் தட்டினான். துக்கம், இன்பம் முதலிய பல உணர்ச்சிகள் ஒரே முட்டாகத் தன்னைத் தாக்கவே சந்திரா பேச சக்தியற்று அவன் கார் மறையும்மட்டும் பொம்மையைப் போல் செயலற்று நின்று கொண்டிருந்தாள்.

வாழ்வின் இன்பத்தையே ஜகந்நாதன் பிரிவால் இழந்து விட்டதைப் போன்றதொரு ஏக்கம் தன்னுடைய நெஞ்சை அமுக்குவதைச் சந்திரா அப்போது உணர்ந்தாள்.

# 27

சில நாட்களாகத் தனது கணவன் ராமநாதன் சரியாக முகம் கொடுத்துப் பேசாமல், சதா சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பதைக் கவனித்தாள் அம்புஜம்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?'' என்று அவள் வருந்திக் கேட்பதற்கெல்லாம் ராமநாதன் பதிலளிப்பதே கிடையாது. 'ஒன்றுமில்லை' என மழுப்பிவிடுவான். அது அம்புஜத்தின் மனத்தை நோகச் செய்தது. ஏதாவது உத்தியோக விஷயமான வேலையாக இருக்குமோ என்று பல தடவைகளில் தன்னையே தேற்றிக் கொண்டிருந்தாள்.



வாழ்க்கையென்பது ரோஜா இதழ்களால் நிறைந்த மிருதுவான பாதை என்று கனவு கண்டு கொண்டிருந்த அம்புஜத்திற்கு அதில் முட்களும் நிறைந்திருக்குமென்ற உண்மை அப்போதுதான் புலப்பட்டது. செல்வத்திலே புரண்டு கொண்டு ஏழ்மை என்பதையே அறியாத அவள் தான் செய்த பூஜா பலத்தின் மகிமையால் நற்குணங்களின் உருவான கணவனை அடைந்தோம் என இறுமாப்புக் கொண்டிருந்தாள். அவனது தூய்மையான குணம் வேறு ஒருவருக்கும் இல்லை என்று அவனைத் தனது இதயப் பீடத்தில் மிக்க உயரத்தில் வைத்துப் பூஜித்து வந்தாள்.

இலட்சியம் என்பது கைகூடாத வஸ்து. அதைக் குறித்துக் கட்டும் ஆகாயக் கோட்டைகள் வீண், முடிவில் மனிதன் இலட்சியத்தை அடையாது தோல்வியின் துன்பத்தில் ஒரு சாந்தத்தின் எல்லையை அடைகிறான் எனப் பலர் சொல்வதைக் கேட்டிருந்தாள் அம்புஜம்.

தன் கணவன் விஷயமாக அவள் கட்டியிருந்த இலட்சியங்கள் வாழ்க்கையின் உண்மைக்கு விரோதமாகக் கிட்டிவிட்டது அவளுக்கு கரைகாணாத ஆனந்தமாக இருந்தது. அவள் கற்பனைக் கணவன் ஸ்தானத்தில் அமர, ராமநாதனுக்குச் சகல அம்சங்களும் இருந்தன. ராமநாதனுடன் ஆரம்பித்த சுவர்க்க வாழ்க்கையின் முடிவைத் திடீரென அவள் சமீபித்து விடுவாள் என்று கனவில்கூட நினைக்கவில்லை.

அம்புஜத்தின் மனத்தில் ராமநாதனுக்குத் தெரியாத இரகசியங்கள் ஒன்றுமில்லை. ஆனால், அவனோ அவளுக்குத் தெரியாத ஏதோ இரகசியமொன்றை மறைத்து வைக்க முயலுகிறான். இல்லாவிடில் சதா பிரகாசமாயிருக்கும் அவன் வதனம் களை இழந்திருப்பதற்கும் சாந்த ஸ்வரூபியான அவன் சின்ன விஷயங்களுக்கெல்லாம், ருத்ர மூர்த்தியாவதற்கும் காரணம் என்னவாயிருக்கும்?

தன்னிடம் கூட மனம் விட்டுச் சொல்லக் கூடாத அந்த ரகசியம் என்ன? எதைப் பற்றியதாக இருக்கும்? ஏன் அவளிடமிருந்து மறைக்க வேண்டும்? — இதைக் கண்டுபிடிக்க அவள் பிரயாசை எடுத்துக் கொண்டாள். யோசித்து யோசித்து நொந்த அவள் கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தாள். அன்று அவனிடம் எப்படியாவது பேசி

விஷயத்தைக் கிரகித்து விடுவது என்பதுதான் அவள் தீர்மானம். அந்தத் தீர்மானத்துடன் அவள் அன்று ராமநாதனின் அறையின் பக்கம் வந்ததுமே திடுக்கிட்டாள்! அவ்வறையிலிருந்து எங்கேயோ அவளுக்குப் பழக்கமான ஒரு பெண் குரல் வந்து கொண்டிருந்தது. அதற்கு அவள் கணவன் பதில் சொன்னதும் ஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தது.

''ஹேமலதா! நீ நல்ல பெண்தானே? நான் சொல்வதைக் கேள்'' எனக் கொஞ்சும் குரலில் அவளுடைய கணவன் கூறியதைக் கேட்டதுமே அம்புஜத்திற்குத் தலை கிறுகிறுத்தது. அதற்கு ஹேமலதா பதில் கூறியது ஒன்றும் காதில் விழவில்லை. அவளுடைய மோகனச் சிரிப்பானது தனது வாழ்க்கையைத் தகர்க்கும் இடியென வெறுத்த அம்புஜம் துக்கம் தாளாதவளாய்த் திரும்பி ஓடினாள்.

தொப்பெனப் படுக்கை மீது விழுந்த அவளுக்குத் துக்கம் தாள முடியவில்லை. அவளது கற்பனையுலகில் ஹேமலதாவின் மயக்கம் தரும் வடிவத்தையும், அவளது வஞ்சகப் புன்னகையில் ராமநாதன் சொக்கி நிலை தடுமாறுவதையும் மானஸீகமாகச் சித்தரித்துக் கொண்டு மனம் சுக்கல் சுக்கலாக வெடிக்கும்படி அழுதாள். ஹேமலதாவை வீட்டிற்குள் கூட விடக்கூடாது என்று தனக்கு தடையுத்தரவு போட்ட கணவன் அவளுடன் சரசமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தது விந்தையினும் மிக்க விந்தைதான்.

தனக்குத் தலைவலி என சாக்குச் சொல்லிய அம்புஜம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. இரவு போஜனத்திற்கு பிறகு விஷயத்தைக் கேள்விப்பட்ட ராமநாதன் ஓடி வந்து, ''அம்புஜம், உனக்கென்ன உடம்புக்கு, அம்மா சொன்னாங்களே?'' என விசாரித்தான்.

''ஒன்றுமில்லை. தலைநோவு'' எனப் புளுகிக் கொண்டு வறண்ட சிரிப்பொன்றைச் சிரிக்க முயற்சித்தாள் சகதர்மிணி.

ராமநாதனுக்கு மேலே என்ன செய்வதென விளங்கவில்லை. குறுக்கும் நெடுக்குமாக அறையில் உலாவிக் கொண்டிருந்தான்.

அம்புஜம் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள். தானே பேசுவான் ராமநாதன் என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து முடிவில் அவளாகவே ஹேமலதாவைப் பற்றிக் கேட்டு விடுவதெனத்



தீர்மானித்தாள். அன்றுவரை அவர்களிடையே அன்பைத் தவிர வேறு எதுவும் குறுக்கிட்டதில்லை. ஏனோ இன்று வாயைத் திறக்குமுன் அவள் மனம் பயத்தினால் துடித்தது! நாக்கு புரளவும் மறுத்தது!

தைரியத்தையெல்லாம் வருவித்துக் கொண்டு அவள் மெதுவாக, ''இன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்து விட்டீர்களோ'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம்'' என ராமநாதன் சுருக்கமாக பதிலளித்தான். புதுமையானதொரு கடுமை அந்த வார்த்தையில் தொனித்ததைக் கண்ட அம்புஜம் பயந்துவிட்டாள்.

மேலே எப்படிப் பேசுவதென அவளுக்கு விளங்கவில்லை. ''ஹேமலதா எதற்கு வந்தாளாம்?'' என்று படக்கென்று கேட்டுவிட்டாள் கடைசியாக. பயத்தினால் அவன் பதில் கூறுமுன் நெஞ்சு துடித்தது. மனைவியின் முகத்தைக் கூர்ந்து கவனித்த ராமநாதனுக்கு அவளின் விழிக்கடையில் தயாராகப் பெருகிநின்ற கண்ணீர் வெள்ளம் புலப்பட்டது.

சட்டென அவன் வாய்விட்டுச் சிரித்தான். ஒரே எட்டில் அவளை அணுகி, ''அசடே! தலைவலி சங்கதி விளங்கிவிட்டது! அவள் பள்ளிக்கூடத்திற்கு ஏதோ பண உதவி வேண்டுமென வந்தாள். எனக்கு இஷ்டமில்லை. அதற்காகத் தாஜா செய்து அனுப்பினேன்'' என்று சொல்லிக் கொண்டே அன்புடன் அவள் முகவாயைப் பிடித்தான்.

அம்புஜத்தின் மனம் அதைக் கேட்டு சமாதானமடையவில்லை என்பது உண்மைதான். மிக்க தீவிரமாக ஒரு காலத்தில் வெறுத்த ஹேமலதாவுடன் அவன் சரளமாகப் பேசியதை அம்புஜம் தன் காதுகளாலேயே கேட்டாள். இருந்தாலும் நிலவின் குளுமையை நிகர்த்த அவனது ஸ்பரிசத்தின் மந்திர சக்தியில் தன் மதி மயங்கிவிட்டாள்.

தொட்டிலில் அழுத தன் குழந்தையை கவனிக்கும் நிமித்தம் கணவனது பிடியினின்று விடுபட்ட அம்புஜம் குழந்தையை சமாதானப்படுத்திக் கொண்டே அதன் முகத்தைக் கவனித்தாள்.

''எந்த ஏமாந்த ஸ்திரீயை மோசம் செய்ய நீ பிறந்திருக்கிறாயடா போக்கிரி!'' என்று தன் மகனைச் செல்லமாக தட்டிக் கொண்டே முணுமுணுத்தாள் அவள்.

# 28

வஸந்த நிலையத்துக் கோடி ஹாலில் ஊஞ்சல் மீது சாய்ந்து கொண்டிருந்த அலமேலு கோபத்தின் உருவமாயிருந்தாள். இரண்டு நாளாகப் பொங்கிக் கொண்டிருந்த அவள் ஆத்திரம் அன்று உச்ச நிலையை அடைந்துவிட்டது. காரணம் சமையற்காரியை தேள் கொட்டியதால் சந்திரா சமைத்த பிரமாதத்தைக் காக்காய், குருவி முதல் சகலரும் புகழ்ந்ததுதான்! நேற்று வந்த ஓரகத்தி சந்திராவை ராணிபோல் எல்லோரும் தூக்கி வைத்துக் கொண்டது அலமேலுவின் மனத்தில் பொறாமையைக் கிளப்பிவிட்டது.

காமாக்ஷியம்மாள், நாகராஜய்யர், சமையற்கார சேஷியம்மாள், சகுந்தலா, பங்களா வேலைக்காரர்கள் என்று ஒருவர் பாக்கியில்லாமல் அத்தனை பேருக்கும் அங்கே சந்திரா ஒருத்திதான் இருப்பதாகத் தோன்றியது. அலமேலுவை லட்சியம் செய்ய ஒருவருமே இல்லை. இதை எந்த ஓரகத்திதான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்!

எல்லாவற்றையும் அவள் சகித்துக் கொள்வாள். ஆனால், அவள் புருஷன் பாலகிருஷ்ணனும் தன் ஓரகத்தியின் குணாதிசயங்களை சமயம் வந்தபோதெல்லாம் உயர்த்திக் கூறியதுதான் அவளைப் பொறுமை இழக்கச் செய்துவிட்டது.

ஓரகத்தி தன்னைவிட எவ்விதத்தில் உயர்ந்தவள் என அவள் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்த அவள் கணவன், ''சேஷி இன்னிக்கு உருளைக் கிழங்கு கறி செய்திருந்தாள்; நன்னாவேயில்லை! அன்னிக்கு சந்திரா செய்திருந்த சமையலைப் போல...'' எனக்கூறி முடிப்பதற்குள் சர்ப்பம்போல் சீறியெழுந்தாள் அலமேலு.



''வெட்கமில்லையா உங்களுக்கு? சதா சர்வகாலமும் தம்பி பெண்டாட்டி புகழ்தானா? தூ!'' என முகவாய்க் கட்டையினால் தோளின் மீது இடித்துக்கொண்டாள்.

பாலகிருஷ்ணனுக்கு அவளது அதிகப் பிரசங்கித்தனம் வெறுப்பைத்தான் தூண்டியது. ''நான் சொல்வதில் தப்பு ஒன்றுமில்லை. சந்திரா உன்னைவிட எல்லாவிதத்திலும் கெட்டிக்காரிதான். ஏன் உன் சொந்த குழந்தையையே உனக்கு வளர்க்கும் பொறுப்புத் தெரியவில்லை. ஊருக்குப் போகணும்னு பெற்ற குழந்தையை அலட்சியமாய் அவளிடம் விட்டுவிட்டுப் போனாய். வந்த பிறகாவது கவனிச்சாயா? இன்றைக்கும்கூட உன் பிள்ளை அவளிடம்தான் இருக்கான். அவனைக் குளிப்பாட்டி, சாதம் போட்டு, விளையாட்டுக் காட்டித் தூங்க வைக்கிறது அவள் பொறுப்பாய்ப் போச்சு'' என்று துணிச்சலுடன் வெடுவெடுத்தான்.

அலமேலு கோபத்துடன் எழுந்து சரியாக உட்கார்ந்தாள் ஆசனத்தில். ''இதோ பாருங்கோ! அப்படியெல்லாம் ஒன்றும் பேசவேண்டாம். அவளுக்குக் குழந்தை மேலே பிரியம் என்று நினைச்சு, அவளிடம் இருந்தால் என்ன, எங்கிட்ட இருந்தால் என்னன்னு விட்டுவச்சேன்! குழந்தை வளர்க்கத் தெரியாது அப்படி இப்படின்னு நீங்க என்னை கொடுமையாய் பேசவேண்டாம்! அந்த மகராஜி வந்ததிலிருந்து நீங்க பித்துப் பிடிச்சுதான் அலையறேள்!'' எனக்கூறியவள் எழுந்து நின்றாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

''என்ன அம்மு பேத்தறே நீ! வீண் பழியா பேசாதே... இப்போ எங்கே கிளம்பறே? மணி ராத்திரி பதினொண்ணு ஆகப் போகிறது?'' என்று அதட்டினான்.

''எங்கேயோ போறேன் போங்கோ'' எனப் பொரிந்து தள்ளிய அலமேலு வெளியே சென்றாள் கோபமாக.

சந்திரா தன் மடியின் மீது வைத்துக் கொண்டிருந்த ராஜுவுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனந்தத்தில் அமிழ்ந்து கொண்டிருந்த ராஜு ஆத்திரமாக வந்து நின்ற தன் தாயை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை!

''இன்னுமா தூங்கலே அவன்?'' எனக் கோபத்துடன் கேட்ட அலமேலுவின் பதட்டமான சொற்கள் சந்திராவைத் திடுக்கிடச்

செய்தன. தலை நிமிர்ந்து நோக்கிய அவள் கண்களுக்குப் பத்திரகாளிபோல் அலமேலு காட்சியளித்தாள்.

''கதை சொல்லச் சொன்னான். கேட்டுக் கொண்டு தூங்கமாட்டேங்கறான்'' எனச் சந்திரா சொல்லி முடிப்பதற்குள், ''வாடா இங்கே களுதே; மணி பன்னிரண்டு மட்டும் முழிச்சிண்டு இருந்தா உடம்பு என்னத்துக்காகும்?'' என அதட்டினாள் அலமேலு.

தாயின் அதட்டலில் நடுங்கிப்போன ராஜு சித்தியின் கழுத்தைத் தன் சிறு கைகளால் அணைத்துக் கொண்டு, ''நான் சித்திக்கிட்டத்தான் இருப்பேன். உன்னோடு வரலை போ!'' எனப் பிடிவாதமாகக் கத்தினான்.

பெற்ற மகனின் அலட்சியத்தைக் கேட்டு தாயின் உள்ளம் பொறாமையில் கொதித்தது.

''அவன் இங்கேயே தூங்கட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்'' என சந்திரா பரிந்துகொண்டு பேசியதும், மேலும் கோபங்கொண்ட அலமேலு, ''போதும். கதை சொல்லி அவனைத் தூங்காது அடிச்சா உடம்பு என்னத்துக்காகும்? வாடா இங்கே!'' என ஒரே பாய்ச்சலில் தன் மகனை ஓரகத்தியின் மடியிலிருந்து குரூரமாக இழுத்தாள்.

''ஐயோ! நான் வரமாட்டேன்!... சித்தி, சித்தி!'' என ராஜு சந்திராவின் புடவையை விடாது பிடித்துக் கொண்டு கூச்சலிட்டதைக் கேட்ட சந்திரா வருத்தந்தாளாது, ''அவனை விடுங்கோன்னா!'' என இரக்கத்துடன் பரிந்துகொண்டு அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

''போதும்! பெற்றவள் பிள்ளையைக் கொலை பண்ணிடமாட்டா, விடு அவனை!'' என ஒரு பெரும் பாணத்தை அலமேலு வீசியெறிந்துவிட்டு, கத்திக் கூச்சலிட்டு ரகளை செய்த தன் மகனை இழுத்து முதுகில் படீரென ஒரு அறையும் வைத்தாள். சந்திரா அலமேலுவின் வார்த்தைகளால் புண்பட்டவள், அவள் செய்கையைக் கண்டு அரண்டுபோய் நின்றுவிட்டாள்.

''கழிசடைப் பிணமா, போ! நாசகாலா! இனிமேல் சித்தி கித்தின்னா முதுகுத் தோலை உரிச்சு உப்பைத் தடவ வேண்டியதுதான்!'' என, வீறிட்டுக் கதறிக்கொண்டிருந்த தனது பிள்ளையை குரூரமாகக் கடத்திச்சென்ற ஓரகத்தியின் கொடுமையான



சொற்கள் கணீரென சந்திராவின் காதுகளில் விழுந்தன.

ராஜு அலமேலுவின் பிள்ளை. அவனது அன்பை அடைய சந்திராவுக்கு உரிமை இல்லை. நினைத்துப் பார்த்த சந்திராவுக்குத் துக்கம் பீறிட்டெழுந்தது. ராஜுவை அவளிடம் ஓரகத்திதானே கொண்டுவந்து ஒப்படைத்துவிட்டுச் சென்றாள்! தாய் பிள்ளையை லட்சியம் செய்யாதிருந்தபொழுது சந்திரா அவனுக்குப் பாலூட்டி, சீராட்டிப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. குழந்தை சந்திராவிடம் அன்புகொண்டு பழக ஆரம்பித்தபோது திடீரென்று அலமேலு தான் தாய் என்ற உரிமையைப் பாராட்டிக் கொண்டு வந்துவிட்டாள்! சந்திரா தனக்குச் சொந்தமில்லாத ராஜு மீது பிரேமை கொண்டு என்ன பிரயோஜனம்? ஏன், உரிமை கொண்ட கணவனின் அன்பே அவளுக்குக் கிட்டாத வஸ்துவாகப் போய்விட்டதே! பிறர் மகனின் அன்புக்கு ஏங்குவதில் பயன் என்ன?

ஓரகத்தி முன் தனக்கேற்பட்ட தோல்வியினால் மனம் குன்றிப்போன சந்திரா ஜகந்நாதனை நினைத்துக் கொண்டாள். அவனது பிரிவை ராஜுவின் மழலையினால் மறந்திருந்தாள். ஜகந்நாதன் சென்னைக்குப் பயணமாகி இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. இதுவரை தான் போய்ச் சேர்ந்ததாக இரண்டே வரிகளில் அவன் எழுதிய ஒரு கடிதத்தைத் தவிர வேறு ஒருவிதமான தகவலும் அவனிடமிருந்து வரவில்லை. சந்திரா நினைத்து நினைத்து மனம் வெதும்பிப் போனாள். அன்யோன்யத் தம்பதிகளாயிருப்பின் ஜகந்நாதன் எத்தனை கடிதங்கள் எழுதியிருப்பான்? அவனது அன்பைத் தனது முரட்டுத்தனமான பிடிவாதத்தினால் இழந்துவிட்டோமே என்ற ஏக்கம் மனதை ஒடிக்க, சந்திரா முகத்தை கைகளினால் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் சந்திராவுக்கு தனது ஓரகத்தி முதல் நாள் இரவு தன்னிடம் மரியாதையின்றியும் கொஞ்சமும் நன்றியில்லாமலும் நடந்துகொண்ட தன்மை ஞாபகத்திற்கு வந்தது. கீழே சமையலறையில் சேஷியம்மாளுக்கு உதவி செய்து கொண்டிருந்த சந்திரா அங்கே வந்த அலமேலுவைப் பார்க்க நேரிட்டது. ரோஷம் மிகுந்த அவள் ஓரகத்தியிடம் சம்பாஷித்துத் தனது கௌரவத்தையும் தன் மதிப்பையும் இழக்க மனமின்றி அவளைக் கவனியாதவள் போலவே இருந்துவிட்டாள். அலமேலுவுக்குக்

குற்றம் தன் பக்கமிருப்பினும் ஓரகத்தியின் அலட்சியம் மனதைச் சுருக்கென்று தைத்தது.

சாயங்காலம் சந்திரா, தன் நாத்தனார் சகுந்தலா கொஞ்ச நேரம் 'கேரம்' விளையாட அழைத்ததை மறுத்து விட்டு, சோபா ஒன்றின் மீது படுத்துக் கொண்டிருந்தவள் ஜகந்நாதனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள்.

''சித்தி! சித்தி!'' என்ற மெல்லிய குரல் அவளது கவனத்தைக் கவர்ந்தது. வாசற்படியருகில் ராஜு நின்று கொண்டிருந்தான். அழுது, அழுது, அவனது அழகிய முகம் சிவந்து போயிருந்தது.

அவனைக் கண்ட சந்திராவின் இதயம் சந்தோஷத்தினால் துள்ளியது. ஆனால், ஓரகத்தியின் கொடுஞ்சொற்கள் ஞாபகத்திற்கு வர அவள் கடுமையாக அச்சிறுக் குழந்தையை நோக்கி, ''என்னடா வேணும்?'' எனக் கேட்டாள்.

எதிர்பாராத அவளது சினத்தைக் கண்ட ராஜுவின் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

பரிதாபமான முகத்துடன் நீர் தோய்ந்த கண்களால் அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

ராஜுவின் துக்கத்தைக் கவனித்த சந்திராவுக்கு அன்பு சுரந்தது. ஓடி அவனை அணைத்துச் சமாதானப்படுத்த வேண்டுமென்று ஒரு ஆசை உள்ளத்தில் எழுந்தது. ஆனால் மறுகணமே அவள் வாய், ''போடா சனியனே! உங்கம்மாவுடன் என்னால் பிடுங்கல் பட முடியல்லே!'' என எரிச்சலுடன் மொழிந்தது.

வேடிக்கை! சந்திராவின் கண்களில் ஏன் கண்ணீர் மறைத்துக் கொள்ள வேண்டும்! இரக்கமற்ற தனது கொடுமையான இதயத்தை நொந்து கொண்ட அவள் முகத்தை மறுபடியும் திருப்பிக் கொண்டாள். எத்தனை நாழி அவள் படுத்திருந்தாளோ தெரியாது. அவள் திரும்பி எழுந்து பார்த்தபோதும் வாயிற் படியில் ராஜு அசையாது பொம்மைபோல் தன் தயவிற்காகத் தபசு இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள்.

தன்னை மறந்து அவனை அணுகிய சந்திரா, ''ஏண்டா ராஜு இப்படி என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிறே? உங்கம்மா கோவிச்சுப்பாளேடா?'' எனக் கூறியவள் அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்!



''சித்தி! என்னோட நீ டூவா?'' எனக் கேட்டுக் கொண்டே ராஜு அவளை நோக்கிப் பரக்க விழித்தான்.

சந்திரா தன்னையும் மீறிச் சிரித்து விட்டாள். ''உன்னோட இல்லைடா கண்ணு! உங்கம்மாவோடதான் டூ!'' என அவனது மிருதுவான கன்னத்தைத் தன் முகத்துடன் அன்புப் பெருக்கில் அழுத்திக் கொண்டாள்.

''சித்தி 'ஆ' காட்டு, நோக்குன்னு கொண்டு வந்தேன்'' என ராஜு உத்தரவிட்டதும் சந்திரா வாயைத் திறந்தாள். தன் சிறு கையில் அடக்கி வைத்திருந்த, வியர்வையினால் உப்பேறியிருந்த சிறு மிட்டாய் ஒன்றை அவள் வாயில் சந்தோஷத்துடன் திணித்தான் ராஜு.

சின்னஞ் சிறு உள்ளத்தின் அன்பளிப்பான அந்தச் செய்கை சந்திராவின் மனதை உருக்கிவிட்டது. பேதைக் குழந்தையின் தளிர் மனதைத் தன் விஷச் சொற்களால் துன்பப்படுத்தி விட்டோமே எனப் பச்சாதாபமடைந்த அவள் ராஜுவை இறுக அணைத்துக் கொண்டாள். இரண்டு சொட்டுக் கண்ணீர் அவள் கண்களிலிருந்து உருண்டோடி ராஜுவின் கன்னத்தின் மீது விழுந்தது.

ஆனால், அந்த நிமிஷம் சந்திரா தன் மனதிலே பெரும் சாந்தி ஏற்பட்டதை உணர்ந்தாள். குழந்தையுடன் ஏற்படுத்திய சமாதான உடன்படிக்கையினால் மகிழ்ந்த அவள் அவனைக் கீழே இறக்கிவிட்டு, ''ஓடிப் போயிடு; உங்கம்மா கோபிச்சுப்பா! அப்புறமா வா?'' என எச்சரித்தாள். போக மனமின்றித் தயங்கித் தயங்கிச் சென்ற அவனையே கண் கொட்டாது ஆதரவுடன் பார்த்துக் கொண்டு நின்றாள் விசித்திரப் பெண் சந்திரா.

காலை விடிந்ததும் வாசலில் வந்து நின்ற கார் சப்தத்தைக் கேட்டு ஆவலுடன் ஓடிப்போய் வராந்தாவில் எட்டிப்பார்த்த சந்திராவின் உள்ளம் ஏமாற்றமடைந்தது! ஏனெனில், ஜகந்நாதன் மாடிப் பக்கமே வரவில்லை. கூட வந்த தன் முதலாளி சரபோஜியை உபசரித்து அவரது சௌகரியங்களைக் கவனித்துத் தன் பங்களாவில் தங்க ஏற்பாடு செய்யும் நிமித்தம் உடனே திரும்பிப் போக நேரிட்டது.

சென்னையிலிருந்து வந்திருந்த மற்றொரு முதலாளியான

சரபோஜியின் வரவு பங்களாவில் பரபரப்பை உண்டாக்கியது. நாகராஜய்யர் விழுந்தடித்துக் கொண்டு எட்டு மணிக்கே ஆபீஸுக்கு ஓடினார். பாலகிருஷ்ணன் காப்பி கூடச் சாப்பிடாமல் வேலைக்குப் புறப்பட்டு விட்டான்.

பகல் முழுவதும் ஜகந்நாதன் வீட்டிற்கு வரவில்லை. இரவு மணி பதினொன்றாகியும் வீட்டிற்கு மாமனார், மைத்துனர், கணவன் ஒருவரும் திரும்பாதது சந்திராவின் மனதை என்னவோ செய்தது. காரணமில்லாத கலக்கம் ஒன்று தன்னை வாட்டுவதையுணர்ந்த அவள் எதன்மீதும் விருப்பமில்லாமல் பங்களா வாயிற்புறத்தையே அடிக்கொரு தரம் பார்த்துச் சலித்துப் போய்ப் பயித்தியக்காரி போலாகிவிட்டாள்.

'கிர்' எனக் கடைசியாக இரவு மணி பன்னிரண்டிற்கு வீட்டிற்கு வந்த காரின் சப்தத்தைக் கேட்ட சந்திரா 'அப்பாடா' எனப் பெருமூச்சு விட்டாள்.

ஆவல் மிகுதியில் மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடி வந்தவள் ஹாலுக்குள் ருத்திரமூர்த்தி போல நுழையும் மாமனார் நாகராஜய்யரையும் பின்னால் கள்ளனைப் போலக் குனிந்த தலையுடன் வந்த பாலகிருஷ்ணனையும் கண்டவள் விஷயம் புரியாது சிறிது நேரம் திகைத்தாள்.

''தலையிலே கல்லைப் போட்டுட்டாண்டி உன் அழகுப் பிள்ளை?'' என அதுவரை தம் வரவிற்காகக் காத்திருந்த மனைவி காமாக்ஷியம்மாளை நோக்கிக் கர்ஜித்த நாகராஜய்யர் தலையில் படீரென அடித்துக் கொண்டு, தொப்பென்று ஒரு சோபாவில் உட்கார்ந்தார்.

''என்ன? என்ன ஜகந்நாதனுக்கு என்ன வந்துடுத்து?'' எனத் தாய் பதறினாள்.

''அவனுக்கு ஒரு வல்லடியும் வரலை! என் மானம்தான் கப்பலேறுகிறது! கம்பெனிப் பணத்தை லட்சம் வரை கையாடிவிட்டான்னு சரபோஜி கண்டுபிடிச்சு அவனைப் போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்துட்டான்!'' எனக் கூக்குரலிட்டார் அவர் உக்கிரமாக.

''என்ன! போலீஸ் வந்து பிடிச்சுண்டாளா?'' எனக் காமாக்ஷி அம்மாள் அலறினார்.



''இத்தனை நாழி அந்தக் கடங்கார சரபோஜியோட மாரடிச்சுண்டேன். ஒண்ணும் பிரயோஜனமில்லை. உன் பிள்ளையானால் என்ன, யாராயிருந்தால் என்ன, நியாயப்படிதான் நடப்பேன்னுட்டான். போலீஸ் வந்து உன் பிள்ளை கையிலே காப்பு போட்டு அழைச்சிண்டு போயிட்டா. குறைஞ்சது... ஏழு வருஷம் தீட்டிடுவான் தெரியுமா? பெத்தவயத்திலே...'' எனப் பல்லைக் கடித்தார் அவர் வயிற்றெரிச்சலுடன்.

வாயிழந்து ஸ்தம்பித்துப்போன எல்லோர் கவனமும் சட்டென மாடிப்பகுதியருகில் திரும்பியது. யாரும் உதவி செய்ய அருகில் வருமுன் சந்திரா மரக்கட்டையென மடாரென்று கீழே சாய்ந்துவிட்டாள்.

## 29

தன் எதிரே உட்கார்ந்திருந்த ஹேமலதாவைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் ராமநாதன். அஸ்தமிக்கும் வேளை. வீட்டிலிருந்த எல்லோரும் வெளியே போயிருந்தார்கள். அம்புஜம் புடவைக் கடைக்குப் போயிருந்தாள். தாயார் கோயிலுக்குப் போயிருந்தாள். ஆபீஸ் அறையிலேயே உட்கார்ந்திருந்த ராமநாதன் எதிரே மங்கும் சூரிய வெளிச்சத்திலே மின்னிக்கொண்டு உட்கார்ந்திருந்த அந்த வனிதையைப் பார்த்தான்.

அஞ்சனந்தோய்ந்த அவளது நயனங்கள் மயக்கத்தைத் தருவன எனினும், அவைகளிலிருந்து விஷக்கனல் எரிவது போலவும், தந்தத்தை நிகர்ந்த அவள் மேனியழகு சர்ப்பத்தின் மினுமினுப்பை போலவும் அவன் கண்களுக்குத் தென்பட்டன.

கடைசியில் ''உன் தீர்மானந்தான் என்ன?'' என மிகவும் ஆத்திரத்துடன் கேட்டான் ராமநாதன் அவளைப் பார்த்து. ''என் தீர்மானம் என்னவென்றால் உமது மனைவியிடம் விஷயத்தை சொல்லிவிட்டுப் போவது என்பதுதான்?'' என மெல்லச் சிரித்தாள் அந்த மோகினி.

கோபம் தாங்காத ராமநாதன் பல்லை நறநறவென கடித்தான். "ஹேமலதா நீ என்னுடன் விளையாடுகிறாய். நான் இந்த ஊரில் எப்படிப்பட்ட செல்வாக்குடையவன் என்பது உனக்குத் தெரியாது போலும்!" என்று கர்ஜித்தான்.

ஹேமலதா தன் அழகிய முகத்தை ஒரு முறை குலுக்கி விட்டு "அது தெரியும்? உங்களிடம் நான் விளையாட வரவில்லை. என் சகோதரியின் வஞ்சம் தீர்த்துக்கொள்வதன் பொருட்டே வந்தேன்!" என ஏளனமாகக் கூறினாள்.

"நடந்தது நடந்தாகிவிட்டது ஹேமலதா, இதோ பார்! நீ நல்ல பெண் அல்லவா? நான் கௌரவமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் மனைவி மிக்க உயர்ந்த இலட்சியங்கள் கொண்டவள்; என்னைத் தெய்வமெனப் போற்றுகிறவள்; அவளிடம் சொல்லி அவளது மனத்தை உடைத்துவிடாதே. நான் உன்னைக் கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன்" என மிகவும் பரிதாபமாகக் கேட்டான்.

ஹேமலதா பதிலுக்கு தன் அழகிய பல்வரிசை தோன்ற அலட்சியமாக நகைத்தாள். உங்கள் மனைவியின் மனம் உடைந்துவிடுமே என்று பாவம் எவ்வளவு கரிசனம்? என் சகோதரி மனம் புண்ணாகி உங்களுக்காகவே உயிரையே விட்டாளே, அப்பொழுது?" எனக் கேட்டாள். கொடூரமான நஞ்சைப் போன்ற அவளது சொற்கள் ராமநாதன் உள்ளத்திலே சுருக்கென்று தைத்தன.

"நான் என்ன செய்யட்டும் ஹேமலதா? என் பெற்றோர்கள் கலப்பு மணத்தை ஆதரிக்கிறவர்கள் இல்லை. அதனால்..." என இழுத்தாற்போலக் கூறினான்.

"பெற்றோர்களுக்கு அடங்கிய பிள்ளையான உங்களுக்கு ஒரு பெண்ணிடம் காதல் நாடகம் நடத்த என்ன உரிமை இருந்ததோ!" எனக் கடுமையாகக் கேட்டாள்.

"எனது சுதந்திரத்தின் அளவு தெரியாது நான் அந்தக் காலத்தில் நடந்துகொண்டேன். அது தவறுதான்" என மெதுவாகச் சொன்னான் ராமநாதன்.

"தவறுதான் என இன்று அதைப்பற்றி மழுப்பிவிட்டால் போதுமா, ஐயா! நன்றாக யோசித்துப்பாரும், எனது சகோதரியை மணந்துகொள்வதாகக் கூறிவிட்டு அவளுடன் உல்லாசமாக



உலாவினீர்கள். பம்பாயில் உங்களை அறியாத ஜனங்கள் இல்லாதபடி உங்களது காதலின் மேன்மையைப் பறையறைவித்து கொண்டீர்கள். கடைசியில் நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும், இன்னும் உங்கள் தந்தை கலப்பு மணத்தைவெறுப்பவர் என்றும் அவளை நிராகரித்துவிட்டு அங்கிருந்து ஓடி வந்து விட்டீர்கள். சொந்த ஊருக்குத் திரும்பிய நீங்கள் ருத்ராக்ஷப்பூனை வேஷம் போட்டுக்கொண்டு உங்கள் பெற்றோர்களின் மனத்திற்கு இஷ்டமான வேறு ஒரு பெண்ணை மணந்துகொண்டீர்கள். இன்று நீங்கள் நற்குணம் கொண்ட நகர கனவான். உத்தமத் தந்தை... இல்லையா?" என மிகவும் ஏளனமாகக் கேட்டாள்.

அவளது பாணங்கள் போன்ற சொற்களினால் ராமநாதன் பேசச் சக்தியற்றுப் போயிருந்தான். பிறகு மெதுவாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு, 'ஹேமலதா உன் சகோதரியும் யாரையாவது விவாகம் செய்து கொண்டிருக்கலாமே! நான் தடுக்கவில்லையே?" என மென்று விழுங்கினான்.

ஹேமலதா கோபமாகச் சிரித்தாள். "நடிப்பதில் உம்மைவிடக் கைதேர்ந்தவர்கள் இல்லையென்று நினைக்கிறேன். ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்ட உங்களுக்கு உலகப்போக்கு கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். புருஷன் ஒருவன் எவ்வளவு கெட்டவன் எனப் பெயர் வாங்கி விட்டாலும் அவனுக்கு மணந்துகொள்ளச் சுதந்திரமுண்டு. ஆனால், அபக்யாதி அடைந்த ஸ்திரியை மனைவியாக ஏற்றுக்கொள்ள எந்தப் புருஷன் துணிவான்? ஏன் உமது மனைவியிருக்கிறாளே அவள் பெயர் அபக்யாதியினால் சூழப்பட்டிருந்தால் நீர் மணந்துகொள்ளத் துணிந்திருப்பீரா?" என மூச்சுவிடாது பேசி முடித்தாள் ஹேமலதா.

"ஹேமலதா, உன் சகோதரிக்காக நான் வருத்தப்படுகிறேன். தற்போது அதைத் தவிர என்னால் வேறு என்ன செய்ய முடியும்? உன்னை மிகவும் வேண்டிக் கொள்கிறேன். எனது சந்தோஷக் குடும்பத்தைக் கெடுக்காதே!" எனக் கெஞ்சினான் ராமநாதன்.

"உமது புது மனைவியிடம் காண்பிப்பதற்காக என் சகோதரிக்குத் தாங்கள் எழுதிய கடிதங்களைக்கொண்டு வந்திருக்கிறேன். என் வாழ்வில் நான் எடுத்துக்கொண்ட சபதம் உமது வாழ்வைக்

குலைப்பது என்பதே!'' எனக் கூறிவிட்டு எழுந்தாள்.

சட்டெனத் தனது மேஜையைத் திறந்து செக்புத்தகம் ஒன்றை வெளியே எடுத்த அவன், ''ஹேமலதா உனக்கு வேண்டிய பணம் எவ்வளவு என்று கேள். தருகிறேன். தயவு செய்து என் வாழ்வை நாசமாக்காதே'' என கெஞ்சினான்.

''வேடிக்கை! நாங்கள் ஏழை என்பது உண்மைதான். ஆனால், எங்கள் கௌரவத்தைத் தங்கள் பணத்தால் விலைக்கு வாங்கமுடியாது'' என முகத்தை வலித்த அவள் வெளியே போகத் திரும்பினாள்.

''என் குடும்பத்தை கலைக்க முற்பட்டால் உன் வாழ்வை நாசமடிக்க என்னால் முடியும் தெரியுமா? நீ நாகலிங்கத்துடன் சிநேகமாக இருப்பதை நான் அறிவேன். ஒரு நிமிஷத்தில் உனது வேலையைப் போக்கி ஊரைவிட்டுத் துரத்த என்னால் முடியும்'' என ஆக்ரோஷத்துடன் மிரட்டினான் ராமநாதன் கடைசியாக.

ஹேமலதா பதிலுக்கு கலகலவென்று சிரித்தாள்.

''உம்மால் முடியாது. நான் என் வேலையை மூன்று நாட்களுக்கு முன்பே ராஜிநாமா செய்துவிட்டேனே? இன்னும் சில நாட்களில் நான் நாகலிங்கத்தின் மனைவியாகப் போகிறேன் என்பதைக் கேட்டால் தாங்கள் மூர்ச்சையடைவீர்கள்!'' எனப் பரிகாசமாக கூறியவள் மிடுக்காக வெளியேறினாள். ஹேமலதாவின் துணிச்சலைக் குறித்து பயந்துபோன ராமநாதன் கவலை மிக்கவனாய்த் தன்னை மறந்து உட்கார்ந்துவிட்டான்.

''உங்களைத் தேடித் தேடிக் கால் ஓய்ந்து போய்விட்டது. இந்த கலர்ப் புடவை உங்களுக்கு பிடிக்கிறதா பாருங்கள். விலை நூற்றைம்பதுதான். எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்'' எனக் கொஞ்சலாக மொழிந்து கொண்டு வந்து நின்ற சகதர்மிணி அம்புஜமாவது கையிலிருந்த புடவையின் அழகாவது ராமநாதனின் கண்களில் படவில்லை.

''என்னமோ கேட்கிறேன். பதில் சொட்ட மாட்டேன் என்கிறீர்களே!'' எனச் செல்லமாக அவன் தோளைக் குலுக்கினாள் அம்புஜம்.



''ஜுரம் வரும்போல உடம்பை என்னவோ செய்கிறது'' எனப் பெரும் பொய்யொன்றைச் சொன்னான் அவன்.

# 30

சந்திரா கண்களை விழித்துப் பார்த்தாள். கருணையின் வடிவம் போன்ற காமாக்ஷியம்மாள் ஏக்கம் மிகுந்தவளாய்த் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்தாள். தான் தன் அறையில் படுத்திருப்பதையும் பக்கத்தில் மாமியார் கவலையுடன் உட்கார்ந்திருப்பதையும் அவள் புத்தி கிரகித்து கொண்டது. மேலே யோசனை செய்த அவள் மூளையில் எல்லாச் சம்பவங்களும் ஞாபகத்திற்கு வந்தன; ஜகந்நாதன் கைது செய்யப்பட்டான் என்ற அந்தப் பயங்கரமான வார்த்தைகள் கனவல்ல, உண்மையே என அவள் மனம் எடுத்துக் கூறியது.

படுக்கையினின்று சட்டென்று எழுந்து உட்கார்ந்த அவளைப் பார்த்த காமாக்ஷியம்மாள், ''சந்திரா! படுத்துக்கோ. ராத்திரி முழுவதும் தூங்கவேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்'' என்று பரிவுடன் சொன்னாள்.

''அம்மா, இப்போ மணி என்ன?'' என ஆவலுடன் கேட்டாள் சந்திரா.

''மணி மூணு இருக்கும்'' என்று காமாக்ஷியம்மாள் கூறியதைக் கேட்ட சந்திரா திடுக்கிட்டாள். மூன்று . மணி வரை தூங்கியிருக்கிறோமே என்று வெட்கம்! காதல் கணவன் காராக்கிரகத்தில் அவதிப்பட்டுக் கொண்டு மன்வேதனையுடன் என்ன செய்கிறானோ என்று கொஞ்சமும் கவலைப்படாமல் தூக்கம் வந்து தன்னைக் கௌவிக் கொண்டதே எனத் தன்னையே நொந்து கொண்டவள், ''அம்மா! அவரை நிஜமாகவே 'அரஸ்ட்' பண்ணிவிட்டாளா?'' எனக் கேட்டாள். துக்கத்தினால் அவள் தொண்டை கம்மியது.

''ஆமாம்; நிஜந்தான்!'' என்றாள் மாமியார்.

''ஏழு வருஷம் ஜெயில் வாசம் கிடைக்கும் என்று அப்பா சொன்னாரே, ஐயோ! நான் என்ன பண்ணுவேன்!'' எனத் துக்கத்துடன் மொழிந்த சந்திரா புடவைத் தலைப்பில் முகத்தை மறைத்துக்கொண்டு விம்மினாள்.

காமாக்ஷியம்மாளின் பெற்ற உள்ளம் வேதனையினால் குமுறியது. கண்களில் நீர் மாலை மாலையாய் வழிய, துயரம் நெஞ்சைப் பிளக்கத் தன் ஆசை மருமகளை சிறு குழந்தை போல் அணைத்துக்கொண்டு, ''எனக்கும் தெரியலையே, நான் என்ன பண்ணுவேன்?'' என்று புலம்பினாள்.

சந்திராவின் அழுகை பலப்பட்டது. ஜகந்நாதன் மீது கரை காணாத காதலுடன் இனியாவது வாழ்வின் இனிமையைப் பருக வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவளது நம்பிக்கையை, பெரும் புயலொன்று அடித்துக் கொன்றுவிட்டது. சந்திராவுக்கு கதி மோட்சம் இனி ஏது?

ஜகந்நாதனின் பிரிவால் நிமிஷத்தை யுகமாக உணரும் சந்திரா அவனை ஏழு வருஷங்கள் பிரிந்திருக்க நேரும்! ஏழு யுகமானால் என்ன? சந்திரா அவனை நேசிப்பாள்! ஆனால் அவன்...? சந்திராவை ஒவ்வொரு நாளும் வெறுப்பான். தனது வாழ்க்கையைத் துன்பமயமாக்கிய பொம்மை - மனைவி சந்திராவை அவன் வெறுக்காமல் எப்படி நேசிக்க முடியும்? மனைவியை நினைக்கும் பொழுதெல்லாம் அவன் மனம் கசப்பாகி நொந்து போகும். திரும்பி வரும் காலத்திலும், அவன் மனம் வெறுத்துச் சந்திராவை ஒருக்கால் மறந்துவிட்டாலும் விடக்கூடும்.

சுருண்ட கிராப்புத் தலையை அழகாக வாரிவிட்டுக் கொண்டு மடிப்புக் கலையாத உடையில் உலவி வந்த மன்மதனையொத்த தன் கணவன், ஏழு வருஷங்கள் சிறைவாசத்தின் கடினத்தால் தனது வாலிப மிடுக்கையெல்லாம் இழந்து பயங்கர ரூபத்தில் வெளிவருவதைப் போன்று கற்பனை செய்து பார்த்த சந்திரா வேதனையில் துடித்தாள். ''என் துரதிர்ஷ்டம் அவரை ஜெயிலுக்குப் போக வைத்துவிட்டதே?'' என விம்மினாள் வாய்விட்டு.

''நீ என்ன செய்வே? தலைவிதி, அனுபவிக்கிற காலம்!'' எனக்



காமாக்ஷியம்மாள் தேறுதல் மொழிகள் கூறிக்கொண்டு தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ''நான் பாவி. அதிர்ஷ்டஹீனை. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதில் அவருக்கு ஏற்பட்ட சுகம் ஜெயில் வாசந்தான்'' என விம்மியழுத மருமகளின் சோகத்தைக் காணச் சகியாத காமாக்ஷியம்மாள், ''சந்திரா, அழாதேயம்மா. அவர்கிட்டச் சொல்லி வக்கீல் வச்சுக் கேஸ் நடத்த ஏற்பாடு பண்ணலாம். இந்தச் சமயத்தில் நீ தைரியமாயிருந்து என்னைத் தேற்றுகிறதை விட்டுவிட்டு அசடாட்டமாக அழறியே! படிச்ச லட்சணமா இது?'' என ஆறுதலாகப் பேசினாள்.

சந்திரா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். சிவந்து வீங்கிப் போன கண்களால் மாமியாரை நோக்கி ''அம்மா விடிய இன்னும் எவ்வளவு நாழியிருக்கு?'' என்று கேட்டதற்கு மாமியார் துக்கத்தை மறந்து புன்னகை செய்தாள்.

''சந்திரா! சின்னக் குழந்தையைப்போல அவசரப்படறயே! விடியட்டும் - கொஞ்ச நாழிகைதான் இருக்கு விடிய'' எனத் தேற்றியவள், ''நாங்கள் எல்லோரும் ராத்திரி பத்து மணிக்கே சாப்பிட்டுவிட்டோம். நீ ஒருத்திதான் சாப்பிடலை. இரண்டு ஆரஞ்சுப் பழமாவது சாப்பிடு இப்போ'' என உபசரித்தாள்.

''நன்னாயிருக்கு அம்மா. அவர் அங்கே இருக்கும்போது எனக்குச் சாப்பாடு ஒன்றுதான் குறை. அவர் வீடு வந்து சேரும்வரை தூக்கம் சாப்பாடு ஒண்ணும் எனக்குக் கிடையாது'' எனக் கண்டிப்பாகக் கூறிய சந்திரா விடிய விடியப் பலவாறு சிந்தித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

விடிந்தது கடைசியில்! சீக்கிரம் ஸ்நானம் செய்து விட்டு ஈரக் கூந்தலை அள்ளி முடிந்துகொண்ட சந்திரா அவசரமாகக் கீழே மாமியிடம் ஓடிவந்தாள்.

காப்பியை அருந்திக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்த நாகராஜய்யர் பக்கத்தில் காமாக்ஷியம்மாள் கவலையுடன் நிற்பதையும், பாலகிருஷ்ணன் அப்பாவின் அருகில் விழித்துக் கொண்டிருப்பதையும், உள்வாயிற்படி அருகில் அலமேலு சாய்ந்துகொண்டு நிற்பதையும் கண்ட சந்திரா அவர்கள் யாவரும் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என ஊகித்தாள்.

தன் மாமனார் முன்னிலையில் வந்து நிற்கக் கூசிய அவள் தலைமறைவாகச் சுவர் ஓரத்தில் மறைந்து கொண்டாள்.

சந்திராவின் வெளிர் முகத்தை நிமிர்ந்து பார்த்த காமாக்ஷியம்மாள் வாயைத் திறந்து, ''கொஞ்சம் அந்தப் பெண்ணுக்காகவாவது மனசு வைக்கப்படாதா நீங்கள்?'' எனக் கெஞ்சிக் கேட்டாள்.

''மனசை நான் திடப்படுத்திக் கொண்டுவிட்டேன். யாருக்கும் நான் இரங்கப் போவதில்லை. தடிப்பயல். அவனுக்கு நான் கொடுத்த செல்வாக்கென்ன? கௌரவம் என்ன? என்னத்திலே குறை வச்சேன்? வெளிநாட்டுக்குப் போய் படிக்கணுமின்னு அனுப்பினேன். அங்கே ஒரு பெரிய வம்பை விலைக்கு வாங்கிண்டு வந்தான். அதிலிருந்து தப்பிக்க வைக்க அரை லட்சம் செலவு செஞ்சேன். தொலையறான்னுட்டுக் கம்பெனியிலே உயர்ந்த பதவியைக் கொடுத்தேன். அந்தக் காவாலிப் பயல் நாகலிங்கத்தோடு சேர்ந்து பணம் கையாடக் கத்துண்டான்? நம் பிள்ளையானால் என்ன? திருடினால் குற்றமில்லையா? திருட்டு நாய்! ஜெயிலிலேயிருந்து... ஏழு வருஷம் கூழ் சாப்பிட்டு கல் உடைத்துப் புத்தி வரட்டும், நான் இந்தக் கேஸ் விஷயமாக ஒரு வக்கீலையும் போய்ப் பார்க்கப் போகிறதில்லை! நான் வைராக்கியம் வச்சுட்டேன்! ஜகந்நாதனுக்காக இனி மேலே ஒரு செப்புத் தம்படி கூடச் செலவழிக்க மாட்டேன்!'' என்று அவர் போட்ட கூச்சலைக் கேட்டு யாவரும் திக்பிரமை அடைந்துவிட்டனர்.

மாமனாரின் வார்த்தைகள் சந்திராவை நடுங்கச் செய்தன. தன் கணவனைத் தப்புவிக்க அவர் உதவி செய்யமாட்டார் எனக் கலங்கிய அவள் கண்களில் பொங்கிய நீரையும், உள்ளத்தில் கொதித்தெழுந்த துக்கத்தையும் உதட்டைக்கடித்து அடக்கிக் கொண்டாள். இனிமேல் அவள் வகை தெரியாத பேதைப் பெண்ணைப் போல் கண்ணீரை உகுக்கப் போவதில்லை!

விர்ரென்று மாடிப்பக்கம் சென்ற சந்திரா தனது பீரோவைத் திறந்தாள். கண்ணைக் கவரும் வைர மாலையையும், மற்ற விலையுயர்ந்த தனது நகைகள் எல்லாவற்றையும் எடுத்து வாரி ஒரு சிறு தோல் பெட்டிக்குள் போட்டுக் கொண்டாள். ஜகந்நாதன் அளித்த பரிசான வைர மோதிரத்தை மட்டும் கழற்ற அவளுக்கு மனம்



வரவில்லை.

கைப்பெட்டியுடன் மாடியினின்றும் இறங்கிய அவள் மாமனார் முதலியவர்கள் உட்கார்ந்திருந்த முன்புற ஹால்பக்கம் வந்து சற்றுத் தயங்கி விட்டு, ''டிரைவர், கார் ரெடியா, கொண்டு வா சீக்கிரம்'' என வாயிற்புறம் நோக்கி உரக்கக்கூப்பிட்டாள்.

''அம்மா! கொண்டு வரேன்!'' எனப் பரிவாகக் கூறி விட்டு வெளியே ஓடினான் டிரைவர்.

''கார் என்னத்திற்கு?'' என்று அதிகாரத் தோரணையில் கேட்ட நாகராஜய்யர் மருமகளைத் திரும்பிப் பார்த்தார்.

''வக்கீல் வீட்டுக்குப் போக'' என மிடுக்காக எதிர்பாராத தைரியத்தோடு பதிலளித்தாள் சந்திரா. பிறகு கைப்பெட்டியுடன் தன் துணிச்சலான செய்கையைக் கண்டு, ஆச்சரியத்தினால் வாயடைத்து நிற்கும் மாமனார், மைத்துனன், ஓரகத்தி, மாமியார் முதலிய எல்லோர் முன்னிலையிலும், வெளியே நோக்கி நடந்தாள்.

# 31

வக்கீல் பீமசேன அய்யர் தமது மனைவியுடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார். ''இதோ பார்?... ஆபீஸ் அறையிலே வந்து நின்னுண்டு நிற்காதே. உள்ளே போ! என் கட்சிக்காரர் யாராவது வருவா! அப்புறம் வந்து பேசறேன் உன் விஷயத்தையெல்லாம்'' என்று சள்ளென விழுந்தார் மனைவி மீது.

''என் காலங்காத்தாலே இப்படி நாயாட்டமா வள்ளுனு விழறேள்? வாசல்லே வந்து வரிசையா கார்களோட உங்க மூஞ்சியைப் பார்க்கிறதுக்குக் கட்சிக்காரர் நிக்கறாளாக்கும்'' என இடித்துப் பதிலுக்குப் பாணம் தொடுத்தாள் அவருடைய சகதர்மணி.

மறு நிமிஷம், தற்செயலாக சொல்லி வைத்தாற்போல் கார் ஒன்று வாசலில் வந்து நின்றதைக் கண்ட பீமசேன அய்யர் வியப்பு மிக்கவராய் ஆனந்தத்துடன் தமது மனைவியைப் பார்த்து, ''உஸ்! போ

உள்ளே! யாரோ வந்துண்டு இருக்கா என்னைப் பார்க்க'' என உத்தரவிட்டார்.

''உங்களையும் பார்க்க வராளே அந்தப் பிரகஸ்பதிகளைச் சொல்லுங்கோ!'' என்று முகத்தை வலித்தபடி அந்தப்புரமாகிய சமையலறைக்குள் ஓடி மறைந்தாள் தர்மபத்தினி.

கையிலே தோல் பெட்டியுடன் உள்ளே நுழைந்த சந்திராவைக் கண்ட பீமசேன அய்யர் ஆச்சரியத்துடன் ''வாருங்கள்! உட்காருங்கள்'' என உபசரித்தார்.

''நான்தான் மிஸ்ஸஸ் சந்திரா ஜகந்நாதன். என் கணவர் விஷயமாக உங்களைப் பார்த்துப்போக வந்திருக்கிறேன்'' என ஆரம்பித்தாள் சந்திரா.

''ஆமாம், இன்று காலைப் பேப்பரிலே படித்துப் பார்த்தேன். ஜகந்நாதன் கைது செய்யப்பட்ட விஷயத்தை...'' என்று வக்கீல் எழுந்தார்.

''ஆமாம், அவர் செய்திருக்கும் குற்றத்திற்குத் தண்டனை என்ன கிடைக்கும்? அவரை ஜாமீனில் விடுவிக்க முடியுமா? அப்படி விடுவிக்க என்ன முயற்சிகள் செய்ய வேண்டும்? மேலே கேஸ் நடத்தச் செலவு என்ன ஆனாலும் சரி. தகுந்த பெரிய வக்கீல்களைத் தாங்களே தேடி அவரை மீட்க வழி செய்யவேண்டும்'' என மூச்சுவிடாமல் கூறி முடிப்பதற்குள் அவள் குரல் தழதழத்துவிட்டது.

தமக்கெதிரே அழகே உருக்கொண்டு உட்கார்ந்திருந்த சந்திராவை வக்கீல் ஓரக்கண்ணால் நன்றாகக் கவனித்துக்கொண்டார். 'இப்படிப்பட்ட ரூபவதியான மனைவி கதறிக்கொண்டு பின்னால் ஓடிவரத் தயாராக இருந்தால், ஜெயிலுக்கென்ன நரகத்துக்குள்ளே கூடப் போகலாமே!' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு, அவர் மெதுவான குரலில், ''உங்கள் கணவன் செய்திருக்கும் குற்றம் ருசுவானால் குறைந்தபட்சம் ஏழு வருஷம் வரையில் கடுங்காவல் தண்டனை கொடுக்கலாம். இப்போது ஜாமீனில் விடுதலை செய்ய தக்க மனிதர்களின் உதவி வேண்டியிருக்கும்'' எனப் பகர்ந்தார்.

''என் கணவர் நிரபராதி என்று நான் நினைக்கிறேன். அவரைப் பற்றி பலர் பலவிதமாக சொன்னாலும் அவர் குற்றமற்றவர் என்பது எனக்குத் தெரியும். இந்தக் கேஸ் முழுவதும் நானேதான் நடத்த



உத்தேசித்திருக்கிறேன். இது விஷயமாக அவர் தகப்பனார், தமது பிள்ளையின் மீது கொண்டிருக்கும் மனஸ்தாபத்தினால் உதவி செய்ய மறுத்துவிட்டார். கேஸ் நடத்த குறைந்தபட்சம் பணம் எவ்வளவு தேவை என்று சொன்னீர்களானால்...'' என மேலே பேசாமல் நிறுத்தினாள் சந்திரா.

வக்கீல் தொண்டையைக் கனைத்துக்கொண்டார். ''இது ஒரு சிக்கலான கேஸ். அதனால் பெரிய வக்கீலை கொண்டு வந்து கேஸ் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். எனக்குத் தெரிந்த வக்கீல்களில் கிருஷ்ணமாச்சாரி மிக்க கீர்த்தி பெற்றவர். அவர் கேஸ் நடத்துவதென்றால் பீஸ் இருபதினாயிரத்துக்கு மேல் ஆகும். மற்றபடி நான் விஷயங்களை அவருக்கு எடுத்துச் சொல்ல எனக்கு உங்கள் இஷ்டப்படி கொடுக்கலாம். இவ்வளவு கஷ்டப்பட்டு கடைசியில் கேஸ் தோற்றுப் போக நேரிட்டாலும் நேரிடலாம். சாட்சியங்கள், நியாயாதிபதியின் மனப்பான்மை, ஜுரர்களின் அபிப்பிராயம் இதையெல்லாம் பொறுத்திருக்கிறது ஒரு கேஸின் வெற்றி தோல்வி, இரண்டும். அப்படியே தோற்றுவிட்டாலும் பயப்படாதீர்கள். மேல் கோர்ட்டில், ஒரு கை பார்த்துவிடலாம். கையில் காரியத்தை எடுத்துக்கொண்ட பிறகு நாம் லேசில் விடப் போவதில்லை'' என்று குட்டிப் பிரசங்கமே செய்து விட்டு, ''அது கிடக்கட்டும், பணச் செலவு அதிகமாகுமே? உங்களுக்கு மாமனார் உதவி செய்யாவிட்டால்...'' என்று தயங்கினார் வக்கீல்.

சந்திராவின் உதடுகளில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை தோன்றியது. கையிலிருந்த பெட்டியை சட்டெனத் திறந்து, வக்கீல் முன் நீட்டி ''இவைகள் என்ன மதிப்பு இருக்கும்?'' என்று கேட்டாள் அலட்சியமாக.

வக்கீல் தமது கண்களை அகல விரித்து நோக்கினார். அவரால் நம்பமுடியவில்லை. கண்களைப் பறிக்கும் நீலவொளி வீசும் வைர மாலையும், வளையல்களும், முத்துகள் இழைத்த நகைகளும், தங்கத்தினால் செய்த கெட்டி நகைகளும் அதில் இருந்தன. நன்றாக ஆராய்ந்து பார்த்த அவர், ''அம்மா! நகைகள் குடும்பத்தின் பரம்பரை சொத்து. அவைகளை விற்காதீர்கள் அவசரப்பட்டுக் கொண்டு. எனக்குத் தெரிந்த மார்வாடியிடம் உங்களை அழைத்துப் போகிறேன். முதலில் அடமானம் வைத்துப் பணம் வாங்குவோம்; எண்பதாயிரம்

வரை இதற்குக் கிடைக்கும். கேஸ் நடத்துவோம்; போதாவிட்டால், பிறகு சில நகைகளை விற்கலாம்'' என்றார்.

''சரி, உடனே என்னுடன் புறப்படுங்கள் மார்வாடி வீட்டிற்கு!'' என்று சந்திரா கூறியதும் வக்கீல் கிளம்பினார்.

வக்கீல், சந்திராவுக்கு வேண்டிய உதவிகளை செய்துவிட்டுப் பகல் வேளைக்கு மிக்க பசியுடன் வீடு நோக்கி வந்தவர் வீட்டிற்குள் காலை வைத்ததும் ''ஆமாம்! காலங்காத்தாலே சாப்பிடாமல் போனவர்! உங்களுக்காகக் காத்துப் பசியினால் துடிக்கப் போயிட்டேன்'' என்று சகதர்மிணி கோபத்துடன் கத்தினாள்.

வக்கீல் தமது கோட்டுப் பைக்குள் கையைவிட்டு ஒரு கத்தை ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவள் முன் நீட்டி, ''இதோ பார்! நான் சும்மா உலாவப் போகவில்லை. பணம் பணம்னு அரிக்கிறியே இந்தா, வெச்சுத் தொலைச்சுக்கோ!'' என குஷி மிக்கவராய் அவள் கையில் கொடுத்தார்.

வக்கீலின் மனைவி ஒரு மோகனச் சிரிப்புச் சிரித்தாள் ''ஆமாம் வைரக்கல் பேசரி வேணுமின்னு நாலு வருஷமா அடிச்சுக்கிறேன். இந்தக் கேஸில் வரும் பணத்திலாவது எனக்கு வாங்கித் தந்துடுவேளோல்லியோ?'' என்று கொஞ்சினாள்.

''இந்தக் கேஸ் ஒரு விசித்திரமான கேஸ், தெரியுமா? வைர பேசரி பேசரின்னுட்டு என்னைப் பிடுங்கித் திங்கறயே? இந்தக் கேஸ் விஷயமா வந்த அம்மாள் தன் புருஷனுக்காகத் தன் சகல நகைகளையும் விற்கத் துணிஞ்சுட்டா. நீ அவளாயிருந்து நான் ஜெயிலிலேயிருந்தா அந்தக் கண்ணைப் பறிக்கும் வைரங்களை விட உனக்கு மனசு வருமா?'' என்று பரிகாசமாகக் கேட்டார் அவர்.

தர்மபத்தினியின் கண்களில் கோபக்கனல் கொழுந்து விட்டெரிந்தது. ''ஐயையோ! போறது பாருங்கோ உங்க புத்தி! நாம் நன்றாயிருக்கனும், பெண்டாட்டிக்கு விதம் விதமாக நகைகள் செய்து போடணும்னுட்டு ஆசையில்லா விட்டாலும், ஜெயிலுக்குப் போகனும், மனைவி தாலி வரை வித்துத் தன்னைத் தப்ப வைக்கணும்னு துர்புத்தி உங்களுக்கு ஏனோ? தூ! சை!'' என இகழ்ச்சியாகக் கூறி விட்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.



''இதுதானே உங்கிட்ட எனக்குப் பிடிக்கிறதில்லை விளையாட்டுக்குக்கூட ஒண்ணுமே சொல்லக்கூடாதா? உடனே கோபம். நகைதானே, பிரமாதம்! இந்தக் கேஸ் நடக்கட்டும் உன்னை நான் வைரக்கூடாக அடிச்சுப் போடறேன். பார்த்துக்கோ! இதோ பார், இதை எடுத்து உள்ளே வை. இந்தப் பணம் உனக்குத்தான்'' என சரஸமாக மனைவி அருகில் வைத்தார். தர்மபத்தினி பதிலுக்குப் புன்னகை பூத்தாள்.

அதே சமயம் அம்புஜத்தின் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தும்படிக் கூறிய சந்திராவின் உள்ளத்தில் அலை அலையாகச் சிந்தனைகள் எழுந்து கொண்டிருந்தன.

வாழ்நாளிலே இதுவரை அவள்பட்ட கஷ்டங்களுக்குப் பிராண சிநேகிதியான அம்புஜம் இருந்துங்கூட சந்திரா உதவியொன்றும் அவளிடம் வேண்டியதே இல்லை. பிறர் தயவை நாடக்கூடாது என்ற கர்வ மனப்பான்மை அவளுக்கும் சிநேகிதிக்கும் நடுவில் என்றும் வந்து நிற்கும்.

இன்று சந்திரா அம்புஜத்தின் தயவை வேண்டித் தன் கர்வத்தைக் காற்றில் பறக்கவிட்டுப் போகிறாள்! ஜகந்நாதனின் ஜாமீன் விடுதலைக்காக ராமநாதன் உதவி வேண்டுமென்று அம்புஜத்தின் தயவை வேண்டப் போகிறாள். சந்திராவின் மனத்திற்கே மிகவும் சங்கோஜமாயிருந்தது இந்தச் செய்கை. ஆனால் ஜகந்நாதனின் கதி என்ன? அவனுக்காகத் தன் கர்வம், பணம், உயிர், ஆவி சகலத்தையும் தியாகம் செய்ய அவள் இன்று தயார். சந்திரா, இன்று ஒரு புதுமைப் பெண்!

## 32

**கா**லையில் வந்திருந்த தினசரியின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்த தலைப்பை அம்புஜம் திருப்பித் திருப்பி வாசித்தாள். 'சரபோஜி கெமிக்கல் வொர்க்ஸின் கையாடல் கேஸில், ஜகந்நாதன் நேற்று சாயங்காலம் ஜாமீனில்

விடுதலையடைந்தார். 'கேஸ் பன்னிரண்டாந் தேதியன்று தொடங்கப்படும்' என்ற விஷயத்தைப் படித்ததும் அவள் மனதிலே பெரும் சாந்தி ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாகவே அம்புஜத்திற்கு திடீரென்று உலகத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டிருந்தது. தன் கணவன் ராமநாதன் தனக்கு ஏதோ துரோகம் செய்கிறான் என்ற ஒரு சந்தேகம் அவள் மனத்தில் குடிபுகுந்து பல நாட்களாயின. அன்புகொண்ட உள்ளத்தினர் இருவரிடையே சந்தேகப் பேய் நுழைந்து விளையாட ஆரம்பித்து விட்டால் அதற்கு பின்பு மனத்தில் அமைதி ஏது? வாழ்க்கையில் ஆனந்தம் ஏது? ஹேமலதா தனது மோக வலையிலே ராமநாதனை தன்னிடமிருந்து விலக்கி இழுத்துச் செல்கிறாள் என்கிற சந்தேகப் பேய்தான் அம்புஜத்தின் இருதயத்திற்குள் தனது கோரதாண்டவத்தை ஆரம்பித்துவிட்டது. நிம்மதியற்று அவள் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயம் தம்பதிகளிடையே ஒற்றுமை நிலவச் செய்ய வந்தவள் போன்று சந்திரா அன்று திடீரென வந்தாள். ஜகந்நாதன் கைதியான விஷயத்தை கணவன் மூலமாக உடனே அறிந்த அம்புஜம் தன் சிநேகிதியின் பொருட்டு வருந்தியவளாய் அவளுக்குத் தேறுதல் சொல்லும் வகையென்ன என்று சிந்தித்துக்கொண்டிருக்க, தானாகவே சந்திரா அன்று பகல் அவள் வீட்டிற்கு வந்தாள். அம்புஜத்திற்கு சிநேகிதியின் வரவு மிக்க ஆச்சரியத்தையளித்தது.

''அம்புஜம், இதுசமயம் நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!'' என்று உணர்ச்சியுடன் கேட்டுக்கொண்டே சந்திரா சிநேகிதியின் கைகளை பிடித்துக் கொண்டாள். அம்புஜத்திற்கு சிறிது நேரம் பேசவே இயலாது போய்விட்டது.

''என்ன உதவியானாலும் சரி, சந்திரா! உனக்கு இல்லாதது இங்கொன்றுமில்லை. நிச்சயம்!'' என அன்புடன் பகர்ந்தாள் அம்புஜம்.

அதன் விளைவாக அம்புஜம் ராமநாதனிடம் கொண்டிருந்த மனத்தாங்கலை மறந்து பழைய முறையிலேயே சகஜமாகப் பழக நேரிட்டது. தன் கணவன் தன் சிநேகிதியின் கணவனை ஜாமீனில் விடுவிப்பதற்காக சகல முயற்சிகளையும் மறுவார்த்தையின்றி



ஏற்றுக்கொண்டதன் நிமித்தம் அவள் மிக்க மகிழ்ச்சியடைந்திருந்தாள்.

''ஜகந்நாதன் மீது எத்தனை அன்பு வைத்திருந்தால் சந்திரா தன் மதிப்பை விட்டுவிட்டு அவன் பொருட்டுப் பிறர் தயவை நாடியிருப்பாள்! ஆச்சரியம்! காதல் என்பதற்கு எத்தனை மதிப்பு! அதன் சக்திதான் என்ன! ஜகந்நாதனை போன்ற கெட்ட மனிதனை சந்திரா போன்ற தூய உள்ளங்கொண்ட பெண் காதலிக்க முடியும் என்பதை சாதாரணமாக ஒப்புகொள்ள முடியுமா?'' என்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்த அம்புஜத்தின் முன் வேலைக்காரன் வந்து, ''உங்களைக் காண யாரோ ஒரு அம்மா வந்திருக்காங்க'' என்றான்.

''சந்திராதான் வந்திருப்பாள்!'' என நினைத்த அம்புஜம் ஆவலுடன் எழுந்திருந்து முன்ஹால் பக்கம் சென்றாள். சிநேகிதிக்கு பதிலாக ஹேமலதா அங்கே ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவள் ஒருகணம் திடுக்கிட்டு விட்டாள்.

மனத்தில் பொங்கியெழும் உணர்ச்சியை கட்டுப்படுத்த இயலாத அவள், ''உங்களுக்கு என்னிடம் ஆக வேண்டிய காரியம் என்னவோ?'' என்று கடுமையாகக் கேட்டாள்.

''உங்களிடம் ஒரு காரியமாகத்தான் வந்தேன்'' என்று புன்னகை செய்தாள் ஹேமலதா.

இந்த ஒரு மோகனப் புன்னகையினால்தான் என் கணவனின் மனத்தில் சொக்குப்பொடி தூவுகிறாள் என மனத்தில் எண்ணியவளாய் அம்புஜம், ''என் கணவரையல்லவா பார்க்க வந்திருப்பீர்கள்! என்னிடம் ஒரு காரியமாக வந்ததாகத் தவறி சொல்லுகிறீர்களே?'' எனக் கோபமாகவும் எகத்தாளமாகவும் கேட்டுவிட்டு அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தாள்.

ஹேமலதா பதிலுக்கு கலகலவென்று சிரிப்பதைக் கண்டு கலங்கிப்போனாள் அம்புஜம்.

''ஸ்ரீமதி அம்புஜம் அவர்களே! புரிந்தது என்னைப் பற்றிய தங்களுடைய அபிப்பிராயம்! உங்கள் கணவரை நான் என் வலையில் இழுத்துக் கொள்வதாக தாங்கள் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று சிரித்தாள்.

அவளது ஆர்ப்பாட்டமான பேச்சுக்களையும் சிரிப்பையும் கண்டு சகியாத அம்புஜம் மரியாதைப் போர்வையினின்று வெளிப்பட்டு, ''போதும்! நிறுத்து உன் சாகஸ நடிப்பை! உன்னைத் தப்பாகப் புரிந்து கொள்ளவில்லை. சரியாகவே புரிந்துகொண்டிருக்கிறேன். நான் இல்லாத சமயங்களில் அவரைப் பார்க்க நீ வந்ததையும், அவரிடம் பேசியதையும் நான் காதாலேயே கேட்டேன். இவ்வளவு படித்திருந்தும் உன் நடத்தை படித்த பெண்களுக்கே தலைகுனிவு ஏற்படுத்தக் கூடியது. உன் போன்ற சில ஸ்திரீகளுடைய செய்கையினால் படித்த பெண்களே இப்படித்தான் என்ற அபவாதம் அனாவசியமாக ஏற்படுகிறது. இன்னொருத்தியின் புருஷன்மீது நேசம் கொள்வதன் முடிவு என்ன? அந்தக் குடும்பமும் சீர்கேடடைகிறது. இதோ உனது செய்கையினால் என் வீட்டில் நிலவியிருந்த அமைதி சிதறிவிட்டது. என்னிடமிருந்து அவரை நீ பிரித்தால் நீ நன்றாகவே இருக்கமாட்டாய். ஒரு பெண்ணின் கண்ணீரின்மேல் கட்டப்படும் உன் காதல்கோட்டை ஒரே நொடியில் இடிந்து மண்ணோடு மண்ணாகிவிடும்!'' என்று ஆத்திரம், கோபம், துக்கம், பொறாமை முதலிய உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு, அம்புஜம் படபடப்பாக வார்த்தை மாரி பொழிந்தாள்.

அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ஹேமலதா மிகவும் அமைதியான குரலில், ''அம்புஜம் நீங்கள் தப்பாக என்மீது கொண்ட சந்தேகத்தின் விளைவாக உணர்ச்சிவசப்பட்டு மரியாதை தவறிப் பேசுகிறீர்கள். உங்கள் உணர்ச்சிகளை நான் மிகவும் மதிக்கிறேன். ஏனெனில்; உங்களைப் போன்றுதான் என் சகோதரியும் மனயெழுச்சிகளை அடக்க முடியாதவளாய் ஏக்கத்தினால் உருகி உயிரைவிட்டாள்'' என்றாள் திடீரென்று.

''உன் சகோதரியைப் பற்றியும், உன்னைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை. போதும் உன் சிநேகிதம்! நீ என் வாழ்க்கையில் குறுக்கிடாதிருந்தால் அதுவே எனக்குப் பெரிய உபகாரமாகும்'' என்று கோபத்துடன் மொழிந்து கொண்டே அம்புஜம் நாற்காலியிலிருந்து எழுந்தாள்.

''உங்களிடம் நான் சொல்லவந்த விஷயமே வேறு. கோபப்படாது அமைதியுடன் கேளுங்கள். உங்கள் கணவன் மீது நான் அன்பு கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அது சரியல்ல;



அவரை விஷமென நான் வெறுக்கிறேன். உங்களுடைய உத்தம கணவன் என் சொந்த சகோதரிக்குத் துரோகம் செய்துவிட்டு இங்கே ஓடிவந்து மறைந்துகொண்டிருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாது என்பதும் எனக்குத் தெரியும். ஆகாயத்தின் உயரத்தில் வைத்து நீங்கள் பூஜிக்கும் உமது கணவர், உங்களை மணந்துகொள்வதற்கு முன்பு என் சகோதரியிடம் காதல் நாடகம் நடத்தி அவளைக் கைவிட்டு வந்த கயவர்!'' எனப் பல்லைக் கடித்தாள் ஹேமலதா.

படீரென சம்மட்டியினால் யாரோ தன் தலைமீது ஓங்கி அடித்ததைப் போன்ற ஒரு பிரமை அம்புஜத்திற்கு ஏற்பட்டது. ''பொய்! பொய்! வீணாக அவர் மீது தோஷங் கற்பிக்கிறாய் நீ! உன் வார்த்தைகளை நான் நம்பமாட்டேன்'' என்றாள் அவள் பதிலுக்குக் கோபத்துடன்.

''எந்த ஸ்திரீயாவது தன் கணவன் கெட்டவன் என்பதை பிறர் சொல்ல ஆமோதிப்பாளா? அது பெண்களின் மனத்தில் பல நாள் தோன்றி ஊன்றியிருக்கும் ஒரு பலஹீனமாயிற்றே! நான் உமது கணவன்மீது சாட்டும் குற்றத்திற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைப் பார்த்த பிறகு தங்களின் அபிப்பிராயம் கட்டாயம் மாறும்'' என எகத்தாளமாகக் கூறிக்கொண்டு கையிலிருந்த அழகுப் பையைத் திறந்தாள் ஹேமலதா. அதில் இருந்த கட்டுக்காகிதங்களை எடுத்து முன்னிருந்த மேஜைமீது விசிறிப் போட்டுவிட்டு, ''இவைகளைப் படித்துப் பார்த்துப் பிறகு பேசலாம்'' என்றாள்.

ஆத்திரம் மிகுந்த அம்புஜம் அவைகளை எடுத்து விரித்துப் பார்த்தாள். அவைகள் யாரோ ஒரு பெண்ணுக்கு அவளது கணவன் எழுதிய காதல் கடிதங்களாக இருந்தன. பீறிட்டு எழுந்த துக்கத்தை அடக்கிக்கொண்டு ''இவைகளை என் கணவர்தான் எழுதியது என்று எப்படி சொல்லுவது?'' என்று தடுமாறினாள் அவள்.

''பேஷ்! அதுதான் சரி! போட்டீர்களே ஒரு போடு! உங்கள் கணவரின் கையெழுத்தைக்கூட நான் காப்பியடித்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்கிறீர்களா? சந்தேகமிருந்தால் அவரிடமே காட்டுங்கள். இவைகளை என்னிடமிருந்து திரும்ப வாங்கிக் கொள்வதற்கு அன்று ஒருநாள் அவர் எப்படிக் கெஞ்சினார் தெரியுமா? இவைகளுக்குப் பணம்கூடத் தருவதாக பேரம் செய்தார். மதிக்க

முடியாத விலையுயர்ந்த இவைகளை உங்களுக்கு நான் பரிசாக அளிக்கின்றேன்!'' என விஷமமாகக் கூறிக் கொண்டு ஹேமலதாவும் ஆசனத்தை விட்டெழுந்தாள்.

அவளது பரிகாச வார்த்தைகளினால் புண்பட்ட அம்புஜம், ''பொய்! சுத்தப்பொய், எங்களிருவரிடையே இருக்கும் அன்பை கலைத்து பின்பு நீ உள்ளே நுழைய செய்யும் சூழ்ச்சி இது. ஹேமலதா, நீ பெண் அல்ல பாம்பு! விஷ சர்ப்பம்!'' என்று கத்தினாள்.

''உண்மையைக் கூறாது மறைத்து வைக்கும் உங்களின் கணவரைப் போன்ற கிராதகர்கள் இருக்கும் வரை என்போன்ற பெண் சர்ப்பங்கள், சமூகத்திற்கு மிகவும் தேவைதான். இதை அறியுங்கள்; உங்கள் கணவரின் ஆதரவு எனக்குத் தேவையில்லை. உங்களைப் போன்று நானும் ஒரு விவாகமான ஸ்திரீதான். இரண்டு நாட்களுக்கு முன்பு ஸ்ரீமான் நாகலிங்கம் என்னை மணந்து கொண்டார். உமக்குத் துரோகம் செய்ய உமது கணவர் கூசாது முன் வரக்கூடும். ஆனால் என் கணவருக்குத் துரோகம் செய்ய நான் முன் வர மாட்டேன். 'அன்பின் ஆழத்திலிருந்து பிறக்கிறது கற்பு' என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஸ்ரீமான் நாகலிங்கத்தின் மீது நான் எல்லையற்ற அன்பு கொண்டிருக்கிறேன். ஆகவே என்னைப் பற்றிய வீண் கவலையை விட்டு ஒழியுங்கள்'' என மந்தஹாஸத்துடன் பதிலளித்து விட்டு வாயிற்புறம் போகத் திரும்பினாள்.

வாயிற்படியண்டை சென்ற ஹேமலதா திரும்பி நின்று கொண்டு, ''என் ஆருயிர் சகோதரியைக் காதலிப்பதாகவும் மணந்து கொள்ளப் போவதாகவும் சொல்லி, அவள் மனதைக் கவர்ந்து அவளைத் தன் கையில் கொண்ட பொம்மையாக ஆட்டுவித்துவிட்டுக் கடைசியில் சமூகம் கலப்பு மணத்தை ஆதரிக்காது எனவும், தம்மை மறந்துவிட வேண்டுமெனவும் துணிவுடன் கடிதம் எழுதிய அவருக்குத் தைரியம் எத்தனை? ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு உங்களிருவருடைய திருமணப் போட்டோவைப் பத்திரிகையில் பார்த்த என் சகோதரி சோகந் தாளாதவளாய் படுக்கையில் படுத்தவள் எழுந்திருக்கவேயில்லை. விஷயந் தெரியாத உங்களை நான் பழிக்கவில்லை. சற்று முன் சொன்னீர்களே ஒரு வார்த்தை. அதை நான் திரும்ப சொல்லட்டுமா! 'ஒரு பெண்ணின் கண்ணீரின் மீது கட்டிய காதற்கோட்டை தகர்ந்துவிடும்' என்ற அந்த வார்த்தையை



யோசித்துப் பாருங்கள். என் சகோதரியின் உயிரின் மீதுதான் தங்களுடைய இல்லற சுகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பழைய காலத்து ரிஷிகளைப் போல இப்போது நான் எதிர்சாபம் இடட்டுமா?'' என்று சிரித்தாள் கேலி நிறைந்த குரலில்.

அம்புஜத்திற்குச் சரியான பதில் சொல்ல வரவில்லை. ''என் கணவர் ஏதோ தவறு செய்திருக்கலாம். ஆனால் உன் கணவரைப் போன்று அவ்வளவு கேவல நடத்தையுடையவரல்ல'' என்றாள் பதிலுக்கு ஆத்திரத்துடன்.

''என் கணவர் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டு தைரியமாக சமூகத்தை நோக்கும் தீரர். உங்கள் கணவர் சமூகத்தின் நற்போர்வைக்குள் வாழவேண்டுமென்ற அல்ப ஆசையினால் தமது தவறுகளைத் திரும்பிப் பார்க்கக் கூட நடுங்கும் கோழை. அத்தனை பயங்கொள்ளியான கணவர் மட்டும் எனக்கு வாய்த்திருந்தால், இத்தனை நாழிகை நான் உங்களைப்போல் கணவனை ஆதரித்து எதிர்வாதம் ஆடுவதை விட்டுச் சாண் கயிற்றில் என் அமைதியை நாடியிருப்பேன்'' என்று வெறுப்புடன் பதிலளித்து விட்டு வெளியேறினாள் ஹேமலதா.

தன்னைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாம் கிர்ரெனச் சுற்றுவதைப் போன்ற பிரமையடைந்த அம்புஜம் தன் சக்தியெல்லாம் இழந்தவள் போல் தொப்பென்று நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள்.

## 33

கோமதி வித்தியாலயத்தில் அன்று பிற்பகல் ஒன்று கூடிய உபாத்தியாயினிகள் யாவரும் ஒரே சமயத்தில் பேசவேண்டும் என்ற ஆவலினால் துடித்தனர். சில நாட்களாக மல்லித்தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த ஆச்சரியமான சம்பவங்கள் வெறும் வாயை மெல்பவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததைப் போன்று இருந்தது அவர்களுக்கு.

''அப்பாடா! சந்திராவுக்கு வந்ததைப் போன்று அதிர்ஷ்டமும் வரவேண்டாம்! தற்போது அவளுக்கு ஏற்பட்டிருக்கும் துக்கத்தைப் போன்று கஷ்டமும் வரவேண்டாம்'' என்று இந்தப் பழம் புளிக்கும் என்ற தோரணையில் ஆரம்பித்தாள் வயலெட் மேகநாதன்.

''ஜாமீனில் விடுதலை அடைந்த கணவனை தானே நேரில் சென்று சந்திரா வீட்டிற்கு அழைத்து வந்தாளாமே!'' என்று ஆரம்பித்தாள் ஜெயலக்ஷ்மி.

''இந்தத் துக்கத்தை நாகராஜய்யர் வீட்டவர்கள் எப்படித்தான் சகித்துக் கொண்டார்களோ? மகத்தான அவமானமல்லவா ஜகந்நாதனின் செய்கை?'' என்று சொன்னாள் கமலா.

''ஜகந்நாதனைப் பொறுத்தவரை அவன் செய்கைக்கு இந்தத் தண்டனை வேண்டியதே. சமூகத்தில் ஊழல்கள் செய்து கொண்டு திரியும் காமதுரர்களுக்குக் கடவுள் கொடுக்கும் தண்டனை இதுதான். ஆனால் சந்திராவைக் குறித்துத்தான் என் மனம் பச்சாதாபப்படுகிறது'' என்று முடித்தாள் வயலெட்.

''ஜகந்நாதன் மேல் கேஸ் ருசுவானால் அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?'' என்று கவலையுடன் விசாரித்தாள் சாரதா.

''என்னைக் கேள், நான் சொல்லுகிறேன். என் அண்ணா வக்கீலுக்குப் படித்தாலும் படித்தான்; எங்கள் வீட்டுப் பெண்கள் எல்லோருக்கும் 'இந்தியன் பீனல் கோட்' தலைகீழாக நெட்டுரு. ஜகந்நாதன் செய்திருக்கும் குற்றத்திற்கு ஏழு வருஷங்கள் கடுங்காவல் கிடைக்கும்'' என்றாள் ஜெயலக்ஷ்மி.

''அம்மா! ஏழு வருஷங்கள் என்றால் அதுவரை சந்திரா என்ன செய்வாள், பாவம்!'' என்று அனுதாபத்துடன் வினவினாள் கமலா.

''என்ன செய்வது! விதியை நினைத்துக் கொண்டு வீட்டிலே அழுது கொண்டு கிடப்பதுதான் வழி'' என்றாள் ஜெயலக்ஷ்மி கடுமையாக.

''ஒரு சமயம் துக்கத்தை மறக்கப் பழையபடி உபாத்தியாயினி வேலை செய்யப் புகுந்தாலும் புகுந்து விடுவாள்!'' என்றாள் வயலெட்.

''துக்கத்தை மறக்க வேண்டுமென்று அவள் நினைத்தாளானால் மறுபடியும் இந்த உபாத்தியாயினி வேலையை ஏற்றுக்கொண்டு



கோமதி வித்தியாலயத்தில் மட்டும் நுழைய மாட்டாள் என்பது நிச்சயம். கிராமங்களுக்குச் சென்று ஏதாவது பொது ஜன ஊழியத்தில் ஈடுபடக்கூடும்'' என்றாள் கமலா.

''ஒரு சமயம் மாதர் சங்கத்தின் சார்பாக விவாகரத்து மசோதாவை ஆதரித்துப் பிரசங்கங்கள் செய்யக்கூடும்'' என்று சிரித்தாள் சாரதா.

''போதும் போங்கள்! உங்கள் கற்பனைக்குத்தான் எத்தனை கால்கள். எத்தனை இறக்கைகள்! எத்தனை வேகமாக முன்னேறிக்கொண்டு போகின்றன! நீங்கள் எல்லாம் சொல்கிறபடி அவள் செய்யாது கொஞ்சம் பணத்துடன் அவள் பிறந்தகம் சென்று கிருஷ்ணா ராமா என்று பகவத் நாமத்தைச் சொல்லிக்கொண்டு காலங் கழிக்கலாம்'' என்று கூறிய கற்பகத்தை நோக்கி மற்றவர்கள் கைதட்டிச் சிரித்தார்கள்.

''நாகரிக நாரீமணியான சந்திராவைக் கர்நாடகப் பாட்டியம்மாள் என்று நினைத்துக் கொண்டயாக்கும்?'' எனச் சிரித்தாள் ஜெயலக்ஷ்மி.

''வட துருவத்திற்கும் தென் துருவத்திற்குமிடையே வியாபித்திருக்கும் விஸ்தீரணத்தில் உள்ள ஸ்திரீகளின் மனோதத்துவத்தைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் ஒரே மாதிரியானதுதான் என்பது தெரியும். பட்டிக்காட்டுப் பாட்டியையும் பட்டணத்து நாகரீக நங்கையையும் பேதப்படுத்திக் காட்டுவது முகப்பவுடரும், உதட்டுச் சாயம் போன்ற வெளித்தோற்றங்களும்!'' என்றாள் கோபத்துடன் கற்பகம்.

''நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நாகரீகமடைந்த ஒரு ஸ்திரீயின் மனப்பான்மையையும், கர்நாடக மூடப் பழக்கங்களினால் கட்டுப்பட்ட பெண்ணின் மனப்பான்மையும் ஒன்று என்பது அபத்தம்'' எனக் கூறினாள் ஜெயலக்ஷ்மி.

''கற்பகம் சொல்வதை நான் ஆமோதிக்கிறேன்'' நாரீகத்தினால் பண்பு அடைந்துவிட்டதாக நாம் வெளிப்பார்வைக்கு நடிக்கிறோமே தவிர, உண்மையில் ஆதாமும் ஏவாளும் இருந்த நாட்களில் ஸ்திரீயின் இருதயம் எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இன்றும் கலையுணர்ச்சி, கவிதை உணர்ச்சி, இலக்கிய உணர்ச்சி, விஞ்ஞான ஆராய்ச்சி இவைகளால் பண்படைந்த ஸ்திரீயின் இருதயமும் இருக்கின்றது. பொறாமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல

போன்ற உணர்ச்சிகள் அன்று ஏவாளின் இருதயத்தில் குடியிருக்கத்தான் செய்தன. இன்றும் ஒவ்வொருவருடைய மனதிலும் இந்த உணர்ச்சிகள் ஆட்சி செய்கின்றன. பனிக்கட்டிகளினால் சூழப்பட்டு இயற்கையின் கொடுமையின் நடுவிலே வாழும் எஸ்கிமோ ஜாதிப்பெண்ணும், கோமதி வித்தியாலயத்தின் உபாத்தியாயினியாகிய நானும் மனப்பான்மையைப் பொறுத்தவரை ஒரே வர்க்கத்தினர்'' என்று தன் பிரசங்கத்தை முடித்தாள் வயலெட். அது சமயம் பரபரப்பாகச் சகோதர உபாத்தியாயினியான ஜானகி நுழைந்து, ''இந்த அதிசயத்தைக் கேளுங்கள்'' என்று கூக்குரலிட்டாள். அடுத்தகணம் எல்லோரும் அவள் பக்கம் திரும்பி கவனித்தார்கள்.

''ஸ்ரீமதி ஹேமலதா நாகலிங்கமும், ஸ்ரீமான் நாகலிங்கமும் தமது விவாகத்தின் சார்பாக நண்பர்களுக்கு இன்று சாயங்காலம் ஒரு தேநீர் விருந்து அளிக்கிறார்களாம். அதற்கு நமக்கெல்லாம் அழைப்பு வந்திருக்கிறது!'' என உரத்த குரலில் பேசிய ஜானகி, தன் கையிலிருந்த அழைப்புப் பத்திரிகைக் கட்டை மேஜை மீது விசிறிப் போட்டாள்.

இந்தத் திடுக்கிடும் விஷயத்தைக் கேள்விப்பட்ட உபாத்தியாயினிகள், ''ஹேமலதா இங்கிருந்து ராஜினாமா செய்தது நாகலிங்கத்தை விவாகம் செய்து கொள்ளவா? இது என்ன கூத்து'' என்று ஒரே சமயத்தில் கத்தினார்கள்.

''ஆமாம். இரகசியமாக இருவரும் ரிஜிஸ்தர் விவாகம் செய்து கொண்டார்களாம். நாளை அதைப் பற்றிப் பகிரங்கப்படுத்தவே நமக்கு இந்த அழைப்பு'' என்று முடித்தாள் ஜானகி.

''விக்கிரமாதித்தனுடைய சிம்மாசனத்தைப் போன்ற ஏதோ ஒரு மகிமை கோமதி வித்தியாலய கணக்கு உபாத்தியாயினி ஆசனத்திற்கு அமைந்திருக்கிறாப் போலிருக்கிறது! அதில் உட்காரும் உபாத்தியாயினிகளுக்கு 'டக் டக்'கென்று விவாகம் நடந்து விடுகிறதே அடுத்தபடி அதில் உட்காரப் போவது நம்முள் யாரோ? என்று கண்ணை சிமிட்டிக் கொண்டு சிரித்தாள் சாரதா.

''கல்யாணம் நடக்கும். பின்னால் கணவன் ஜெயிலுக்குப் போவான் என்ற துரதிஷ்டமும் அந்த ஆசனத்தின் மகிமையாயிருந்தால், அப்பப்பா! நமக்கு வேண்டாம் அது. இந்த வாழ்வே போதும்!' என்று முடித்தாள் ஜெயலக்ஷ்மி.



இதற்குள் வகுப்புத் துவங்கும் மணி கணகணவென்று ஒலித்தது.

# 34

ஹேமலதா தன்னிடம் விட்டுப்போன கடிதங்களுடன் அம்புஜம் நேரே மாடியிலிருந்த ஒரு அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

கடிதங்கள் ஒவ்வொன்றையும் பிரித்து பதைபதைத்த உள்ளத்துடன் படித்தாள். மேலே படிக்கப் படிக்க அவள் தலை கிறுகிறுத்தது. சில இடங்களில் படித்துக்கொண்டே வந்தவள் கோபத்தினால் பல்லைக்கடித்தாள். சில இடங்களில் மேலே படிக்க முடியாதவாறு கண்ணீர் பெருகி அவள் கண்களை மறைத்துக் கொண்டது.

தன்னைத் தவிர ராமநாதன் வாழ்வில் வேறு ஒருவருக்கு இடமில்லை என இறுமாந்திருந்த அவளைப் பார்த்து அந்தக் கடிதத்திலிருந்த ஒவ்வொரு வார்த்தையும் கோரநகை புரிந்தது போலிருந்தது. தனக்கே உரியவன் என்று எண்ணியிருந்த ராமநாதன், பல நாட்களுக்கு முன்பு வேறு ஒருத்திக்குச் சொந்தமாயிருந்தான் என்ற உண்மையைக் கடிதங்களின் ஒவ்வொரு எழுத்தும் வாய்விட்டுக் கூவுவது போலிருந்தது அவளுக்கு. ஐயோ! எத்தனை கசப்பான உண்மை அது? அவளால் அதைச் சகித்துக்கொண்டு ஏற்க முடிவில்லையே!

இப்பொழுதுதான் பளிச்சென்று அம்புஜத்திற்கு புரிந்தது. அவள் கணவன் நடந்துகொண்ட விசித்திரம். ஹேமலதாவைப் போன்று மிகவும் அழகியாகவே இருந்திருப்பாள் அவள் சகோதரி. ராமநாதன் அழகுக்குக் கட்டுப்பட்டு மயங்கி நிலை தடுமாறிப் போயிருக்கலாம்! அது எப்படியோ போகட்டும்! ஏன் அம்புஜத்திடமிருந்து இந்த உண்மை மறைக்கப்பட்டது? தன்னால் பூஜிக்கப்பட்டு இலட்சியங்களின் இருப்பிடமாக ஆராதனை செய்யப்பட்ட ராமநாதன், சிறு பெண்ணொருத்தியின் மனத்தை ஒடித்து விட்டு

ஓடிவந்த கோழையா? சத்புருஷன் என்று நினைத்திருந்த அவள் கணவன் ஒரு பெருந்துரோகியா? துரோகிதான், சந்தேகமின்றி! அவன் மனிதனில் கடைப்பட்டவன். ஹேமலதா சொன்னதில் உண்மை இருக்கத்தான் இருக்கிறது. தான் செய்த தவறுகளைக் கண்டு நடுங்கியவனாய் சமூகத்தின் நற்போர்வைக்குள் வாழ நினைக்கும் கோழை, அம்புஜத்தின் கணவன். கடைசியில் ருத்ராட்சப் பூனை! வெட்கம்! அம்புஜத்திற்கு இதைவிடப் பெரிய அவமானம் வேறு என்ன இருக்கிறது? சந்திராவைப்பற்றி எண்ணும் போதெல்லாம் அம்புஜம் ஜகந்நாதனைப் பற்றி மனதிற்குள் அருவெருப்படைவதுண்டு. ஜகந்நாதனைப் போன்ற கணவனுடன் வாழ்வதைவிட சாவே மேல் என மனத்திற்குள் எண்ணிக்கொள்வாள். இன்று அவளுடைய இலட்சியக் கணவனுக்கும் ஜகந்நாதனுக்கும் என்ன வித்தியாசம்? ஜகந்நாதன், நாகலிங்கம், ராமநாதன் எல்லோரின் வாழ்க்கைத் தராசும் ஒரே எடையைத்தான் காட்டியது. ஜகந்நாதனும் நாகலிங்கமும் ஒரு வழியில் சற்று ராமநாதனைவிட உயர்ந்தவர்கள்தாம். ஹேமலதா கூறியது போல் அவர்கள் தங்கள் தவறுகளைச் சமூகத்தின் முன் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு சமூகத்தை அலட்சியமாக நோக்கும் வீரர்கள்தான். ராமநாதன் அவர்கள் முன் ஒரு ஆட்டுக்குட்டி! இந்த மூன்று பெயர்களைக் கொண்டதுதான் புருஷர்கள் என உலகில் வியாபித்திருக்கும் நயவஞ்சகர்களின் கூட்டமாயிருக்குமோ? யோசிக்க அம்புஜத்தின் தலையை யாரோ சம்மட்டியால் பிளப்பதைப் போன்ற வேதனை ஏற்பட்டது.

இனி அம்புஜம் செய்ய வேண்டியது என்ன? கணவனின் துரோகம் தனக்குத் தெரியுமென காட்டிக்கொள்வதா? அல்லது தெரியாததுபோல் நாடகம் நடிப்பதா?

ஏன் அம்புஜம் உண்மையை மறைக்க வேண்டும்? தனக்கு அவனது துரோக நடத்தை தெரியுமென வெளிப்படுத்தி அவன் மனதை நோகச் செய்யவேண்டும். இப்படி பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்த அவள் அடக்க முடியாத துக்கத்தினால் தலையணையில் முகத்தைப் புதைத்து கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அன்று சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பிய ராமநாதன் தன் மகனை தூக்கி அணைத்துக்கொண்டவன் ''அம்மா எங்கேடி, கண்ணு?'' எனக் கொஞ்சிக் கொண்டே வினவினான்.



''அவள் மாடியில் இருக்கிறாள். காப்பிகூட சாப்பிட வரவில்லை'' என்று உள்ளேயிருந்து தன் தாயார் கூறியதைக் கேட்ட ராமநாதன் கவலையடைந்தவனாய்த் தன் தனயனுடன் ஒரே எட்டில் மாடியை அடைந்தான். தாளிடப்பட்டிருந்த அறைக் கதவைத் தட்டவே அம்புஜம் மெதுவாகக் கதவைத் திறந்தாள். அவளது முகத்தை நோக்கிய ராமநாதன் திடுக்கிட்டுவிட்டான். வெகுநேரம் அழுததனால் கண்கள் சிவந்து முகம் வீங்கியிருந்தது.

''அம்புஜம் உனக்கென்ன உடம்பிற்கு?'' எனப் பரிவுடன் வினவிய அவன் குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு அவள் அருகில் நெருங்கினான்.

''ஒன்றுமில்லை. முதலில் இவைகளைப் பாருங்கள்'' என்றாள் அம்புஜம். அவனைக் கண்டதும் தாங்க முடியாத கோபத்துடன் அந்தக் கடிதங்களை அவன் எதிரில் வீசியெறிந்தாள்.

கடிதங்களைக் கையிலெடுத்த ராமநாதன் விரல்கள் கடிதத்தைப் பிரித்ததும் நடுங்குவதை அவள் கவனித்தாள். அவளுடைய ஆத்திரம் உச்ச ஸ்தாயியை அடைந்தது. ''இவைகள் எல்லாம் உங்களால் எழுதப்பட்டவைதானே!'' என சீற்றத்துடன் கேட்டாள்.

பணிவின் அவதாரமென விளங்கிய அம்புஜம் தன் முன் பத்ரகாளிபோல் நிற்பதைக் கண்ட ராமநாதன், ''இது உனக்கு எப்படிக் கிடைத்தது!'' என்று தடுமாறினான்.

அம்புஜம், குற்றவாளியான தன் கணவனைத் தைரியத்துடன் நோக்கினாள். ''நான் எழுதவில்லை என்று என்னிடம் பொய் சொல்ல வேண்டியதில்லை. ஹேமலதா யாவும் சொல்லிவிட்டாள். உங்களுடைய பழைய காதல் விஷயத்தை இதன் மூலமாகப் புரிந்து கொண்டேன். வெளுத்ததெல்லாம் பால் என்ற என்போன்ற பேதைப் பெண்ணை ஏமாற்றுவ்தில் கைதேர்ந்தவர் நீர் என்று எனக்கு இன்றுதான் விளங்கியது'' எனப் பல்லைக் கடித்தாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் வெள்ளம் வழிந்தோடியது.

தன்னை மிக்க துணிச்சலுடன் எதிர்த்துப் பேசும் தைரியம் அம்புஜத்திற்கு எங்கிருந்து வந்ததென ஆச்சரியமும் கோபமும் அடைந்த ராமநாதன், ''புரிந்தது என்றால் சரி!'' என்றான் அழுத்தந் திருத்தமாக.

''எனக்கு ஏன் இந்த உண்மை இத்தனை காலமாக அறிவிக்கப்படவில்லை என நான் கேட்கிறேன்!'' என்றாள் சீற்றந் தாங்காத அம்புஜம்.

''அந்த உண்மை உனக்குத் தேவையில்லை!'' எனப் பளிச்சென்று பதிலளித்தான் ராமநாதன்.

''நம்மை மிகவும் யோக்கியன் என்று மனைவி நினைத்து ஏமாந்து போகட்டுமென்ற கெட்ட எண்ணத்தினால்தானே உண்மையைச் சொல்லவில்லை!'' என்று படபடத்தாள் அம்புஜம்.

''அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. மனக் கசப்பு தரும் விஷயங்களை நான் மறக்க எண்ணினேன். அவ்வளவுதான்!'' எனச் சலிப்பாகப் பதிலளித்த அவன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டான்.

கணவன் மனைவியிடையே நடந்த வாக்குவாதத்தின் அர்த்தத்தை அறியாத குழந்தை மிரள மிரள விழித்துக் கொண்டு தன் பக்கம் நோக்குவதை உணர்ந்த அம்புஜம் மகனை வாரி அணைத்துக்கொண்டு கணவன் பக்கம் மிகவும் ஆக்ரோஷத்துடன் திரும்பி, ''உங்களை உத்தமர் என நினைத்து என் இதய பீடத்தில் வைத்து ஆராதித்து வந்தேன் என்பது உங்களுக்குத் தெரிந்தால், இப்படிப் பேசுவீர்களா? உங்களை விட இலட்சிய புருஷர் இல்லையென நான் நினைத்திருந்தேன். தெய்வமென என் மனத்தில் பூஜித்திருந்தேன். என் நம்பிக்கை எல்லாம் பகற்கனவாய்ப் போகும்படி நீங்கள் செய்த துரோகம் என்னால் சகிக்க முடியவில்லை'' எனக் கூறிவிட்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அம்புஜம் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுவதைத் தாளாத அவன் அவள் அருகில் நெருங்கித் தாழ்வான குரலில், ''அம்புஜம், என்றாவது உன்னிடம் நான் இலட்சியங்களின் இருப்பிடம் என்று கூறியிருக்கிறேனா? மனிதனிடம் இலட்சியங்களைக் காணமுடியுமானால் மனிதன் தேவனாகி விடமாட்டானா? இலட்சியங்கள் வாழ்க்கையில் எட்டும் பொருளா? இதெல்லாம் தெரியாதா? என்னைத் தெய்வமென்று பூஜித்ததைவிட இன்று மனிதன் என்று மதித்து என்னை மன்னித்து விடு. மனிதன் தவறுகள் செய்வது சகஜந்தானே?'' என்றான் கொஞ்சலாக.



அம்புஜம் பதில் பேசாது கண்ணீர் வழிந்த கண்களுடன் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

''குழியில் புதைத்த பிணத்தைத் திரும்பத் தோண்டி எடுத்து வைத்துக்கொண்டு இழவு கொண்டாட யாராவது சம்மதிப்பார்களா? கடந்து போன அந்தத் துக்கத்தை நான் மறக்க முயற்சித்தேன். அதனாலேயே அதை நான் பிரஸ்தாபிக்கவில்லை. இதைத் தவிர உன்னை மணந்து கொண்டபின் உனக்கு ஏதேனும் துரோகம் செய்திருக்கிறேனா? உன்னிடம் நான் அன்பாக இல்லையா? என் கடமைகளினின்றும் தவறி நடக்கிறேனா? அம்புஜம், கடந்துபோன அந்த விஷயத்திற்காக என்னை மன்னித்து, அதை மறந்துவிடு'' எனக்கெஞ்சிக் கொண்டு அவள் கரத்தைப் பிடித்தான்.

அம்புஜம் அவனது பிடியினின்று தன் கரத்தை வெடுக்கெனப் பிரித்து எடுத்துக்கொண்டு, ''அன்பு! அன்பு! இந்தக் கடிதத்தில்கூட அவளுக்கும் இது மாதிரியே உபதேசித்திருக்கிறீர்கள். என் மீது கொண்டிருப்பதாகக் கூறும் பொய்யை அன்று அவளிடமும்தான் கூறியிருக்கிறீர்கள்!'' என்று எகத்தாளமாகக் கூறினாள்.

மனைவியின் குத்தல் மொழிகளினால் கோபமடைந்த ராமநாதன், ''பொய்யேயல்ல. உண்மைதான், அவள் மீது நான் அன்பு கொண்டிருந்தது உண்மைதான்'' என்றான் சற்று உரத்த குரலில்.

''பேஷ்! பேஷ்! அப்படிச் சொல்லுங்கள். அவள் மீதும் காதல் கொண்டிருந்தீர்கள்! இன்று என் மீதும் உங்களுக்குக் காதல்! வேடிக்கையாகத்தான் இருக்கிறது'' எனப் பதிலுக்கு உறுமினாள் அம்புஜம்.

''வசந்தாவை அன்று காதலித்தது உண்மைதான். அவளிடம் மட்டற்ற அன்பு வைத்திருந்தேன். சமூகத்தின் கட்டுப்பாட்டுக்காகக் காதலைத் தியாகம் செய்ய நேரிட்டது. இன்று உன் மீது எனக்கிருக்கும் அன்பை என்னால் விவரிக்க முடியாது'' என்று அலுப்புடன் கூறிய அவன் இடத்தை விட்டு எழுந்திருந்தான்.

''மிகவும் அழகாகத்தானிருக்கிறது உங்களுடைய காதலின் போக்கு! அன்று வசந்தா மீது காதல்; இன்று அம்புஜத்தின் மீது அன்பு; நாளை பிரேமா மீது பிரமை. ஆஹா புருஷர்கள் அகராதியில் காதலுக்குத்தான் எத்தகைய அற்புதமான அர்த்தங்கள்'' என்றாள்

கேலியும் கோபமும் கலந்த குரலில்.

''நீ சொல்வதில் உண்மை இருக்கலாம்!'' என அகங்காரமாக பதிலளித்தான் ராமநாதன்.

''உண்மையோ பொய்யோ! அன்று அந்தப் பெண்ணின் மனத்தை உடைத்தீர்கள். இன்று என் மனத்தை உடைத்து விட்டீர்கள். உலகில் உம் போன்ற கிராதகர் வேறு ஒருவரும் இல்லை என்பது நிச்சயம். உமது கோழைத்தனமான செய்கையினால்தானே ஹேமலதா என்னைப் பரிகசித்து அவமானமாகப் பேசிவிட்டுச் சென்றாள்? என் அந்தஸ்து என்ன? என் மதிப்பு எத்தனை? உம்மால், எனக்கு சமமில்லாத ஒரு பெண்ணால் நான் அவமானமடைய நேரிட்டது. அவள் கேட்ட சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு பாணமென என் மனத்தைத் தாக்கியது. இனி எனக்கு வேண்டியது ஒரு கயிறுதான்!'' எனக்கூறிய அம்புஜம் ஹோவென வாய்விட்டு அழ ஆரம்பித்தாள்.

## 35

'கிர்' என்ற காரின் சப்தத்தைக் கேட்டதும் ஹாலில் உட்கார்ந்திருந்த நாகராஜய்யர் தூரத்தில் நின்று கொண்டிருந்த மனைவியின் முகத்தை ஏதோ கேட்பவர் போல் நோக்கினார். படீரென்று காரின் கதவு திறக்கப்படும் ஓசையைக் கேட்ட பாலகிருஷ்ணன் இடத்தைவிட்டு எழுந்திருந்தான். உள்வாயிற்படி அருகில் நின்று கொண்டிருந்த அலமேலு ஏதோ ஜாடை செய்வதை உணர்ந்து மெதுவாக அவள் பக்கம் நழுவினான் அவன்.

''உங்க தம்பி வரார், பாருங்கோ!'' என ஆச்சரியத்துடன் சொல்லிவிட்டு வாயிற்பக்கம் கண்ணைச் சுழற்றினாள் அலமேலு. பாலகிருஷ்ணன் வியப்பு மிக்கவனாய் வாசலை நோக்கினான். அடுத்த கணம் சந்திரா முன்னால் வர, குனிந்த தலையுடன் ஜகந்நாதன் உள்ளே நுழைவதைக் கண்டான். புத்திரனையும் மருமகளையும் ஏககாலத்தில் பார்த்த நாகராஜய்யர் பேசும் சக்தியை இழந்தவராய், வைத்த கண் வாங்காது அவர்கள் இருவரையும் வெறித்து நோக்கினார்.



தங்களுடைய வரவு விகல்பமானதொரு நிசப்தத்தை உண்டாக்கியிருப்பதை உணர்ந்த ஜகந்நாதன், தந்தையை ஏறிட்டுப் பார்க்கவும் அச்சமடைந்தான். சந்திராவின் பின்னால் தயங்கிக்கொண்டே உள்ளே சென்றான். கணவனின் குழப்பத்தைக் கவனித்த சந்திராவும் தைரியமான குரலில், ''நேரே மாடிக்குப் போங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்''என்று உத்தரவிட்டாள். சந்திராவின் கையில் அகப்பட்ட ஒரு பொம்மையைப் போல் ஜகந்நாதன் அவள் உத்தரவின்படியே மாடியிலுள்ள தனது அறைக்குள் ஒரே எட்டில் போய் மறைந்து விட்டான்.

கணவன் சென்றதும் மன நிம்மதி அடைந்த அவள், ஏதோ அப்போதுதான் நினைத்துக் கொண்டவள் போல் மாமனாரின் அருகில் வந்து, ''தங்களுக்கு எதிராக அவர் விஷயத்தில் நான் முயற்சி செய்ததற்காக என்னைத் தாங்கள் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று தாழ்வான குரலில் சொன்னாள்.

நாகராஜய்யர் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனார். ஏற்கெனவே சந்திராவின் துணிச்சலான செய்கையினால் திகைப்படைந்து போயிருந்த அவரை, அவளுடைய வேண்டுகோள் இன்னும் அதிக ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள், அம்மா! என் இளைய பிள்ளை என் வரையில் செத்துவிட்டான்'' என்று விரக்தி நிறைந்த குரலில் அவர் பதிலளித்தார்!

மைத்துனர், ஓரகத்தி முன் தன் கணவரைப் பற்றி வெறுப்பாக அவர் கூறியதைக் கேட்ட சந்திராவுக்கு வாய் விட்டு அழ வேண்டும்போல் இருந்தது. எனினும், மன வருத்தத்தை அடக்கிக்கொண்டு அவள் சட்டென்று மாடிப்பக்கம் சென்றாள்.

அங்கு குழப்பத்துடன் உலாவிக் கொண்டிருந்த ஜகந்நாதனுக்கு விஷயம் ஒன்றும் சரியாகப் புரியவில்லை. ஜாமீனில் விடுதலையடைந்திருப்பதாக வக்கீல் பீமசேன அய்யர் மூலம் அறிந்த அவன் சிறைவாயிலை அடைந்த பொழுது அங்கு தனக்காகக் காருடன் சந்திரா காத்திருந்ததைக் கண்டு வியப்படைந்தான். தன் செய்கையினால் மிக்க மனம் நொந்து சந்திரா தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என எண்ணி, மனம் புழுங்கிக் கொண்டிருந்த

அவன், அவளுடைய மந்தகாச வதனத்தைக் கண்டு மௌனமாகக் காரில் ஏறிக் கொண்டான். வீட்டுக்குள்ளே நுழைந்த தன்னிடம் யாரும் பேசாததும், தன்னை அழைக்க சந்திராவைத் தவிர வேறு யாருமே வீட்டிலிருந்து வராததும் விளங்காத புதிராக இருந்தது.

பலவாறு யோசித்துக் கொண்டு முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்த அவன் முன்பு வந்து நின்ற சந்திரா, ''ஸ்நானம் செய்ய வெந்நீர் தயாராக இருக்கிறது வருகிறீர்களா?'' என்று அழைத்தாள். ஏதோ பதில் கூறத் தலை நிமிர்ந்த ஜகந்நாதன் சந்திராவின் முகத்தில் படர்ந்திருந்த சோகக் களையைக் கண்டதும் மனம் துணுக்குற்றவனாய்ப் பேசாது அவளைப் பின் தொடர்ந்தான்.

ஸ்நானத்திற்குப் பிறகு ஜன்னல் வழியே தோட்டத்தையே சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்த அவன் முன்பு, சந்திரா தான் கொண்டு வந்த ஆகாரத்தட்டுகளை அங்கிருந்த மேஜைமீது வைத்துவிட்டு, ''சாப்பிடுங்கள்! ரொம்பப் பசியாயிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்'' என்று அன்புடன் உபசரித்தாள்.

சந்திராவின் குரலினால் கற்பனை கலைந்த அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்! மனத்திற்குள் குமுறிக் கொண்டிருந்த துக்கத்தின் ஆழத்தை அறிவுறுத்தும் அவளது ஒளியிழந்த முகமும் துன்பம் நிறைந்த கண்களும் அவனது இதயத்தை ஒருகணம் பலமாக அமுக்கின. தன்னை வாழ்க்கைத் துணைவனாக அடைந்த அவளுக்குத் துன்பம் ஒன்றுதான் கிடைத்த பலன் என்று வேதனையடைந்த ஜகந்நாதன், ''எனக்குப் பசிக்கவில்லை. ஒன்றும் வேண்டாம். தயவு செய்து வற்புறுத்தாதே'' என மனக்கசப்புடன் கூறிவிட்டு மறுபடியும் தோட்டப்பக்கம் பார்க்கலானான்.

அந்திச் சூரியனின் இந்திரஜாலவர்ணத்தில் மலர்ந்து நின்று கொண்டிருந்த நானாவித வர்ணப் புஷ்பங்கள் தென்றலுடன் கொஞ்சலாகத் தலையசைத்து விளையாடிக் கொண்டிருந்தன. இதுதான் வாழ்க்கை என அந்தப் புஷ்பங்கள் அவனைப் பார்த்து நகையாடுவது போல் தோன்றிது. வசந்தத்தின் தென்றலைக் கண்டு மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் அந்தச் செடிகள், கொடுமைமிக்க மற்ற பருவ காலங்களில் இலையெல்லாம் உதிரப் பெற்றுக் கொம்புகளாக நின்று கொண்டிருக்கும் தோற்றத்தை அப்போது



நினைத்துக் கொண்டான் அவன்.

ஆமாம்! மனிதர்களின் உள்ளமும் அப்படித்தான். ஒருவனுடைய வாழ்க்கையில் உயர்வைக் கண்டு மலர்ந்த முகங்கொண்டு வரவேற்கும் ஜனங்கள், அவனுக்குச் சரிவு ஏற்படும் காலத்தில் கூசாது புறக்கணித்து விடுவார்கள். தெரியாமலா யோகிகள் வாழ்வு என்பது மாயை என்று கூறியிருக்கிறார்கள்? செய்ததாகச் சொல்லப்படும் குற்றத்தை ஜகந்நாதன் செய்தானா இல்லையா? என ஆராய்ந்துகூடப் பார்க்காமல் வீட்டில் உள்ள சகலரும் அவனைக் குற்றவாளி என்றே மிகவும் வெறுத்தனர். தனக்கு அவமானத்தைத் தேடி வைத்து விட்டான் பிள்ளை என்று நாகராஜய்யர் அவன் மீது கோபங் கொண்டுவிட்டார். புருஷனை எதிர்த்துப் பேசி, பிள்ளையின் பக்கம் சேருவதற்குக் காமாக்ஷியம்மாளுக்குத் தைரியமேது? பாலகிருஷ்ணனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். தம்பிக்குத் தாழ்வு எப்பொழுது வரும் என்று காத்திருந்த அவன், ஜகந்நாதன் வீழ்ச்சியில் குதூகலமாயிருந்தான். சந்திராவுக்குத்தான் தீராததாகப் போய்விட்டது. இதுதான் உலகம். இதுதான் வாழ்வு! இதற்குத்தான் இத்தனை போராட்டங்களும் - என்று பலவாறு யோசித்த ஜகந்நாதன் மனக்கசப்பு அதிகம் அடைந்தான்.

அவனது மனப்போராட்டங்களை உணர்ந்தவள்போல் சந்திரா மெதுவாக அருகில் வந்து, ''இரண்டு நாளாகப் பட்டினியாயிற்றே, எனக்காகவாவது கொஞ்சம் சாப்பிடக் கூடாதா!'' என மிகவும் தாழ்மையான குரலில் கேட்ட வண்ணம் அவன் தோளின்மீது தனது கரத்தை சகஜமாக வைத்துக் கொண்டாள்.

அவளது பரிவில் மனம் கனிந்த ஜகந்நாதன் சோகம் படிந்த அவளது முகத்தைத் திரும்பி நன்கு நோக்கினான். தன்னைப் பலவந்தமாக மணம்புரிந்த அவனை விஷமென ஒரு காலத்தில் வெறுத்த அவள், இன்று இரக்க தேவதையாகத் தன் முன் நிற்பதைக் கண்ட அவனுக்கு விசித்திரமாக இருந்தது. ''வீட்டிலுள்ள அத்தனை பேரும் என்னை வெறுக்கும்போது நீ மட்டும் இந்த குற்றவாளியிடம் ஏன் இத்தனை தயை காட்டுகிறாய்?'' எனத் தயக்கத்துடன் கேட்டான்.

''குற்றவாளியா இல்லையா என்று கோர்ட்டார் தீர்மானிக்கட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது

சாப்பிடுங்கள்'' எனப் புன்னகையுடன் வற்புறுத்தினாள் சந்திரா.

''சரியான நியாயம் வழங்கப்படும்வரை நான் பட்டினியாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்'' எனப் பிடிவாதத்துடன் கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டான் ஜகந்நாதன்.

''வேடிக்கைதான் உங்கள் பிரதிக்ஞை! அதுவரை உண்ணாவிரதமிருந்தால் என் கதி!'' எனக் கொஞ்சலாக மொழிந்த அவள் அவன் கரங்களைப் பற்றி மேஜையருகில் அழைத்துச் சென்றாள்.

பிறகு ஆச்சரியமடைந்த ஜகந்நாதன், ''அப்படியாவது நான் செத்து ஒழிந்தால் உனக்கு இந்த விவாக பந்தத்தினின்றும் விடுதலை கிடைக்குமல்லவா?'' என சலிப்புடன் கேட்டான்.

''இப்படிப் பிடிவாதம் செய்தால் குழந்தைகளுக்கு சாதம் ஊட்டுவதைப்போல நான் செய்ய வேண்டியதிருக்கும்!'' என்று அவள் சிரித்துக்கொண்டு கூறியதைக் கேட்ட அவன், ''அவ்வளவு சிசுருகைஷகளுக்கு நான் அருகதையற்றவன். கவலைப்படாதே. நீ சொல்கிறபடியெல்லாம் கேட்கிறேன். உனக்கு வீண் சிரமம் தரமாட்டேன்'' என்றான்.

சாப்பாட்டிற்குப் பிறகு களைப்பு மிகுதியால் தூங்கிப் போய்விட்டான் அவன். சிறிது நேரத்துக்குப்பின் திடுக்கிட்டு விழித்துக்கொண்டபோது தன் பக்கத்தில் சந்திரா உட்கார்ந்துகொண்டு விசிறிக் கொண்டிருந்ததைக் கவனித்தான். பரபரப்பாக அவள் கையிலிருந்த விசிறியைப் பிடுங்கி தூர எறிந்துவிட்டு, ''சந்திரா! நீ என்னை வெறுக்காதிருக்கிறாயே அதுவே நான் செய்த பாக்கியம். அதீதமான உன் சிசுருகைஷகளினால் என்னை ஏன் இப்படி தண்டிக்கிறாய்?'' என தழதழத்த குரலில் கெஞ்சிக் கேட்டான்.

சந்திரா தன் கண்களில் லேசாகப் படிந்த கண்ணீரைச் சமாளித்துகொண்டு, ''மின்சார விசிறி கோளாறினால் ஓடவில்லை. ஆகவே, விசிறினேன். வேண்டாமென்றால் வற்புறுத்தமாட்டேன்'' என்று கூறிவிட்டு எழுந்திருந்தாள்.

நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்த ஜகந்நாதன் ''சந்திரா! ஒன்று மட்டும் நான் உன்னிடம் கட்டாயம் சொல்லித்தானாக வேண்டும். அது என்னவென்றால், என்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தை



கனவில்கூட நான் செய்ய நினைத்ததில்லை'' என்று தடுமாறினான்.

துக்கத்தின் சுமையைத் தாங்க முடியாது அவன் மனம் குமுறுவதை முகம் வாயிலாக உணர்ந்த சந்திராவின் உள்ளம் வேதனையடைந்தது. எனினும் மிகவும் நிதானமாக ''நீங்கள் நிரபராதி என்பதை நான் நம்புகிறேன்'' எனப் பதில் அளித்துவிட்டு, மற்ற காரியங்களை கவனிக்கலானாள்.

கீழே கிடந்த பாதி எரிந்துபோன சிகரெட் துண்டுகளும் தாறுமாறாக போடப்பட்டிருந்த பழைய ஆடைகளும் அவனுடைய கவனக் குறைவையும் அலட்சியமான போக்கையும் வெகுவாக எடுத்துக்காட்டுவதைப் போல் இருந்தன. தான் வந்த கொஞ்ச நாழிகைக்குள் நாசூக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த இடம் அவ்வளவு தூரம் அவலட்சணப்படுத்தப்பட்டதை அவன்கூட கவனித்தான்.

பம்பரம் போன்று சுறுசுறுப்பாகச் சந்திரா வேலை செய்துகொண்டிருந்தாள். அழுக்குத் துணிகள் கணப்பொழுதில் கூடைக்குள் மறைந்துகொண்டன. கருத்துடன் வேலை செய்து கொண்டிருக்கும் சந்திராவைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் சட்டெனப் பேச ஆரம்பித்தான்.

''உன்னிடம் சில அந்தரங்கமான விஷயங்கள் பேச வேண்டுமென்று பல நாட்களாக நான் நினைத்ததுண்டு. அதற்கு இதுவரை சந்தர்ப்பமே வாய்த்ததில்லை. உண்மையாகச்சொல்கிறேன் சந்திரா! ஊரார் திருஷ்டியில் தோன்றுகிற மாதிரி அவ்வளவு அதமன் இல்லை நான். அறியாமையினாலும் மதியீனத்தினாலும், துர் சிநேகத்தினாலும் என் வாழ்வு சற்று மாசுபட்டிருந்தது வாஸ்தவமே. ஆனால், அதற்காக நான் பச்சாதாபப்பட்டு வாழ்க்கையை திருத்தி சரியான முறையில் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று எத்தனையோ தடவைகள் முயற்சித்திருக்கிறேன்.

''எல்லோரையும்போல் நானும் ஒரு பெண்ணை மணந்து அமைதியான இல்லற வாழ்வு நடத்த வேண்டுமென்று ஆசைப்பட்ட நாட்களும் உண்டு. என் கனவு வீணாகிவிட்டது. அதற்கு நீதான் காரணமென்று சொல்வதற்காக இப்படிக் கூட'மாகப் பேசுவதாக நீ தப்பர்த்தம் செய்து கொள்ளாதே. ஒரு பாவமும் அறியாத உன்

வாழ்வைப் பாழடித்தது நான் கடைசியாகச் செய்த பெரும் தவறு. அதை உணர்ந்து நான் படும் நரகவேதனை இவ்வளவு அவ்வளவு எனச் சொல்ல முடியாது. ஒருதலைக் காதலை முகாந்திரமாகக் கொண்டு வாழ்வின் ஒரே சந்தர்ப்பமான விவாகம் என்பதை உன் வரையில் பாழாக்கி விட்டேன். அதைத் திருத்தி அமைக்கக் கூடுமானால் நான் எத்தகைய தியாகத்துக்கும் தயார். ஆனால் விசித்திரமான இந்த தகராறு திருத்த முடியாத சிக்கலாயிற்றே என்பதுதான் என் துக்கம். முடிவாக ஒன்றே ஒன்றுதான் உன்னிடம் நான் கேட்டுக்கொள்ளப் போகும் வரம். சந்திரா! தாய் தந்தை சகலரும் வெறுக்கும் என்னை - நான் செய்யாத குற்றத்திற்காக ஒரு சமயம் தண்டிக்கப்பட்டுச் சிறை செல்ல நேரிட்டாலும்; எல்லோரையும் போல் வெறுக்காது இன்று காட்டிய இந்த ஆறுதலையே நீ என்றும் காட்டவேண்டும் என்பதுதான் என் கடைசி வேண்டுகோள். சந்திரா! நீ என் மனைவி என்ற ஹோதாவில் என்னைக் காதலிக்க வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. சுகம், துக்கம் இரண்டையும் பகிர்ந்துகொண்டு மனத்திற்கு ஆறுதல் அளிக்கும் சிநேகிதன் ஒருவனின் உள்ளத்தில் நான் எதை எதிர்பார்ப்பேனோ அதைத்தான் உன்னிடமும் வேண்டுகிறேன். இன்றிலிருந்து நீ என் உயிர் சிநேகிதி! சரிதானே சந்திரா? உன் நன்மதிப்பும், சிநேகிதமும் என்றும் எனக்குக் கிட்டுமா?'' என உணர்ச்சி வேகத்தில் பேசிவிட்டு மேலே தொடர முடியாதுபோய் நிறுத்தினான்.

ஏக்கம் மிகுந்த அவன் தன்னை நோக்குவதை உணர்ந்த சந்திரா இமைப்பொழுதில் அவன் அருகில் வந்தாள். அவன் வாயிலிருந்து வந்த அந்த வார்த்தைகள் யாவும் அவளை உணர்ச்சிவசப்படுத்தி விட்டன. மிக்க மனவெழுச்சி அடைந்த அவள், ஏதோ பேச நினைத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகை தவழும் முகத்துடன், ''உலகத்தவர் கற்பனையில் சிருஷ்டிக்கப்பட்ட ஜகந்நாதன் ஒருவர்; உண்மையில் நான் கண்ட ஜகந்நாதன் வேறு ஒருவர். இதை வெகுநாட்களுக்கு முன்பே நான் அறிவேன். என்றும் எந்த நிலையிலும் என் நன்மதிப்பு தங்களுக்கு உரித்தாகும். பயப்படாதீர்கள்'' என மொழிந்த வண்ணம் தனது இருகரங்களையும் அவன் பக்கம் நீட்டினாள்.

ஆவலுடன் அவைகளைப் பற்றிய அவன், பவித்திரமான



கரங்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டு மிகவும் இரக்கமான குரலில், ''சந்திரா! இத்தனை மென்மையான குணம் வாய்ந்த நீ என் வாழ்விற்குள் பத்து வருஷங்களுக்கு முன்பு புகுந்திருந்தால் இன்று இந்த நிலையில் நான் இருந்திருப்பேனா? ஆனாலும் பரவாயில்லை, கேவலமான இந்நிலையிலும் எனக்காக வருத்தப்படவோ சந்தோஷப்படவோ ஓர் ஆத்மா உலகில் இருப்பதைக் குறித்து என் மனம் ஆறுதலடைகிறது. இனி நான் விரும்புவது ஒன்றுமில்லை!'' என்றான் சாந்தமாக.

தனது கரங்களை விடுவித்துக்கொண்ட சந்திரா, ''திரும்பப் பதிலுக்கு நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவெனில் கேஸ் விஷயமான சகல பொறுப்பும் என்னுடையது. ஒருவிதமான கவலையுமின்றி நீங்கள் நிச்சிந்தையாக இருக்கவேண்டியது. அந்த வரம் எனக்குக் கிட்டுமா?'' எனக் கேட்டுவிட்டு மெதுவாகச் சிரித்தாள்.

நன்றியுடன் அவளை நோக்கிய ஜகந்நாதன், ''நீ சொல்வதற்கு ஆட்சேபணை ஒன்றும் இனி என்னிடமிருந்து வராது. சரிதானே?'' என்று புன்னகை பூத்தான்.

# 36

ஹேமலதாவின் தங்கநிற மேனியை அலங்கரித்ததனால் இன்னும் சிறப்படைந்ததைப் போன்று தோன்றியது அன்று அவள் உடுத்தியிருந்த அல்லிக்கலர் வங்காளப்பட்டுப் புடவை. களைத்து வீடு வரும் கணவனை வரவேற்க சிவந்த உதடுகளில் தவழும் புன்னகையுடன் வாயிலில் தேவமங்கை போல் நிற்கும் ஹேமலதாவைக் கண்ட நாகலிங்கத்தின் மனம் குதூகலித்தது. கவனிப்பாரற்றுக் கட்டைப் பிரம்மச்சாரி வாழ்க்கையை நடத்தி அலுத்துப் போயிருந்த அவனுக்கு கிரகஸ்தனான வாழ்க்கை மிகவும் நூதனமாகவும் ரம்யமாகவும் இருந்தது.

''எத்தனை நாழி வருவதற்கு? பார்த்துப் பார்த்து கண்கள் பூத்துப்

போகின்றன'' என்று கொஞ்சலாக மொழிந்த ஹேமலதா, அவனது வியர்வை படிந்த ஆடைகளைக் களைந்து எடுப்பதில் உதவி செய்தாள்.

''ஏன் இத்தனை நாழி தெரியுமா, ஹேமா? இங்கே வா, சொல்கிறேன்'' என்று செல்லமாகக் கூறியவாறு நாகலிங்கம் அங்கிருந்த நிலைக் கண்ணாடியின் எதிரில் நின்று கொண்டான்.

விவரம் புரியாத அவள், ''இதென்ன விளையாட்டு கண்ணாடி எதிரில்?'' என்று கூறித் திரும்புவதற்குள் ஜால வித்தைக்காரனைப் போல் பையிலிருந்த ஒரு முத்துமாலையை எடுத்து அவள் கழுத்தில் பூட்டினான் நாகலிங்கம். ஆச்சரியத்துடன் தன்னை நோக்கிய மனைவியைப் பார்த்து ''இது என்ன விலை பெறும், சொல்லு பார்க்கலாம்'' என்று செல்லமாக அவளது கன்னத்தைத் தட்டினான்.

தனது கழுத்தில் அந்த நல்முத்துமாலை அழகு பெற்று விளங்குவதைப் பெருமிதத்துடன் கண்ணாடியில் கவனித்துக் கொண்டே ஹேமலதா, ''நல்முத்துப் போலிருக்கு! ரொம்ப விலை இருக்குமே? எத்தனைக்கு வாங்கினீர்கள், சொல்லுங்கள்!'' என்றாள்.

''இரண்டு சரத்திற்கும் ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையமாட்டேன் என்று சொல்லிவிட்டான்'' என்று கூறி முடிப்பதற்குள் ஹேமலதா வியப்பும் திகைப்பும் அடைந்தவளாய், ''என்னத்திற்கு இதன் மேல் இவ்வளவு பணம் போட்டீர்கள்!'' என்றாள் மனத்தாங்கலுடன்.

''உன் பொருட்டு எத்தனை செலவழித்தால் என்ன? என் விலையில்லா மாணிக்கமல்லவா நீ?'' என ஆசையுடன் தன் அருகில் அவளை இழுத்துக் கொண்டான்.

கருணையுடன் அவனைப் பார்த்த ஹேமலதா, ''மறந்தே போய்விட்டேனே, நீங்கள் டீ சாப்பிடவில்லையே?'' என்று கூறிக்கொண்டு அங்கிருந்து மின்னலைப் போல் பக்கத்து அறைக்குள் ஓடி மறைந்தாள்.

நாகலிங்கம் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அவசரமாக உள்ளேயிருந்து வெளிப்பட்ட ஹேமலதா சுடச்சுட ஆவிபொங்கும் டீயை கோப்பையில் நிரப்பி அவன் எதிரில் வைத்துவிட்டு, ''என்ன யோசனை பலமாயிருக்கிறதே?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள்.



சிரித்துக்கொண்டே நாகலிங்கம் டீயை எடுத்து ஒரு வாய் பருகினான். ''அழகும் அன்பும் கொண்ட இந்தப் பெண் மனிதர்களில் கடைப்பட்ட என்மீது ஏன் காதல் கொண்டாள் என்றுதான் யோசிக்கிறேன்?'' என்றான்.

ஹேமலதாவின் முகம் குப்பென ஒரு கணம் சிவந்தது. ''இவர் சத்புருஷர், பணம் படைத்தவர், படித்தவர் என்று தகுந்த பாதுகாப்புகளுடன் தோன்றுமா காதல் என்பது? காதலுக்கு அர்த்தம் சொல்ல முடியுமா?'' என்று நாசூக்காகக் கேட்டாள்.

''காதல் என்பதற்குக் கண்ணில்லை என்றாலும் பெண்கள் மனம் காதல் விஷயத்தில் வரம்பு மீறி ஓடி விடுமா என்ன? காதல் விஷயத்தில் ஸ்திரீகள் குருடியாகி விடுவார்களா என்ன?'' எனப் பரிகாசமாகக் கேட்டான் அவன்.

ஹேமலதா புன்னகை செய்தாள். ''புருஷர்களின் மேன்மையான குணங்களைக் கற்பனை உலகில் ஸ்திரீ மிகவும் போற்றுகிறாள். ஆனால் வாழ்வில் துர்க்குணம் படைத்த புருஷனுக்குத்தான் அவள் மனம் அடிமையாகிறது. இது பெண்கள் மனத்தில் ஊன்றியிருக்கும் பலவிதமான உணர்ச்சிகளில் ஒன்று!'' என்றாள்.

''நீ அழகாகத்தான் பேசுகிறாய், ஹேமா!'' என்று கூறிய நாகலிங்கம் இடத்தைவிட்டு எழுந்திருந்து அவள் அருகில் வந்தான். சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்து, ''இதைப் படித்துப் பார். உன் மாமனாரிடமிருந்து வந்த கடிதம். நமது விவாகத்தைப் பற்றி அறிந்த அவர் கோபமிகுதியில் எழுதியிருக்கிறார்!'' என்று சொல்லிவிட்டு, அவள் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான்.

கீழ்வகுப்பைச் சேர்ந்த வேறு ஜாதிப் பெண்ணை மணந்து கொண்டதால் தமக்கும் தமது பிள்ளைக்கும் இனி உறவு அற்றுவிட்டதென்றும், அவனுக்காவது அவனது சந்ததிக்காவது தமது சொத்துரிமை கிடையாது என்றும் அவன் முகத்தில்கூடத் தாம் இனி விழிக்கத் தயாரில்லை என்றும் நாகலிங்கத்தின் தந்தை எழுதியிருந்தார்.

கடிதத்தைப் படித்த ஹேமலதாவின் முகத்திலிருந்த இன்ப ஒளி கணத்தில் மறைந்துவிட்டது. அவளது முக மாறுதலைக் கவனித்த

நாகலிங்கம் கவலையுடன் அருகில் வந்து, ''ஹேமா! தாய் தந்தையால் புறக்கணிக்கப்பட்டால் நான் மிகவும் ஏழையாகிவிடுவேன் என்று கவலைப்படுகிறாயா'' என்று கேட்ட வண்ணம் அவளது முகவாய்க்கட்டையை நிமிர்த்தினான்.

''என் சுயநலம் உங்களைத் தாய் தந்தையரிடமிருந்து பிரித்துவிட்டதே என்றுதான் துக்கமாயிருக்கிறது'' எனக் கூறிய ஹேமலதாவின் அழகிய விழிகள் கண்ணீரால் மூடப்பட்டன.

''சே! இது நாம் எதிர்பார்த்த விஷயந்தானே? இப்போ அப்படித்தான் கோபித்துக் கொள்வார் அப்பா. பிறகு சரியாகிவிடும். நீ புத்திசாலிப் பெண் அல்லவா? இதற்காகத் துக்கப்படலாமா?'' என்று தேற்றியவன் அவளது கண்ணீரைத் துடைத்தான்.

சற்று மனது திடமடைந்த ஹேமலதா அவனை நோக்கி ''தாய் தந்தையரின் உறவைக் கெடுத்து பாவி என்று என்னை ஒரு நாளும் வெறுக்க மாட்டீர்களே!'' எனக் கெஞ்சிய வண்ணம் அவனது கரங்களைப் பிடித்தாள்.

மனம் கரைந்துபோன நாகலிங்கம், ''ஹேமு! வெறுப்பதா? அதுவும் உன்னையா? என்னை வாழ்விக்க வந்த தெய்வத்தையா? அன்பு என்பது உலகில் இருக்கிறது என்னும் உண்மையை எனக்கு அறிவுறுத்திய ஹேமு ஆயிற்றே நீ. நீ இல்லாத வாழ்வு என்ன வாழ்வு? உன்னை இழப்பதைவிட சமூகத்தின் பந்தத்தையே இழக்க நான் தயார்!'' என உணர்ச்சியுடன் படபடப்பாகப் பேசிய அவன் அவளை அணைத்துக் கொண்டான்.

மனச் சமாதானத்தை பெற்ற ஹேமலதா பேச்சை வேறுபக்கம் திருப்பும் பொருட்டு மந்தஹாஸமாக, ''உங்கள் சிநேகிதர், ஜகந்நாதனின் கேஸ் நாளைக்கு ஆரம்பமாகிறதாம். நகரத்திலிருந்து பிரபல வழக்கறிஞர் ஒருவர் அவருக்காக வாதிக்கப் போகிறாராமே!'' என்றாள்.

ஜகந்நாதனின் விசாரணை என்ற வார்த்தையைக் கேட்ட நாகலிங்கத்தின் முகம் விநாடியில் கறுத்தது.

சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, மனைவி கேட்ட கேள்விக்கு நேராக பதிலளிக்காமல், ''அது கிடக்கட்டும், ஹேமு! இரவு சமையல் செய்தாகிவிட்டிருந்தால் என்னுடன் வெளியே வா. நாம் சினிமா பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது'' என்றான்.



படக்கென எழுந்திருந்த ஹேமலதா, ''ஒரு நிமிஷத்தில் சமையலை முடித்து இதோ வந்துவிட்டேன்'' என்று சந்தோஷத்துடன் சமையல் அறைக்குள் மான்போல் துள்ளி ஓடினாள்.

# 37

ஐந்து மாதகாலம்! நீண்ட காலந்தான். சந்திரா வாழ்விலே முக்கியமான நாட்களாகக் கொண்ட அந்த ஐந்து மாத காலத்தில் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத்தான் இருந்தது.

இன்றைய சாட்சிகள் நிலை எப்படியோ, இன்றைய கேஸ் முடிவு எப்படியிருக்குமோ என்ற திகிலில் துடிதுடிக்கும் இதயத்துடன் வேதனையில் வெந்து உழன்று கொண்டிருந்த சந்திரா, ஐந்து மாதங்களாக இரவுகளில் சரியாகத் தூங்கியிருப்பாளா? தங்கள் பக்கம் கேஸ் தோல்வியடைந்து விட்டால் என்ன ஆகும் என்ற மகத்தான பயத்தில் நிம்மதி அற்றுப்போன அவள் வாழ்வின் ஒவ்வொரு விநாடியையும் பயத்துடன்தான் வரவேற்றாள்.

நியாயாதிபதியின் பேனா முனையில் ஜகந்நாதன் வாழ்வின் இன்பம் ஊசலாடிக் கொண்டிருந்ததுபோல் தென்பட்டது அவளுக்கு. அவருடைய கருணை பொங்கும் கடைக்கண் பார்வை ஜகந்நாதனின் மீது திரும்பினால் பிழைத்தாள் சந்திரா! எதிர்த்தரப்பு வக்கீலின் வாக்கு சாதுரியத்திற்கும், உடைத்தெறிய முடியாத எதிர்த்தரப்பு சாட்சிகளுக்கும் ஜூரிகள் மயங்கினார்களானால், அந்தோ சந்திரா! தனது வாழ்வின் இன்பத்தை ஒரே நொடியில் இழந்துவிடுவாள்!

கடைசியில் அந்த நாள் வந்தது! ஜகந்நாதனின் கேஸ் தீர்ப்பாகும் நாள் கடைசியில் வந்ததும் நாளை தீர்ப்பு அளிக்கப்படும் என்பதை நினைத்து கதிகலங்கிப் போயிருந்த சந்திரா அன்று இரவை தூக்கமின்றியே கழித்தாள். வெகு சீக்கிரமே எழுந்துவிட்டாள்.

''ஜகந்நாதன் நிரபராதி! விடுதலை செய்யப்பட்டான்'' என்ற

வார்த்தைகளைக் கேட்டதும் அவள் ஆனந்த மிகுதியால் சற்று நேரம் தன்னை மறந்து அப்படியே ஆசனத்தில் உட்கார்ந்துவிட்டாள்.

''வாருங்கள், ஜகந்நாதனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போகலாம்!'' என வக்கீல் பீமசேனய்யர் சொன்ன பிறகுதான் அவளுக்கு உலகப் பிரக்ஞை வந்தது.

கூட்டத்தைப் பிளந்துகொண்டு வக்கீல் பீமசேனய்யர் உதவியால் நண்பர்களால் சூழப்பட்டிருந்த தன் கணவர் அருகில் வந்த சந்திராவுக்கு அதுசமயம் என்னென்னவோ ஆனந்தத்தில் வார்த்தைகளைக் கொட்ட வேண்டும்போல் தோன்றியது. சுற்றியிருந்த புருஷர்களைக் கண்ட அவள் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அன்புகனிந்த குரலில் ''வீட்டுக்குப் போகலாமே!'' என்றாள்.

சந்திராவின் குதூகல வதனத்தை உற்று நோக்கிய ஜகந்நாதன் ஒருகணம் அவளது கண்களை நேருக்கு நேர் சந்தித்தான். ஒரு வினாடியில் அவர்கள் வார்த்தையில் சொல்ல முடியாத பல விஷயங்களைக் கண்களால் கொட்டி அளந்து விட்டவர்கள்போல் இருவர் மனதிலும் பட்டது.

வீட்டை அடைந்ததும் சந்திராவின் சந்தோஷத்திற்கு எல்லையற்றுப் போய்விட்டது. சினிமாவில் வரும் கதாநாயகிகள்போல் அவளுக்குக் குதித்து ஓடவேண்டும் போல் ஒரு பைத்தியக்கார எண்ணம் கூடத் தோன்றியது.

கேஸில் ஜயமடைந்து திரும்பிவந்த மகனை நாகராஜய்யர் வரவேற்று தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளவில்லை. எப்பொழுதும்போல் முகத்தை 'உர்' என்றே வைத்து கொண்டிருந்தார்.

புருஷன் அடைந்த வெற்றியை அனுபவித்து சந்தோஷத்துடன் கொண்டாட வீட்டில் யாரும் முன்வராதது சந்திராவுக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. இருந்தாலும் தனது பிடிவாதத்தால் அடைந்த வெற்றியை அவள் அனுபவிக்காமல் விடப்போவதில்லை. பெருமையாக வீட்டிற்குள் ராணிபோல் உலாவினாள்.

ஜகந்நாதன் கையாடி விட்டதாக சொல்லப்பட்ட வழக்கில் அவன் நிரபராதி என்பதை அவனுடைய வக்கீல் மிகவும் அழகாக



நிரூபித்துவிட்டார். கணக்குப் புத்தகங்களில் பெருந்தொகையின் கீழ் காணப்பட்ட கையெழுத்துக்கள் யாவும் அவனுடையது அல்ல என்பதுதான் அவர் எடுத்துக்காட்டிய உண்மை.

இரண்டு நாட்கள் ஜகந்நாதன் விடுதலையடைந்த சங்கதியால் மல்லித்தோட்டம் வியப்பில் மூழ்கியிருந்த சமயம் அடுத்தொரு திடுக்கிடும் சம்பவம் நடந்து இன்னும் ஊரை கலகலக்க அடித்துவிட்டது. கள்ளக் கையெழுத்திட்டு 'சரபோஜி கெமிக்கல் ஒர்க்'ஸாரின் பணத்தை கையாடி விட்டதற்காக நாகலிங்கம் கைது செய்யப்பட்ட விஷயத்தை ஊரில் உள்ள ஒவ்வொருவரும் வாய் ஓயாது பேசிக்கொண்டிருந்தனர்.

பல நாட்களாக தன் தோற்றத்தில் அசட்டையாக இருந்த சந்திரா அன்று சாயங்காலம் தன்னை மிகவும் அழகாக அலங்கரித்துக்கொண்டாள். விலையுயர்ந்த நகைகள் யாவும் மார்வாரி கடைக்குப் போய்விட்டாலும் இருந்த சொற்ப நகைகள் மூலம் தன்னை அழகு செய்து கொண்டாள்.

காலையில் வெளியே சென்ற கணவன் இன்னும் வீடு திரும்பவில்லை! எங்கே போயிருப்பார்? எனச் சற்றுக் கவலையுடன் எண்ணிக்கொண்டே சந்திரா தன் அழகை கண்ணாடியில் கவனித்துக் கொண்டாள். மனதில் ஏற்பட்டிருக்கும் குதூகலத்தால் முகம் அதிக சோபையுடன் விளங்குவதை உணர்ந்த அவளுக்கு, அவளது மனப்போக்கு மிக்க விசித்திரமாயிருந்தது.

ஒரு காலத்தில் தன்னை நேசித்த ஜகந்நாதனிடமிருந்து விலகி ஓடிச்சென்ற அவள், இன்று தன்னிடமிருந்து விலகிச் செல்லும் அவனைப் பிடிக்க எத்தனை கஷ்டப்படுகிறாள். தன் மனநிலையைக் குறித்து மெல்ல சிரித்துக்கொண்ட சந்திரா பின்னால் யாரோ வரும் காலடி சப்தம் கேட்டுத் திரும்பி பார்த்தாள்.

''உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க!'' எனக் கூறிய வண்ணம் வாயிற்படியருகில் வந்து நின்றான் மன்னார்சாமி.

''யாரது? உள்ளே வரச்சொல்'' என்று கூறிய சந்திரா அங்கிருந்த ஆசனங்களைச் சற்று நகர்த்தி ஒழுங்குபடுத்தினாள்.

அந்த சமயத்தில் உள்ளே நுழைந்த அந்த ஸ்திரீயை ஏறெடுத்துப் பார்த்துத் திகைத்துப் போனாள் சந்திரா.

சோகத்தின் பிம்பமென எதிரே வந்து நின்ற ஹேமலதா சந்திராவின் ஆச்சரியத்தைக் கண்டு தானே பேச ஆரம்பித்தாள். ''எதிர்பார்க்காது உங்கள் வீட்டிற்குள் நான் நுழைவது இது முதல் தடவையல்ல. சந்தர்ப்பம் அப்படி செய்ய என்னைத் தூண்டுகிறது'' எனத் துக்கத்துடன் கூறிய ஹேமலதா மேலே தொடர்ந்தாற்போல், ''நான் யார் என்பது தங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்'' என ஆரம்பித்தாள்.

''தெரியும்! நீங்கள் நாகலிங்கம் அவர்களின் மனைவி ஹேமலதா அல்லவா?'' என்றாள் சுருக்கமாக.

''ஆமாம்! அவர் மனைவிதான்! உங்களிடம் நான் ஒரு சிறு உதவியை நாடி வந்திருக்கிறேன்'' எனத் தயங்கிய ஹேமலதாவின் தொண்டை சற்றுக் கரகரத்தது. துக்கம் தாங்காது அவள் திணறுவதைச் சட்டென்று புரிந்து கொண்ட சந்திரா மிக்க பச்சாதாபமடைந்தாள். ''என்னால் முடிந்த உதவியை செய்ய நான் தயார்! நிற்கிறீர்களே உட்காருங்கள்'' என உபசரித்தாள்.

அதுவரை நின்று கொண்டு பேசிய ஹேமலதா அங்கிருந்த ஆசனமொன்றில் உட்கார்ந்துகொண்டு ''என் கணவர் உங்கள் கணவருக்குப் பெரும் தீங்கு இழைத்து விட்டதென்னவோ உண்மைதான். அவர் செய்த இரு குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் இருக்கிறார். நேற்று அவர் என்னைச் சந்தித்த பொழுது ஒன்று கேட்டுக் கொண்டார். அதாவது தான் செய்த இந்தப் பெரும் தீங்கை ஜகந்நாதன் மன்னித்து விடும்படி மிகவும் கேட்டுக் கொள்வதாகச் சொல்லச் சொன்னார். அவரைத் தங்கள் கணவர் வெறுப்பார் என்பது என்னவோ நிச்சயம். தயவுசெய்து என் கணவரை மன்னித்து விடும்படி நானும் உங்கள் மூலமாக அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றாள். மேலே பேச முடியாது ஹேமலதாவின் கண்களில் கண்ணீர் வெள்ளம் வழிந்தோடுவதைக் கண்ட சந்திரா மனம் இளகியவளாய், ''வருத்தப்படாதீர்கள் அம்மா! எங்கள் தலைவிதியை அனுபவித்தோம். என் கணவரும் மாசற்ற மனத்தினர். தமது தலைவிதிக்காகப் பிறரை நோகச் செய்யும் மனம் படைத்தவர் அல்ல. உங்கள் கணவர் மீது எனக்கு ஆத்திரமோ வெறுப்போ ஒன்றும் இல்லை. இதை வற்புறுத்திச் சொல்கிறேன். வேறு ஏதேனும் நான் செய்யக்கூடிய உதவி இருந்தால் என்னால் முடிந்தவரை...'' என்று கூறி நிறுத்தினாள்.



''வேறு ஒன்று உண்டு! இந்த மகத்தான கஷ்டத்தைத் தாங்கள் எப்படிச் சகித்துக் கொண்டிருந்தீர்கள்? அந்த ரகசியத்தை எனக்குத் தயவு செய்து சொல்ல வேணும் எனக் கெஞ்சினாள் ஹேமலதா ஒரு மோகனப் புன்னகையுடன்.

அவளையே கண்கொட்டாது கவனித்துக் கொண்டிருந்த சந்திரா, ''அது ஒன்றும் பிரமாதமான காரியமல்ல, ஹேமலதா! நமக்கு உண்மையான அன்பு மட்டும் இருந்தால், எந்தக் கொடுமையையும் சகிக்கும் பொறுமை தானே வந்துவிடும். ஆரம்பத்தில் கஷ்டமாகத் தோன்றும்...'' என்றாள் மெதுவாக.

''சந்திரா? உங்களிடம் நான் பரஸ்பரம் மனம்விட்டுப் பேசுவதைச் சற்று அனுமதியுங்கள். எனக்குச் சிநேகிதர் ஒருவரும் இந்த உலகில் கிடையாது. நான் தாய் தந்தையற்ற அனாதைப் பெண்; அந்தஸ்தற்றவள்; பரம ஏழை. என்னை மதித்துப் பெற்றோர்களின் மனத்தாங்கலைப் பொருட்படுத்தாது நாகலிங்கம் மணந்து கொண்டார். அவருடன் வாழ்ந்த இந்த ஆறு மாதங்களில் நான் அவருடைய பரிபூரண அன்பை அறிவேன்.''

''என் அன்புக் கணவர் இன்று ஜெயிலில் இருக்கிறார். எங்களைச் சுற்றிலும் ஒரே கடன். கையில் செப்புத் தம்பிடி கூடக் கிடையாது. அவர் பெற்றோர்களும் மனத்தாங்கலினால் நான் கொடுத்த தந்திக்குக் கூட பதில் அளிக்கவில்லை. அவர் செய்திருக்கும் குற்றங்களுக்காக மிகக் கடுமையாக தண்டிக்கப்படலாம் என எங்கள் வக்கீல் சொல்கிறார். பரந்த ஆகாயத்தைப் போல் எனக்கு அவர் மீது எல்லையற்ற அன்பு இருக்கிறதென்னவோ வாஸ்தவமே. இந்த அன்பு ஒன்றுமட்டுமே அவரை என்னிடம் திருப்பிக் கொண்டுவந்து விடுமா?'' என்று பேசி நிறுத்தினாள்.

மனங்கசிந்துபோன சந்திரா, ''வருத்தப்படாதீர்கள். என்ன கஷ்டம் நேர்ந்தாலும் மனோதிடத்தை இழக்கவே கூடாது'' என அவளைத் தேற்றினாள்.

கண்ணீரைத் துடைத்து கொண்டு ஹேமலதா இடத்தைவிட்டு

எழுந்திருந்து, ''போய் வருகிறேன் சந்திரா! தங்களுடைய மேன்மையான ஆதரவுக்கு மிக்க வந்தனம்'' எனக் கூறிக்கொண்டு மெதுவாக வாயிலை நோக்கிப் போனாள்.

ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் சந்திரா சட்டென, ''ஹேமலதா! தங்களுக்கு ஏதேனும் பண உதவி வேண்டுமானால் என்னால் ஆகும்வரை செய்கிறேன். நீங்கள் அதைப்பற்றி சங்கோஜப்பட வேண்டாம்'' என்றாள்.

வாசற்படியருகே சென்ற ஹேமலதா திரும்பிச் சந்திராவைப் பார்த்து, ''வேண்டாம் சந்திரா! தற்போது எனக்கு உங்களின் நன்மதிப்பைத் தவிர வேறு ஒன்றும் தேவையில்லை!'' என்று கூறியவள் ஆயாசத்துடன் வாயிற்படியைப் பிடித்துக் கொண்டாள்.

அடுத்த கணம் சந்திரா ஓடிப்போய் பிடிப்பதற்குள் அவள் மூர்ச்சையாகித் தரையில் சாய்ந்துவிட்டாள்.

சந்திராவின் உபசரணையால் கண் விழித்துக் கொண்ட ஹேமலதா எழுந்து உட்கார்ந்துகொண்டு ''நான் போக வேண்டும். நேரமாகிவிட்டதே. எங்கள் வக்கீல் வந்து வீட்டில் காத்துக் கொண்டிருப்பார்'' எனக் கவலையுடன் சொன்னாள்.

''நீங்கள் இந்த பலவீனமான நிலையில் எப்படி நடந்து போவீர்கள்? சற்று இருங்கள். எங்கள் டிரைவரைக் கூப்பிட்டு காரில் உங்களை வீட்டில் சேர்ப்பிக்கச் செய்கிறேன்'' என்ற சந்திரா வெளியில் சென்று டிரைவருக்குச் சொல்லிவிட்டுத் திரும்பி வந்தாள்.

களைத்திருந்த ஹேமலதாவைக் கைகொடுத்து அழைத்துச் சென்ற சந்திரா மிகவும் சங்கோஜத்துடன் அவளை நோக்கி, ''நீங்கள் இது சமயம் மனதை அலட்டிக் கொண்டால், பிறக்கப்போகும் குழந்தைக்கு நல்லதல்லவே!'' என்றாள்.

ஹேமலதாவின் முகம் லேசாக சிவந்து மறைந்தது. வெட்கத்துடன், ''ஆமாம்! நல்லதல்லதான்! ஆனால் பிறக்குமுன் தந்தையைச் சிறைக்கு அனுப்பிய அந்தக் குழந்தையின் அதிர்ஷ்டத்தைக் குறித்து எனக்குக் கோபம்தான் வருகிறது'' என்று சலிப்பாகப் பதில் அளித்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டாள்.

கார் புறப்பட ஆரம்பித்ததும், ஹேமலதா சட்டென்று



சந்திராவின் கையைப் பிடித்து அன்புடன் ஒருதரம் அழுத்தி விட்டு, ''சந்திரா! உங்களை என்றும் நான் மறக்க மாட்டேன்!'' என்றாள் உணர்ச்சியுடன்.

கார் மறைந்த திக்கையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு சந்திரா உள்ளே திரும்புகையில் வெளியே சென்றிருந்த கணவன் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டாள். பரபரப்பாக தன் எதிரே வந்து நின்ற மனைவியைப் பார்த்த ஜகந்நாதன், ''சந்திரா நாளைக் காலை பதினோரு மணி வண்டிக்கு நான் அழகர்மலைக்குப் போகிறேன்'' என்றான்.

''அங்கே என்ன வேலையோ?'' என சந்திரா கேட்டு முடிப்பதற்குள், ''இனி எனக்கு அங்கேதான் வேலை'' என்றான் ஜகந்நாதன்.

# 38

இரவு போஜனத்திற்குப் பிறகு மாடி ஹாலுக்குள் சந்திரா நுழைந்தாள். அங்கே அவள் கணவன் ஒரு பெட்டிக்குள் வேண்டிய சாமான்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட அவள் திகைப்படைந்தவளாய் ''இரண்டொரு நாள் தங்குவதற்கு எத்தனை சாமான்கள்'' என்று கேட்டாள்.

பெட்டிக்குள் தனது ஆடைகளை தாறுமாறாகத் திணித்துக்கொண்டிருந்த ஜகந்நாதன் அவளை நடுவில் நிமிர்ந்து பார்த்து, ''நான் இனி அங்கேயே இருக்கத் தீர்மானித்துவிட்டேன். அதனால், ஒரு ஆத்மா குடித்தனம் செய்ய தேவையான சாமான்களை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்'' என்றான்.

மனைவி தன்னை பார்த்து சந்தேகத்துடன் விழித்ததைக் கண்ட அவன், ''இந்த கேஸ் ஒருவழியாக முடிய வேண்டுமென்று பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாக இருந்தேன். கடந்த ஐந்து மாதங்களாக இந்த வீட்டில் நான் ஒரு அன்னியனைப்போல்

நடத்தப்படும் கொடுமையை என்னால் சகிக்க முடியவில்லை. நான் குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்ட பின்பும் அப்பா முகங்கொடுத்து என்னிடம் பேசாதது என் மனத்தை உடைத்துவிட்டது. கௌரவம், தன்மதிப்பு என்பது என்னிடம் கிஞ்சித்தேனும் இருக்குமானால் பணக்கார அப்பாவின் பிள்ளை என்று வாழ்வதை விட நானும் ஒரு மனிதன் என்ற ஹோதாவில் சுய சாமர்த்தியத்தால் வாழ்க்கை நடத்துவதென்று மனவுறுதி செய்துகொண்டு விட்டேன்.

''அழகர்மலையில், 'அழகர் சிமெண்ட் வொர்க்ஸ்' என்னும் ஒரு சிறு தொழிற்சாலை இருக்கிறது. அதன் நிர்வாகிகளை எனக்கு முன்பின் தெரியாது. இருந்தபோதிலும் எனது யோக்யதாம்சங்களை எடுத்துக்காட்டி எனக்கு அதில் வேலை கொடுத்து உதவமுடியுமா என்று ஒரு கடிதம் எழுதிக் கேட்டிருந்தேன். உடனே பதில் வந்தது ஆச்சரியந்தான். கம்பெனிக்கு உதவி மானேஜர் தேவை என்றும் சீக்கிரம் வந்து வேலையை ஒப்புக் கொள்ளவேணும் என்றும் எழுதியிருந்தனர் அதன் நிர்வாகிகள். 'சரபோஜி கெமிக்கல் ஒர்க்'ஸில் மானேஜிங் டைரக்டர் என ஆயிரம் ரூபாய்கள் வரை சம்பளம் வாங்கி கொண்டு வீணே திரிந்து கொண்டிருந்த என் உண்மை அந்தஸ்து இப்பொழுதுதான் வெளிப்பட்டது. புது வேலையில் என் சம்பளம் நூற்றி இருபது ரூபாய்கள்தான்.''

மௌனமாக அவன் சொல்வதை எல்லாம் கேட்டு வந்த சந்திரா, ''அழகர்மலை என்பதை நான் இதுவரை கேள்விப்பட்டதேயில்லையே?'' என்றாள்.

''கேள்விப்பட்டிருக்க மாட்டாய். வறட்சி மிக்க அந்த குக்கிராமத்தைப் பற்றி யாருக்குத்தான் தெரியப் போகிறது. புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அந்த சிமெண்டு தொழிற்சாலை இருப்பதால்தான் இரண்டொரு நாகரிக மனிதர்கள் அங்கு வசிக்கிறார்கள். மிகவும் ஆரோக்கியமற்ற இடம்'' எனக் கூறிவிட்டு வறண்ட சிரிப்பொன்றை சிரித்தான்.

''ஜலக்கஷ்டமும், ஆரோக்கியமுமற்ற அந்த இடத்திற்குப் போக வேண்டுமா? மலைப்பாங்கான பிரதேசத்திற்கே உரித்தான பலவித விஷ ஜுரங்கள் நம்மைப் பிடித்துக் கொண்டால்?'' என பயத்துடன் கேட்டாள் சந்திரா.



''பயப்படாதே சந்திரா! நான் மட்டுந்தான் போய் இருக்கப் போகிறேன். என்னை எந்த ஜுரம் வந்து பிடித்துக் கொண்டாலும் பரவாயில்லை!'' என்றான்.

''ஏன்? நான்...'' எனச் சந்திரா கேட்பதற்குள் ''இஷ்டமிருந்தால் இங்கே இவர்களுடன் இரு. இல்லாவிட்டால் பிறந்தகத்திலோ அல்லது வேறு உனக்கு எங்கே இருக்க இஷ்டமோ அங்கே போய் இருக்கலாம். என் தந்தை சுயமாகச் சம்பாதித்ததைத் தவிர, பிதுரார்ஜித சொத்தில் எனக்கு ஒரு பாகம் உண்டு. அது உன்னைச் சேர வேண்டுமென ஒரு உயில் எழுதி வைத்து விட்டேன். அது உனக்கு ஏழு தலைமுறைக்குப் போதும்'' என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட சந்திராவுக்கு ஒரு குரல் வாய்விட்டு அழவேண்டும் போன்ற துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டது. அவள் தற்சமயம் வேண்டுவது ஜகந்நாதனின் பணத்தையும் அந்தஸ்தையுமா?

''சரி, சற்று நகருங்கள் உங்களுக்கு மூட்டை கட்டத் தெரியவில்லை'' எனப் பரிகாசமாக மொழிந்த அவள் அவனுக்கு வேண்டிய பொருள்களைப் பெட்டிக்குள் கணப்பெழுதில் அடுக்கிவைத்தாள்.

மறுநாள் காலை விடிந்ததும் சந்திரா மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டாள். துருதுருவென அவள் ஏதோ வேலையாக அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தாள்.

காலை பத்துமணிக்கு நாகராஜய்யரும் பாலகிருஷ்ணனும் வெளியே சென்றுவிட்டனர். குதிரை வண்டியொன்று பங்களா வாயிலில் வந்து நிற்பதைக் கண்ட காமாக்ஷியம்மாளும் அலமேலுவும் ஆச்சரியத்துடன் வாயிற்புறம் வந்தனர். அதுவரை தன்னுடைய பிரயாணத்தை ரகசியமாக வைத்துக் கொண்டிருந்த ஜகந்நாதன் சாமான்களை வண்டிக்காரனிடம் கொடுத்தனுப்பி விட்டு, ''சந்திரா போய் வருகிறேன்'' என மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டான். வேகமாக வாயிற்பக்கம் வந்தவன் வியப்புடன் விழித்துக் கொண்டிருந்த தாயின் அருகில் வந்து திடீரென அவள் காலடியில் வீழ்ந்து நமஸ்காரம் செய்தான். ''அம்மா போய் வருகிறேன்; இனி உங்கள் சின்னப்பிள்ளை இந்த வீட்டிற்குள் காலடி

எடுத்து வைக்க மாட்டான். நான் வீட்டை விட்டுப் போனதை அப்பாவுக்கும் மற்றவர்களுக்கும் சொல்'' என்று கூறிவிட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

''ஏண்டா ஜகந்நாதா! அப்பா கோபத்துக்காக மனஸ்தாபப்பட்டுண்டு நீ என்னை விட்டுட்டுப் போவது நியாயமாடா?'' என உரத்துப் பேசிய தாய் துக்கம் தாங்காது ஹோவென அழ ஆரம்பித்தாள்.

அது சமயம் ஒரு கைப்பெட்டியுடன் உள்ளேயிருந்து அவசரமாக ஓடிவந்த சந்திரா, மாமியாரின் கால்களில் விழ்ந்து நமஸ்கரித்து விட்டு, ''அம்மா நானும் போய் வருகிறேன்!'' என்றாள்.

''குழந்தைகளா! இப்படிப் பேசி வச்சிண்டு அநியாயம் பண்ணுவேளா நீங்க? ஏண்டி சந்திரா நீயாவது அவனுக்கு புத்தி சொல்லக்கூடாதா?'' என விம்மிய காமாக்ஷியம்மாள் தன் மாட்டுப்பெண்ணைப் போகவிடாது இறுகப் பிடித்துக் கொண்டாள். அந்தக் காட்சியைக் காணப் பயந்து கொண்டு அலமேலு மெல்ல உட்புறம் நழுவிவிட்டாள்.

மாமியாரின் துயரத்தைக் கண்ட சந்திராவின் கண்கள் கலங்கின. ''அம்மா என்னை விடுங்கள். அவர் இருக்குமிடத்தில்தானே நானும் இருக்க வேண்டும்'' என மெதுவாகக் கூறியவள் தன்னை விடுவித்துக் கொண்டு குதிரை வண்டியில் ஏற முயன்றாள்.

அவள் செய்கையைக் கண்டு திடுக்கிட்ட ஜகந்நாதன் ''இதென்ன சந்திரா, நீயும் புறப்பட்டுவிட்டே?'' எனக் கேட்டான் வண்டியிலிருந்த வண்ணம்.

''என்னை மட்டும் தனியே விட்டுச் செல்லலாமெனப் பார்த்தீர்களா?'' எனக் கேட்ட சந்திராவின் கண்களில் நீர் தளும்புவதைக் கவனித்த அவன் பதில் பேசாது வண்டியில் ஏறக் கஷ்டப்பட்ட அவளைக் கைகொடுத்து உள்ளே உட்கார வைத்தான்.

ஸ்டேஷனை அடைந்ததும் மனைவியின் பக்கம் திரும்பிய ஜகந்நாதன், ''சந்திரா! இன்றிலிருந்து நான் ஒரு சாதாரண மனிதன். என் வருவாய்க்கு மூன்றாவது வகுப்பில்தான் பிரயாணம் செய்யக்கூடும். உன்னால் இருநூறு மைல்கள் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்ய முடியுமா?'' எனக் கேட்டான்.



''முதல் வகுப்பில் இதுவரை நான் பிரயாணம் செய்ததே இல்லை! பயப்படாமல மூன்றாவது வகுப்பு டிக்கட்டை வாங்குங்கள்!'' என சிரித்துக் கொண்டு பதிலளித்தாள் அவள்.

மறுநாள் காலை ஆறு மணிக்குக் குறித்த ஸ்டேஷனில் இறங்கினார்கள் தம்பதிகள். அங்கிருந்து ஆறு மைல் தூரத்தில் இருந்த அழகர்மலையை அடைய ஒற்றை மாட்டு வண்டிதான். அங்கே மணலும் கல்லும் நிறைந்த ஒரு குறுகிய பாதையில் வண்டி ஆடிக்கொண்டு சென்றது. வண்டி குலுங்குவதால் சந்திராவின் தேகத்திற்கு அதிர்ச்சி ஏற்படக் கூடாது என்று எண்ணி படுக்கையிலிருந்த தலையணை ஒன்றை இழுத்து, ''இந்தா! இதன் மீது சாய்ந்துகொள். இல்லாவிடில் ஊர் போவதற்குள் உன் முதுகு ஒடிந்துவிடும்!'' என உபசரித்தான் ஜகந்நாதன்.

சந்திரா ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் கொண்டு வந்த சிறு கூடையொன்றைத் திறந்து அதிலிருந்து ''இந்தாருங்கள். இந்த மைசூர்ப்பாகு எப்படி இருக்கிறனெறு முதலில் ருசி பார்த்துச் சொல்லுங்கள்'' என அவன் கையில் கொடுத்தாள்.

ஜகந்நாதன் மிக்க குழப்பமடைந்தான். 'இந்தப் பெண்ணுக்கு சித்தப் பிரமை ஏற்பட்டிருக்கிறதா என்ன? எங்கு வேண்டுமானாலும் போய் சுகமாக இரு! என்று அவன் உத்தரவளித்தும்கூட ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டு அவனுடன் பிரயாணம் செய்ய வேண்டும்? புருஷனை விட்டுத் தனியே இருந்தால் சமூகம் பழிக்கும் என்ற பயத்தினாலா? மணந்துகொண்ட பின் மனைவி என்ற ஒரு கடமை இருக்கிறதே அந்தக் கடமைக்காவா? அல்லது ஜகந்நாதனால் மேலே சிந்திக்க முடியவில்லை.

## 39

அழகர்மலை என்பது மிகவும் சிறிய கிராமம். சோளத்தட்டைகள், பனை ஓலை முதலியவைகளினால் வேய்ந்த குடிசைகளின் நடுவே அங்குமிங்கும் அபூர்வமாக இரண்டொரு

ஒட்டுவில்லை வீடுகள் தென்படும். 'அழகர் சிமெண்ட் ஒர்க்ஸ்' என்பது சமீபத்தில் நிர்மாணிக்கப்பட்டதனால் தான் அக்கிராமம் சிறிது நாகரிகமடைந்தது என்று சொல்ல வேண்டும்.

ஊரின் சுற்றுப்புறம் முழுவதும் கண்ணுக்கெட்டியவரை கரும்புக் கொல்லையும், சோளக் காடுகளும்தான் வியாபித்திருந்தன. புஞ்சைக் காடுகளால் சூழப்பட்ட அழகர்மலை மீது இயற்கையன்னையின் கிருபா கடாட்சம் விழாததனால் தண்ணீர் தரித்திரம் ஏற்பட்டு அந்தக் கிராமவாசிகள் கஷ்டப்பட்டனர்.

காற்றில் அசைந்தாடும் செஞ்சோளக் கதிர்கள் தாங்கிய பசுமையான சோளக் காடுகள் இயற்கை அன்னையைப் பார்த்து, 'தாயே, இயற்கை தேவி! நீ சில சமயங்களில் கொடுமைமிக்கவள்! இருந்த போதிலும் முயற்சியுடைய மனிதர்கள் முன்னிலையில் உன் கொடுமை எம்மாத்திரம்!' என்று சிரிப்பதுபோலத் தோன்றியது அவைகளின் செழுமை!

பத்து பதினைந்து கூரை வீடுகளுக்கு மத்தியில் இருந்த சின்னஞ்சிறு ஒட்டுவில்லை வீட்டின் தோட்டத்தில் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தாள் சந்திரா. இரண்டு மாதங்களுக்கு முன்பு குப்பைமேடாக இருந்த அந்த வீட்டின் சுற்றுப்புறம் சந்திராவின் முயற்சியால் ஓர் அழகிய சிறு பூந்தோட்டமாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு செடியையும் தாய் குழந்தையை வளர்ப்பதுபோல் ஆதரவுடன் சந்திரா கவனித்து வளர்த்து வந்தாள். ஜகந்நாதன் ஆபீஸுக்குப் போனதும் தனியே இருக்கையில் பொழுது போக உதவியது அந்தத் தோட்டம்தான்.

பல விஷயங்களைப் பற்றி சிந்தித்துக்கொண்டே சந்திரா வேலையைச் செய்து கொண்டிருந்தாள். இரண்டு மாதங்கள் இரண்டு வினாடிகள் போல் சென்றது குறித்து அவள் மனம் ஆச்சரியப்பட்டது. காலம் வேகமாக ஓடுவதன் ரகசியம்தான் என்ன?

காலையில் எழுந்திருந்து வீட்டு வேலைகளைக் கவனிப்பாள். ஜகந்நாதன் பத்து மணிக்கு ஆபீஸுக்குப் புறப்படுவதற்கு காலை ஆகாரங்களைத் தயார் செய்து விடுவாள். அவைகளை அவனுக்குப் பரிமாறி அவனை ஆபீஸுக்கு சீக்கிரம் அனுப்புவதில் சிரத்தை காட்டுவாள். மறுபடி அவன் பகல் ஒரு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி



வருவதற்குள் மற்ற வீட்டுக் காரியங்களை கவனிக்கப் பொழுது சரியாக இருக்கும். பகல் சாப்பாட்டிற்குப் பிறகு அவன் ஆபீஸிற்கு போனால் திரும்பி வர ஐந்து மணிக்கு மேலாகும். அதுவரையில் புத்தகங்களைப் படித்தும், செடி கொடிகளைப் பாதுகாத்தும் பொழுதைக் கழிப்பாள். அவன் வந்ததும் டீ முதலியன கொடுத்து விட்டு, நல்ல தண்ணீர் கொண்டுவர அவனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு அழகர்மலையிலிருக்கும் சுனைக்குச் செல்வாள். பல நாட்கள் பழகிய அன்யோன்ய சிநேகிதர்கள்போல இருவரும் பொழுதுபோக்காக பேசிக்கொண்டு சிரமம் தெரியாது ஒரு மைல் தூரம் நடந்துபோய் வருவார்கள். தம்பதிகளிருவரும் சேர்ந்து வெளியே செல்வதைக் கண்டு அக்கிராமவாசிகள் சிறிது ஆச்சரியத்துடன் கொஞ்ச நாட்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஜகந்நாதன் அடைந்திராத சுகங்களைச் சந்திரா அந்த சிறு சம்பளத்தில் அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தாள். அழகும் ஆனந்தமும் நிறைந்த ஒரு சிறு வீடு. எந்த வேளையிலும் சிரித்த முகத்துடன் வரவேற்க அதில் ஒரு அழகிய மனைவி. வேளா வேளைக்கு ருசி மிகுந்த சாப்பாடு. இத்தனையும் பெற்ற ஜகந்நாதனை விட அதிர்ஷ்டசாலி வேறு யார்?

சந்திராவின் உபசரணைகளும் தொண்டுகளும் ஜகந்நாதனுக்குப் புரியவில்லை போலும்! நாளாக ஆக விஷம் தலைக்கேறுவதுபோல் சந்திராவின் உள்ளம் ஜகந்நாதன் மேல் கொண்ட கரைகாணா காதலால் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஜகந்நாதனுக்காகவே அவள் ஒவ்வொரு நிமிஷமும் வாழ்வதை அவன் புரிந்து கொள்ள முடியாது அவ்வளவு ஜடமாகப் போய்விட்டானா என்ன? முதலில் அவள் மீதிருந்த அந்த ஆர்வம் காலக் கிரமத்தில் மறைந்து விட்டதனால் இப்போது அலட்சியமாக இருக்கிறானா? இன்று சந்திரா வாழ்வில் விரும்பியது ஒன்றே ஒன்றுதான். பணம், பதவி, பட்டம் அல்ல. ஜகந்நாதனின் பரிபூரணமான அன்பு மட்டுமேதான். அது இருந்தால் அவள் வாழ்க்கை நிறைந்துவிடும். தன் அன்புக்காக ஏங்கும் சந்திராவை புரிந்து கொள்ளாததனாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ அவன் அவளுக்கு வெகு தொலைவில் விலகிப்போய் விட்டான். ஒரு காலத்தில் அவளது கைப்பிடியில் இருந்த இதயம் இன்று அவள்

கைக்கெட்டாத உயரத்திற்கல்லவா போய்விட்டது?

பல பல எண்ணிய சந்திராவின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. கணவனது அன்பிற்கு ஏங்கிக் கண்ணீர் உகுத்தது அன்று முதல் தடவையல்ல; தனியே இருக்கும் ஒவ்வொரு சமயமும் தன் பிசகிற்காகப் பச்சாதாபப்படும் போதெல்லாம் அவள் ரகசியமாகக் கண்ணீர் உகுப்பது வழக்கம்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்ட சந்திரா சற்று தூரத்தில் கணவன் வீடு நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கவனித்து தண்ணீர்க் குடத்தை கீழே வைத்துவிட்டு சிரித்த முகத்துடன், ''இன்றைக்கு வேலை அதிகம்போல் இருக்கிறது, நேரமாகிவிட்டதே!'' என்று கேட்டாள்.

''ஆமாம்! மாதவாரிக் கணக்குகளைப் பார்க்க வேண்டியிருந்தது; கொஞ்சம் நாழியாய் விட்டது'' என்ற ஜகந்நாதன் அங்கிருந்த ரோஜாச் செடியொன்றின் இலைகளைக் கிள்ளியவாறு நின்றான்.

''சாயங்கால டிபன் எல்லாம் ஆறிப் போயிருக்குமே, வாருங்கள்'' என அழைத்த சந்திரா வேகமாக வீட்டிற்குள் நுழைந்தாள். மேஜைமீது வைத்திருந்த பக்ஷணங்களை அவன் சரியாகச் சாப்பிடாததை கவனித்த அவள் ''ஏன், சாப்பிட நன்றாக இல்லையா?'' எனக் கவலையுடன் கேட்டாள்.

''பக்ஷணங்கள் எப்பொழுதும்போல் முதல் தரமாகத்தான் இருக்கின்றன. எனக்கென்னவோ தலை கனமாயிருக்கிறது. எதைச் சாப்பிட்டாலும் குமட்டுகிறது'' என முகத்தைச் சுளித்தான்.

கவலை மிக்க அடைந்த சந்திரா சட்டென்று எழுந்து அவனது கன்னத்தில் தன் கரத்தை வைத்துப் பார்த்தாள். நெருப்பென அவன் உடல் தகிப்பதைக் கண்டு ''ஜுரத்துடன் வேலைக்குப் போயிருக்கிறீர்களே நன்றாயிருக்கிறது!'' என அன்புடன் கடிந்துகொண்டாள். பரபரப்பாக படுக்கையை விரித்து அதில் அவனைப் படுக்க வைத்தாள்.

அந்தக் கிராமத்தில் வைத்திய வசதி கிடையாது. ஜகந்நாதனுக்கு ஜுரமடிக்கிறது. ஒரு சமயம் ஊரில் அடிக்கடி தென்படும் ஒருவகை விஷ ஜுரமோ என்னமோ? சந்திரா என்ன செய்வாள்? கலங்கிப்போன அவளுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. ஊருக்கு



நான்கு மைல் தூரத்தில் வேலங்குடி என்ற கிராமத்தில் ஒரு கிறிஸ்தவப் பாதிரி டாக்டர் இருப்பதாக அவள் கேள்விப் பட்டிருந்தாள். அவரைப் போய் அழைத்துவர வேண்டும். யார் போவது? வேலைக்காரக் கிழவியைத் தவிர ஊரில் இருப்பவர் ஒருவரையும் அவளுக்குத் தெரியாதே! சுற்றுப்புறமிருந்த குடிசையில் வாழ்ந்த குடியானவப் பெண்களுடன் அவள் ஒருநாளும் பேசியறியாள்.

மனதைத் திடப்படுத்திக் கொண்டு தானே தைரியமாக வீட்டை விட்டு வெளியே வந்த அவள் அந்திவேளையில் குடிசைகளைத் தாண்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக சென்றாள் வேலங்குடியை நோக்கி. கவலை தோய்ந்த அவளது முகத்தைக் கண்ட குடியானவப் பெண்களில் ஒருத்தி ''ஏம்மா? என்னம்மா வேணும்? அவசரமாக போகிறீர்களே!'' என தானே வலிய அவளைக் கேட்டாள்.

ஆதரவற்ற சமயத்தில் அந்த வார்த்தை அவளுக்கு அமிர்தமென தொனித்தது. ''வேலங்குடி பாதிரி டாக்டரை கூட்டி வரணும். வீட்டிலே ஐயாவுக்கு உடம்பு சரியில்லை'' என்றாள் கவலையுடன்.

''அதுக்கு நீங்க போக முடியுமா அம்மா? நாலு கல்லு தூரம் வயக்காட்டிலே பூந்துபோக வழி தெரியுங்களா? இருட்டப்போவுது! சித்த இருங்க, எங்க ஊட்டுக்காரரைக் கூப்பிட்டு கேட்கிறேன்'' என்றாள் கனிவு நிறைந்த குரலில் அந்தக் குடியானவப்பெண்.

அடுத்த கணம் சந்திராவைச் சுற்றி அந்தக் குடிசைவாசிகள் சூழ்ந்து கொண்டனர். ''நான் போய்க் கூட்டி வரனே'' என உதவி செய்ய ஒவ்வொருவரும் அவளுக்கு முன் வந்தனர். அதில் ஒருவன் தன் மாட்டு வண்டியுடன் புறப்பட்டுப் போய் டாக்டரை கையுடன் அழைத்து வருவதாக உற்சாகத்துடன் கிளம்பினான்.

சந்திரா வீட்டுக்குத் திரும்பியபோது இரண்டொரு குடியானவப் பெண்கள் அவளுக்கு உதவி செய்ய கூடவே வந்துவிட்டனர். ''வெந்நீர் போட்டுத் தரட்டுமா, அம்மா! தவிடு வறுத்துத் தரட்டுமா?'' என அவர்கள் தாங்களே வைத்தியம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

இரவு எட்டு மணி. கணவனது அருகில் மனவேதனைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சந்திரா, வாயிலில் வண்டி நிற்கும் சப்தத்தைக் கேட்டு எழுந்து வந்தாள்.

''உங்களது கணவருக்குத்தான் உடம்பு சரியில்லையோ?'' எனக்

கேட்டுக்கொண்டே வந்தார் வைத்தியர். அவரை உள்ளே ஜகந்நாதனிடம் அழைத்துச் சென்றாள் சந்திரா.

நோயாளியைப் பரிசோதித்த வைத்தியர் அவளது முகத்தை இரக்கமாகப் பார்த்து ''உங்களது கணவருக்கு இரு சுவாசப்பைகளிலும் கபம் கட்டியிருக்கிறது. மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்காவிட்டால் அபாயம் ஏற்படும்'' என்றார் மெதுவான குரலில்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு சந்திராவின் மனம் திக்கென்றது. ஜகந்நாதன் அவளைக் காதலிக்காவிட்டாலும் அவன் உயிருடன் இருந்து அவளுடைய பணிவிடைகளை ஏற்றுக்கொண்டால் அதுவேபோதும் என்று ஏங்கியிருக்கும் அவள் தற்போது அவனையே இழக்க நேரிட்டால் என்ன செய்வாள்?

வேண்டிய மருந்துகளைக் கொடுத்து விட்டு வெளிப்பட்ட வைத்தியரின் பின்னே வந்த சந்திரா வாயிலை அடைந்ததும் சங்கோஜத்தை விட்டு, கருணை மிகுந்த அவரது முகத்தை நோக்கினாள்.

''உண்மையைச் சொல்லுங்கள். அவர் உயிருக்கு ஆபத்தில்லையே? அவர் இல்லாவிடில் என் வாழ்க்கையே அஸ்தமித்து விடும்'' என உணர்ச்சி மீறிக் கூறிய அவள், விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள்.

மனம் நெகிழ்ந்து போன வைத்தியர் கருணை பொங்க அவளை நோக்கி, ''உங்களைப் பார்த்தவுடன் மிகவும் தைரியசாலியான பெண் என நினைத்தேன். இப்படிக் கோழையாக இருப்பதைக்கண்டு எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்தக் காலத்தில் இந்த ஜுரத்தில் உயிர் இழப்பது அபூர்வம். சரியாகக் கவனித்தால் எல்லாம் குணமாகிவிடும். கவலைப்படாதீர்கள்'' எனத் தேறுதல் கூறி உள்ளே அனுப்பினார்.

சந்திரா வாழ்க்கையின் கஷ்டங்களை எதிர்த்துப் போராடத் துணிச்சல் நிறைந்த உள்ளங் கொண்டவள்தான் என்றாலும், ஜகந்நாதன் மீது கொண்ட பிரேமையின் முன் இந்தத் திடசித்தம் பொடியாகி விட்டதே!



# 40

பத்து நாட்களாக ஜுரத்துடன் மன்றாடிக் கொண்டிருந்த ஜகந்நாதன் அன்று சற்றுக் குணமடைந்தவனாகத் தென்பட்டான். படுத்திருந்து அலுத்துப்போன அவன் மெல்ல எழுந்து படுக்கையில் உட்கார்ந்துகொண்டான்.

நோயுடன் உபாதைப்பட்டுக் குணமடைந்து கொண்டிருக்கும்போது நோயாளிகளுக்கு ஏற்படும் ஒருவித இன்பமான சோர்வு அவனது தேகத்தைப் பற்றிக் கொண்டிருந்தது. மென்மையாக ஜன்னல் வழியே வீசும் தென்றலின் தன்மையில் சூரிய கிரணங்கள் கண்களின்மீது படிவதைத் தவிர்த்துக்கொண்டு தலையணை ஒன்றின்மீது சாய்ந்தவாறு உட்கார்ந்து கொண்டிருந்தான். உட்புற அறையில் சந்திரா அவனுக்கு ஆகாரங்களை தயார்செய்து கொண்டிருந்தவள், தன் முதுகுப்புறம் அவனுக்குத் தெரியும் வண்ணம் நின்றுகொண்டிருந்தாள்.

இரவு பகலாக அவனுக்குச் சிசுருஷைகள் செய்ததன் பயனாக அவள் தேகம் பாதியாகப் போய்விட்டதை உற்றுக் கவனித்த ஜகந்நாதன் மனம் திடுக்கிட்டான்; 'பட்ட கஷ்டம் போதாதென்று இந்தப் பெண் தனது உடல் நலத்தையும் என் பொருட்டுப் புறக்கணிக்க ஆரம்பித்து விட்டாளே!' என்று எண்ணிக் குழப்பம் அடைந்தான்.

சந்திராவை அவன் ஏறக்குறைய ஒன்றரை வருஷங்களாக அறிவான். வாக்குச் சாதுர்யமும் சௌந்தர்யமும் அதைச் சூழ்ந்த ஏழ்மையும் நிறைந்த சந்திராவை அவன் முதன் முதலாக உபாத்தியாயினியாகப் பார்த்திருக்கிறான். மின்னலைப் போன்று அவளது எளிய தோற்றத்தின் நடு நடுவே தோன்றிய அவளது வனப்பு, படீர் படீர் என ஒலிக்கும் இடியைப்போன்ற அவளது துடுக்கு நிறைந்த குணத்துடன் இணைபிரியாது பிணைக்கப்பட்டிருந்தது. அவளது வனப்பில் மயங்கி அவளது பாதாரவிந்தங்களில் வீழ்ந்து கெஞ்சக்கூட அவன் தயாராயிருந்த நாட்களும் உண்டு.

கண்டவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு மிக்க தேவமங்கைபோல் பட்டுக்களாலும், வைரங்களாலும் அலங்கரித்துக் கொண்டு, ராணியைப் போன்று உலாவிய அவளை, 'மனைவி' என்ற ஸ்தானத்திலும் அவன் அறிவான். விலையுயர்ந்த புடவையால் அலங்கரித்து விற்பனைக்கு வைத்திருக்கும் பொம்மையைக் கண் குளிர வழிப் போக்கர் பார்ப்பதில்லையா! அத்தகைய பொம்மை, ஜகந்நாதன் மனைவி என்ற ஸ்தானத்தில் வந்து உட்கார்ந்து விட்டது போல் அவனுக்கு ஏமாற்றமளித்த நாட்கள் எத்தனை? கடையில் வைத்திருக்கும் பொம்மையோ பேசாமடந்தை! ஆனால், ஜகந்நாதன் வாழ்வில் குறுக்கிட்ட பொம்மை மனைவி பேசா மடந்தையா? கோபத்தில் நெளியும் அவளது புருவங்களையும், கேலிப் புன்னகை மிதந்தோடும் அவளது கொவ்வை கனியிதழ்களையும், பாணங்கள் போன்று இதயத்தை ஊடுருவிப் பாயும் சொற்களையும் கண்டு அவன் மனம் வேதனையடைந்து வெந்துழன்ற நாட்கள் எவ்வளவோ?

அவனது வாழ்க்கையில் பற்றற்றவள்போல் நடந்துகொண்டிருந்த அவளிடம் காலக்கிரமத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் எத்தனை விசித்திரமானவை! குற்றவாளியென யாவராலும் கருதப்பட்டு நொந்து போயிருந்த அந்த நாட்களில் இரக்க தேவதையே மனித உருவில் வந்து விட்டதோ என எண்ணும்படி அல்லவா சந்திரா தோற்றமளித்தாள்! அச்சமயம் அவள் அவனுக்கு வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு பொக்கிஷமாகத் தென்பட்டாள்.

நோயுடன் உபாதைப்பட்டுக் கொண்டு பலஹீனமான நிலையில் இருக்கையில், இரவு பகல் எனப் பாராது அவனது உடல் நலத்தைக் கருதி உழைத்து வந்த சந்திராவின் மனப்போக்கு எப்படி மாறியிருந்தது! சாப்பிடப் பிடிவாதம் பிடிக்கும் குழந்தையைக் கெஞ்சியும் கொஞ்சியும் சாதம் ஊட்ட முயற்சி செய்யும் தாயைப் போல், சந்திராவின் சிசுருட்ஷைகளில் தூய்மை தொனித்துக் கொண்டிருந்தது. ஜகந்நாதன் சிறுவனாயிருக்கையில் ஒரு சமயம் கடும் ஜுரத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது காமாக்ஷியம்மாள் இரவு பகல் என்று பாராது பணிவிடைகள் செய்த நாட்கள் அவனுக்கு நினைவு வந்தன. மகன் கஷ்டப்படுவதைக் காணச்



சகியாத காமாக்ஷியம்மாள் வேதனை பொங்கும் முகத்துடன் தத்தளித்தாளே அதே போல் சந்திராவும் தனது கஷ்டத்தைக் காணச் சகியாது மனம் வேதனைப்பட்டதை அவள் முகம் எடுத்துக்காட்டியதை ஜகந்நாதன் கவனித்தான்.

பலவாறு யோசித்துக் கொண்டிருந்த அவன் முன்பு சந்திரா கஞ்சியுடன் வந்து நின்றாள்.

''இனியும் நான் கஞ்சி சாப்பிடமாட்டேன். இன்று சாதம்தான் சாப்பிடப் போகிறேன்'' என்று சற்றுப் பிடிவாதத்துடன் ஜகந்நாதன் கூறினான்.

''அப்படிச் சொன்னால் முடியுமா? இன்றைக்கு மட்டும் சாப்பிட்டு விடுங்கள். நாளையிலிருந்து சாதம் சாப்பிடலாம்!'' என வற்புறுத்தலாக உபசரித்தாள் சந்திரா.

''கஞ்சியைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு என் நாக்கு உணர்ச்சியற்றுப் போய்விட்டது. என்னால் இனி இந்த ஆகாரத்தை ஏற்றுக் கொள்ளவே முடியாது. வேண்டுமானால் நீ சாப்பிட்டுப் பார்'' என முகத்தைச் சுளுக்கிக் கொண்ட ஜகந்நாதன் அந்தப் பாத்திரத்தை வாங்கிப் பக்கத்திலிருந்த மேஜை மேல் வைத்தான்.

அதை சட்டெனக் கையில் எடுத்துக்கொண்ட சந்திரா அவனது படுக்கையில் வந்து மிகவும் சகஜமாக உட்கார்ந்து கொண்டாள். ''பாயசம்போல் எத்தனை வாசனை இந்தக் கஞ்சிக்கு. இது பிடிக்கவில்லையா உங்களுக்கு? இன்று மட்டும் சாப்பிட்டு விடுங்கள். நாளையிலிருந்து பாருங்கள். உங்களுக்குப் பிடித்த சமையல்தான்'' எனக் கெஞ்சிக் கொண்டே பாத்திரத்தை அவன் கையில் வைத்தாள்.

''சந்திரா நீ பொல்லாதவள்!'' என சற்று பரிகாசமாக மொழிந்த ஜகந்நாதன், சிரித்தவண்ணம் அதை வாங்கிக் குடித்தான்.

அழகிய தந்தம் போன்ற கைகளில் தங்க வளையல். கழுத்தில் மெல்லிய சங்கிலி; இடையில் சாதாரணக் கறுப்பு நூல் புடவை. இதுதான் சந்திராவின் அலங்காரம். எனினும், பட்டு உடுத்தி நீலவொளி வீசிய வைர ஆபரணங்களுடன் ஜொலித்த காலத்தைவிட, அவளது தோற்றம் மிக்க லாவண்யமாகத் தென்பட்டது. அவளது அழகைக் கண்களால் பருகிக் கொண்டிருந்த அவன், ''இவ்வளவு கனிவு சுபாவம் கொண்ட இந்தப் பெண் மட்டும் உண்மையான

அன்புடன் என்னைக் காதலித்தால்?'' என்று மனதிற்குள் ஏங்கினான்.

''வேண்டாம்! வேண்டாம்! என்று சொல்லிக் கொண்டே ருசி பார்க்கக்கூட மிச்சம் வைக்காது அவ்வளவையும் நீங்களே சாப்பிட்டு விட்டீர்களே?'' என்று சிரித்த சந்திராவினால் அவன் சிந்தனை தடைப்பட்டது. அவளது மென்மையான தோற்றத்தில் மனம் ஆழ்ந்து போன அவன் தன்னையும் அறியாது அவ்வளவு கஞ்சியையும் சாப்பிட்டுவிட்டதையறிந்து வியப்படைந்தான்.

மேலே காரியங்களைக் கவனிக்கச் சென்ற சந்திரா எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு நொடிப்பொழுதில் ஜகந்நாதன் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''வெளியே போய்வரச் சற்று அனுமதிப்பீர்களா?'' என்று சிரித்தவாறு கேட்ட சந்திராவை, ''எங்கே போகப் போகிறாய்?'' என்று புன்னகையுடன் கேட்டான் ஜகந்நாதன்.

''போகும்போது அபசகுனம்போல் எங்கேயென்று கேட்ட போதிலும் இந்தத் தடவை மன்னித்து விடுகிறேன்! உங்களை வந்து பார்த்து வைத்தியம் செய்தாரே அந்தக் கிறிஸ்தவ டாக்டர், அவர் மனைவி என்னை அவர்களுடைய வீட்டிற்கு அழைத்திருக்கிறார். அவரைப் பார்க்க போய் வருகிறேன்'' என்றாள்.

''சாயங்காலமாயிற்றே! திரும்புவதற்குள் இருட்டி விட்டால் தனியே நீ எப்படி வருவாய்?'' எனக் கவலையுடன் கேட்டான் ஜகந்நாதன்.

''அவர்கள் வீட்டுக் குதிரைவண்டியை அனுப்பியிருக்கிறார்கள். கூடத் துணைக்கு ஆளும் வந்திருக்கிறான். அந்த டாக்டரின் மனைவியும் ஒரு டாக்டர்தானாம்! அவரைச் சந்திக்க நான் மிக்க ஆவலாய் இருக்கிறேன். உங்களைச் சிரத்தையுடன் கவனித்த அந்த டாக்டருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்திருக்கும் அவள் எப்படிப்பட்ட ஸ்திரி என்பதைப் பார்க்க மனம் ஆசைப்படுகிறது'' என்று புன்னகை பூத்தாள்.

''உன்னைப்போல் மிகவும் பொறுமைசாலியாக இருப்பாள் என்று இங்கிருந்தே நான் ஜோஸ்யம் சொல்லி விடுவேன்'' என்று ஜகந்நாதன் கூறியதைக் கேட்ட அவள், ''சரி உங்கள் ஜோஸ்யம் பலிக்கட்டும்!'' என்று விளையாட்டாகக் கூறியவண்ணம் வாயில்பக்கம் சென்றாள்.



# 41

பூரண குணமடைந்துவிட்ட ஜகந்நாதன் முன் போலவே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டான். அன்று பகல் அவன் ஆபீஸிற்குக் கிளம்பிப் போனதும், சந்திரா வீட்டைப் பூட்டிக் கொண்டு தன்னுடன் தயாராக வரக் காத்திருந்த குடியானவப் பெண் ஒருத்தியுடன் கால்நடையாக வேலங்குடிப்பக்கம் கிளம்பிவிட்டாள்.

கடந்த ஒரு மாதமாகவே அவளுடைய கவனத்தை முழுவதும் வேலங்குடி கவர்ந்து கொண்டுவிட்டது. ஒழிந்த வேலைகளில் பாதிரி டாக்டரின் இல்லத்தில் பொழுதைக் கழிப்பதை அவள் மிகவும் விரும்பியதற்குக் காரணம் இருந்தது.

முதன் முதல் சந்திரா, டாக்டரின் வீட்டையடைந்ததும் பாதிரி டாக்டர் அவளை எதிர்கொண்டு அழைத்து தம் மனைவிக்கு அறிமுகப்படுத்தினார். ''உங்களைப் பற்றிப் பிரமாதமாக என்னிடம் புகழ்ந்து கூறினார் என் கணவர். உங்களைப் பார்க்க மிக்க ஆவலாக நான் இருந்தேன்'' என உற்சாகமாக வரவேற்றார் டாக்டரின் மனைவி ஸ்ரீமதி லில்லி ஜோஸப். ஜோசப் தம்பதிகள் தமிழ் கிறிஸ்தவர்கள். டாக்டர் ஜோஸப் வைத்தியப் படிப்பு படித்தவர். மதப்பற்று அதிகம் கொண்டவர்.

ஆதலால் பாதிரி வேலையையும் செய்து கொண்டிருந்தார். அவரது மனைவியும் வைத்தியப் படிப்பு படித்திருந்தாள். அவர்கள் அந்தக் கிராமத்திற்கு வந்து இருபது வருஷங்களுக்கு மேலாகி விட்டதென்றும், அவர்களின் முயற்சியால் தர்ம வைத்திய சாலை ஒன்றும் அனாதை ஆசிரமம் ஒன்றும் நடத்தப்படுகின்றன என்றும் சந்திரா அறிந்து கொண்டாள்.

ஸ்ரீமதி ஜோஸப்புக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும்.

மாநிறமாக இருந்தாலும் களை பொருந்திய முகம். தும்பைப் பூவைப்போல் வெளுத்த தலைமயிர். தூய்மை நிறைந்த அன்பு மொழிகளால் சந்திராவை அவள் சீக்கிரத்தில் வசியப்படுத்திவிட்டாள். அவர்கள் நடத்தி வந்த அனாதை ஆசிரமத்தில் சுமார் இருநூறு குழந்தைகள் இருந்தன. மதப்பற்றுக் கொண்ட பிரமுகர்களின் ஆதரவுடன் ஜோஸப் தம்பதிகளின் மேற்பார்வையின் கீழ் அந்த ஆசிரமம் நடந்து கொண்டிருந்தது. ஜோஸப் தம்பதிகளுடன் ஆசிரமத்தைப் பார்வையிடச் சந்திரா போகும் போதெல்லாம் சிறு குழந்தைகள் ஆர்வத்துடன் ஸ்ரீமதி ஜோஸப்பை, 'அம்மா!', 'அம்மா!' என அழைத்துக் கொண்டு ஓடி வருவார்கள். தாய் தந்தையற்ற அந்த அனாதைக் குழந்தைகளை ஸ்ரீமதி ஜோஸப் ஆதரவுடன் வாரியணைத்துக் கொண்டு இன்பமாக வார்த்தையாடி அவர்களை மகிழ்விக்கச் செய்வதைக் கண்டு சந்திரா பிரமித்துப் போவாள். அழுக்கு உடைகளைக் களைந்து நல்ல உடுப்பணிவித்தும், பரட்டைத்தலையை அழகாக எண்ணெய் தடவி வாரிவிட்டும் ஏழை நோயாளிக் குழந்தைகளை கொஞ்சமும் அருவருப்பின்றித் தனது மடியில் எடுத்து வைத்துக் கொண்டு புண்ணுக்கு மருந்து போட்டும் ஸ்ரீமதி ஜோஸப் பணிவிடை செய்வதை சந்திரா கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறாள். நோய், அழுக்கு, தரித்திரம், ஏழ்மை இத்தனையையும் தாண்டி நிற்கும் அந்த அன்பின் மேன்மைதான் என்ன!

அதற்குப் பதிலளிப்பதுபோல் ஒருநாள் ஸ்ரீமதி ஜோஸப் தானாகவே பேச ஆரம்பித்தாள். ''வில்லி இருபது வருஷங்களுக்கு முன் நீ எப்படி என்னைக் காதலித்தாயோ அப்படி அந்தப் பெண் தன் கணவனைக் காதலிக்கிறாள். அவளது பணிவிடைகள் நமது கடந்த நாட்களை ஞாபகப்படுத்துகின்றன என்று என் கணவர் முதன்முதலில் உங்களைப் பற்றி என்னிடம் கூறும்பொழுது சொன்னார்'' என்று சொல்லிப் புன்னகை பூத்தாள் அவள்.

நாணமிக அடைந்த சந்திரா, ''அப்படியென்றால் தற்போது உங்களுக்கு உங்கள் கணவர்மீது அன்பு இல்லாததுபோல் அல்லவா அர்த்தம் ஏற்படுகிறது?'' என்றாள் பரிகாசமாக.

''அவர்மீது நான் அந்தக் காலத்தில் கொண்டிருந்த அன்புக்கும் இக்காலத்தில் கொண்டிருக்கும் அன்புக்கும் வித்தியாசம் உண்டு



என்பதுதான் அவர் சொன்னதின் உள் அர்த்தம். நானும் அவரும் படித்த காலத்தில் ஒருவர் மீது ஒருவர் மிக்க பிரேமை கொண்டோம். எங்களது குடும்பத்திடையே பெரிய விரோதம் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்து கொண்டிருந்தது. பெற்றோர்களின் மனத்தாங்கலுடன் அவரையே நான் மணந்துகொண்டேன். என் அன்பை அவர் ஒருவருக்குத்தான் அர்ப்பணம் செய்திருந்தேன். அது ஒரு காலம்.

மதப்பற்று மிகுந்த அவரது இஷ்டப்படியே இந்தக் கிராமத்திற்கு வந்து நாங்கள் எங்களால் ஆன உதவியை செய்ய ஆரம்பித்தோம். என் கணவர், மனப்போக்கில் என் போன்று சுயநலமற்றவராக இருந்தார். அவர் என் மீது எல்லையற்ற அன்பு கொண்டவர்தான். இருந்த போதிலும் மதம், சமூகம், வைத்தியம் முதலியவைகள் மீது அவருக்கு மட்டற்ற அபிமானம். அவருடன் பழகிய முப்பது வருஷ காலத்தில் உணர்ந்துகொண்ட உண்மையானது ''மனதிலே பொங்கிக் கொண்டிருக்கும் அன்பு ஒரே ஒருவருடைய சொத்து மட்டும் அல்ல; எடுக்க எடுக்க குறையாதது. மேலும், மேலும் பெருகி ஓடும் சக்தி அதற்கு உண்டு'' என்பது. இன்று எனக்கு என் கணவர் மீது அளவற்ற அன்பு உண்டு. ஆனால், எத்தனை வித்தியாசம்! அமைதி கொண்ட கடலின் ஆழத்தைப் போன்ற மனச்சாந்தி மிக்க என் மனம் அவர்மீது கொண்டிருந்த அன்பு தெய்வீகம் பொருந்தியதாகும். உதவி வேண்டி நிற்கும் ஏழை எளியவர்கள், நோயாளிகள், அனாதைக் குழந்தைகள் எல்லோர் மீதும் எனக்கு மட்டற்ற அன்பு ஏற்படும். இதைக் குறித்துதான் என் கணவர் என்னிடம் சொன்னார்'' என்று கூறிமுடித்தார் ஸ்ரீமதி ஜோஸப்.

அன்று சந்திராவின் மனமும் ஓர் உண்மையைக் கண்டது. அன்பு செய்வதில்கூட சுயநலம் காட்டுதல் சரியல்ல என்பது அவள் அறிந்த உண்மை.

இதனாலெல்லாம் இனிய தத்துவங்களும், பரந்த நோக்கமும், நற்பழக்கங்களும் கொண்ட வில்லி ஜோஸப்பை அவள் விரும்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இதையெல்லாம் பற்றி யோசித்துக்கொண்டே குறுக்கு வழியாக நடந்த சந்திரா அரைமணிக்குள் வேலங்குடி அனாதை ஆசிரமத்தை அடைந்துவிட்டாள். குழந்தை ஒன்றின் கால் புண்ணுக்கு மருந்திட்டுக்

கட்டு கட்டிக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஜோஸப், சந்திராவைப் பார்த்து புன்னகையுடன், ''வாருங்கள், உங்களைப் பற்றிதான் நினைத்துக் கொண்டிருந்தேன். வந்துவிட்டீர்கள்!'' என்று கூறி வரவேற்றார்.

''என்ன விஷயமாக என்னைப் பற்றிய நினைவோ?'' எனக் கேட்டவாறு சந்திரா அங்கிருந்த ஆசனமொன்றில் உட்கார்ந்தாள்.

''இந்தக் குழந்தைகளின் போஷணையைக் கவனிக்க ஆசிரமத்திற்கு அனுபவமிக்க ஸ்திரீ ஒருத்தி வேண்டும். சமூகத்தொண்டு செய்யும் மனப்பான்மையுடைய ஸ்திரீ தேவை என விளம்பரப்படுத்தியிருந்தேன். அதற்குச் சில ஆட்கள் வந்திருக்கிறார்கள். அதைவிட நேற்று ஒரு பெண் நேராகவே புறப்பட்டு வந்துவிட்டாள் விண்ணப்பத்துடன்! அதைக் குறித்து உங்களிடம் ஆலோசிக்க நினைத்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்'' என்று சந்தோஷத்துடன் கூறினாள் ஸ்ரீமதி ஜோஸப்.

''அப்படியா! அந்தப் பெண்ணிற்கு அனுபவம் அதிகம் இருக்கிறதாமா?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டாள் சந்திரா.

''பாவம்! அவளைப் பார்த்தவுடனேயே என் மனம் குழைந்துவிட்டது. வயதில் சின்னவள். அனுபவம் இருக்க அவ்வளவு வயதானவளல்ல. பார்ப்பதற்கு அழகாகக் கூட இருக்கிறாள். கையில் ஒரு பெண் குழந்தை. திக்கற்றவள். பி.ஏ. படித்தவள். பள்ளிக்கூடமொன்றில் ஆசிரியையாக இருந்தவளாம். கல்யாணம் செய்துகொண்ட கொஞ்ச நாட்களில் கணவன் ஏதோ ஒரு கேஸ் விஷயமாக தண்டிக்கப்பட்டு சிறை சென்றுவிட்டானாம். அவன் வெளிவர ஏழு வருஷங்கள் ஆகுமாம். பாவம்! அனாதையான அந்தப் பெண்ணின் சோகக்கதை என் மனதை உருக்கிவிட்டது. தனக்கும் தன் குழந்தைக்கும் கணவன் மீண்டும் வரும்வரை ஆதரவளித்தால் போதும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டாள். அவள் பெயர் சட்டென நினைவுக்கு வரமாட்டேன் என்கிறதே... அழகான பெயர்தான்...'' என்று மூச்சு விடாமல் கூறி முடித்தாள் ஸ்ரீமதி ஜோஸப்.

''ஹேமலதா என்பது அவள் பெயர் இல்லையா?'' என அதுவரை கவனமாகக் கேட்டு வந்த சந்திரா திகைப்புடன் கூறினாள்.

''ஆமாம்! ஆமாம் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என



ஆச்சரியத்துடன் வினவினாள் ஸ்ரீமதி ஜோஸப்.

''அவளை நான் முன்பே நன்றாக அறிவேன். நீங்கள் சொன்ன கதையிலிருந்து அவளாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டேன். கட்டாயம் அவளுக்கு உதவி செய்யவேண்டும், பாவம்!'' என்று அனுதாபத்துடன் கூறினாள் சந்திரா.

''அப்படியா? உங்களுடைய நன்மதிப்புக்கேற்ற அந்தப் பெண்ணுக்கு கட்டாயம் ஆதரவளிக்க வேண்டியதுதான். அவளைக் கூப்பிட்டு வரச் சொல்லட்டுமா? தற்போது என் வீட்டில்தான் தங்க இடம் கொடுத்திருக்கிறேன்?'' என்று எழுந்தாள் ஸ்ரீமதி ஜோஸப்.

''வேண்டாம். இன்னொரு தடவை சந்திக்கிறேன்'' என்று சந்திரா கூறி முடிப்பதற்குள் ஏதோ காரியமாக உள்ளே நுழைந்த ஹேமலதாவை கண்டதும் ஸ்தம்பித்து போய்விட்டாள் ஆச்சரியத்தில். அழகு தேவதை போல் மிக்க எழிலுடன் மின்னிக் கொண்டிருந்த ஹேமலதா இளைத்துத் துரும்பாகியிருந்தாள். அவளது இருபெரும் கருவிழிகள் பார்ப்பவர்களுக்குக் கேட்கு முன்பே அவளது சோகக் கதையை சொல்வனபோல் தென்பட்டன.

சந்திராவை எதிர்பார்க்காத இடத்தில் சந்தித்ததனால் திகைத்துப்போன ஹேமலதா பேச முடியாது சற்று நேரம் அயர்ந்து நின்று விட்டாள். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சந்திராவா? என்ன ஆச்சரியம்! நீங்கள் இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்கள்? இந்த ஆசிரமம் என் போன்றவர்களுக்கல்லவா ஏற்படுத்தப் பட்டிருக்கிறது?'' என்றாள் ஹேமலதா புன்னகையுடன்.

அவளது வார்த்தைகளில் தொனித்த துக்கத்தை நன்கு அறிந்து கொண்ட சந்திரா, ''இந்த ஆசிரமம் என் போன்றவர்களுக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் நான் பல விஷயங்களைப் புரிந்து கொண்டேன். என் கணவர் பக்கத்தூரில் வேலை பார்க்கிறார். நான் ஒழிந்த நேரங்களில் ஸ்ரீமதி ஜோஸப்பைப் பார்க்க வருவேன். மனதிற்கு அமைதியளிக்கும் இடம் ஒன்று எல்லோருக்கும் வேண்டியதுதானே?'' எனச் சுருக்கமாகப் பதிலளித்தாள்.

''உங்கள் இருவரையும் அறிமுகப்படுத்தும் சிரமம் இல்லாது முன்பே தெரிந்தவர்களாய் விட்டீர்கள்'' என லில்லி ஜோசப் நடுவில்

சொல்லவே சந்திரா பதிலுக்கு, ''நாங்கள் இருவரும் ஒரே பள்ளிக் கூடத்தில் வேலை பார்த்தவர்கள்தான்'' என்று பேச்சை வேறு திக்கில் மாற்றி விட்டுச் சீக்கிரமே விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

கணவன் ஆபீஸிலிருந்து திரும்பி வருவதற்குள் வீட்டை அடைய வேண்டுமென்ற கவலையினால் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த சந்திரா, வழக்கமானதொரு குரலைக் கேட்டு ஆச்சரியத்துடன் அப்படியே மலைத்து நின்று விட்டாள்.

''என்னடா படுத்தறே! வீட்டுக்குப் போக வேண்டாமா?'' என அதட்டிக் கொண்டிருந்த குரல் யாருடையதுமல்ல; அவளது ஆருயிர் சிநேகிதி அம்புஜத்தினுடையது. அம்புஜம் மலையடிவாரத்திலுள்ள ஒரு தண்ணீர்த் தேக்கத்தருகில் வளர்ந்திருந்த காட்டுப் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தாள்.

''அம்புஜம்! என்ன இது இங்கே?'' என ஆச்சரியத்துடன் கூறிய சந்திராவை நிமிர்ந்து பார்த்த அம்புஜம் ''சந்திரா! நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்றாள் திகைப்புடன்.

''என் கணவருக்கு இங்கேதான் வேலை. அதனால்தான் நான் இங்கே இருக்கிறேன்'' எனச் சுருக்கமாகக் கூறிய சந்திரா சிநேகிதியின் குழந்தையை ஆர்வத்துடன் வாரி எடுத்துக் கொண்டாள்.

''மல்லித் தோட்டத்தை விட்டு நான் பிறந்தகம்போய் நாலைந்து மாதமாகிறதே! உனக்கு ஒன்றும் தெரியாதா? சந்திரா! என் வாழ்வே அஸ்தமித்து விட்டது. பித்தம் பிடித்தவள் போல் நான் மனச் சலிப்பை மறக்க ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருக்கிறேன். என் மாமாவின் மகளுக்குப் போனவாரம் இவ்வூரில்தான் கல்யாணம் நடந்தது. அதற்கு வந்தேன். ஊர் பிடித்திருந்தது. இங்கேயே தங்கினேன்!''

''அம்புஜம். பேசுவதே புரியவில்லையே! உனக்குத் திடீரென மனக்கசப்பு ஏன் ஏற்பட்டது?''

''அதெல்லாம் ஒரு பெரிய கதை. இப்பொழுது நேரமாயிற்று. உன் வீடு எங்கே சொல்லு! நாளைக் காலை வந்து சாவகாசமாகப் பேசுகிறேன். சந்திரா உன்னைக் கடவுள்தான் இது சமயம் அனுப்பியிருக்கிறார். துக்கத்தின் பளுவைத் தாங்காது என் இதயம் தத்தளிக்கிறது'' என்று தினறினாள் அம்புஜம். தன் பிரிய சிநேகிதியின்



கண்களில் துக்கத்தின் சாயயையான கண்ணீர் பொங்குவதைக் கண்டு மனம் கசிந்த சந்திரா, ''அம்புஜம்! கட்டாயம் என் வீட்டுக்கு வர வேண்டும். இந்த நிலையில் உன்னை விட்டுப் போகக்கூட எனக்கு மனம் வரவில்லையே; என் வீடு இதோதானிருக்கிறது வாயேன் கூட!'' என அழைத்தாள்.

''இல்லை, நேரமாயிற்று. மாமா வீட்டவர்கள் கவலைப்படுவார்கள். நாளைக் காலை நான் அங்கே வருகிறேன்'' என்று பிடிவாதமாகக் கூறிய அம்புஜத்தை மேலே வற்புறுத்த முடியாது, தனது இருப்பிடத்தைத் தெரிவித்துவிட்டுச் சந்திரா வீட்டை நோக்கி நடந்தாள்.

தான் வருவதற்கு முன்பே ஜகந்நாதன் வீட்டுக்கு வந்து விட்டதை கண்ட சந்திரா சற்று அச்சமடைந்தாள் என்றாலும் வெளியில் அதைக்காட்டாது சமையலறைக்குள் நுழைந்தாள்.

அவசரமாகத் தயாரித்து வந்த டீயைக் கோப்பையில் வார்த்து ஜகந்நாதனிடம் கொடுத்த சந்திரா, ''இன்று நான் எதிர்பாராத இரண்டு பேர்களைச் சந்தித்தேன். கனவில் கூட நினைக்காத சமயத்தில் நாகலிங்கம் மனைவி ஹேமலதாவை வேலங்குடி ஆசிரமத்தில் பார்த்தேன். ஆச்சரியப்பட்டுக் கொண்டே வீட்டை நோக்கி வரும் பொழுது யாரை மீண்டும் சந்தித்தேன் என்று நினைக்கிறீர்கள்! என் பிரிய சிநேகிதி அம்புஜத்தை'' என்று மிகவும் வியந்த குரலில் கூறினாள்.

''உலகம் மிகவும் சிறியதுதானே. அதனால்தான் தெரிந்தவர்களையே மீண்டும் மீண்டும் சந்திக்கிறோம் என்று சொல்வதை நீ கேள்விப்பட்டதில்லையா சந்திரா?'' எனக் கேலிப் புன்னகையுடன் கேட்டான் ஜகந்நாதன்.

''இருந்தாலும் உலகம் இத்தனை சிறியது என நான் நினைக்கவில்லை'' எனப் பதிலுக்குக் கூறி வாய்விட்டுச் சந்திரா சிரித்தாள்.

# 42

மறுநாள் காலை கணவன் வேலைக்குச் சென்றதும் தனியே வீட்டிலிருந்த சந்திரா ஒவ்வொரு நிமிஷமும் தன் சிநேகிதியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள். கடைசியாக அம்புஜம் வந்து சேர்ந்தாள்.

''உட்கார், அம்புஜம்! குழந்தைக்கு வயது இரண்டு முடிந்து விட்டதல்லவா? பேசுகிறானா'' என்று க்ஷேம லாபங்கள் விசாரித்துக் கொண்டே, சிநேகிதியின் மகனை வாங்கித் தன் மடிமீது உட்கார வைத்துக் கொண்டாள் சந்திரா.

அம்புஜம் முன்னைவிட இளைத்துக் கறுத்துப் போயிருந்தாள். உற்சாகமற்ற அவளது முகத்தைக் கவனித்த சந்திராவின் மனம் துணுக்குற்றது. ஏழு எட்டு மாதங்களுக்கு முன்பு மந்தஹாஸமும் குதூகலமும் நிறைந்து விளங்கிய அம்புஜம் மனச்சோர்வு கொண்டு ஒரேயடியாக துக்க சாகரத்தில் அமிழ்ந்ததற்குக் காரணம் என்னவாயிருக்கக் கூடும் என ஊகிக்க முடியாத சந்திரா முடிவில், ''அம்புஜம், நேற்று என்னவோ சொன்னாயே, அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது'' என்றாள்.

''மல்லித் தோட்டத்தை விட்டு நான் பிறந்தகம் வந்து விட்டேன்'' என்றாள் அம்புஜம் மனச்சலிப்புடன்.

''அப்படியென்றால்...?'' என விளங்காத சந்திரா கேட்பதற்குள், ''அப்படியென்றால், கணவனைவிட்டு மனக்கசப்புடன் பிறந்தகம் வந்து விட்டேன்!'' என்று முடித்தாள் அம்புஜம். ஆச்சரியம் தாங்காத சந்திரா ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். ''அம்புஜம்! என்னால் நீ சொல்வதை நம்ப முடியவில்லை! உனது கணவர் மிக மிக நல்லவராயிற்றே. அவரை விட்டு வர ஏற்பட்ட மனக்கசப்பான சந்தர்ப்பம் என்ன!'' எனக் கேட்டாள்.

''சந்திரா வெளி வேஷங்களைக் கண்டு மயங்கும் வெகுளி நான் என்பதுதான் உனக்குத் தெரியுமே! என் கணவரை நீ சொல்லுகிறபடி மிகமிக நல்லவர் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவரது மேன்மையான குணங்களைப் பற்றி இன்பக் கனவுகள் பலவும் கண்டு கொண்டிருந்தேன். ஒருநாள் என் கனவுகள் திடீரென்று கலைக்கப்பட்டது. சந்திரா! என் இதயம் சுக்கல்களாக உடைந்து விட்டது. என் வாழ்வின் இன்ப ஒளி அஸ்தமித்து விட்டது. இனி நான் வேண்டுவது சாவு ஒன்றுதான்'' என்று துக்கத்துடன் கூறிவிட்டு அம்புஜம் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.



சிநேகிதியின் துன்பத்தைக் கண்டு மனம் இளகிப் போன சந்திரா, அம்புஜத்தின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு ''அம்புஜம்! நடந்ததை விவரமாகக் கூறாமல் இப்படிப் புதிர் போடுவதைப்போல் பேசினால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே. நடந்ததைக் கூறேன்'' என்று கெஞ்சினாள்.

அம்புஜம் கண்ணீரைத் துடைத்த வண்ணம் ஒருவாறு ஆரம்பித்தாள். முதன் முதல் கணவனை எப்படிச் சந்தேகித்தாள் என்பதிலிருந்து தொடங்கி, ஹேமலதா மீது தான் கொண்ட பொறாமையைப் பற்றியும், அவளுடன் நடத்திய சம்பாஷணையினால் தனக்கேற்பட்ட அவமானத்தையும், கணவனது துரோக நடத்தையைப் பற்றியும் ஒன்றுவிடாமல் விவரமாகக் கூறினாள்.

கேட்டுக் கொண்டே வந்த சந்திராவுக்கு உடனே பதில் என்ன சொல்வதென்று விளங்கவில்லை. மனக்குழப்பம் சற்று அடைந்த அவள், சிநேகிதியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஸ்திரீயின் உணர்ச்சிகளைக் காலடியில் போட்டுத் துவைக்கும் அத்தனை பேய்மனம் படைத்தவர்கள் புருஷர்கள் என்று நான் நினைக்கவேயில்லை, சந்திரா! மகா உத்தமர் என நினைத்து வந்த என் கணவர் மிகவும் கயவர் என்ற உண்மையை என்னால் திடீரென ஏற்றுக்கொள்ள முடியவில்லை'' என்று பொருமிவிட்டு, மறுபடியும் ஒரு மூச்சுக் கண்ணீர் விட்டாள் அம்புஜம்.

''ஒன்று கேட்கிறேன், அம்புஜம். நீ கோபித்துக் கொள்ளக் கூடாது! உன்னை மணந்து கொண்ட பின் அவர் உனக்குத் துரோகம் ஏதாவது செய்ததுண்டா?'' என்று துணிவுடன் கேட்டாள் சந்திரா.

'இல்லை'யெனத் தலையை அசைத்தாள் அம்புஜம்.

''அப்படியென்றால், நீ அவரிடம் மனஸ்தாபப்பட்டுக் கொண்டதில் நியாயமேயில்லை. அவரது கடந்து போன வாழ்க்கையைக் குறித்து விவாதிக்க உனக்கு உரிமை கிடையாது. நீ அவரது வாழ்க்கையில் புகுந்த பிறகு மனக்கசப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் ஒன்றும் ஏற்படவில்லை அல்லவா? உன்னால் நிவர்த்தி செய்ய முடியாத அந்தக் கடந்த வாழ்க்கையைப் பற்றி நீ மனம் சலித்துப் போனால் உன்னைவிட அசடு ஒருவருமே இல்லை'' எனச் சற்றுக் காரமாகவே சொன்னாள் சந்திரா.

''அதை வேண்டுமானால் விட்டுத் தள்ளுவோம். எனக்கு ஏன் அவர் உண்மையைக் கூறாது ஒளித்து வைத்தார்? அதை என்னால் மன்னிக்க முடியவில்லையே'' என்று விம்மினாள் அம்புஜம்.

''உனக்கு தெரிவதில் லாபம் என்ன என்றுதான் அவர் சொல்லவில்லை. மற்றபடி, அம்புஜம்! ஒன்று மட்டும் உனக்கு நான் சொல்வேன். என் வாழ்க்கையைப் பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள் சந்திரா.

''உன் மனதைப் பற்றித்தான் நான் ஒரு நாளும் சரியாகப் புரிந்து கொண்டதில்லையே. என்ன சொல்வேன்?'' என்றாள் அம்புஜம் அலுப்புடன்.

''இன்று என் கணவரை நான் உயிரென நேசிக்கிறேன். ஆனால், அவரை விஷமென வெறுத்த நாட்களும் உண்டு. மாசுபட்டிருப்பதாக எண்ணியிருந்த அந்த நாட்களில் நான் அவரை மிக்க அசட்டை செய்தேன். என் அன்புக்காக ஏங்கி என் காலடியில் வீழ்ந்து கெஞ்சத் தயாராயிருந்த அவரை ஏறெடுத்தும் பாராது அலட்சியம் செய்தேன். ஆனால், நாளடைவில் அவர் மகிமையைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்தேன். அம்புஜம்! சொன்னால் நீ நம்ப மாட்டாய். இன்று துறவிபோல் பற்றற்று வசிக்கும் அவரது மாசற்ற அன்புக்கு என் மனம் ஒவ்வொரு வினாடியும் உருகித் தவிக்கிறது. என் கணவரைப் பற்றிய அவச் சொற்களை நீ கேள்விப்பட்டிருப்பாய். என்னை மணந்து கொள்வதற்கு முன் அவர் நடத்தை மாசுபட்டிருந்தது வாஸ்தவமே! ஆனால், என்னை மணந்த பின்பு அவர் எனக்கு ஒருவிதத் துரோகமும் செய்தவர் அல்ல. அந்த ஒன்றே எங்களிருவரிடையே தூய அன்பை



உண்டாக்க ஹேதுவாயிருந்தது'' என்று கூறி முடித்தாள்.

''சந்திரா என் மனம் மிக நொந்து போய்விட்டது. இனி நான் மறுபடியும் பழைய நிலைக்கு ஒரு போதும் வரமாட்டேன் என்று நினைக்கிறேன்'' என்றாள் துக்கத்துடன் அம்புஜம்.

''அது இருக்கட்டும், அவரைப் பிரிந்து இருக்கிறாயே இப்பொழுது உன்மனத்தில் சமாதானம் ஏற்பட்டிருக்கிறதா சொல்?'' என்று கேட்டாள் சந்திரா.

''அதுதான் இல்லை, சந்திரா! மறக்க முடியாத அளவு அவர் மீது அன்பை வைத்துவிட்டேன்; அதுதான் என்னை துன்பப்படுத்துகிறது. ஒருவர் மேல் அன்பு கொள்வது கூடத் துன்பத்தைத்தான் முடிவில் கொடுக்கும் போலிருக்கிறது'' என்றாள் சலிப்புடன் அம்புஜம்.

''இல்லை இல்லை! உண்மையான அன்பில் இன்பத்தைத் தவிர துன்பத்தின் சாயலே கிடையாது. அம்புஜம் வீணே நீ வாயால் கூறுகிறாயே ஒழிய உண்மையில் உனக்கு அவர் மீது அன்பு கிடையாது. அப்படியிருந்தால் தவிர்க்க முடியாத ஒரு சிறு பிசகுக்காக அவரைக் கடிந்து கொண்டு அவரைத் துன்பத்தில் ஆழ்த்தி, நீயும் துக்கத்தில் மூழ்கிக் கொண்டிருக்க இங்கு ஓடி வந்திருப்பாயா? அம்புஜம், வாழ்க்கையைச் சரியாக வாழத் தெரியாத பேதைப் பெண் நீ எனக் கடுமையாகச் சொன்னாள் சந்திரா.

''சந்திரா! அப்படிக் கடுமையாகச் சொல்லி விட்டாயே? அவர் மீது எல்லையற்ற பிரேமை கொண்டதால்தானே அவரைப் பிரிந்து இருக்க முடியாமல் துக்கத்தில் தவிக்கிறேன்?'' என்றாள் வேதனையுடன் அம்புஜம்.

''ஒரு சிறு தப்பை மன்னிக்க முடியாத உள்ளத்தில் அன்பு இருப்பதை நான் சந்தேகிக்கிறேன் அம்புஜம்! நீ உன் கணவன் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருக்கிறாய். நான் என் கணவர் மீது உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறேன். ஹேமலதா என்பவளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்றாள் சற்றுக் கோபத்துடன் சந்திரா.

''ஹேமலதா விஷ சர்ப்பம். என் வாழ்வின் இன்பத்தைக் கெடுக்க வந்த சண்டாளி'' என்று கத்திய சிநேகிதியைத் தடுத்து, ''அவளைக் கோபித்துக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை. அவள் தன்

சகோதரிக்கு இழைக்கப்பட்ட தீங்கைக் குறித்து மனம் வெகுண்டது இயற்கைதானே! ஆனால், அவள் அதைப்பற்றி உன் மனதை நோகும்படி கடினமாகப் பேசியிருக்க வேண்டாம், தவறு செய்துவிட்டாள் உணர்ச்சி வேகத்தில். அவள் நிலையில் நாம் இருந்தால் இன்னும் என்ன செய்திருப்போமோ? அதை விட்டுத்தள்ளு. அன்பு கொள்ளுவதில் அவள் நம் இருவரையும் மிஞ்சி விட்டாள்! நாகலிங்கம் எப்படிப்பட்டவர்? அவரைக் கணவனாக அடைந்த ஹேமலதா பெருமைப்பட்டுக் கொள்ள ஒன்றுமில்லை. கணவன் சிறைக்குச் சென்றதும் கைக் குழந்தையுடன் நடுத்தெருவில் விடப்பட்டவள் மனம் உடைந்து போகவில்லை. அவளது அன்பு குறையவில்லை. அவருக்காக ஏழு வருடமென்ன, ஏழு யுகங்கள் தனிமையாகக் கஷ்டங்களுக்கிடையே போராடக் காத்திருக்க அவள் இன்று தயார்! நேற்று அவளைச் சமீபத்திலிருக்கும் அனாதை ஆசிரமத்தில் சந்தித்த நான் ஆச்சரியமடைந்தேன்; ஏக்கமும் தாபமும் நிறைந்த அவள் முகத்தைக் கண்டு என் மனம் கலங்கி விட்டது. அன்பு அவளது அகங்கார சுபாவத்தை விழுங்கிவிட்டதே!'' என்று முடித்தாள் சந்திரா பெருமூச்சுடன்.

கேட்டுக் கொண்டேயிருந்த அம்புஜம், ''அப்படியென்றால் நான் என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?'' எனக் கேட்டாள் மெதுவாக.

''வாழ்வில் ஒவ்வொரு நிமிஷமும் மிகவும் முக்கியமானதாயிற்றே? அதை வீணாகக் கழிப்பதில் யாருக்கு நஷ்டம்? மல்லித் தோட்டத்தில் நீ மறுபடியும் சந்தோஷமாக இருக்கிறாய் என்று எனக்கு ஒரு கடிதம் எழுதினால் அதைவிட இன்பம் தரும் செய்தி எனக்கு ஒன்றுமில்லை புரிந்ததா, அம்புஜம்! அப்பாவைப் பார்க்க உன் குழந்தை ஏங்கிப் போகமாட்டானா?'' எனக் கேட்டவண்ணம் சிநேகிதியிடம் அவள் குழந்தையைத் திருப்பிக் கொடுத்தாள்.

பதிலளிக்காது அம்புஜம் சிந்தனையில் ஆழ்ந்தாள்.



# 43

வஸந்த காலத்தின் வரவால் அழகர் மலை முன்னிலும் பன்மடங்கு பொலிவுடன் விளங்கியதாக அன்று சந்திராவுக்குத் தோன்றியது. ஜன்னல் வழியே ஆபீஸிலிருந்து கணவன் வீடு நோக்கி வருவாரா எனப் பார்த்த அவளுடைய கண்களுக்குச் சற்றுத் தொலைவில் தெரிந்த அழகர் மலையின் நீல வர்ணமும் அதற்கப்பாலுள்ள வானத்தில் அந்திச் சூரியன் இட்ட செம்மை நிறமும் என்றுமில்லாத புதுமையுடன் தோன்றின. இயற்கையின் குதூகலத்தைப் போன்று சந்திராவின் உள்ளத்திலும் சந்தோஷம் நிரம்பியிருந்தது. ''மல்லித் தோட்டத்திற்கு வந்துவிட்டேன். நான் செய்யவிருந்த மகத்தான பாவத்திலிருந்து உனது உபதேசத்தால் மீண்டேன் என்று சொல்லத் தேவையில்லை. சந்திரா! நாங்கள் சந்தோஷமாயிருக்கிறோம்'' என்ற வார்த்தைகள் கொண்ட அம்புஜத்தின் கடிதம் அன்று பகல் தபாலில் வந்தது. அதைப் படித்த சந்திரா மிக மகிழ்ச்சியடைந்தாள். அம்புஜம் சந்தோஷமாக இருக்கிறாள்; அவளுக்கும் கணவனுக்குமிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கிவிட்டது என்ற விஷயம் சந்திராவின் உள்ளத்தைச் சாந்தப்படுத்தியது. 'அம்புஜம் வெகுளிப் பெண். கள்ளங்கபடமற்ற குணம் படைத்தவள். கோழை உள்ளங் கொண்டவள். அவளால் துக்கத்தைத் தாங்க முடியாது. மனம் உடைந்து போனால் அவள் ஒரேயடியாக மயங்கிவிடுவாள்' என்றெல்லாம் அம்புஜத்தைப் பற்றி சந்திரா கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தக் கவலையெல்லாம் ஒருவாறு கடிதத்தைப் பார்த்ததும் நீங்கிவிடவே சந்திராவுக்கு சந்தோஷம் பொங்கிக் கொண்டு வந்ததில் ஆச்சரியம் இல்லை.

ஜகந்நாதன் வீட்டுக்கு வந்ததும், குதூகல மிகுதியால் சந்திரா தன்னை மறந்து மேலே வாய்விட்டுப் பாடிக் கொண்டு லேசாகத் தன்னைக் கவனிப்பதைப் பார்த்து மனத்திற்குள் சற்று அதிசயித்தான். மேஜைமீது அவள் கொண்டு வந்து வைத்த டீ கோப்பையைக் கையில்

எடுத்துக் கொண்ட ஜகந்நாதன் மனைவியைப் பார்த்து பரிகாசமான குரலில், ''சந்திரா நீ இன்றைக்கு ரொம்பச் சந்தோஷமாயிருக்கிறாயே! விசேஷம் எனக்குத் தெரியலாமா?'' என்று கேட்டான்.

பரிகாசம் மிதந்தோடும் கணவனது கண்களை நேருக்கு நேர் பார்க்காது சந்திரா, ''ஏன் நான் தினமும்தான் சந்தோஷமாக இருக்கிறேன்'' என்றாள் சிரித்துக் கொண்டு. ஜகந்நாதன் சட்டென பதிலளிக்காது சட்டைப் பையிலிருந்து கவர் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்து, ''உன் மாமனார் எனக்கு எழுதியிருக்கிறார். அதிலே உனக்கும் என் அம்மாவும் எழுதியிருக்கிறாள். படித்துப் பார்'' என்றான் உல்லாசமாக.

''எங்கப்பா எனக்கெழுதியிருக்கிறார் என்று சொல்லுங்கள்'' என்று அவனைத் திருத்திய சந்திரா, இரு கடிதங்களையும் ஆவலுடன் பிரித்து ஒன்றன்பின் ஒன்றாகப் படித்தாள். ஜகந்நாதனிடம் தான் நடந்து கொண்டது மிகவும் தவறு என்பதை உணர்ந்து வருந்துகிறதாகவும் கூடிய சீக்கிரம் அவன் புறப்பட்டு வந்து மறுபடியும் பழைய வேலையை ஒப்புக் கொண்டு முன்போல் ஏக குடும்பமாக இருந்தால்தான் தம் வயோதிக வயதில் மனம் சாந்தியடையும் என்றும் பலவாறு எழுதியிருந்த நாகராஜய்யரின் கடிதத்தைப் படித்த அவள் வியப்பு மிக அடைந்தாள். துர்வாஸரைப்போன்று கோபக்குணம் படைத்த நாகராஜய்யரின் மனது அப்படி இளகிவிட்டது அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அடுத்த கடிதத்தைப் படித்த சந்திராவின் கண்களில் லேசாக நீர் நிறைந்து விட்டது. காமாக்ஷியம்மாள் தனது ஆசை மருமகள் இல்லாத வீடு வெறிச்சென்று போனதையும் அவளில்லாது தன் மனம் படும் அவஸ்தைகளையும் விவரித்து எழுதியிருந்தாள். சந்திரா அடகு வைத்துப் போயிருந்த நகைகளை நாகராஜய்யர் மீட்டு விட்டார் என்றும் நாட்டுப் பெண்ணைத் திரும்ப அவைகளால் அலங்கரித்துப் பார்க்கும் பாக்கிய நாளை எதிர்பார்த்து ஏக்கமடைந்திருப்பதாகவும், எழுதியிருந்த அந்தக் கடிதம், தம்பதிகள் உடனே புறப்பட்டு வராவிடில் தானே அவர்களை அழைத்துப்போக வந்துவிடுவதாக ஒரு பயமுறுத்தலுடன் முடிவு பெற்றிருந்தது. கடிதங்களைப் படித்து முடித்த சந்திரா உள்புறம் சென்றாள்.

யோசனையில் பலமாக ஆழ்ந்துபோன ஜகந்நாதன் மெதுவாகத்



தேநீரை அருந்திக் கொண்டிருந்தான். ''நாம் இன்று தண்ணீர் சுனைக்குப் போக வேண்டும்! ஒரு மைல் போய் வருவதற்குள் இருட்டி விடும் - எழுந்திருங்கள்'' என்று உத்தரவிட்ட சந்திரா மாதுளம் பூ வர்ண நூல் புடவையுடுத்தி, இடுப்பில் குடத்துடன் அவன் எதிரில் வந்து நின்றாள். திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கிய ஜகந்நாதன் ஒரு கணம் வியப்பால் ஸ்தம்பித்துப் போனான். நடுவில் கொஞ்சம் இளைத்துச் சோர்ந்து போயிருந்த சந்திரா திரும்ப சீக்கிரத்தில் முன்னைவிட நல்ல தேக ஆரோக்கியத்தை அடைந்துவிட்டாள் என்பதை அவள் தோற்றம் தெரிவித்தது.

பதில் பேசாது ஜகந்நாதன் அவளுடன் வெளிக் கிளம்பினான். தம்பதிகள் இருவரும் சோளக் காடுகளின் வழியே அழகர்மலை மீதிருந்த சுனைக்கு மெதுவாக நடந்து சென்றனர். சிறு குழந்தை சந்தோஷத்தினால் துள்ளுவதைப் போன்று சந்திரா அல்ப விஷயங்களையெல்லாம் பார்த்துக் குதூகலித்து ஆர்ப்பரித்தாள். ''அந்தக் குருவியைப் பாருங்கள் எத்தனை அழகாயிருக்கிறது! நீலமும் மஞ்சளும் கலந்த நிறம் அதற்கு எத்தனை சோபையளிக்கிறது!'' என்று உற்சாகத்துடன் அவனுக்கு இங்குமங்கும் பறந்து கொண்டிருந்த பட்சி ஜாலங்களைக் காட்டினாள். ''அது மாதிரி நிறத்தில் ஒரு புடவையைக் கட்டிக் கொண்டால் எப்படியிருக்கும் என்று நினைக்கிறாயா?'' என்று பரிகாசமாகக் கேட்டான் அவன்.

''அப்படி நிறத்தில் ஒரு புடவை கிடைத்தால் ஆசையுடன் கட்டிக் கொள்வேன்?'' எனச் சந்திராவும் பதிலுக்குப் பரிகாசமாகச் சொன்னாள்.

''அதைக் கட்டிக் கொண்டதும் குருவியைப் போல் பறந்து விட்டாயானால்...?'' என்று ஜகந்நாதன் கேலியாகக் கூறி முடிப்பதற்குள் சந்திரா, ''அழகர் மலையை விட்டுப் பறந்துவிட மாட்டேன். அதைச் சுற்றிச் சுற்றித்தான் பறந்து கொண்டிருப்பேன்!?'' என்று சிரித்தாள்.

''அழகர் மலைமீது அத்தனை கிருபை என்னவோ?'' எனக் கேலியாகக் கேட்டான் ஜகந்நாதன்.

''அழகர் மலைக்கு வந்த பிறகுதான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். ஆகவே எனக்கு அதன் மீது அத்தனை பிரியம்'' என்றாள்

உணர்ச்சி மிக்க குரலில் புன்னகையுடன்.

''உனது மாமனாரும், மாமியாரும் வருந்தி வருந்தி அழைத்திருக்கிறார்களே? அவர்கள் இஷ்டப்படி ஊருக்குப் போக நேரிடும்! அப்பொழுது...?'' என்று கேட்டான்.

உங்கள் இஷ்டப்படி நடக்கத் தயார். ஆனால் அழகர்மலையை நான் மறக்க முடியாது. ஊருக்குத் திரும்பப் போனால் அடிக்கொரு தட்டவை இங்கே என்னை அழைத்து வரவேண்டுமென்று உங்களை நிர்ப்பந்திப்பேன்'' என்றாள்.

ஜகந்நாதன் பதில் பேசாது யோசனையில் ஆழ்ந்துவிட்டான். சுனையை அடைந்ததும் கரை மீது குடத்தை வைத்த சந்திரா, கற்பாறைமீது உட்கார்ந்து கொண்டாள். பக்கத்தில் வந்து அமர்ந்த ஜகந்நாதன் சூரியன் அஸ்தமித்து இருளும் பகலும் கலந்த அந்த ஒளியில் குன்றின் சுற்றுப்புறத்து இயற்கை மிக்கசோபையுடன் காட்சியளிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''அந்தப் பூ எவ்வளவு அழகாயிருக்கிறது பாருங்கள்'' எனச் சற்றுத் தூரத்தில் கொத்துக் கொத்தாக புஷ்பித்திருந்த ஒரு பூச்செடியைச் சுட்டிக் காட்டினாள் சந்திரா கணவனிடம்.

இடத்தை விட்டெழுந்த ஜகந்நாதன் ஒரே எட்டில் செடியையணுகி ஒரு கொத்துப் புஷ்பத்தை கையில் பறித்துக்கொண்டு சந்திராவின் அருகில் வந்தான்.

''செடியில் அழகாக இருந்ததைப் பறித்து விட்டீர்களே'' எனச் சந்திரா சிரித்துக் கொண்டு கேட்டாள்.

''செடியில் இருந்ததைவிட இப்போது இந்தப் பூ அழகு பெறப் போகிறது பார்'' என்று கூறிய ஜகந்நாதன் சட்டெனக் குனிந்து புஷ்பக் கொத்தை அவள் தலையில் சொருகினான். பதிலளிக்காத சந்திராவின் அகன்ற கருவிழிகளில் அன்புக் கனல் மிதந்து கொண்டிருந்ததை உணர்ந்த ஜகந்நாதன் அவளருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். சட்டென அவளது மிருதுவான கரங்களை தன் கைகளில் எடுத்துக் கொண்டு உணர்ச்சி மிக்கவனாக ''நிம்மதியில்லாது பல பல நினைத்துத் தவிக்கும் என் மனத்திற்கு சாந்தியளிக்க நீ கட்டாயம் இன்று உண்மையைச் சொல்லியாக வேண்டும். சற்றுமுன் சொன்னாயே அழகர் மலைக்கு வந்த பிறகு நான்



சந்தோஷமாயிருக்கிறேன் என்று; அது உண்மையா?'' என்று படபடப்பாகக் கேட்டான்.

சந்திராவின் இதயம் மகிழ்ச்சியால் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. குப்பென முகம் சிவந்துபோன அவள் மெல்லியகுரலில், ''ஆமாம் உண்மைதான்'' எனக் கூறிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

மனவெழுச்சி மிக்க அடைந்த ஜகந்நாதன் அவளது முகவாயைப் பிடித்துக் கொண்டு முகத்தை நிமிர்த்தி, ''சந்திரா! உண்மை அப்படியென்றால் அதற்குக் காரணம்?'' என்று கேட்டான்.

''உங்களுக்குப் புரியவில்லையா?'' என மெதுவாகப் பதிலளித்த சந்திராவின் அகன்ற இரு விழிகளும் உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் வெள்ளம் பெருகி நிறைவதைக் கவனித்த ஜகந்நாதன் ஆர்வமும் திகைப்புமடைந்தான். ''உனது உள்ளத்தில் எனக்கு இடம் உண்டு என்பது உண்மையா சந்திரா?'' என ஆவலுடன் கேட்டான் அவன். ''ஆமாம்'' எனத் தலையசைத்த சந்திரா தன் முகத்தை அவனது பரந்த மார்புக்குள் புதைத்துக் கொண்டு மெதுவாக விம்மினாள்.

அதுசமயம் தன்மையான கிரணங்களை உலகமுழுவதும் பரப்பிக் கொண்டு அடிவானத்தில் பூத்தெழுந்த சந்திரன் அன்று மிக்க பிரகாசமாகத் தென்பட்டான்.

''சந்திரா அதோ பார்!'' என ஆசையுடன் அவளுக்குக் கீழ் வானத்தைச் சுட்டிக் காட்டினான் ஜகந்நாதன். தம்பதிகள் இருவரும் உதித்தெழுந்து கொண்டிருந்த பூர்ணிமையைச் சேர்ந்தாற்போல் நோக்கினார்கள். வானத்திற்குச் சந்திரனைப் போல இருவர் வாழ்க்கைக்கும் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்கள் என அவர்கள் உள்ளம் அப்பொழுது உணர்ந்ததைப் புரிந்து கொண்டவன் போல் மேலும் மேலும் உற்சாகத்துடன் பூரணச் சந்திரன் ஆகாயத்தில் எழும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

★